பிஸ்மில்லாஹிர்றகுமானிர்றஹீம்,

# நாகூர்ப் புராணம்.

நாகூர் வாப்பு குமாரராகிய
வித்வஜனசேகரர்
குலாம்காதிறுநாவலர்
இயற்றியது.

இஃது,
மேற்படியூர் பாவாராவுத்தர் குமாரர்
மகா-௱-௱-ஸ்ரீ
சிக்கந்தர் ராவுத்தரது
பொருளுதவிகொண்டு,

மேற்படியூர் மகா-௱-௱-ஸ்ரீ
முகம்மது நயினு மரைக்காயரால்
அச்சிடப்பட்டது.

திரிசிரபுரம்:
வி. பாக்கியம் பிள்ளை அன்டு சன்ஸ்,
"சௌத் இந்தியா டைம்ஸ் பிரஸ்"

1893.

# சிறப்புப் பாயிரங்கள்.

இஃது,

இந் நூலாசிரியரின் மாணாக்கராகிய

நாகூர்

## க. பகீர்முகியித்தீன்

இயற்றியது.

---

**விருத்தம்.**

*சிறந்தநெறியுணர்த்தியவந்துலகோம்புமுகிற்கவிகைச்செம்மல்வாக்கிற்*
*பிறந்தநெறிசெயல்சூழ்ந்தபேறறிவிற்கடைபோகிப்பெருகுங்கேள்வி*
*யிறந்தநெறிகடப்பாடுற்றியங்குதவம்பொறைபலமாண்டிரந்தார்மீது*
*இறந்தநெறியருளுக்கத்திசைபரந்தபெருந்துவத்திற்றீர்ந்தநீரோர்.* (1)

*பாலானவென்புரிமற்றுயிர்மூரிப்பசுவாக்கிப்பரிந்துவேண்டி*
*யாலானமளித்துபொன்றரசாக்கியிவையகந்தாற்புதஞ்செய்மேலார்*
*நாலானபூதமயக்குடனோக்கத்திகந்துநெறிநடந்தமேலோர்*
*காலீனமலர்தொழுநாகூர்மறைந்தபின்றைநிகழ்காதைவாங்கி.* (2)

*நற்பாலசெயல் ...ழ்ந்தபலகைமிசைந்துயர்புலவோர்நடுங்குங்கேள்விப்*
*பற்பாலதிசைமுழக்கும்புகழ்சான்றபெருந்துவத்தாற்பாரானைமூரிக்*
*கற்பாலகதிர்நிதியம்பிறர்பெறத்துந்தகைபோலக்கருதும்வேட்டார்*
*தற்பாலகல்வியகத்தமைந்துபடத்தாணுக்குந்தன்மைமாண்டோன்.* (3)

*பாமாண்டகாவியமைந்தெண் ...ாகைமுக்குரவர்தமிழ்பத்துப்பாட்டு*
*நாமாண்டபரிபாடைகீழ்க்கணக்குதயன்காதைநவில்கல்லாடந்*
*தாமாண்டவிவைபோலப்பெயர்போகித்திசைவிளக்குந்தமிழ்நூல்யாவு*
*மாமாண்டநிமிர்ந்ததலைகீழ்போக்கித்தடுமாற்றுமதுரவாக்கான்.* (4)

*நினைத்தானவிழித்தானவுணைத்தானவுருக்கமடநெடுநீர்வேலைச்*
*சினைத்தானகதிர்கெழுமீன்கோழிநெறிப்படுத்துவராசிரியரென்ப*
*வினைத்தானவரம்பிகவாச்செயற்பாலகல்விவிருப்பிருந்தார்நெஞ்சந்*
*இனைத்தானமுன்னுகின்மற்றுயர்ந்தநெறிபெறுத்துத்துவந்தீர்ந்தநீரான்.* (5)

நெறிமயக்கந்தெளிப்பான்வெண்கதிர்கெழுமுத்தருகுதொறுநெடுங்கைவீசி
வெறிமயக்கந்தரவாரிவயிற்றெழுந்தசெங்கதிர்போலென்மால்புன்மை
வெறிமயக்கந்தடுமாற்றிகல்விகெழுகதிர்காற்றிவிளைந்தமாதர்
செறிமயக்கந்தெறுபுயர்த்தவனைநடுவில்விளங்கியசெய்திறமைமிக்கான். (6)

நன்மைகெழுவழியொழுக்கத்ரணுத்துணையுந்திறம்பாதோனவிவில்சீர்சால்
தன்மைகெழுநாறுத்தீன்சாகிபுகைப்பிடித்தருளாற்றழைந்தோன்பாவும்
பன்மைகெழுமலக்குறும்பற்றறிவிறந்தவாப்புதவப்பாலனானேன்
வன்மைகெழுந்தமிழ்விளைவைப்பனையதுலாம்கா திருநாவலவர்கோமான். ( )

மோக்சாவிதெரிபூட்டுங்காமர்நெடுஞ்சமுன்மாதர்முனைப்பூம்பாண
நோக்சாவிவருந்தியநின்றறமயங்குஞ்செயல்சூழ்ந்தநடக்கமபூண்டார்
போக்காவியுடல்விளைந்ததடுமாற்றநிலைகெடுபுடகுத்தமாற்ற
கோக்காவித்தடநாகூர்ப்புராணமெனவிழைத்தொருநூல்கொடுத்தானுக. 8

மெய்நீர்மைபுனைபாவாராவுத்தர்மகவாகவிளங்கித்தந்தை
செய்நீர்மைநிலைகடந்தோனறத்தாயநெறியொழுக்கந்தேர்ந்தோன்மூவா
வெய்நீர்மைவறுங்கவலைக்கிடனாகியுழன்மர்மனம்விழைவுகூடப்
பெய்நீர்மைமுகிலபோலத்தருங்கரத்தாற்கதிர்போலப்பிறங்கிநிற்போன். (9)

மருக்கான்றதடநாகூர்சிக்கந்தரெனும்பெயரால்வனராவுத்தன்
தருக்கான்றநிதிபோலும்பொருண்முயன்றச்சமூந்துவித்தூத்தகந்தானு
கருக்கான்றமுகில்போலப்பொழிதருநன்மதுரகவிகற்றவல்லு
நருக்கான்றமுகம்மதுநய்னுமரைக்காயப்பெயர்சால்நாவலோனே. (10)

முற்றிற்று.

இஃது,

திரிசிரபுரம்

இலக்கண உபாத்தியாயராகிய

மகா-௱-௱-ஸ்ரீ.

# ஆ. கா. பிச்சையிபுறாஹீம்புலவர்

இயற்றியது.

---

மணிகொழிக்குங்கடன்மருங்கிற்புவிமகட்குமார்பகத்துமணிச்சூட்டென்ன
அணிகொழிக்கும்புலமாக்களுரைக்கிடனுங்காவேரியகன்றுகாட்டப்
பணிகொழிச்சனனந்தலையிலிருந்தொளிருமதாணியெனப்படிமைகாட்டுங்
கணிகொழிக்கும்பொருளுடைப்பெண்ணுளுடாய்ச்சோணாடென்கதிக்குநா
டே. (1)

உரைபெறுமவ்வுயர்கலனுக்கிடைமணியிற்பொலிவுறுத்துமுணமுற்பல்ல
நரைபெறுவகத்தடக்கப்பட்டவொருபெட்டகமாய்த்தனிவிற்சீர்த்திக்
கரைபெறுவிற்சிறப்புடையார்திருவருளுக்கிடனாகிக்கடவுண்மாட்சி
வரைபெறுதற்கடனுடைத்தாய்முதன்மதிக்கமுன்னிருக்கும்வளநாகூரே. 2

கதியடையப்பணியடியர்நெறியளவிற்குணமருளுங்கருணைக்கோமான்
விதியடையப்பெறுநபிதம்மரபினுண்மரபிற்றெனவறிந்துவினையிற்சோர்வார்
மதியடையப்பலகருணைவழியடையவிருந்தனரம்மணிவில்லென்னத்
திதியடையப்படுசாகுல்கமீதொலிநம்பெருமானத்தேத்துமாதோ. (3)

அக்காலத்தவரியற்கைமுதியவர்தமனவுணர்விளக்கப்படாத
முக்காலவிளையாட்டைப்பலபாட்டினகப்படுத்துமுடிந்தமுன்னூல்
இக்காலத்தவர்தமக்கோர்நன்னூலாய்த்தொன்னூலிலிருந்திடாத
எக்காலத்தினுமறிபாவகப்பொருளிற்காரிகையாயிலங்கிற்றன்றே. (4)

மலையொளியினடைகள்பதமலர்மறைந்தபின்றையமான்மியந்தான்
இலைமறைகாயெனவிருத்தல்வெள்ளிடையின்மலைபோலவிசையாநிற்ப
நிலைநகரத்தியைபானும்பெயர்ப்பொருளின்றொடர்பானுநினைந்துநூற்றுன்
கலையுறவிற்புடைநூலாவகன்றிறமையுண்மையினைக்கவற்றுமன்றே. (5)

பலன்மேவுமறத்துறையிற்படுகையுளார்க்குவகைபமெய்ப்பாட்டிற்றுறை
நிலன்மேவுங்கருப்பொருளையிடையிடைத்தாய்ந்துருச்சுவையுடைநியாயத்தோ
டு, வலன்மேவுஞ்சொல்லணியும்பொருளணியுமுடைத்தாகிமதிநாட்காட்டா
ய், புலன்மேவுமதுவிருந்தமெமர்க்குமுடியெனநாகூர்ப்புராணமென்றே

திரிவளிக்குமொழியியலிற்கடையுணரற்பொருட்டேறத்தெரியகில்லா
விரிவளிக்கும்விதிக்கிறங்கவேணியெனக்கோடல்சொலைவிணைஞர்க்காகிப்
பரிவளிக்குநம்பெருமானருள்படியப்படிதோறும்பத்திஞானப்
புரிவளிக்குமருணூலாமசன்பெருமைசிறுமையம்யாம்புகறற்பாற்றே. (7)

இன்னவருஞ்செயற்கையுடைப்பெரியணியற்புகலுதும்யாமேலனென்னி
ற், பன்னவருநூலியற்றலுரைவிளக்கலியல்கொளுந்தற்பண்பின்மூத்த
முன்னவருண்முன்னவனாய்த்தமிழ்வலயத்திசைபரவமுனைத்துநாகூர்
மன்னவருமிருபொருளார்மதித்துவரக்கதித்துவருமதிப்புள்ளானே. (8)

யாப்புடையபலதிறத்துத்தொகைநூலின்வகைநூலாம்யாவற்றுள்ளுங்
காப்புடையபெயர்க்கிடனுமொருபெயரைமுதற்குறித்துக்கற்றோர்மற்றோர்
நாப்புடையிலிசையுடையான்றனையுடையமருத்துவத்தினலந்தேர்ந்துள்ள
வாப்புடையவகத்தவமேமகத்துவமென்மகத்தொடர்பைவகித்துள்ளானே.

கரத்தகத்திருமலகக்கனியிருப்பினகப்பொருளிற்கலக்கங்கொண்ட
வுரத்தகத்தினைமைத்தெளித்துமனத்தகத்திற்றனையளித்தவொருபேராசா
ன், பரத்தகத்தின்வருநெறியைப்படித்தடங்குமறிவினர்பாற்பழுத்தநெஞ்
சை, வரத்தகத்திற்கொடுத்தடக்குமெங்கள்குலாம்காதிறுநாவலவரேறே10

தலத்துறுமப்புலவர்பிரானுரைத்துநமந்நூலெலவருந்தலைமேற்கொள்ளப்
புலத்துறுவான்வெளிப்படுத்தனெங்காலமதுவிளங்கப்புகழைக்கூட்டும்
வலத்துறுநற்றிருவருளைப்பெருக்குமரபினர்க்குமெனமனத்திலுன்னுக்
கலத்துறுமன்னிதியளித்துக்கல்லெழுத்திற்பெயரிருப்பக்கணங்கொண்டா
னே. (11)

அக்கனவானட்பினருக்கெய்ப்பிடையின்வைப்பெனலாயன்பினைத்தத்
தக்கனவாமறமியற்றும்பாவாரவுத்தருடைத்தவத்திற்பூத்த
மிக்கனவாம் பலன்வடிவாய்க்கடவுணெறியுடையார்க்குவெறுக்கையோடும்
இக்கனவாமொழிவழங்குஞ்சிக்கந்தர்ராவுத்தனென்பான்மன்றே. (12)

கண்ணிடத்தின்வழியனுகினைப்பிடத்திலிருப்புடையகாட்சிநாகூர்த்
தண்ணிடத்தினிலவுடையம்மதியுடையானளித்தபொருடனைக்கொண்டே
னோர், மண்ணிடத்தின்வரமிதிறென்றுடையதெனிற்காண்டுமெனமனத்
தாராயப், பண்ணிடத்தினச்சியற்றிப்படியிடத்துவிளக்குவித்தபண்புள்
ளோனே. (13)

கவியகத்துமனநிறுவிப்பொழுதகற்றிவருகவிஞர்காண்கவெந்தங்
குவியகத்துநிலவுமனேறற்குறித்துரைக்குமறத்துறையிற்கொளுவுநெஞ்சிற்
புவியகத்துத்தலைமையமநாறுசாகிபுநகுதாபுரிந்ததூய
சவியகத்துத்தவத்துயிராயவர்க்கிருமைநாகூரிற்சமைத்துற்றனே. (14)

இனித்திருக்குந்தமிழ்த்துறையிலிருப்புடைய விருப்புடையானின்பமெ
ன்ப, சனித்திருக்குமொழிப்புலவரகத்துடையமுகத்துடையான்றகைய
மேன்மை, நுனித்திருக்குந்தரத்தினரினினத்துடையசனத்துடையானோ
க்கமேலாய்த், தனித்திருக்கும்பெயர்கொண்முகம்மதுசயினுமரைக்காயன்
றாஞ்சொற்பாற்றே. (15)

முற்றிற்று.

---

இஃது,

யாழ்ப்பாணம். ம-ள-ள-ஸ்ரீ.

## சு. அசனாலெப்பை

இயற்றியது.

விருத்தம்.

புவிக்கொருநாயகமாகத்திருமக்காநகருதித்துப்புதுமைபூப்பக்
கவிக்குமொருகுடைநிழற்கீழுலகமெலாநன்கோம்பிக்கதுவுஞ்செந்தீக்
குவிக்குமனற்குழியருகாம்பவநிலையிலுள்விழுபுகுலைந்துநின்று
தவிக்குநரைக்கடைத்தேற்றிவிளங்குநபிநயினார்சந்ததியினன்றே. (1)

வந்துதித்தவெண்புகழெவ்விடத்திலுநாட்டியசாகுல்கமீதுவள்ளல்
இந்துதித்தவுதிப்பலதுசெஞ்சூரியோதயமுமிசையாதாகக்
கொந்துதித்தபூம்பொழின்மாணிக்கப்பூர்நகருதித்துக்குலவுமாறும்
ஐந்துதித்தபுலன்பொறியினறநீக்கித்தவநிலையினமைந்தவாறும். (2)

தத்தளிக்கும்பலருமொருவாற்றானீடேற்றமுறத்தகையநன்மை
வித்தளிக்கும்படிமகிமைஉபாத்தின்முன்விளைத்தபெருவிநோதம்யாவும்
வைத்தளிக்குங்கருணையுடனுகூரிலுபாத்தாகிமறைந்தவாறும்
முத்தளிக்குங்கடல்வளமுமலைவளமுமருட்சிதரமொய்த்தபூவில். (3)

அருள்வளமுமிகுத்தியலவடக்கியநல்லருங்காரணப்புராணந்
தெருள்வளமுமடைந்தமையினுண்டுளசெய்திகணீக்கித்திரியாக்கல்விப்
பொருள்வளமுமொருங்கடர்ந்தநாகூருண்டானதுவும்புகல்வெட்டாத
மருள்வளமாருபாத்தின்பிணிகழ்ந்ததிருவற்புதமுமலியச்சேர்த்து. (4)

சீர்வதியுமனக்காந்தங்கவர்ந்துகொளப்புராணமதாய்ச்சிறப்பினோங்கப்
பேர்வதியுமிடப்பெயராநாகூர்ப்புராணமெனப்பிறங்கச்செய்தான்

ஏர்வதியுமிகமாயையகத்துழல்வோர்க்கின்பநலனிறைக்குமென்று
நேர்வதியுமபிமதத்தானெம்மன்னோர்மீதுகொளுண்ணெகிழ்வினனே. (5)

வேண்டுதகைகாற்பயனுநனிபயக்குமடமையெலாம்விலகச்செய்யுந்
தேண்டுதகைநல்லறிவுதழைப்பிக்குமருண்மனத்தைத்திருந்தச்செய்யும்
ஈண்டுதகையியற்றும்பமிகநீக்கியின்பவகையெய்தச்செய்யும்
ஆண்டுதகையருளண்ணல்பாலன்றுவிக்குமுறைக்கவிகளாமே. (6)

கொடுங்காலமரீஇநின்றபெரும்பஞ்சமொன்றுமணங்குளிரத்தீர்ந்து
படுங்காலமோருபகாரியினலத்தால்வந்துவெளிப்பட்டான்மான
நெடுங்காலநிலைத்திருந்தபெருங்குறையொன்றருந்தகையினிரவப்பெற்று
விடுங்காலமெய்தியதென்றெவ்வெவருங்கொண்டாட்டின்விழையவன்றே.7

நாவருமெவ்வுரையானுநவிலொண்ணாநுண்ணறிவுநருமுள்ளத்தான்
றாவருஞ்செந்தமிழ்நாட்டிலக்கணலக்கியவாரிதுகடோமற்றை
மாவருபன்னூற்கடலுந்தெளித்தருந்திப்புகழுயர்வாமாகத்தெய்திப்
பூவருதெண்ணீர்க்கவிதைவசனமழையகஞ்செழிப்பப்பொழியுங்கொண்டல்.

துதிபுனைந்தகலம்பகங்கள்கோவையுயர்மிறைக்கவிகடொகுக்கப்பட்ட
விதிபுனைந்தபலபாடல்வசனவுரைகளுமெவரும்வியப்பத்தந்தோன்
நிதிபுனைந்தவுலகுபுகழ்நாவலரென்றும்பதவிநிலவப்பெற்றோன்
கதிபுனைந்தவில்லறத்தையொளிர்பூணக்கொண்டொழுகுங்காட்சியேய்ந்
தோன். (9)

மலைபூத்தமேன்குணத்தாலியாரையுநன்கு சரிக்குமாண்புமிக்கான்
கலைபூத்தவாயுள்வேதந்தெளிந்தவாப்புள்ளங்கனிந்ததோன்றல்
விலைபூத்தபன்னிதியநாகூராம்புராணப்பேர்விளங்குமூரான்
நிலைபூத்தநன்னுமம்குலாம்காதிறென்னவிவணிகழ்சான்றோனே. (10)

பொருள்கொண்டவருமையினப்புராணத்தையச்சிட்டுப்பொன்னீந்தி
ட்டார், னருள்கொண்டநாகூர்பாவாகுமரன்சிக்கந்தரானவள்ள
லிருள்கொண்டமனமருளவச்சியற்றியெத்திசையுமிசைவித்திட்டான்
றெருள்கொண்டகல்விமுகம்மதுநயினுமரைக்காயச்செய்மறோனே. (11)

இஃது,

இந்நூலாசிரியரது மாணாக்கராகிய

மஹ்மூதுபந்தர் மகா-௱-௱-ஸ்ரீ.

அ. முகம்மதுசுல்தான்மரைக்காயர்.

இயற்றியது.

கோச்சகக் கலிப்பா.

பூமேவுவாசம்பொலிந்ததுபோற்பல்லுயிரிற்
றாமேவுவல்லதனியாம்பரம்பொருளின்
நாமேவுவேதநபிமார்க்கிறைவரென
மாமேவுநந்தம்மஹ்மூதகுமதுதம். 1

பேர்பெற்றுயர்ந்ததிருப்பேராய்மாணிக்கப்
பூர்பெற்றபேறுய்ப்பொலிந்ததிருநாகூரிற்
பார்பெற்றநற்பலனிற்பாட்டாரனிமேய
தார்பெற்றதண்மலர்த்தாள்சாகுல்கமீதொலியார். 2

ஓங்குபுகழிஞுபாத்தாயடங்கியபின்
வாங்குதிரைநாகூர்வரலாறதுமுதலாந்
தாங்குபலவற்புதங்கடம்மையொருங்காக்கிப்
பூங்குலைசேர்நாகூர்ப்புராணமென்றுசெய்தளித்தான். 3

என்னரியவாசானிரும்புலவர்தாம்புகழப்
பன்னரியசங்கப்பலகையோர்பாமருளத்
துன்னரியசெய்யுட்டொகுப்போனெறுகுகின்றோன்
மின்னரியகீர்த்திவிதைவித்திப்பயிர்கண்டோன். 4

எல்லாக்கலையுமிதயத்தடக்கி
நல்லாப்புடையனெனநாற்றிசையும்பேர்பெற்றோன்
பொல்லாப்புலவர்புணர்த்துமதமடக்கிக்
கல்லாப்பொறுமைகழியவழிகாட்டுவல்லோன். 5

மணவான்றமிழென்னும்வாம்பரியிலேறியிலக்
கணவாள்வலதுகரங்கொண்டிடக்கரத்திற்
குணமானசெய்யுட்கொடிபிடித்துமாவிசய
நணவாரிறைவன்குலாம்காதிறுநாவலர்பெருமான். 6

வாக்கைப்பிடுங்காமல்வல்லபொறுமைக்காரர்
நாக்கைப்பிடுங்கிக்கொள்ளுநாகூர்ப்புராணத்தை
வேட்கைப்பலரும்விரும்பச்சிடவேண்டி
ஆட்கைப்பணந்தந்தருளினனவ்வூரான். 7

பல்வத்தகஞ்செய்தபாவாராவுத்தர்மகன்
செல்வத்தின்மேவிவளர்சிக்கந்தர்ராவுத்தன்
வெல்வித்தநூலைவிளங்குவானச்சிட்டான்
கல்வித்திறத்திற்கரைகண்டமர்நண்பன். 8

காமன்மடவார்க்குக்கற்பகமாங்கேட்பார்க்குப்
பூமன்கிளையார்க்குப்பொன்வண்டிசைபாடுந்
தாமன்றொழிலார்தலைவன்றிசைபோய
நாமன்முகம்மதுநய்னுமரைக்காயன்றானே. 9

முற்றிற்று.

---

இஃது,

நாகூர் மகா-ள-ள-ஸ்ரீ.

மு செவத்த மரைக்காயரால்

இயற்றப்பட்டது.

---

கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மருள்செறிவெங்குபிரிருளையறமுருக்கியொளியிசுலாம்மார்க்கமென்னும்
தெருள்செறிவித்தினைவிதைத்தநபிபெருமான்றிருமரபிற்றெண்ணிலாவின்
பொருள்செறிதென்னாகூரினமரப்துல்காதிறெனப்புவிவானேத்தும்
அருள்செறியெம்மொலிகள்பிரான்மறந்தைபிற்றைநிகழ்ந்துளமெய்யாகமத்
தை. (1)

ஆயுள்வேதத்தலைமைப்புலமையிலேபேர்வாங்கியலக்கண்செய்யு
நோயுண்மைதெரிந்தொழிக்கும்விதிமுறையுண்மையதிட்பநுட்பத்திற்கை
போயுண்மைமனத்தினனாய்த்திகழ்வாப்புசெய்துதவப்பொலிவினைய
சேயுறைசெஞ்சாலிவயன்முத்திளவெண்ணிலவெறிக்குஞ்செழுநாகூரான். 2

நிலையேறுபலவகையவிலக்கணமுமிலக்கியமுநிமிரக்கற்றுக்
கலையேறுபுலவர்சிரோமணியாகியெண்டிசைப்பேர்கவினப்பெற்றுத்

தலையேறுதமிழறிவிறனக்குநிகர்தானாகித்தடவான்றோய்பொன்
மலையேறுதீபமெனவிளங்குகுலாம்காதிறுநாவலவரேறு. (3)

தீர்ந்தசெஞ்சொற்புதைபொருளுங்கற்பனையுங்கருத்தணியுந்தெவிட்டாநின்
று, கூர்ந்தமதுரசம்பயக்குஞ்செயுள்வகையாணிறும்பூதுகொள்ளப்பாடி
ஆர்ந்தசங்கத்தமிழ்மானநாகூர்ப்புராணமெனவளித்தநூலைத்
தேர்ந்தமனத்துவகைகொடுகையேற்றுப்பொருட்செலவுசெய்துமாதோ. (4)

இன்புதவுதமர்த்தழுவன்முறையோப்பற்பொறையொழுக்க மினையவெல்
லாந், துன்புதபவதியுமொருபதியினையான்பயனிகவாத்துகடீர்ச்செல்வத்
தன்புடையானெவ்வினைக்கும்பெரியோரைத்துணைகோடலகலாநீரான்
வன்புரைதீர் நாயகத்தாலுலகமெலாங்கொண்டாடும்வளநாகூரான். (5)

சாந்தகுணந்தவழ்முகத்துபாவா ராவுத்தன்றவத்தனையனென்று
மீந்தருவுமிருநிதியுஞ்சுராநுமொருமணியுமிரக்குங்கையான்
ஆந்தகையசிக்கந்தர் ராவுத்தன்றற்பெயரெவ்வகத்துமாரப்
போந்தவெழுதாவெழுத்தினியைவித்துக்கொடுத்தடங்காப்புகழுற்றுனே. 6

முற்றிற்று.

---

இஃது.,

நாகூர் மகா-ள-ள-ஸ்ரீ மதாறுசாகிபுநகுதா அவர்கள்

குமாரர்

## முகம்மதுநயினுமரைக்காயர்

இயற்றியது.

---

விருத்தம்.

மணிநிரம்புகடல்புவிவானிருஞ்சுவனமதிகதிர்மீன்வானோர்மற்றை
அணிநிரம்புமறுசுகுறுசொடுலௌகுகலமுமொளியமாவாங்கங்குல்
இணிநிரம்புமலைமனுஜின்பலவுயிரின்கருவினருங்கருவாய்த்தீரத்
துணிநிரம்புநிருமலாநந்தபரம்பொருளுவந்ததூதர்பேர். 1

தனையடைந்தோர்க்கிடாகற்றுமருள்விழியார்சாயுச்யபதவிதாங்கும்
புனையடைந்தோரெஞ்சிரத்துநெஞ்சிடத்துநாவிடத்தும்பூந்தாள்வைப்போர்
நனையடைந்தோர்செழுஞ்சோலைவளநாகூரெம்பெருமானளினபாதந்
தனையடைந்தோர்புராணமதுசெய்தளித்தானன்னவனைச்சாற்றக்கேண்மின்

கற்றுயர்ந்தநிபுணரெலாங்கலைமகளுங்கினனிவனேகாண்டீரென்னுஞ்
சொற்றணிபுக்குரியவரும்பற்பெருநூற்குரையியற்றித்தொகுதியார்ந்த
நற்றுறையினரியபிரபந்தமளவிலகவின்றேனுகர்வாழ்வோன்
பற்றுநயவாட்புசெயுநற்றவமெலாந்திரண்டோர்பாலனானோன். 3

முத்தமிழிலக்கணத்துமிலக்கியத்துமுதுநூலின்முறைவழாது
வித்தகநூல்பலவாய்ந்தும்பிரசங்கமாரிபொழிமேகம்போன்றும்
இத்தலத்தினிகர்தனக்குத்தானலதுவேறிலையென்றியம்பக்கற்றும்
எத்தரத்தோர்களுங்களிக்கநாவலனென்றுயர்நாமமிலங்கப்பெற்றோன். 4

பரிவிளக்குமுபதேசமுறைமையினெற்கிளையனதிபக்கருந்தென்
கிரிவிளக்குமகத்தியனுமிவற்சொவ்வானென்னவிருங்கீர்த்திபெற்றோன்
அரிவிளக்குநகர்விளக்குநலம்விளக்குங்குலம்விளக்குமடல்விளக்கும்
வரிவிளக்குமிரும்புயத்துமகிபன்குலாம்காகிறுநாவலவரேறு. 5

சீவகசிந்தாமணியோசிலப்பதிகாரம்மணிமேகலைகொலோசெம்
பாவளையாபதியோகுண்டலகேசியோவெனப்பார்ப்போர்வியக்கத்
தாவின்முத்தமிழ்முடையறிபவர்க்கோர்முதநூலாய்த்தகுதியார்ந்த
பாவலர்களுவகத்தினெஞ்ஞான்றுமகலாதபண்பினோங்கி. 6

காணும்விழிதொடுகையுரைநாவறியுமனங்கேட்குஞ்செவிகளின்பம்
பூணுறுந்தேனமுதமுப்பழங்கற்கண்டுசுவைபொருவிலாது
நாணுமியல்பாயுளதிம்புராணமதையச்சியற்றிநயக்கச்செய்தான்
சேணுலவுமுயர்ந்தபொலந்துவடனையவரியகுணஞ்சிறப்பவாய்ந்தோன். 7

மும்மைதருபுகழ்சான்றபெரியோர்தாண்மலர்சுமக்குமுடியான்சீர்சால்
இம்மைதருவறியோர்பால்பெருங்கருணைமடைதிறந்தாலேய்ந்தகண்ணான்
செம்மைதருமிருவினையைப்பிரித்தளிக்குமறைமொழிசார்செவியான்மாறு
வெம்மைதரும்பசிக்குடைந்தார்க்கமுதளித்துமதுரமொழிவிரிக்கும்வாயான்.

தேனூறுமணிக்குவையுங்கலந்தளிக்கும்பொன்மலையிற்றிரண்டதோளான்
வானூறும்பெரும்புவியுமுடிபாயவிரிந்தனையமாலைமார்பான்
ஆனூறுமைந்தருவுமெழுமுகிலுமிருநிதியுமலைக்குங்கையான்
மேனூறுதரும்பெரியோர்தலம்போய்நின்றருள்பெறுவான்விரையுங்காலான்.

மெய்வாய்ந்தவினைபலவோருருவாயபுகழுடம்பான்விளங்குமூரான்
பொய்வாய்ந்தவுலகநசையறும்பாவாராவுத்தர்பொருந்துநாளுஞ்
செய்வாய்ந்தபெருந்தவத்தின்மகவானோனெனக்குமொருசிறந்தநேயன்
உய்வாய்ந்தசிக்கந்தரிராவுத்தனெனுமெவர்க்குமுதவியோனே. 1

முற்றிற்று.

---

சிறப்புப்பாயிரங்கள் முடிந்தன.

# புகழ்கவிகள்.

இவை

யாழ்ப்பாணம். ம-ள-ள-ஸ்ரீ

## மு. சுலைமான் லெப்பை

இயற்றியவை.

கணங்கொண்டமணிகொழிக்குந்திரையுடுத்த புவியகத்துக் கடிகொண்மாண்பின், மணங்கொண்டநபிபெருமான்மரபுதித்துவண்டலைச்சுமலர்ப்பைங்காவின், வணங்கொண்டமுதுநகரநன்னுதைகவந்துபுகழ்வளர்ந்துதுன்னத் திணங்கொண்டவவ்விடத்துமருள்பரப்புசெய்பிதுஷாகமீதெங்கோமான்.

பேர்நனிந்தநவநிலையின்மறைந்தபின்னர்நிகழ்ந்ததிருவிநோதம்பெட்பின்
ஆர்நனிந்தமுறைமையொடுதெரிந்தெடுத்துப்பயன்பயப்பவரிதிற்சேர்த்தும்
ஏர்நனிந்தநாகையெழுமுற்பவமுமுற்சவமுமிணங்கச்சேர்த்தும்
சீர்நனிந்தபுராணமொன்றுவிதிதவருவருங்கவியிற்செய்தானன்றே. (2)

அறம்பொருளின்பம்மொடுவீடடைதலெனுநாற்பயனுமருள்வதாயுந்
திறம்பொருளும்பார்க்குநர்க்குங்கேட்குநர்க்குஞ்சிறப்பினியைசீர்மைத்தாயும்
யறங்கெடுசொன்னயமுமுயர்பொருணயமுமலிந்து தருவண்மைத்தாயும்
அறங்கெழுமுவனநாகூர்ப்புராணமெனத்திருநாமமணிந்துமன்னே. (3)

தொல்லறிஞர்புரிந்தமிழிலக்கணலக்கியநூலைத்துறைகள்கண்டோன்
வெல்லரியவருங்கவிகள்பலவியற்றிப்புலவர்நனிவியப்பத்தந்தோன்
சொல்லரியபண்டிதராம்வாப்புதவுபுகழ்செறிந்தசுதனுவந்தோன்
நல்லறிவுகுடிகொண்டகுலாம்காதிறெனுநாமநாவல்லோனே. (4)

---

இஃது

திரிசிரபுரம் உபாத்தியாயர்

மகா-ள-ள-ஸ்ரீ

## கு. சோமசுந்தரம்பிள்ளை

இயற்றியது.

விருத்தம்.

பொங்குதிரையார்ப்பொருபான்மகவாதிபெறத்திருமுன்போற்றிநிற்போர்
தங்குழுவின்கலிப்பொருபாற்றழுங்குதிருநாகூரார்சரிதம்பூவிற்
றுங்கமிகுபுராணமதாச்சொற்றனன்செந்தமிழ்ச்சலதித்துறைதேர்தற்கோர்
வங்கமெனவியல்புறுத்துமெங்கள் குலாம்காதிறுநாவலவரேறே.

இஃது

திரிசிரபுரம் றயில்வே இன்ஜினீர் ஆபீஸ் கிளார்க்கு

வேளாங்காணி மகா-ள-ள-ஸ்ரீ

அ. சாமிநாதபிள்ளை

இயற்றியது.

விருத்தம்.

சீர்பூத்தசோணாட்டிற் சிறந்தநாகூர்நாப்பட்டிணிரியொற்றைத்
தேர்பூத்த செஞ்சுடர்வாம்பரியிடறும்பொற்சிகரத்திருக்கோயில்லிற்
றூர்பூத்தவொலிகள்பிரான்பள்ளிகொண்ட நவச்சரிதந்தனையாத்திட்டான்
வார்பூத்தமுத்தமிழ்மாச்சலகுலாம்காதிறுநாவலர்பிரானே.

முற்றிற்று.

இஃது

நாகூர் மகா-ள-ள-ஸ்ரீ

மீ. அல்லிமரைக்காயர்

இயற்றியது.

விருத்தம்.

புரிசைவளைதறுகாவாழொலிபெருமானதுநாகூர்ப்புராணந்தன்னை
யுரிசைபெறுதமிழ்க்கவிகள்பழுத்திருப்பவின்பமொடுமுஞற்றித்தந்தான்
குரிசிலெனநாவலர்கள்கொண்டாடவிலக்கணத்திற்கொழுத்தசீரான்
வரிசைபெறுவாப்புத்வுமைந்தன் குலாம்காதிறுநாவலவரேறே,

---

இஃது,

நாகூர் ம-ள-ள-ஸ்ரீ

செ. குலாமுகம்மதுசாகிபுமரைக்காயர்

இயற்றியது.

கட்டளைக் கலித்துறை.

நாகூர்மொழியிற்பொருண்மைபல்கூறிநயமிழந்தார்
நாகூர்மடங்கியொடுங்கியடைக்கலநண்ணிநிற்க
நாகூர்கமீதொலியுல்லா தங்காதைநமக்களித்தான்
நாகூர்ப்புராணமென்றேகுலாம்காதிறுநாவலனே.

முற்றிற்று.

---

# படலசூசிகை.


| பக்கம். | படலங்கள். | விஷயங்கள். |
|---|---|---|
| 6 | நாட்டுப்படலம் ... | இது எழுபத்தைந்து செய்யுட்களையும், நாட்டுவருணனையையுமுடையது. இதில், ஐந்திணைவளங்களும் பலகற்பனைகளுங் கூறப்பட்டிருக்கின்றன. |
| 16 | நகரப்படலம் ... | இது ஐம்பது செய்யுட்களையும், நகரவருணனையையுமுடையது. இதில்பலவிசேடங்களுங்கூறப்பட்டிருக்கின்றன. |
| 23 | உத்தரவளித்தபடலம் . | இது முப்பத்தாறுசெய்யுட்களையும், ஹலறத்து சாகுல்கமீது ஆண்டவர்கள் உபாத்தாய் மூன்றுந்தினம் ஹலறத்து செய்குமுகம்மது யூசுபுசாகிபு ஆண்டவர்களுக்குகபுறிலிருந்து உத்தரவுகொடுத்தவரலாற்றையுமுடையது. |
| 28 | தபோதனர்புறப்பாட்டுப்படலம் | இது முப்பத்துமூன்றுசெய்யுட்களையும், நாற்பதாந்தினகத்தம் கொடுத்ததும், நானூற்றுநான்குபகீர்களும் பரதேசசஞ்சாரஞ்செய்யப் பிரயாணப்பட்டதுமான வரலாற்றையுமுடையது. |
| 33 | பள்ளிகட்டியபடலம் .. | இது நாற்பது செய்யுட்களையும், பரதர்கள் ஆரம்பத்தில் ஆண்டவர்களின் கபுறைச்சூழப் பலகையாற் பள்ளிகட்டிய வரலாற்றையுமுடையது. இதில், நெய்தல்வளங்கூறப்பட்டிருக்கின்றது |
| 39 | திருவிழாப்படலம் ... | இது நூற்றுநாற்பத்திரண்டு செய்யுட்களையும், ஆண்டவர்களின் தலைவருடக்கந்தூரி வரலாற்றையுமுடையது. இதில், பலவருணனைகளும், மலர்விசேடங்களும், கொடியேற்றமும், சந்தனகூட்டுவருணனையும், இன்னம்பலகற்பனைகளுங் கூறப்பட்டிருக்கின்றன. |
| 59 | விவாகப்படலம். ... | இது நூற்றிருபத்துநான்குசெய்யுட்களையும், ஹலறத்து செய்குமுகம்மத்யூசுபுசாகிபு ஆண்டவர்களின் மக்கள்எண்மரின் விவாக வரலாற்றையுமுடையது. இதில், மேலாகூரை யலங்கரித்ததும், உலாவும், இசைக்குழல்யாழ் இவற்றின் விதிகளும், ஆபரணவிசேடங்களும்,பிறகற்பனைகளுங்கூறப்பட்டிருக்கின்றன. |

| பக்கம். | படலங்கள். | விஷயங்கள். |
| --- | --- | --- |
| 76 | செய்குயூசுபுநாயகருபாத்துப்படலம் | இது இருபத்தெட்டு செய்யுட்களையும், செய்குமுகம்மதுயூசுபுசாகிபு ஆண்டவர்கள் உபாத்தான வரலாற்றையுமுடையது. இதில், உலகநிலையாமை, யாக்கைநிலையாமை முதலியனகூறப்பட்டிருக்கின்றன. |
| 80 | உத்தரீயப்படலம் ... | இது இருபத்தைந்து செய்யுட்களையும், பாந்தனகரத்தரசன் ஆண்டவர்களின் கபுறிற் போர்த்தவநுப்பிய போர்வை வரலாற்றையுமுடையது. |
| 84 | கொலைத்தீர்ப்புமாற்றிய படலம் | இது ஐம்பத்தைந்துசெய்யுட்களையும், திருமலைச்செட்டியைக்கொலையிடத்தீர்த்த தீர்ப்பைமாற்றிய வரலாற்றையுமுடையது. |
| 92 | மரக்கலமழைத்தபடலம். | இது முப்பத்திரண்டு செய்யுட்களையும், திருமலைச்செட்டி யநுப்பின ஆளில்லா மரக்கலத்தை ஆண்டவர்களழைத்துக்கொண்டவரலாற்றையுமுடையது. இதில், பலகற்பனைகள் கூறப்பட்டிருக்கின்றன. |
| 96 | கூலிகொடுத்தபடலம் . | இது பதினெட்டுசெய்யுட்களையும், பள்ளியைச் சூழவேலியடைத்த வேலையாட்களுக்கு ஆச்சரியகரமாகக்கூலிகொடுத்த வரலாற்றையுமுடையது. |
| 99 | அற்புதவாட்படலம் ... | இது இருபத்தைந்து செய்யுட்களையும், பள்ளிப்புற நின்றழோங்கிலைவெட்டின தலைவன் கழுத்தையறுத்தவாளின்வரலாற்றையுமுடையது. |
| 103 | சேவறபடலம . ... | இது ஐம்பதுசெய்யுட்களையும், வலோற்காரமாயறுத்துண்டதால் வயிற்றிலிருந்து கூவினசேவலின்வரலாற்றையும் அறுத்துண்டவன் இசுலாமான செய்தியையுமுடையது. |
| 110 | குருடுமாற்றியபடலம் . | இது இருபத்தொருசெய்யுட்களையும், பிரார்த்தனைநெய்யைமேலிலாபத்திற்கு விற்றதாலானகுருட்டை மாற்றியவரலாற்றையுமுடையது. |

| பக்கம். | படலங்கள். | விஷயங்கள். |
|---|---|---|
| 113 | சபதப்படலம் ... | இது நூற்றுப்பத்துச் செய்யுட்களையும், தரியாபீவியென்பவள் தருகாவின் சாகிபுமார்களை மாற்றாவிட்டால் என்முலைகளையறுத்து நாய்க்குப்போடுவேனென்று சபதமிட்டவரலாற்றையுமுடையது. இதில், இரத்தினவிதிகளும் ஒப்பனையலங்காரமும், புசல்விசேஷமும், பலகற்பனைகளுங் கூறப்பட்டிருக்கின்றன. |
| 128 | மலடுதீர்த்தபடலம் ... | இது ஐம்பத்துமூன்றுசெய்யுட்களையும், பாவாராவுத்தரென்னும் புலவருக்குப் பிள்ளைபிறந்தவரலாற்றையுமுடையது. இதில், ஐந்திலக்சணவிதிகளும், அவற்றின் நூற்பெயர்களும், இலக்கியநூற்பெயராதியவும், சித்திரகவிகளுங்கூறப்பட்டிருக்கின்றன. |
| 137 | இலையானபடலம ... | இது பதினெட்டுசெய்யுட்களையும், காதிற்புகுந்தவிலையானறுப்புண்டவரலாற்றையுமுடையது. |
| 139 | மூங்கையுங் குருடுந்தீர்த்தபடலம் | இது இருபத்தொரு செய்யுட்களையும், ஒருசிறுவனுக்குண்டான மூங்கையையுங் குருட்டையுந்தீர்த்த வரலாற்றையுமுடையது. |
| 142 | அற்புதநாகப்படலம் .. | இது இருபத்தொருசெய்யுட்களையும், உண்டியற்குடத்தைத்தூக்கிச்சென்ற சுபைதாரைக்கடித்தநாகத்தின்வரலாற்றையுமுடையது. இதில், நாசலக்ஷணங்களும், கடிவகையுங் கூறப்பட்டிருக்கின்றன. |
| 146 | பஞ்சமாற்றியபடலம் . | இது நாற்பதுசெய்யுட்களையும், பஞ்சத்தைமாற்றினவரலாற்றையுமுடையது. இதில், பஞ்சத்தின் பலகற்பனைகளுங் கூறப்பட்டிருக்கின்றன. |
| 152 | முதன்மினாருப்படலம் . | இது முப்பத்தொரு செய்யுட்களையும், சாகிபுமினாருக்கட்டின வரலாற்றையுமுடையது. |
| 156 | கொம்புத்தேங்காய்ப்படலம் | இது இருபத்திரண்டு செய்யுட்களையும், கொம்புமுளைத்ததேங்காயின் வரலாற்றையுமுடையது. |

| பக்கம். | படலங்கள். | விஷயங்கள். |
|---|---|---|
| 159 | இரண்டாம்மினாருப்படலம் ... | இது பதினைந்து செய்யுட்களையும், தலைமாட்டுமினாருக்கட்டிய வரலாற்றையுமுடையது. |
| 161 | மூன்றாம்மினாருப்படலம் ... | இது பதினொருசெய்யுட்களையும், முதுபக்குமினாருக்கட்டிய வரலாற்றையுமுடையது. |
| 162 | உருமாற்றியபடலம் .. | இது எண்பத்துமூன்று செய்யுட்களையும், கிட்டாவரசரின் குருவைப்பன்றியுருவாக்கிமாற்றிய வரலாற்றையுமுடையது. இதில், குறிஞ்சிவளமும், பலகற்பனைகளுங்கூறப்பட்டிருக்கின்றன. |
| 174 | நாலாம்மினாருப்படலம். | இது பத்துசெய்யுட்களையும், ஓட்டுமினாருக்கட்டியவரலாற்றையுமுடையது. |
| 176 | குன்மந்தீர்த்தபடலம் | இது முப்பத்தொருசெய்யுட்களையும், மலாக்காசாகிபு என்னும் பெரியோரின் வரலாறுஞ் சாகிபுமார்களுளொருவருக்குக்குன்மநோய்தீர்த்த வரலாற்றையுமுடையது. |
| 181 | ஐந்தாம்மினாருப்படலம் | இது நாற்பதுசெய்யுட்களையும், தஞ்சாவூர் பிரதாபசிங்குமகாராஜா பிரார்த்தனைசெய்தபடி பெரியமினாருக்கட்டியவரலாற்றையும் ஒருகிராமம் மானியம் விட்டதையுமுடையது. இதில், சிலதோத்திரப்பாச்சள் கூறப்பட்டிருக்கின்றன. |
| 189 | மானியப்படலம் ... | இது முப்பத்துநான்குசெய்யுட்களையும், பிரதாபசிங்குமகாராஜாவின் குமாரன் துளசிமகாராஜா பதினான்குகிராமங்கள்மானியம்விட்டவரலாற்றையுமுடையது. இதில், அக்கிராமங்களின்பெயர்களும் பிறவுங்கூறப்பட்டிருக்கின்றன. |
| 192 | தலவிசேடப்படலம் ... | இது இருபத்தெட்டு செய்யுட்களையும், நாகூர்மகிமையையுமுடையது. |


ஆகப்படலம் 31-ம், காப்பு, கடவுள்வாழ்த்து, பாயிரம் ஆகிய 3-ம் அடங்கிய இந்த நாகூர்ப்புராணம் 1350 செய்யுட்களான் முற்றுப்பெற்றது.

படலசூசிகை முடிந்தது.

# நாகூர்ப் புராணம்.

## காப்பு.

திருமா வுலக முளவாமவை சென்னிதாழ்த்த
விருமாவினை யினிகந்தின்புற வாள்வோன்யாவன்
பெருமானுயர்ந்தோன் பிறப்போடிறப் பின்றித்தோற்று
மொருமாமுதல்வனவன் மாணரணுற்றுவாழ்வாம்.

காப்பு முடிந்தது.

## கடவுள் வாழ்த்து.

சீர்கொண்ட வகன்புவியைக் கறங்குதிரைத் தடங்கடலைத் திரண்டுமல்குங், கார்கொண்ட வுயர்விசுப்பை யாண்டாண்டினமை பொருளாய்க் கவினத்தோற்று, மார்கொண்ட விருதிணையை யாக்கிய மைத்தியலவிதித் ததிதமாகி, வார்கொண்ட பெருங்கருணை மேவு மொருமெய்க்கடவுள் வணக்கஞ்செய்வாம். (1)

பொருப்புவனம் புணர்திரைவான் புவியிவற்றில் விரவுற்ற பொருட்கள்யாவு, முருப்புவனம் பெறவெளியாங் காரியத்தின் காரணமாயுண்டாய் முன்னங், கருப்புவனம் புடைமல்குங் கண்ணகன்மாநகரெனுமக் காவிற்றோன்றி, யிருப்புவனம் பெருகியமதீனா வாழ்நபிபெருமா னிறைஞ்சுகிற்பாம். (2)

வேறு.

கொற்றநபியான வாதமுதற்கொண்டாங்கீற்றின்
முற்றநபியா முகம்மதெம் மண்ணல்காறு
முற்றநபியா யுலகமொருங்கேத்தன்மேய
மற்றநபிமார் மலர்த்தாட்கள் சென்னிசேர்ப்பாம். (3)

வேறு.

வீங்குபுகழ் பெறுநபிமார் வேந்தர்விழை நண்பினருண் மிக்காரெ ன்னும், வாங்குசிலையிருங்கரத்து மன்னர்திருமணி முடிதோய் வடு க்கள் பூத்த, வோங்குதிறலபூபக்கருமறுது மானலியின்னோ ரொ ளிர் பூந்தாட்க, டாங்குசிரமெனதென்று தம்மடியார் தமிலிகலுந் தமியேம்யாமே. (4)

வேறு.

பார்பொலியனைத்துங்காக்கும் பண்பினர் நபிகள்கோமா
னோர் பெறுவிழியினன்ன பெயரரென்றிறைஞ்சுகிற்கு
மார்பொழிறுறக்க நாட்டினர சிளங்குமரரான
சீர்கெழுமஸன் குஸைன்றந்திருவடி சென்னிசேர்ப்பாம். (5)

வேறு.

என்னருந் தோழர்க்கியன்ற திருத்தோழராவ
ரின்னரென்றற் பினிறைமாமறை வாயிற்கூறுந்
துன்னருங்கீர்த்தி துளங்காருநந்நாதர் தோழர்
மன்னருந்தாட்கண்மலர் மாமனம் வைத்துவாழ்வாம். (6)

வேறு.

நலங்கொளுநபிகள் கோமானயந்துள மணந்தபைம்பொற்
கலங்கெழு நங்கைமார்தாழ்கனங் குழையவராமென்று
மிலங்கெழிலிருபான்மேய வெழுவராமன்னைமாரைத்
துலங்குறுமகளாம் பாத்திமாவை நாட்டுதி செய்வாமால். (7)

வேறு.

கார்கெழுகுடை நபிகாட்டு நல்வழி
யார்கொளும் ஹனபியே யாதியாகிய
பேர்கொளுமதுகபு பிரிவு செய்தரு
ளூர்கெழுமிமாம்களோர் நால்வரேத்துவாம். (8)

வேறு.

படியலர் படிமாருன் றவற்புதம் பலகாற்செய்த
கடியலர் தலையின் வையக்காப்புடை குத்புநாதர்

முடியலர் தழும்பின் சுல்தான் முகியித்தீனப்துல்காதி
றடியலரகத்திற் பூப்பவநவரதமுங்கொள்வாமால். (9)

மீன்பொலிதிரைகளோங்கும் விரிகடல் வளைந்தபாரிற்
கான்பொலி யமுனைநீந்தக்கராம்வெரி நிவர்ந்தாரென்னும்
வான்பொலிவுள்ளோர் மாண்டவலங்கெழுகுவாலீர் வாழுந்
தேன்பொலி பெருமாளெண்டாட் சிந்தையிற்கொள்ளுவாமால். (10)

வேறு.

மாசற்ற பைம்பொன் மணிமாமுடி மன்னர்தாமும்
பாசத்தடைந்து பணிந்தேத் தருண்மிக்க நாகூர்த்
தேசுற்றகோயிற் சிறப்பெய் தியவாழுங்கோமான்
காசற்றவொண்பூங் கழல்யா முடிகொண்டு தாழ்வாம். (11)

வேறு.

தாம்பெருந்திரைசூழ்வாரி யாடையிற்றரித்தவைய
மோம்புறு பெரியோர் தம்முளுயர்வுடைப்புனிதராகித்
தேம்பொழில் புடையின்மல்குந் திரிசிரபுரத்தின் வாழ்க்கை
மேம்புகழ்த்தபலையாலம் வேந்தர்தாள் சென்னிசேர்ப்பாம். (12)

வேறு.

ஆயகமுறுந்தகை யப்துல்காதிருந்
தாயகரக நனிதழைப்பமேவிய
சேயகமெனவமர் செய்குயூசுபு
நாயக ரடிமலர் நாவினேத்துவாம். (13)

கலிகெழுகருங்கடல் கலந்தபார்மிசை
வலிகெழுதிசை திசைமலிந்து வைகுறும்
பொலிகெழு புகழுடைப் புனிதமேவிய
வொலிகளினடிமல ரொருங்குபோற்றுவாம். (14)

புண்ணியநேர்வழி புகுத்தியாரெமை
யண்ணியவடிமை யிணக்கியாண்டரு
ளுண்ணியவறிவுறு நூறுத்தின்குரு
தண்ணிய மலரடி தலைமிசைக்கொள்வாம். (15)

வேறு.

முந்தைவிதியின் முறைசேர்வழி யென்னைக்காட்டிச்
சிந்தைபொலியவருந் தெண்டமிழ் தேக்கியிட்டார்
தந்தைமுன் றோன்றறகை சால்பகீர்த் தம்பியென்பா
ரெந்தையவர் தம்மிணையீர்ங் கழலேத்துவாமால். (16)

கடவுள்வாழ்த்து முடிந்தது.

---

# பாயிரம்.

மழைபொரு கரத்தின்சாகுல் கமீதொலி மறைமுற்செய்த
கழைபொரு சரிதம்யாவுங் காரணப்புராணமாகித்
தழைபெற மறைந்தபின்னுஞ் சரிதமற்றொருங்குகொண்டு
விழைவுறப் பொலியுமோர்க்கு விளக்குமிப்புராணமன்றே. (1)

வேறு.

மாவிரவுவனநாகூர் செய்குயூசுபுபெருமான் மாபினோராம்
பூவிரவு புகழ்சேர்வாஞ் சூர்பகீர் சாகிபருள் புதல்வரென்னுந்
தாவிரவுநிறையறிவு முதிர்கொண் முகம்மதுகௌது சாகிபோர்ந்து
பாவிரவு வழியளித்த பழுது தீருரைவழித்திப் பருவற்றனே. (2)

வேறு.

கலையேறுநெஞ்சிற் சிறந்தகவிவாணர் முன்னம்
புலையேறும்யானிப் புராணம் புனைமாறுகாணின்
விலையேறும்வெங்கட் சுறவோடும் விரிந்தவாழி
யலையேறு நெய்த்தோலியுந் தான்றிரிந்தற்றுமாதோ. (3)

தார்கொண்டகோமான் சரிதமதை யென்சொன்மூடிச்
சீர்கொண்ட செய்யுட் புராணமென்று செய்துவைத்தே
னோர்கொண்டவிப்பி மணிவான் முத்திருக்கைவேண்டி
யோர்கொண்டு வாரு முலகவியல் கண்டயானே. (4)

தொல்லோர்கவியின் றமிழ்வான்றுறை போகாரீயும்
வல்லோர்க்கணிய வியல்வல்லையோவென்பவாயி

னல்லோர்துதியு நயந்தகை தினன்குகொள்வோ
ரல்லோர்துதியுநமாராண்ட னையண்ணலென்பேன். (5)

வீரும்றகல்வி விறலேர்படக்கற்றுத் தேர்ந்து
பேருற்றநல்லோர்பிறங்காரவையென் னூல்போகி
மேருற்றகாகம்பொலங்கேழ்நனிமேவுமாபோற்
சீருற்றுயர்ந்துசெறியும் வழூத்திருந்தானே. (6)

அரும்புகழ்க்கல்வியனுவாயினுந்தேறக்கல்லா
திரும்புகழ்வேட்டாங்கிறுமாந்துறவைகுமோர்கள்
விரும்பலரென்னூல்வெறுத்தாடிநிந்தித்தல்செயவார்
கரும்புகைப்பென்ப தயிலும்வாய்க்கசப்பிற்றானே. (7)

யான்வலனென்பான் பலகல்விகள்யாவுந்தேர்ந்தா
ஞன்வலனென்பான்றமிழ் நாற்றமும் வீசகில்லா
னேன்வலனென்ப திருமா நிலத்தேறுங்கல்வி
யோன்வலனென்பதுலக நிதானிக்குந்தானே. (8)

துறவினவர்கடுதிக்குங் கழற்றூய நாதர்
பிறவியுறுமென்பிணி போகியவாள் வான்வேண்டித்
திறமிலொரு நானவர்காதையிந்நூலிற் செய்தேன்
மறவியுளனால் வடுவோடிதுவைகுந்தானே. (9)

எங்கண்மணியினிறைவான் கதையற்பிற்கூறு
மிங்கென்மொழியின் வடுவோர் வடுவென்றான்றே
ரங்கண்விசும்பின கனிலா வீசிக்காலுந்
திங்கள்வடு மாவுலகங்கொளச் சேர்ந்ததானே. (10)

வேறு.

நண்ணருசீர் கெழுமியவின் நாகூர்ப் புராணத்தைக்
கண்ணாகனவ் வூரின் குலாம் காதிறுநா வலனென்பா
னண்ணனபி கிசுறத்தோ ராயிரத்து முந்நூற்றிற்
பண்ணமைதீஞ் சொற்றமிழிற் பருவலாப் பாடினானே. (11)

பாயிரம் முடிந்தது.

ஆ செய்யுள் 28.

# நாட்டுப் படலம்.

ஆழியாமாடை யார்த்திட்டிமயமான் மேருவென்னும்
வீழியற்கொங்கை தாங்குமேதினிப் பாவைமாதர்
வாழியற்பரத மாயவாண்முகத் திலதமொக்குஞ்
சூழியவளத்திருக்கந் துளங்குறு சோழநாடு. (1)

வேறு.

கறங்குவீழருவியி னிழுமென்கவ்வையான்
மறங்கெழுபெருங்குரன் மழைகண்மன்னிய
வுறங்குசெய்வானக டிரிஞுவோங்குறு
பிறங்கலினினம்பல பிறங்கன்மேவுமால். (2)

வெடிகமழ்வேங்கைபோய் வேங்கைதாக்கிய
கடிகெழுகரிவெதிர்ங் காடுசுற்றிய
முடியுயர்மீமிசை முட்டுவெற்பெலா
மடிபலகாவத மகன்றுநிற்குமால். (3)

அங்கெழுகொடுமுடி யடைகொண்மாமழை
மங்குலினினங்களை மதங்கொள்வாரணந்
தங்குறுநிரையெனத் தாக்குமாறெழும்
வெங்குரன்முடங்குளை விரைந்துபாயுமால். (4)

பைங்கழைமுதிர்ந்துகப் பட்டமுத்தமும்
வெங்கரிக்கோடிற வீழ்ந்தமுத்தமுஞ்
சங்கவுங்கலந்துறத் திரையிற்றுங்குபு
கொங்கவிழருவிகள் கொழித்துப்பாயுமால். (5)

நனைமலர்தொறும்புகூஉ நன்குமாந்திய
வனைசிறைத்தும்பிகள் வரியினோர்த்தெழிற்
கனைமயிலகவுதல் கண்டுநல்கலின்
சினைகளிற்புன்னைமுத் துதிரச்செய்யுமால். (6)

வழைகளும்புன்னையும் வழங்கசோகமுந்
தழைகெழுபூழிலுந் தேக்குஞ்சந்தமும்
விழைகெழுகுறிஞ்சியும் வீக்கொள்வேங்கையு
மழைகொளச்சாரல்வாய் மன்னிநிற்குமால். (7)

பிந்தமரூடுறும் பிடியையுண்ணிய
வந்தவெங்கவுண் மதக்கோட்டுவா ரணஞ்
சந்தனப்பசுந்தழை தடங்கைக்கொண்டுபோ
யிந்தினிருறுவைத் தினிதினூட்டுமால். (8)

கற்பிலாக்கருமிளங் கவிகள் கண்டுபோய்ப்
பற்பழம்படர்குலை பளிங்கிற்காட்டலும்
பொற்பிலாமுதியவும் போகிக்கைகளாற்
சொற்பெறும்பளிங் கதுகிளைத்துச் சோருமால். (9)

செழுந்தளிர்க்காந்த ளொண்மலரிற்றேனசைஇ
விழுந்தவண்டமைதலும் விழித்துமந்திகள்
கொழுந்தழல்விழுந்த தென்றுளங்குலைந்திரா
தெழுந்தெழுந்திருகர நெரித்தினையுமால். (10)

மைத்தமர்முகந்தரு மந்திநச்சராப்
பைத்தலையுமிழ்மணி பளிக்குப்பாறைவா
யுய்த்தொளிகான் றுறவுற்று நோக்குபு
கைத்தலத்தெடுத் திடக்கன லென்றஞ்சுமால். (11)

தும்பிவண்டினங்கள் போய்ச்சுழலுமாமரக்
கொம்பிடைவளரிறால் குறவர்வீசிய
கம்பலைக்கவணைபோய்த் துருவிக்கல்லென
வம்பவிர்கமழ்மது வழியச்சிந்துமால். (12)

சீயமாவிமிர்குரல் செவியிற்கோடலும்
பாயவேழக்குழாம் படபடென்றுராய்ச்
சாயவான்கணுக்களின் சான்றதண்ணிலா
வேய்பவொண்மணிபல விண்டுசிந்துமால். (13)

கிழங்ககழ்வன்றியைக் கெடுசெய்யானையை
முழங்குதொண்டகத் தொடுமுழவினன்னதோள்
வழங்குவில்லினர் குறவயவரீண்டுபு
தழங்கொடுமிளை தொறுந்தட்டிநிற்பரால் (14)

கருங்குவளைத்திரள் கண்ணின்மாறெனா
வொருங்குகொய்துறச் சொருகுற்றவ்வார்பிடி

மருங்குலேலரிளமுலைக் குறத்திமார்கட
மிருங்குழலடுக்கம தெங்குநாறுமால். (15)

செந்தினையைவனஞ் செய்தகல்லுர
லுந்தியவளர்கரிக் கோட்டுலக்கையாற்
பைந்தொடிபுழும்புறப் பாடுவள்ளையின்
கொந்தள கத்தவர் குறுவர்யாண்டுமால். (16)

தேனலம்பிருங்குழற் சிறுநுசுப்பினு
ரேனலமிதண்வயி னிருந்துதட்டையான்
வானலங்கிளிகடி வல்லெனுதைபோய்
மானலம்வரையெதிர் கூய்மயக்குமால். (17)

கொங்கவிழ்புதுமலர்க் குரவநீழல்வா
யங்கெழுகறங்கிசை யருவியாடுபு
கங்கொளுங்கருங்குழ லுலர்த்துங்கற்புடை
மங்கையரெனவிள மஞ்ஞையாருமால். (18)

மாக்கருங்காலுடை மலர்கொள்வேங்கையின்
மேக்குயர்சினைதொறும் விளங்குமஞ்ஞைகள்
வீக்கருங்கச்சிற விம்முவாண்முலைப்
பூக்கொயுமகளிரைப் பொருவித்தோற்றுமால். (19)

சினையிணர்க்குங்குமஞ் செழுங்கைக்கொண்டுபைந்
தினையுணக்குறுகுறத் தெரிவைமார்தம
நனைமலர்க்கருங்குழ னச்சிவண்டினை
நினையகக்காமுகர் நெஞ்சிற்சுற்றுமால். (20)

சிலம்பெதிர் கூய்விளை யாடுதேமொழிப்
பொலந்தொடியவர்நகை பூப்பவண்டினம்
புலம்பெழிலாம்பலம் போதுவால்வளை
யலம்பகன் சுனைதொறு மலர்ந்துமல்குமால். (21)

வேறு.

இன்னதன்மையு மேனையமுன்னையோர்
சொன்னதன்மையுஞ் சொல்லமையாதவு
மன்னநின்று வளத்தொடிலங்குமாற்
கொன்னகன்ற குறிஞ்சிநிலங்களே. (22)

வேறு.

கொன்னிறந் திடவருநுயர் கொடையவர் குணத்தின்
றுன்னிநின்றபைம் பூஞ்சினைக் கொன்றைபொன்சொரியு
மின்னியைந் திடாவிவறன் மாலையர் குணனேய்ப்பக்
கன்னிகைத் திரள்விரிந் துறவலர்ந் திடுங்காயா. (23)

அரியநன்றி காட்டுநரெனத் தலையலுமாங்குப்
பிரியமெய்திய வலர்ந்திடு முட்புறப் பிடவங்
கரிய பூங்குழலாய்ச்சியர்வாணகை கட்குச்
சரியவாலெனத் துணர்விரிந்திலகுறுந் தளவம். (24)

மங்குமாறகன் முதிரையுஞ்சாமையும் வரகுங்
கங்குகாண்டொறுங் கதிர்கெழுகாடெலாங் கமழப்
பொங்குகானதி கலப்புறவின்னருப் பொழிந்து
கொங்குவீசிநின் றணிமலர்சிந்துமாங் குருந்தம். (25)

பாகுசிந்தியற் குடம்பொருசெருத்தலம் பசுக்க
ளாகுமாமறி நிரைகொடு கோவலர் நன்கா
மாகுலந்தரலிற் பெடைபொருவிய வகன்று
போகுமால்வர கயின்றமர்ந்தின்புறு பூழ்க்கள். (26)

வருந்துசிற்றிடை வெம்முலைப்பொறைகொளா வண்ண
முருந்துநேரெயிற் றாய்ச்சியர்கரவளை முரல
விருந்துநாட்டயிர் கடைகுரல்புலியவென் றினைந்து
பொருந்துமாறற மறுகுமான்முயலொடும் புல்வாய். (27)

தீஞ்சுவைக்கனி மொழியுடையாய்ச்சியர் திரண்டு
பூஞ்சுமட்டிடைச் சுமந்துறுங்குடங்கர்வாய்ப் பொலிநெய்
தேஞ்சுமத்தெழு நன்மணத்தொடுவிராய்ச் சென்று
போஞ்சுபத்திசை யாண்டினுநறுமையே பூப்ப. (28)

பன்றரும்புகழ்க் கோவலர்வேய்ங்குழற் பாலை
யின்றழுங்கிசை யெண்டிசையுடன்வர விசைக்குங்
கன்றலம்புமுன் கை யெழிலிளமுலைக்கரிய
கொன்றையம்பழம் புரைகுழலாய்ச் சியர்குரவை. (29)

தீனவாங்குளகசைத்த கால்வரகுவைசெறிந்த
வானவாமதட்கிடைக்குடில் வாய்வயின்மல்கி
யானவெண்டயிர்ப் பிதிர்வுறழ்பூமலியவரை
கூனவாங்குளிர்புரை கொடுங்காய்க்குலைகொடுக்கும். (30)

தும்பிவண்டுமற்றினத் தொடுவிளரிவாய்த்தொனிப்ப
வம்பிணர்ப்பிடவொடு தளவமு நனிமலர்ந்து
கொம்பிறப்பொலி குறிவழியன்னத்திற்குறுகி
யம்பொனற்றொடியாய்ச் சியர்கொய்தனரணிவார். (31)

கூலமெண்வகையினு நிரைவளர் தொறுங்கொடுக்கும்
வாலவொண்சுதை வெண்டயிரளை நுரையணநெய்
சாலவிப்பொருளினு முயர்வெறுக்கைமாத்தாங்கிக்
கோலவன்கரக்கோவலர் பெருமிதங்கொள்வார். (32)

வேறு.

ஆரியின்னவு மான்றவரோதிய
வீரினன்னவு மேவிலவேனவும்
பேரினோடு பிறங்குதலுற்றவான்
மூரிவான்களி முல்லைநிலங்களே. (33)

வேறு.

ஓமைமற்றிருப்பை யொண்பூவுழிஞையேனையவுமற்பின்
றூமகத்தருளான்செல்வத் தாங்கிறைநிழலுமின்றி
மாமைகெட்டலரவன்றே ஞெக்கலின்வாடிவீழுங்
கோமளத்துவற்றிற்பற்றிப் படர்பசுங்கொடிகள்யாவும். (34)

தீயரைச்சேர்ந்துவைகு நல்லருந்தீயராவர்
மாயிருஞாலத்தென்னும் வாய்மையினுறலைப்பார்
மேயவக்குறும்பின்வற்றுஞ் சுனையிடைவிராயபூக்கள்
காயமற்றுலர்ந்துநாளுங் காணுமோர்க்கரிதிற்காட்டும். (35)

கோடியகோலோனிணை யெனவெயில்கொடிதின்வீழ
வாடியமெய்யொடாங்கு வலியழிமதமில்வேழ
நீடியகோடிரண்டு நிலனுழுபடையினான்றி
யாடியபனைக்கைதூக்கி யங்கங்குக்கிடக்குமன்றே. (36)

கயந்தலைகலக்குஞ்சின்னீர் களிறுபினுண்ணாநின்று
நயந்தமர்பிடிமுனூட்டி நன்மனைவாய்த்தன்னூளைப்
பயந்ததிறம்பரிவுகூர்ந்து பாதுசெய்கல்வியாக்கள்
வியந்துறுகுணமீதென்ன விளங்கியதெரிக்குமன்றே. (37)

இணர்கெழுமராஅம்பூங்கோதை யெயிற்றியையெயினன்காயுந்
தணறெறுமென்றூழ்தாங்கத் தன்னிழலொதுக்கநோக்கிப்
புணர்பிணவொதுக்கிநிற்கும் பொரிமலர்ந்தனையமேனிப்
பணர்மருப்பிரலைதன்னிற் படர்கிழன்மறையவன்றே. (38)

வாங்குவில்வளைத்துமூட்டு வாயுடையம்புமூழ்கத்
தீங்குசெய்மறவரெய்யுந் திறத்தினூனுவைகளஞ்சிப்
பாங்குறுபேடுகாக்கப் பரிந்துதன் சிறகர்கோலும்
பூங்குரவடிக்கீழ்வைகிப் பொலியினப்புறவமன்றே. (39)

வேறு.

இம்மொழிந்தவு மேனவுமேலவர்
தம்மொழிக்குட் சமைந்தனவும்விரா
யெம்மருங்கு மியைந்துவிளங்குமாற்
பம்முறும் பலபாலைநிலங்களே. (40)

வேறு.

இடங்கரைகரையமோது மிருந்திரையகிலுஞ்சந்துங்
குடம்புரைசங்கமீன்ற சுடர்மணிக்குவையும்வாரிக்
கடங்கடந்தினிதின்மேவுங் கண்ணகனதிகள்பாய்மாத்
தடம்பணைக்கோட்டம்பல்ல சான்றதுமருதவேலி. (41)

வேறு.

ஆக்கம்யாவு மடைந்தெனக்காணிய
பாக்கநின்றுயர் பைஞ்சினைத்தாருவின்
பூக்களாவன பன்மணிபோறலாற்
காக்களாவன கற்பகமன்னவே. (42)

பூகமொய்த்துறு பொற்கனிசிந்தவுஞ்
சேகமற்றெழு தெங்குசிறப்பவுங்

கேகயங்குயில் பைங்கிளியுங்குலாம்
மாகமுட்டி வளர்ந்தபொழில்களே. (43)

நானமாமலர் நன்னறிருலருந்
தீனவாங்கனி சேர்ந்துகுதேனெலாம்
வானமோங்கெழில் வான்பொழில்வாய்தொறுங்
கானமாவிமிர் காலெனப்பாயுமே. (44)

மூரியார்கனி முத்தினநாண்மலர்
பாரிலார் பிறபண்டமொருங்குற
வாரிவாரியின் வான்றிரைமோதுகா
வேரியாதிய வேய்நதிபாயுமே. (45)

தேம்பலாவொடு செங்கனிவாழையும்
மாம்பழங்கெழுவான் குலையும்மிற
மேம்பிராயவிரற் கருமந்திக
டாம்பிறங்கு தடம்பொழிற்றூறுமே. (46)

பாடுதும்பியின் பாணொடுகூங்குயி
னீடுகீத நிறங்கிளர்பைங்கிளி
நாடுமோசை நயந்துகளித்ததா
ளுடுமஞ்ஞையரு நடங்காட்டுமே. (47)

கொங்குநின்று குவிமுலைப்பாவையார்
கங்குநின்றுயர் கந்தரம்பாடுதல்
வங்குநின்று மகிழ்கொள்வலம்புரிச்
சங்குநின்று தழங்கிசைமானுமே. (48)

மாதுசேர்ந்த மருதமும்வஞ்சியுங்
காதுதிர்கிளைக் காஞ்சியுங்கண்ணுராய்ப்
போதுசிந்திய பொற்றுகள்போர்த்தெனத்
தாதுபோர்த்துறுந் தாமரைப்பொய்கையே. (49)

மையினன்ன மலர்ந்தமர்நீலமுங்
கொய்யிலாம்பலுங் குன்றவுழக்குமா

லெய்யினன்ன ரிலஞ்சிதொறும்பிடிக்
கையினன்ன செங்கண்ணின்வரால்களே. (50)

கன்றுமேதி கரும்புமுறித்துவாய்
மென்றுதும்பி விளரியெழுப்பிய
நின்றுகால் கணெருக்கலிற்றீஞ்சுதை
மன்றுபாய்ந்து வரம்பையுடைக்குமே. (51)

மேதிமாமடி விம்முறுபாலுடன்
வாதினின்று வரம்புமிதித்தலான்
றீதினந்தொடு சிப்பியுமாரடி
மோதிவிண் டெழின்முத்த முதிர்க்குமே. (52)

மல்குதும்பிகண் மல்லிகை முல்லைவாய்ப்
பில்குமாநறவுண்டு பிரிந்திரை
பல்குபாணியிற் பண்பினுறங்குமா
லல்குதாமரையன் னத்திரள்களே. (53)

சேய்த்திருந்தடை தீம்புனல் செய்தொறும்
பாய்த்துமள்ளரலப் படைபாங்கெலாம்
போய்த்திருந்திய புக்குழுதார்விதை
வாய்த்திறைப்பது பொன்மழைவட்குமே. (54)

வித்துவா ரொலிமேதகு நாற்றினைப்
பத்திநின்று பறிக்குநர் தம்மொலி
நத்துவார்பணை நட்டுநரின்னொலி
யொத்துவாழ்கிணை யோடுமொலிக்குமே. (55)

புட்பமாலை புனைந்தற விம்மலா
னுட்பமாரிடை நோமென்முலைச்சியர்
கொட்பினனகுலத் தொடுகூண்டமர்
கட்பினேதை கருங்கடலொக்குமே. (56)

கன்றுகல்வியர் கைத்திறமாந்தென
நின்றுமல்குறு நெற்பயிர்யாவுநே
ரொன்றுநூனிறைவுற் றவரொப்பெனக்
குன்றுமாறு குலைத்தலைசாய்க்குமே. (57)

செய்யவோதை திளைத்த கிணைக்குரல்
வெய்யவன்பசி வீடியவார்த்தெழ
வையமுய்யுற வான்கெழுமுங்கதிர்
கொய்யவாரிலம் பாடுகொய்வுண்ணுமே. (58)

வேழநின்றென வெம்முலையின்வடு
வாழநின்ற வகன்புயமள்ளர்கள்
வாழநின்றிடும் வையகமுற்றினுஞ்
சூழநின்றுயர் சூடுமிதிப்பரே. (59)

ஆகுகாய்கனி யாழ்ந்தகிழங்கின
நாகுநெல்லரி நற்கழைநாண்மலர்
பாகுவெள்ளிலை பல்லவுமேற்றியாங்
கேகுபண்டிக ளெண்ணிலமன்னுமே. (60)

குல்லைமாதளை தேங்கொள் கொழிஞ்சிமா
முல்லைசண்பக நெல்லி முருக்குநே
ரில்லையெங்கு மெனும்படியார்திருக்
கொல்லைதோறுங் குருகிறைகொள்ளுமே. (61)

காலைதோறுங் கலகலமார்த்திடும்
மாலைதோறு மணிமலர்விள்ளுமச்
சோலைதோறுஞ் சுருப்பிசைபாடிய
வாலைதோறு மறைக்கரும்பாலுமே. (62)

ஓதுமின்னவு மோதிலவும்முனோ
ராதுகூற்றின மைந்தவுமானசீர்
போதுதோறும் பொலிந்துறமேயவான்
மாதுசேரு மருதநிலங்களே. (63)

வேறு.

எழின்மீன்சினையி னிடுமாமண லெக்கர்சூழ்ந்த
பொழின்மேவுபுன்னைப் புதுநாண்மலர்த் தேறல்பாயுங்
கழிமேவுமன்ன மடமார்நடை கற்பமாதர்
வழிமேவனோக்கி முடத்தாழையில்வைகுமாமே. (64)

வாழத்திமிலர் வலைபோர்த்துணைக் குற்றமுன்றிற்
போழத்தடந்தோட் புணர்வார்முலை யங்கண்மாதர்
ஞாழற்சிறுகோ னறுமாமலர்க் கையில்வாங்கித்
தாழக்குழல்காய் தருமீன் புலவோப்புவாரே. (65)

முடங்கலங்கைதை முழுவெண்மலர் கொக்கிற்பூப்பக்
கடங்கவிழ்யானைக் கருமாக்கடல் வாணர்மாத
ரிடங்கொள்புலவின் மணமேகிய வெங்குநாறத்
தடங்கருங்கோதை தனிலின்பொடு வேய்குவாரே. (66)

வாரிப்பொலிவின் மணிதான்மருள் கிற்குமாழ்ந்த
நீரிற்செலுத்து நெடுந்திண்டி மில்வாணரீண்டி
வேரித்தடந்தோள் புளகெய்திய மீன்கள்வவ்விச்
சேரிக்கரைவாய்த் திருமால்வரை யென்னச்சேர்ப்பார். (67)

மான்கோள்விழியின் மருணீள்கட் பரத்திமார்கள்
கான்கோளிருளிற் கனையீர்ங்குழ றூழ்ந்துசோர
வூன்கோட்சுறவக் கடலாடுறு மோதையார்க்கு
மீன்கோட்பறைமற் றகன்றேகிய விம்முமன்றே. (68)

சேரிப்பரதர் திகழ்காழக னல்குன்மாதர்
வேரிப்பொலிவின் விரிவாய்மலர்க் கானலாடும்
பூரிப்பொழியாப் புணர்மாண்புடை யாரவாரம்
வாரிப்பிளிறும் வலிதான்கெடத் தேய்க்குமன்றே. (69)

கப்பித்தகாலின் கவின்சேர்பொறி ஞெண்டர்யாவுந்
தப்பற்றமேன்மைத் தனிவான்பணி லங்களோடு
மொப்பற்றுயர்ந்து விரிநீள்கட லோதமூழ்கித்
துப்புற்றநெஞ்சிற் றுறைவாய் விளையாடுமன்றே. (70)

ஓங்கிரும்பெண்ணை யுறைமாமட லன்றில்யாவும்
வீங்கிசைவண்டர் விறற்பாணியிற் றுஞ்சுகானற்
பாங்கிற்பொலிந்த படர்கோடி யடம்புமாத
ராங்கிற்பொலிவா மணியல்குலை யெள்ளுமாமே. (71)

வெல்வலிவேந்தர்க் கிடுமாறு நெதியமாகப்
பல்பொருள்வாரிப் படர்போங்குறு மன்னரேபோன்

மல்கலையாழி யதுகொள் ளியபல்லவாரி
நல்கவென் றின்னீர் நதியம்பல மேவுமன்றே. (72)

மால்களிறென்ன மருள்வான் கலம் பல்லவோங்கிக்
கால்களினிற்குங் கனைகார்க்கடற் பாக்கம்யாவுஞ்
சால்கழியுப்பிற் றடமார்திமில் வவ்வுமீனிற்
கோல்கொள்வெறுக்கை குறைபோகிய மேவுமாலோ. (73)

வேறு.

பாடனின் றவிப் பல்வளனும்பிற
மாடணிந்தவர் வாயவுமேனவுங்
கூடநின்று குறையொழியும்புகழ்
நீடநின்றன நெய்தனிலங்களே. (74)

வேறு.

அஞ்சலிலின்னமாண்ட வைந்திணை யுடைத்தாய்மூத்த
விஞ்சிசூழ்நகரஞ்சீறா ரெண்ணிலவமைந்ததாயோட்
டெஞ்சலினதிகால்பாய்ச்ச லெங்கணுமுளதாய்ச்செல்வந்
துஞ்சிடமனைத்தாய்ப்பொன்னஞ் சொரிதிருச்சோணாடாமே. (75)

நாட்டுப்படலம் முடிந்தது.

ஆக செய்யுள் 103.

## நகரப்படலம்.

சுமக்கும்பற்பிணி யழித்தவரவர்க்கருள் சொரிகுங்
குமக்குன்றப் புயத்தெம்பெருமான் றிருக்கோயி
லிமக்குன்றொத்தெழு கோபுரத்திருக்கு மவ்வியலா
னமக்கிங்கொப்பிலை யென்றிறுமாந்தது நாகூர். (1)

மீன்குதிக்குமாழ் கனைகட றடவரை விரிபூந்
தேன்குதிக்குமார் பொழில்கெழுமருத மொண்டிகழு
மான்குதிக்குமம் முல்லையென்றிப்பெயர் மருவி
நான்குதிக்கினு நானிலங்கொண்டது நாகூர். (2)

மகரவெண்டிரை வாரிதியுடுத்தவிம் மண்ணிற்
சிகரமேருவிற் கொளுத்தியகிளர்மணித் தீப
நிகரவெங்கணு முயர்புகழ்பரப்பலி னிறைசா
னகரமென்பன வெவற்றினுஞ் சிறந்தது நாகூர். (3)

பஞ்சமற்றது படர்பிணியற்றது பவஞ்செய்
வஞ்சமற்றது வறுமைமற்றற்றது வாழ்க்கை
யஞ்சமற்றது தீவினையற்றதன் றுகா
நஞ்சமற்றது நம்பெருமானுறை நாகூர். (4)

எங்களுக்குள ரருகுற வொலிகளுக்கிறைவ
ருங்களுக்கெவருள ரெனவயனகருறைவோர்
தங்களுக்குரை பெருமிதம்படைத்தவித் தகையா
னங்களுக்கொரு பாக்கியமனையது நாகூர். (5)

வேறு.

பம்புபாரிசாதமும் படர்ந்ததேவதாருவுங்
கொம்பராரமோட சோகுகுங்குமம்மிலஞ்சியும்
வம்பர்காகதுண்டமின்ன வெண்ணிறந்தமல்கலா
னும்பர்நின்றிழிந்த தொக்குழூர் செறிந்தசோலையே. (6)

பூகமும் படீரமும்பொலிந்த தெங்குமௌவலும்
பாகமும்பொலிந்து நின்றுபம்மு தென்றல்வீசிய
மாகமும்படர்ந்த தூபிமண்டபங்கடுன்றிமா
நாகமும்விரும்புகின்ற நம்பிமேவுபள்ளியே. (7)

ஒதையுற்ற மேகமுற்றுறங்குகின்ற வுச்சிவாய்த்
தீதைவிட்டவம்பொனாற் சிறந்ததூபிகாலவார்
கேதையிட்ட நீண்மரங் கிளர்ந்துவான்மேருநேர்
பாதையொத்த மீயுயர்ந்த பஞ்சகோபுரங்களே. (8)

ஆடகத்தமைத்த வாயிலண்ணல் பள்ளியுள்ளெலா
மீடகத்திலில்லை மற்றதிந்தி ரைத்திருக்குமேன்
மாடகத்துநான்கினும் வளைந்தநொச்சியம்பரி
வேடமொத்திருக்குமென்று வீறகத்திசைப்பரே. (9)

நேயினற்ற வம்மொழுக்க நேர்ந்தகல்வி வான்கொடை
பாயினித்தனத்தை யெனறளிக்கவைத்த தொக்குமாற்

கோயிலுற்ற நம்பிரான் கொடுப்பரென்ற கம்புகு
நாயிலுற்ற வாயிலங்கொர் நான்கிருக்கும் பான்மையே. (10)

அள்ளிவான்கதிர்த்திரள் ளெறிந்துசெல்லுமாதவன்
றெள்ளிதாய் விளங்குமேனி தேயுமாறுரிஞ்சவும்
பள்ளிமாமழைக் குலம்படிந்து செய்யவும்மெழூஉ
வெள்ளிமாலடுக்க லொக்குமீ யுயர்ந்தமாடமே. (11)

ஆரமுற்றவெண்புகை யமைந்தமஞ்சி னூடலான்
வீரமுற்றவம்முழாக் களேற்றினொத்துவிம்மலான்
பாரமுற்றகொங்கையார் படர்ந்தமின்னின் மின்னலா
னீரமுற்றவீடெலா மிறும்பினொத்திருக்குமே. (12)

பாத்தமாற்றுயர்ந்தமைந்த பைம்பொன்மாடவுச்சிவாய்
நீத்தலாயமைத்துவைத்த நீலமாமணிக்குடங்
கோத்தவண்டொழுக்கினோடு கொங்குவிம்முமாறிலாப்
பூத்தவேங்கைமீமிசைப் பொலிந்தமஞ்ஞைபோலுமே. (13)

கூருமாவழுங்கலுங் குலைந்தரூத வின்மையுஞ்
சீருலாவுமெம்பிரான் செழும்பதம் பழிச்சினோற்
றீருமால்வருந்தினீர் திருக்கலந்த வெங்கணோர்
வாருமென்றழைப்ப தொக்குமாடமாடு தோகையே. (14)

மாடகத்திருந்து பந்துவவ்வி விட்டெறிந்துமா
வேடகத்துவண்டரும் பதிந்தகாலுமில்லையா
யாடகத்துமானனோ ரமைந்தவெள்ளி வெற்புவாய்ச்
சூடகத்தினோடுலாவு சூர்களொத்திருப்பரே. (15)

ஒற்றையாவியுள்ள நீரொதுங்கியேகு நீரிவர்
குற்றமற்ற கண்கள்வெய்ய கூற்றமென்று கொண்மெனச்
சிற்றடிச் சிலம்பினஞ் சிலம்புமாறுமாடமே
லுற்றமாதர் கூண்டு நின்றுலாவு வார்களித்தரோ. (16)

மத்தகத்தினோடெதிர்ந்து மாறுகொண்ட வெம்முலை
முத்தமொத் திலங்குபன் முருக்கிதழ்க் கனிச்சொலா
ரித்தகைத் தெனாதவண்ண மேரிலங்கு மில்லெலாஞ்
சித்தமொத்திருப்புதார் திருக்கலந்தபான்மையே. (17)

கலந்தகத்திலங்கிளங் கவின்றகொங்கை மங்கைமா
ரலத்தகத்தமைந்த சீறடிக்கணிட்ட நூபுரங்
குலத்தகத்திரங்குமோதை கொல்லைமேய வெள்ளனம்
மிலத்தகத்த பேடுவிட்டிரங்கு பான்மையன்னதே. (18)

வெண்ணிலா விரிந்திலங்கு மேலமாடவுள்ளெலாம்
பண்ணிலாதிரங்குகின்ற பான்மைகண்டு வண்டினங்
கண்ணிலாதெழுந்திரங் கல்கறக்கவந்த தன்மைபோன்ம்
மண்ணிலார்ந்தமாதர் சாளரங்கண் மன்னுகண்களே. (19)

நாறுவீயு குத்ததே னரந்தமோடு குங்குமச்
சேறுபாயமாதர் கண்டிளைத்த சேவிளுடமா
மீறுகோதை நாரமாக வீடுபக்க வெற்பெறு
யாறுபோலகன் றுநீண்ட வம்பொன்மாட வீதியே. (20)

காசுதாழு மல்குலார் கலந்தெழுந்த காலையிற்
பூசுசந்தனங்களும் புரண்டுசுண்ண மும்விராய்
மாசுசேர்ந்த வெனறிகழ்ந்து மாடமேவுவாயெலாம்
வீசுதாமமாறிலாது வீதியெங்கு நாறுமே. (21)

அம்பொனாங்கலன்களும் மணிந்தமுத்தினாரமுந்
தும்பிபாணயர்ந்துலாவு தொங்கலும் படுக்கைவாய்ப்
பய்புசீரணைக்குமேற் பரப்பியிட்ட பூக்களுஞ்
செம்பொலங்குலங்களார் தெருக்கலந்த குப்பையே. (22)

தாலமொத்தகையவாந் தடங்கடத்த வேழமு
மோலமிட்டவாயினெட்டை யொட்டகக் குழாங்களுங்
காலமொத்தவாசியுங் கலந்தபொன்ன யானமுஞ்
சீலமுற்றவையமுந் தெருக்கடோறுஞ் செல்லுமே. (23)

வேதமோதுமோதையும் விளங்குபாடை யன்னதின்
பாதமேவுபாடலும் பசுந்தமிழ்க் கவிகளு
நாதமேவுயாழ்வேன நன்கமைந்தகீதமுஞ்
சீதமேவுதென்றலார் தெருக்களெங்கு மோங்குமே. (24)

காலையுச்சி மாலையிற் கறங்குகின்றமும்முர
சேலவுற்றொலிப்பதென்ன வென்னநெஞ்சு சாவிடின்

வாலகத்து நம்பிபால் வருந்துமக்கள் வம்மென
வோலமிட்ட தன்மையோடு மூரொலிப்பதொக்குமே. (25)

வேறு.

வேதமுற்ற விளங்கொலி யோடுபன்
னூதமுற்ற நலங்கொண் முரசின
மோதமொத்தகன் விண்ணுற வொவ்வொரு
மாதமுற்று மணிவிழவாருமே. (26)

ஆடுபாம்பின கன்றுறை யல்குலார்
கூடுமால்கெழு கொங்கைகுலுங்கிய
நீடுசீரினிலாக் கொளரமிய
வீடுதோறும் விருந்துமருதரோ. (27)

அரியவெள்ளரி யட்டமை சொன்றியு
மூரியவாறு சுவைக்கறி யும்முளப்
பிரியமார்கனி யும்பிறவும்விராய்ப்
பெரியவீதி பிறங்கமணக்குமே. (28)

மங்குன்மேவிய மாடந்தொறும்புகை
தங்குவாசமுஞ் சந்தனவாசமு
மெங்குமேவுறு மேனையவாசமும்
பொங்குமாயப் பொரிக்கறிவாசமே. (29)

வேதபாடையு மேம்பிறபாடையும்
பாதமைந்துயர் பைந்தமிழ்ப்பாடையும்
போதமோடு புணர்த்துங்கழகமார்
நாதவாய்பல நன்கினிருக்குமே. (30)

அன்னசாலையு மாதுலருக்கிடுஞ்
சொன்னசாலையும் பூந்துகிற்சாலையும்
பன்னசாலையும் பல்பொருண்மல்கிய
வென்னசாலையு மெண்ணிலமேவுமே. (31)

வாசியேற்றமு மால்களிறேற்றமும்
மாசிலாதியன் மல்லின் பழக்கமும்

வீசியம்பெறி வில்லவு மேனவும்
பாசினும்பயில் பக்கமநந்தமே. (32)

வாசிவாழிட மால்கரிவாழிட
மோசிலார்பெரு மொட்டகம் வாழிடம்
மாசில்யானமும் வையமும் வாழிடங்
காசிலாது கவின்றவநந்தமே. (33)

கேசரிக்கிணை யாங்கிளர் பூண்புற
மாசறுத்துறு மைந்தர்கள்வாசியில்
வேசரித்திர ளில்வெரிந்யானையி
லோசகத்தினு லாவுவரென்றுமே. (34)

பூமணங்கெழு பொற்புடைப்பள்ளியின்
மாமணங்கொண் மனைகளின் வான்கதிர்
தாமெனுஞ்சுடர் தாவியிராப்பக
லாமிரண்டுமமைந்த தொராங்கரோ. (35)

வேறு.

ஆமணிகல்விமாக்க ளரும்பொருண் மறையின் வல்லோர்
மாமணி யொன்பானுயும் வத்தகர் மணிப்பூணுடை
பாமணி விலைஞர்முந்நீர்ப் படர்கலஞ் செலுத்துகிற்போர்
தாமணி பிறங்கலைவகுந் தடந்தெரு வநந்தமல்கும். (36)

காருகர் கஞ்சகாரர் கடிகெழு கருங்கைக்கொல்லர்
வாருயர் மரங்கொறச்சர் வனைவருஞ்சொன்னகாரர்
பேருயர் சிற்பர்துன்னர் பிறங்குறு மண்ணீட்டாளர்
பாருறு வினையவேனோர் படர்தெரு வநந்தமல்கும். (37)

விறல்கெழு முழவராயுள் வேதியர் காலமாய்ந்து
திறல்புரி கணிதரேழின்றீ நரம்பிசைகொள்வல்லோர்
பிறவினை யவரினோடு பெயர்கலத் திழித்தாங்கேற்றும்
புறநகர்த் தொழிலோர்வாழ்விற் பொலிதெருவநந்தமல்கும். (38)

மாசறு மணியும் பொன்னும் வங்கமும் வனைதன்மேய
வாசகல் பணியும்பட்டு மரும்பல காசுமற்று
மேசறு குவாலினிட்டாங் கின்புறக் கொள்வோர் விற்குந்
தேசம ரருமைசான்ற திருக்கடை யநந்தமல்கும். (39)

கூலமொ ரெட்டனோங்கு குவாலுற வமைத்துமற்ற
வாலமர் கறிச்சரக்கின் வகையவுங் கண்டுந்தேனும்
பாகமர் நெய்யும்பஃறீம் பழங்களு மழகுங்கொண்டு
சாலவைத் தினிதின்விற்குந் தடங்கடை யநந்தமல்கும். (40)

மேயின மறிகொன்றூன்கள் விலைபகர் வனர்சேட்போகி
மாயிருங் கடல்வாய்வவ்வு மலிந்தமீ னொடுக்குமோர்க
டேயினங் கிழங்குவிற்போர் சொல்லிலாதனவும் விற்போர்
காயின மிலையவிற்போர் கழிகடை யநந்தமல்கும். (41)

வண்ணமு நறுமொண்சாந்து மலர்வகையாவமுற்றுஞ்
சுண்ணமும் புகையோராறுந் தொடர்விரை யைந்துந்தக்க
தண்ணரந் தத்தினோடு சால்பிறமணமும் விற்குங்
கண்ணகன் பெருமைமேய கவின்கடை யநந்தமல்கும். (42)

பளிக்குப் பாத்திரங்கள் பீங்கான் பைந்தொடி பொன்னாழி
வெளிக்கண தனக்குள்ளாக்கி விளக்குவ விளையாட்டெய்திக்
களிப்புறு பண்டமுண்டி கமழுந் தீம்பதார்த்தமற்றும்
விளித்திடவமைத்துவிற்கும் விறற்கடை யநந்தமல்கும். (43)

நாட்டவு முதியஞாயி ணகரவுமந்திகாணாக்
காட்டவுந் திரைசூழ்மாநீர்க் கடலவு மழைக்கள்வைகுங்
கோட்டவெற் பினவுமென்னக் குவிதிரவியங்களெல்லாந்
தீட்டவு மரிதாலென்னுந் திருவொடு பொலியுமன்றே. (44)

விலங்கலைவாரிபோழ்ந்து வெற்பின நடந்தாலென்ன
நலந்தரு காலிற்செல்லு நடுமரங்கயின் மற்றோங்கு
கலந்தரு திசையபண்டங் கலந்தொரு துறையவான
நிலங்கவிழ் பொறையினாரை நிகர்ப்பதொன் றில்லையன்றே. (45)

நாளொன்றும் விழவுகொள்ளு நாளொன்று மணமேகொள்ளு
நாளொன்றும் விருந்துகொள்ளு நாளொன்றுஞ் சடங்குகொள்ளு
நாளொன்றுங் களிப்புக்கொள்ளு நாளொன்று மகிமைகொள்ளு
நாளொன்றுஞ் சிறப்புக்கொள்ளு நன்னர்சா னகரமன்றே. (46)

ஆன்றமர் கல்விவல்லோ ரரியகைத் தொழிலின்வல்லோர்
சான்றமா மணிபூணாதித் தரம்பிரித் தறியவல்லோர்

மேன்றரு பிறவாமென்ன வினையினு முதிர்ந்தவல்லோர்
வான்றர விளங்கி நற்பேர் வாங்கிய நகரமன்றே. (47)

சாற்றொலிவிருந்தினோதை தடங்கொண்மும் முரசவிம்மன்
மாற்றொலிபண்டஞ்செய்யு மணத்திசை கவிதையார்ப்புத்
தோற்றொலி பல்லபாடைத் தொழுதிய ரிரைப்புமொன்று
மேற்றொலி யொவ்வாமற்றை யிருங்கடலொலியுமொவ்வா. (48)

வைகறை யுச்சியந்தி மாலைமுன் னிரவாமின்ன
மெய்கெழு வேளையைந்தும் விரிகடலிரங்கியாங்கு
துய்மையம் பெரியவல்லோற் றொழுவரு கென்னவார்க்குங்
கைகொளும் பாங்கினோதை கல்லெனுந் தினமுமன்றே. (49)

இரும்பினாற் பொலிந்தநெஞ்ச ரெரியெதிர் மெழுகினெஞ்சர்
விரும்பினாற் பொலிவரென்ன விளங்கெழிற் பெருமான்பள்ளித்
துரும்பினாற் பொலிந்தவாழ்விற் றுளங்குறு மகிமைமாறுக்
கரும்பினாற் பொலிந்தசோலைக் காமரு நாகூரன்றே. (50)

நகரப்படலம் முடிந்தது.

ஆ செய்யுள் 158.

---

# உத்தரவளித்தபடலம்.

ஆதாரமன்றுமற் றாதேயமுமன்றாய்ப்
பாதானவியலமையப் பதின்மூன்றுமுடைத்தாகி
யோதாரவுடலிலியு முருவிலியுமாயரிதின்
மாதானபல்லுயிராள் வல்லதாம் பரம்பொருளின். (1)

உன்னத்தின் முன்னரமைந்துலகு பிறவுந்தோற்ற
மன்னுற்ற நிமித்திகராய் மாண்டொரு மறையினரா
யின்னுற்ற நபிமாருக்கிறைவராய் முன்னாகிப்
பின்னுற்ற நங்கடிருப்பெருமானார் திருமகளின். (2)

தலைமகனார் நனிவிழையுஞ் சந்தானந் தனித்தோங்க
வலைதிரளு நெடும்புணரி யார்த்தவிரு நிலவலய

நிலைமைபெற வுயர்மார்க்கமுயிர்ப்பித்த நிருமலர்தங்
கலைபயிலும் பௌத்திரராயஸன்குத்தூஸ் கவின்மகவாய். (3)

மாணிக்கநகரமெனும் வடகடலினுதித்தாங்கு
சேணிக்கை நாகூராந் தென்கடலின் மறையவெழூஉப்
பாணிக்கவெவரகனு மற்புதமாங் கதிர்பரப்பி
யாணிக்கைபெறும் ஷாகுல்கமீதென்னு மாதித்தன். (4)

பிறந்தகத்துப் பதினெட்டாண்டிகப் பித்துப்பின்னரவ
ணிறந்தகத்துக் குருவயிற்போய்ப் பத்தாண்டாங்கிருந்தருளத்
துறந்தகத்துப் பஃறேயம் பன்னீராண்டிறச்சுற்றிச்
சிறந்தகத்து நாகூராந் திருத்தலையினினிதமர்ந்து. (5)

ஓரிருபத்தெட்டாண்டு முறப்போக்கியெல்லாமு
மாராறுபத்தெட்டாண்டுங் கழிந்தவதியாங்காலை
சீருறுபுத்திரரான செய்குயூசுபுவிளித்து
நேருறுபற்பல்லறிவு மற்றவுமே நிகழ்த்தினர். (6)

வென்னிலையினுறுமகவாய் விளங்குறுமப்பெருமானை
நன்னிலையினுற நிறீஇநடப்பன மற்றினிதோதிப்
புன்னிலையற்றிரிந்தேகப் புணர்த்துவன புணர்த்தித்தஞ்
சென்னிலைமை விளக்கமுறத் தெரித்துள்ளந்தேறவே. (7)

என்னரியமைந்தகேள் யானிகந்தமூன்றுநாண்
மன்னரியகபுறின்கான் மாட்டடைந்து சலாம்பகர்தி
பன்னரிய பிரதிவெளிப் படுமாயினிகந்தயா
னின்னரியவயினுளனென்றுநீ நினைக்குதியால். (8)

சந்ததிகளுடனீ நின்சந்தானந் தழைத்தோங்க
விந்தவிடமிறவாம லெஞ்ஞான்று மிருக்குதிமற்
றந்தமொழி வரக்கொள்ளாயாயி னீவிழைந்தாங்கு
பந்தமுறு முயர்லாகூர் பதியிற்போய்ச்சேர்தியால். (9)

மற்றுங்கேள் யானிகந்த மூன்றுநாள் வைகறையிற்
பற்றுமென்னருங் கபுறின் பக்கத்திலொருமுதியோ
ருற்றுநின்றிரப்பது மற்றோதியுறுவாரவணீ
சற்றுநின்ற வரோகுந்தத் கணடாங்குடன்சேறி. (10)

சிறுசேட்சென்றவர்க்கு நீசெப்புகவால் சலாமவரு
மறுமொழியிற் கூறுவர்பின் மன்னுமவர் பெயர்கேட்டி
பெறுபெயர்மற்றறைகுவர் மன்பிறக்குநீ நினக்குமற்
றுறுவனவெல்லாமாகவுவர் நோக்கியுரைத்தியால். (11)

நீயுரைத்தமொழி முழுது நெஞ்சாரக்கேட்டவர்
வாயுரைத்தமொழியாங் குமரிஇநடவென்மகவென்று
தாயுரைத்ததன்மையிற் றனியுரைத்து நம்முடைத்தொள்
ளாயிரத்தேழ்பத்தெட்டாமாண்டு ஜமாத்துல்லாகிர். (12)

என்றவுயர் மதிபத்தாந்தினம் வெள்ளியின்னிரவு
குன்றவரும்வைகறையிற் கடலுலகோம்பியகுத்பாய்
நின்றவுயர்பெருமானார் நீண்டநிலன்றனைக்கடந்து
மன்றமேன் பதம்புனைஇமருவுமுபாத்தாயினர். (13)

கொன்னுலகு விழைவுதுறந் திருந்திகந்த கோமானர்
பன்னுலகு வீழ்மொழியின் படியவருக்கியற்றிமா
மன்னுலகு திருநாமம் வளர்ந்தோங்கமகமுதலோர்
பொன்னுலகு பொருகபுறிற் பொலிவெய்த வடக்கினர். (14)

பக்கத்துநகரி னருமேனையரும் பரிவுற்றுத்
திக்குற்றபுகழினரைச் செய்வனமற் றனைசெய்
மிக்குற்றநனிமைந்தர் வினவியவரவர் வயிற்போ
யக்கத்துக்கருமணியார்க் கருமையொடும்வைகினர். (15)

வந்தவரன்றினி தேகமறை கமழுந்திருவாயி
னந்தமுயர் பெருமானர் செய்குயூசுபுநாதர்
சிந்தைகளிபெற மூன்றுந்தின மண்ணுந்ததிநோக்கித்
தந்தமர் மற்றவர்சூழத் தகவின்வைகினரன்றே. (16)

வேறு.

மீனொளிகரப்பவொற்றை வெள்ளிவான் முளைப்பவைவாட்
கூடுநெடுபொருதும்வாவின் கோழிவாய் திறப்பநங்கட்
காநெடுகிடக்குமற்றோட்காளையுட் களிப்புக்கொள்ள
வானெடு நிறை மூன்றுநாள் வைகறை தோற்றிற்றன்றே. (17)

கடம்படு கவுளினால் வாய்க்களிறனாிருக்கை நீத்துப்
புடம்படுவங்கநெஞ்சர் புல்லென்ற முகத்தர்வந்து
தடம்படு மகிமைமேய தந்தைதங் கபுறின்கான் மாட்
டிடம்படு ஞாங்கரன் பினிதயநெக்குருகநின்றார். (18)

ஆங்கொரு முதியோர்திங்க ளனையவாண் முகத்தர்நின்று
திங்கறுவிருப்பினோதி யுறுவது தெரிந்துநந்தம்
பாங்கமர் பெருமானைக்கிட் பரிவொடு முடிவின்காறு
நீங்கருமகிழ்வொடாங்கே நின்றனரொருவாதன்றே. (19)

அன்னவராண்டைவைகி யோதுவவனைத்துமோதித்
தென்னவி ரடிகள்பேர்த்துத் திரும்பினர் நடந்தார்நந்த
மன்னவர் நோக்கித்தந்தை வாய்மொழி யாங்குபேர்ந்து
பின்னவர்த்தொடர்ந்துசென்றுபெரும்புகழ்சலாஞ்சொன்னால். ()

முறைமொழி சலாங்கேட்டன்ன முதியவர் திரும்பிநின்று
மறைமொழி யூசுபென்பார் மதிபொரு வதனநோக்கி
நிறைமொழி பிரதிதோன்ற நிகழ்த்தினர் கேட்டுநாத
ரறைமொழி நுமதுநாம மெவனென வன்பிற்கேட்டார். (21)

செய்குயூசுபுகந்நாதர் திருமொழிசெவிக் கொண்டன்னோர்
மெய்கொளு மலர்வாய்விண்டு விளங்குபேர் கலிறெற்கென்றார்
வைகெழு மறிஞர்கே டு வாடியமுகத்துர்நின்று
நைகுணத்தம மற்றெல்லா நடப்பனநிகழ்த்தினால். (22)

கவன்றுநின்றற் பிற்கூறுங் காவலர்த் தேற்றியண்ணற்
றுவன்றினர் நுந்தையென்று துணியொடு மஞ்சற்பீர்நீர்
நவன்றரவருந்தலீர்யா னுதர்பான் முன்னரெய்தி
யெவன் றனி யவனன்னேன் சொல்லுதவி பல்லியம்பினேனால். (23)

ஆகையினுமக்குநும்மோ ரனைவர்க்குமரபினோர்க்கு
மோகையினுதவியானே யுறுவலெற் கடனுனுந்தம்
வாகையங்கருமமுற்று மென்வயத்தனவாமென்றுஞ்
சாகைமட்டின்றுதொட்டு நீயிரெத்தறியினேனும். (24)

நினைத்திடினவ்வப்போதி லென்னையாணிமிடத்தும்பா
லெனைத்தெனினுஞ் செய்யாக்குற்றியற்றுவல் கவலற்பீரான்

மனத்திடத் தமர்திர்செம்மா லென்றனர் வழுத்திப்போந்தார்
நணைத்தடம் புயங்கள்விம்ம நாதரு மிருக்கையுற்றார். (25)

முள்ளரை முளரிமொக்குண் முறுக்குவிட்டவிழவாசக்
கள்ளவாய்ச் சுரும்புந்தேனுங் கலந்துநின்றூதமற்றப்
புள்ளினங் கலகலென்ன விலங்கின முவகைபூப்ப
வெள்ளென மூன்றாநாட்டு விடியல்வந் துற்றதன்றே. (26)

சோலைவாய்த் துழனிபொங்க வெறிதிரை சுருட்டியார்க்கும்
வேலைவாய்க் கதிர்கள்வீசி வெய்யவ னெழுந்தானந்தக்
காலைவாய்ப் பக்கத்துரோர் காவலர் கபுறைவைகும்
மாலைவாய்த் திட்டவொண்டோண் மகிபரைக் காணவந்தார். (27)

வந்தவ ருபசாரத்தின் மருவிநம் மரியகோமான்
றந்தமர் தந்தைமேய தபோதன ரொருங்குகூவிப்
பந்தமாய்த் தொடரவப்துல் காதிறுபதமாட்டெய்தி
முந்தவாய் விண்டுவேதத் தோதுவ முறையினோதி. (28)

அன்பென வுருக்கங்காட்டி யனைவர்க்கு மின்பமிக்க
தின்பன நல்கிப்பின்னுஞ் செய்வன செய்துநன்மை
யென்பன வனைத்துமாக வெனநனி வாழ்த்தியாரு
மின்பெனச் செவிவாய்க்கொள்ள நம்மிறை யியம்புமன்றே. (29)

எந்தையார் மொழியினூங்கின் றெழுந்தநாட் காலையன்னோர்
விந்தையார் கபுறின்காண் மாட் டடைந்துவாய் விண்டுநின்று
சிந்தையார் கருமங்கொள்வான் றிகழ்சலாஞ்செப்பற்குற்றே
னந்தமார் நீவிரற்பினடைமொழி யருதிற்கேண்மின். (30)

எனவிவை நவிற்றிக்கூண்டோர் நெஞ்சக மிறும்பூதெய்த
வனமெழு கபுறின்பாத மாட்டுநின் றெவருங்கேட்பக்
கனமுற ழிருகைகட்டி நின்றனர் கவினநோக்கி
யனமொழி அஸ்ஸலாமு அலைக்குமற் றெந்தாயென்றார். (31)

இம்மொழி செய்குயூசு பிளவனின் றியம்பக்காலை
யெம்மொழி பொருவாதாகக் கபுறுழி யிருந்துநன்மை
யம்மொழி யென்னவன்பி னலைக்குமுஸ் ஸலாமென்மைந்த
செம்மொழி தொடர்ந்துநாளுஞ் சிறந்தனை யரியகேட்டி. (32)

நீயுமிங் கென்றுநீங்கா திருக்குதி நினக்குப்பின்ன
ராயுநல் லறிவினோங்கு மரியசந் ததியோர்யாருங்
காயும்வெங் கதிர்மாறுகக் காண்வரை யிவணையென்றன்
றேயுமன் புற்றுவைகித் துயர்கெட விருக்கமன்னோ. (33)

என்றருமொழியுண்டாக விறைவரு மிதயம்பூரிப்
பொன்றியகேட்டாநந்த வுவரிவாய்ப்படிந்தார்சூழ்ந்து
நின்றவர்சாகமீது நிமலர்தம்மகிமையுன்னிக்
குன்றுறழ்புயங்கள்விம்முக் கொண்டனருவகைமூழ்கி. (34)

மறைமொழியாகவந்த மறுமொழிபுனைந்துமாறு
நிறைமொழிமாந்தர்சூழ நிருமலரிருக்கையுற்றார்
குறைமொழியயலோர்யாருங் கொளும்விடையோடுமீட்சி
யறைமொழியவரினாகி யவரவர்தானமுற்றார். (35)

புள்ளெழச்சிறந்தகொங்கை போக்கினரளித்தவண்மை
வள்ளல்வாய்மொழியின்மைந்தர் வைகுதலுறுத்தாராண்டு
விள்ளவர்மரபினோரு மன்னதேவிழைவினுற்றார்
கள்ளவிழ்மலர்த்தோள்விம்ம யுகமுடிகாறுமன்றே. (36)

உத்தரவளித்த படலம் முடிந்தது.

ஆ-செய்யுள் 189.

---

# தபோதனர் புறப்பாட்டுப் படலம்.

பொறையுளத்தினர் சாகுல்கமீதுநம் பூமான்
மறைமொழிப்படி செய்குயூசுபுவெனும் வள்ள
றறைபழிச்சிய மக்களுமனைவியுந் தாங்கி
யிறைவணக்கமுந் தந்தைதம்பணியுமுற் றிருந்தார். (1)

தந்தைதம்மொழி தன்னினுங்கலீபெனுந் தவத்தோர்
விந்தையம்மொழி தன்னினுமுளங்களி விளங்க
வந்தமற்றவ னாதியுமற்றவ னருளாற்
பந்தமுற்றநன் முதுபக்கினிருந்தனர்பரிவின். (2)

செற்றநீங்கிய சாகுல்கமீதெனுஞ் செம்மல்
சுற்றநீங்கிய நாண்முதற்சிலைறி னங்தொலையக்
குற்றநீங்கிய செய்குயூசுபுமவண் குடியா
யுற்றநீங்கிய வின்மைமற்றுணர்ந்தன ரொருநாள். (3)

முண்டகம்மிசை வண்டுவீழ்ந்தின் னிசைமுரல
விண்டகண்பல போன்மெனக்கலாபங் கள்விரித்துக்
கொண்டமஞ்ஞையங் காவளர்திருநகர் குவாலீர்த்
தண்டலப்பிரான் றந்தநானூற்றுவர் தலைவர். (4)

நந்தநாதருமௌத் தடைஇயிறந்தனர் நம்மை
யிந்தநாதரு முன்மொழி பின்மொழி யியைபிற்
சொந்தமக்களு மனைவியும்பிரிவுறச் சூழப்
பந்தமோடிவ ணிருந்தனர்நிலைமையிற்பட்டு. (5)

இங்கிருப்பதேயன்னவர்முறைமையா மென்னக்
கொங்கெழிற்புயத் தலைமையர்நால்வருங் கூடித்
தங்களிற்குறித் தொன்றனைமுடிபுறச் சாலும்
வங்கிடப்பெரு மானடித்தாமரை வந்தார். (6)

மடிகணீக்குநர் முன்னிலைநின்றனர் வாய்விண்
டடிகள்கேட்குதிர் நம்பிரான்றிருமொழி யாங்கு
நெடியவிவ்வயின் றேவரீரிருக்குதிர் நெஞ்சிற்
படியவெங்களுக் கொருவிடையருள்குதிர் பரிந்து. (7)

பற்றினிங்கிருந் திறந்தினிதாம்பல தேயஞ்
சுற்றிநீவிரிங் கடைகெனக்குறிக்குநா டொடர்ந்து
நற்றிறத்துட னடைகுதும்பழுதில நாங்கள்
வெற்றியம்புக ழீரெனவறைந்தனர் விறலோர். (8)

நான்குசொற்களு மொருசொலிற்கேட்டனர் நம்பி
தின்குலத்தினர் மதிமுகநோக்கினர் திருவாய்த்
தேன்குதித்தென நீவிரென்னுடன் பலதேயந்
தான்குலத்தொடு சுற்றினிர்மரீஇயிருந் தனிரால். (9)

கட்டுரத்தினி ரன்பினிரும்மையான் கடிதின்
விட்டிருப்பதற் குளந்துணிந்திலதுநும் வேட்கை

மட்டிறந்ததா லெந்தையினாற்பதா மகிமை
பட்டவத்தினங் கழிவரைபொறுக்குதிர் பரிவின். (10)

அன்னநாற்பதிற் செய்முறைமுடித்தலீ தகன்ற
பின்னர்நுங்களுக் குளவிருப்பெவனெனப் பிரித்திட்
டின்னவாறென விசைக்குவனீவிரு மினிதிற்
சொன்னவப்படி யியற்றுதிராலெனச் சொன்னார். (11)

வேறு.

திருமொழிகனிந்த வாய்செய்குயூசுபு
தருமொழிகேட்டனர் தலைவர்நால்வருங்
குருமொழியினுளங் கொண்டுநன்கென
மருமொழிபிறிதிலா வண்ணம்வைகினார். (12)

சூட்டியமணிவடச் சுவணமாதரைக்
காட்டியகவின்றமெய்க் கவசக்கையினா
ரீட்டியபுகழினா ரிகந்துமுப்பதுந்
தீட்டியவொன்பதுஞ் சென்றநாட்களே. (13)

தம்புகழ்செவிகொளுஞ் சான்றமாக்களின்
வம்புறைமரனெலாந் தலைவணக்குறக்
கொம்புறையிளிபயி லளிகள்கொல்லென
விம்பரின்மாலைவந் திறுத்ததன்றரோ. (14)

மணந்தவர்மன நிலையாம்பல்வாய்விடத்
தணந்தவரந்நிலை முளரிசாற்றிய
கணந்தருகன்றவாய்க் கறவையேங்குற
வெணந்தருமாலைவந் திறுத்ததன்றரோ. (15)

பொன்மலைஞாயிறு புகுதப்புள்ளியோன்
மின்மலிவான்மிசை வெள்ளிபூத்தெழப்
பன்மலிவிளக்கினம் பகல்வந்தாலென
வின்மலிமாலைவந் திறுத்ததன்றரோ. (16)

வள்ளனம்பெருந்தகை மறைந்தநாண்முத
னள்ளிருணாற்பதா நாட்டமாலையிற்

றெள்ளியபுகழ்கெழு செய்குயூசுபு
முள்ளமற்றவர்களு மொருங்குகூடினார். (17)

தெண்டிரைக்கடலிடை யமுதஞ்சேர்ந்தென
வுண்டிபல்வகையினை வுவப்பினுக்கினா
ரொண்டுகில் கபுறினி லொளிரப்போர்த்திசை
வண்டிமிர்நறுமலர் மலியத்தூயினார். (18)

வரைகெழுபுயத்தினர் மலியவீண்டினர்
தரையவண்புகிதங் கொடகவிணுக்கினர்
விரைவகைபுகைத்தனர் விளக்கம்பற்பல
நிரைநிரைசூழ்கொள நிறைத்திட்டாரரோ. (19)

பகல்கெடமற்றொரு பகல்செய்தாலென
விகல்கெடவியற்றுவ வியற்றிச்சூழ்வர
முகில்கெழுகரத்தினர் மொய்த்திருந்தரு
மகிழ்தருமறைபருண் மலியவோதினார். (20)

ஓதினர்முடித்த னருண்டிநல்கினர்
வாதினர்பழிச்சி யவண்மைமெய்வருந்
தீதினவகற்றருள் செய்குயூசுபும்
பாதினர்யாவரும் பரிந்துவைகினார். (21)

படரெரிகவிழ்ந்த தீம்பாலைமீட்டிய
விடருறுநாயக ரிகந்தநாற்பதா
மடமினஞ்சடங்குட னகலநால்வருந்
திடனுறப்பழையது சிந்தைகூர்ந்தனர். (22)

தாங்கியநால்வருஞ் சான்றநாதராம்
பூங்கழல்செய்குயூசுபு வைப்போற்றிவந்
தோங்கியபுகழி னிருவைரத்தவாவடி
யேங்களைப்பணித் திராலென்றுகூறினார். (23)

அன்னவாகூறலு மணங்குதிர்கழன்
மன்னவரெழின் மதிவதனநோக்குபு
வின்னமிலுயர்க்க நீர்விரும்பியாங்குமன்
றுன்னருந்திசையொருங் சுற்றப்போதிரால். (24)

எப்பொழுதெவ்வயினேகியெங்குநீ
ரொப்புடனிருப்பினு முவப்பினெந்தையா
ரிப்புவியிகந்த நாளெய்துமாண்டுறி
னப்பொழுதிவ்வயி னரிதின்மீடிரால். (25)

ஆண்டுதோறிவ் வகையடைந் திங்கெந்தைதம்
மீண்டுறுவிழவது விரும்பிச்செய்குதிர்
பூண்டுபின்னும் மனமென்னப்போகுதிர்
கூண்டுளீரென்று நங்குரிசில்கூறினார். (26)

கந்தடுகளிமதக்களிற்றினன்னவர்
தந்தவிம்மொழியினைத் தலைவர்நால்வருஞ்
சிந்தையிற்புகலருஞ் செழித்தமாமகிழ்
வந்திடமதியெனவ தனம்பூத்தனர். (27)

இம்மொழியாலரு மிதயம்பூத்தனர்
தும்மொழிசெய்கு யூசுபுவை நோக்கினர்
நும்மொழிநுந்தையார் நுவன்றமாமொழி
யம்மொழியாங்கியா மடைதுமென்றனர். (28)

வருடமுமோர்முறை வருதுமெகுது
மருடருநாதவென் றற் பிறகூறலுந்
தெருடகைவிளங்கெழில் செய்குயூசுபு
மருடபவன்னவர் வழியனுப்பினார். (29)

நால்வருநற்குழு நான்குசூழ்வரப்
பால்வருவாகனம் பரிவினூர்ந்தனர்
மேல்வருங்கொடுவரி விளங்குவெம்புலி
போல்வருயாத்திரை புறப்பட்டாரரோ. (30)

பாய்வருவெண்டிரைப் பரவையார்ப்பென
வோய்வருமியம்பலவாய் விட்டொல்லென
நோய்வறுதவத்தர் நானூறுமாக்களும்
போய்வருயாத்திரை புறப்பட்டாரரோ. (31)

ஆறலைகொடுந்தொழி லகற்றியவ்வழி
மாறலையடைந்த மாதவத்துமைந்தினர்

காறலையுடைக்கதிர்க் கனலிதன்முறை
போறலையாத்திரை புறப்பட்டாரரோ. (32)

அன்றுதொட்டன் னவரவரினுற்றவர்
தொன்றுதொட்டதுவெனத் தொடர்பிற்கொண்டுமா
மன்றறொட்டவர்க்குறு வருடந்தோறுமுற்
றென்றுதொட்டனையதா யிருக்கின்றார்களால். (33)

தபோதனர் புறப்பாட்டுப் படலம் முடிந்தது.
ஆ செய்யுள் 222.

---

## பள்ளிக்கட்டிய படலம்.

கலங்கவிழுங்காலத்துக்கையாடியெறிந்ததனைப்
பெலங்கெழுமப்புரந்தாண்டபெருந்தகையார்நனிவைகு
நலங்கொளுமத்தானக்குக்கீட்டிசையினறுங்கான
நிலங்கொளியிற்புடைமல்கவிருக்குமொர்தடஞ்சேரி. (1)

வண்டானின்னிசைவிளரிமலிந்தார்க்குஞ்செழுங்கான
லுண்டாரவிரைவயிற்போயுறுஞெண்டரினமறுகக்
கண்டூதினிணரவிழுங்கருங்கோட்டுநறும்புன்னை
யொண்டாதுசிந்தியாங்குறுமளைகளறத்தூர்க்கும். (2)

நிரையொழுகவிருபுறனுநீண்டவுடற்பணியெயிறு
புரைமுனையவளைவுறுமுட்பொலிவுற்றபோதாவின்
விரைகெழுவெண்மலர்பூத்துவிளங்குமெழின்முடத்தாழை
கரைகரையப்பொருமலையகடற்புலவுகடிந்தமரும். (3)

கருந்தும்பியிருந்தூதப்பிணியவிழ்புகமழ்தீந்தேன்
விருந்தொன்றவினிதளிக்கும்விரிமலர்ப்பூங்கழிக்கரைவாய்
வருந்தென்றல்விளையாடிவளைத்திறைகள்பெடைதழீஇ
யருந்தன்மைநனிகாட்டுமன்னங்கள்கண்வளரும். (4)

விரைதவழுமுயர்ஞாழல்வீமல்கவிழுந்தும்பி
நிரைதவழ்நல்லாரெறிபுநீன்மணிக்கந்துகம்பொருவுந்

திரைதவழ்கோடுகுமுத்தஞ்செம்பவளத்தொடுகிடக்குங்
கரைதவழுமெழினொண்டர்கவின்றகவறுருள்பொருவும். (5)

இடிகரைவாலுயரெக்கர்மிசையிவர்ந்திரைவிழைபு
முடிமொழியைநினைவாரின்முதுநாரையினமல்குந்
தொடிமுன்கைநுளைச்சியர்தமதரியமைமேதாய்நோக்கின்
கடிகெழுமுமுழுநீலமுகையவிழ்புகழிமல்கும். (6)

கருங்கோட்டுநெடும்புன்னைக்கால்பொருதுகழன்றமுகை
பெருங்கோட்டுமணிமுத்திற்பிரித்தறியுமாறின்றி
யொருங்கோட்டுமரியதிமிலுலவுதிரைபலமோது
தருங்கோட்டுவயின்முழுதுஞ்சரியொத்துக்கிடந்தொளிரும். (7)

ஓங்கிமுரிதிரையொலியினோசனித்தெழுங்குருகு
பாங்கிலகுகழிக்கயல்கள்பார்த்துநூல்பலபோகித்
தாங்கறிவின்முதியோரின்றனிமனத்தினொடுக்கமென
வீங்குநீர்நெடுங்கரைபோய்வெவ்வேறுபிரிந்தமரும். (8)

பறிவலைகள்பலமல்கவுணங்குவியன்படர்முன்றிற்
சிறியமீன்சினையன்னவிரிமணன்மேற்பரப்புணங்கற்
பொறியுணவின்வரப்பார்த்துப்புள்ளோப்பும்பரத்திமார்
நறியகுழன்மலர்நாற்றமுணங்கனாற்றந்தவிர்க்கும். (9)

அம்பொற்பரவையெழிலல்குன்மடநல்லார்
செம்பொற்குவட்டுமுலைக்குங்குமச்செஞ்சேறளைஇக்
கொம்பிற்பொலிவுற்றுமஞ்ஞைகுறைதீர்ப்ப
வம்பிற்கெழுமுமிணர்ப்புன்னைமலர்கொய்வார். (10)

தாழைவீழ்வடத்தூசலிவர்ந்துகுழறாழ்ந்தொல்க
மாழைமானோக்கமடவார்விளையாடுஞ்
சாழையொடுமீன்கோட்பறையுந்தனிக்கலந்து
வீழைநெடுமோதவிம்முகுரலடக்கும். (11)

மாரிப்பொலிவின்கரியகுழன்மடவார்
மூரிக்களிற்றினிளமுலைகள்பாய்ந்துழக்கச்
சேரிப்பரதரெழின்முன்றிறிரையுலவும்
வேரித்தடந்திண்டோள்விம்மிக்களிமூழ்கும். (12)

அலைகிழியமுனைந்தோடுமிதைபடருமருங்கலங்கள்
விலைகெழுமுபன்னாட்டுவிழுப்பண்டமகட்டடக்கி
நிலைபெறனற்கொடியாடநீருண்டமழைமுற்று
மலைபொருவுநெடுந்துறைமாவண்மைமாறொழிந்தோங்கும். (13)

ஓடுந்திமில்கொண்டொலிதிரையின்வாய்ப்புக்குக்
கூடும்பலமீன்கள்கொண்டுபகர்ந்துநனி
தேடும்பொருளிற்பொலிபுவளர்செல்வக்
கேடில்விழுச்சீர்கெழுமுமுயர்பாக்கம். (14)

வேறு.

எண்ணரும்வளன்விளங்குமச்சேரிவாழ்ந்திருக்கும்
வண்ணருந்திமில்வாணர்தந்நிதிக்குவைமலிய
வண்ணனெய்தலங்காவலன்புலம்பனையஞ்சி
மண்ணகழ்ந்துமுன்புதையலிற்கரந்தனர்வைத்தார். (15)

வைத்துநாட்பலகழிந்தபின்றேவையின்வந்து
மொய்த்துநின்றனரவ்விடந்தொட்டனர்முடிப்புப்
பொய்த்தொழிந்ததுபினும்பினுமகழ்ந்தனர்புதிதா
யெய்த்துலைந்தனர்காண்கலர்கலங்கினரினைந்தே. (16)

நொந்துவாடினர்வருந்தினர்நெடுந்திமினுளையர்
கந்துகால்பொரத்திரைவயிற்சுழல்வருங்கலத்தின்
வெந்துநெஞ்சகமக்கலங்காத்தவர்விறற்றாள்
வந்துவாய்புதைஇக்கைகுவித்தேத்தினர்மன்னோ. (17)

விடுக்கவந்தனிர்மண்விழைவடியவர்வெறிது
தடுக்கவந்தனிர்காக்கியபற்றறுந்தனிய
ரடுக்கவந்தனிர்தமியமையாளியவலங்
கெடுக்கவந்தனிர்குறையுளதொன்றுதுகேண்மின். (18)

பரந்தபுன்னையங்கானலஞ்சேர்ப்பனைப்பயந்து
கரந்தநெஞ்சினேமெம்பொருளொருங்குறக்கட்டிப்
புரந்தபான்மையினகழ்குழிபுதைத்தனம்போய
திரந்தடைந்தனந்தேவரீரடிமலரிறைஞ்சா. (19)

பாரிடத்ததுபாரிடத்திடத்ததாய்ப்பகைஞ
ராரிடத்ததாயெண்ணியற்கரவினரகத்தா
யோரிடத்ததாயுற்றதீதோவிற்றெனவுணரேஞ்
சேரிடத்ததாம்படியுளமிரங்கருள்செய்திர். (20)

என்றுபற்பலகூறினர்போற்றினரினைந்து
நின்றுகெஞ்சினர்பரதவராவருணிமலர்
குன்றுமாறறநோக்கினர்வருந்தலிர்கோடி
ரின்றுநும்பொருள்காண்டிரென்றற்பொடுமிசையா. (21)

சலசவொண்முகங்கரந்தலைகால்கழூஉந்தண்ணீர்க்
கலசவம்புனன்மீந்ததையிருந்ததொர்கைந்நீர்
சொலசலம்பெறவோதினரூதினர்சூழ்ந்த
குலசனம்பெறுமவர்கரங்களிவரக்கொடுத்தார். (22)

ஒளித்துவைத்தநும்பொருள்வயினிப்புனலொருங்கு
தெளித்துமற்றவணகழ்திராலப்பொருடெரிவீ
ரளித்தவல்லவற்றெழுதலிற்கோடிரென்றறைந்தார்
களித்தவாழ்வப்துல்காதிறுசாகுல்கமீது. (23)

இருகையேற்றனரப்புனற்பரதவரிறைஞ்சி
யருகுநின்றனர்விடைபெறாஉப்போயினரங்ங
ஙொருகைநின்றனர்தெளித்தனர்தொட்டனருவணே
யுருகுநெஞ்சினர்தம்பொருடெரிந்தனருவந்தார். (24)

போனதம்பொருள்கைவரவிம்மிதம்புரிந்த
மானநாயகர்மகிமையைத்தொறுந்தொறுமதித்தார்
வானவெங்கொடுமரவுமிழ்மதியெனவதன
மீனமற்றிடக்களிக்கடலாழ்ந்தனரினிதே. (25)

கலகவெஞ்சுறவினந்திரிதிரைமிசைக்கால
வில்கவன்றிமில்செலுத்துறுமீன்பிடிவினைஞ
ரிலகுமொண்ணிதிகொண்டகங்களித்துவாழ்ந்திருந்தார்
பலகலைப்பெருமான்மலர்ப்பதந்தினம்பழிச்சா. (26)

இன்னகாரியநிகழ்ந்ததையெம்பிரானிருக்கு
முன்னொர்நாள்வயினிகந்தபினந்நிதிமுடிப்பி

னன்னராந்திமில்வாழ்க்கையர்திரண்டனரற்பின்
மன்னர்மன்மகசெய்குயூசுபுமுனம்வந்தார். (27)

வேறு.

கருங்கடற்பாதர்சேர்ப்பன்முன்வரக்கமழுந்தீந்தேன்
சுரும்புணக்கிடக்கும்பைந்தார்த்தோட்டுணைசெய்குயூசு
பருங்கழலண்ணலைப்போற்றியங்கரங்குவித்துவாழ்த்தி
யொருங்குநின்றகத்துவேட்கையுற்றதையுரைப்பரன்றே. (28)

எம்பொருள்காண்குருவாறேகியவருதல்செய்த
நம்பிரான்மறைந்துவைகுநலங்கெழுகபுறுசூழக்
கம்பையிற்பலகைதன்னிற்கட்டுதும்பள்ளியொன்று
பம்பியபுகழினீர்நீரெங்களைப்பணிந்திரென்றார். (29)

இம்மொழிசெய்குயூசுபேந்தல்கேட்டகங்களித்து
நும்மொழியாங்குசெய்திரென்னவந்நுளையர்நோக்கி
யம்மொழிகொடுத்தாரன்னோரானனமலர்கள்பூப்பச்
செம்மொழிகொண்டுவாழுங்கானலஞ்சேரிபுக்கார். (30)

மாலிறைகொள்ளவோங்கிவளர்தருதுணித்துத்துண்டத்
தாலிறவுளர்முட்கூர்ம்பல்லரியிற்பண்ணுறுத்தியிட்ட
மூலியப்பலகையாய்ந்துமுறைபெறப்பொறுக்கிக்கம்பை
கோலியகணக்கின்வண்ணங்குவைகொளத்தொகுத்தாரன்றே. (31)

குவிதலைபருத்துநீண்டகூர்த்தவாற்கீலம்பல்ல
சவிதரத்தொகையிற்சேர்த்துத்தக்கினர்திரண்டுமேன்மை
புவிதரத்தூரீராடிப்புலர்விறுசுபூஇநங்கோமா
னவிதவழ்கபுறின்பக்கநயனுறத்தாழ்வில்வந்தார். (32)

மேன்மையங்கபுறுநாப்பண்விளங்கியவமைப்பிற்சூழும்
பான்மையிற்சதுரமாகப்பரவிடங்கோலிப்பக்க
நான்மையுமொருமைதோற்றநவின்முறைபிழைத்திடாது
கோன்மையந்தானஞ்செய்துகுறைகெடத்திருத்தினரால். (33)

மூலையொர்நான்கன்கண்ணுநான்குதூண்முறையினாட்டி
வாலையங்கம்பைபல்லவரிசையிற்கீழ்மேலாக

மாலையிற்குறுக்குச்சட்டவகைவரவமைத்துத்தேர்ந்த
நூலையினொழுங்குகாட்டி நுழைவழியாணிதைத்தார். (34)

புறமொருநான்கன்கண்ணும்பொன்னன்னபலகைபல்ல
நிறமுறநிறுவிவைத்துநிரைநிரையில்லிதிர
மறமுறுமாணிநேர்ந்தவரிபடவிறுகத்தைத்திட்
டறமுறுசிறப்பிற்பொன்னூரறையெனச்செய்தாரன்றே. (35)

பிற்புறமுதலமற்றைவலமிடம்பிரியகில்லாப்
பற்பலசெம்மைசெய்தபலகையினடைத்துப்போந்த
முற்புறமிருபாலன்றிமுழுதடைப்பில்லதாக்கிப்
பொற்புறுகபாடமிட்டுப்போய்வரவாயில்செய்தார். (36)

நாற்புறமுடிந்தபின்னர்நம்பெருந்தகையார்பள்ளி
மேற்புறங்கம்பைசெய்தவுத்திரம்விளங்கப்பாவி
யேற்புறுங்கனத்துமிக்கபலகைகள்பரப்பியேற்றி
யாற்பலத்தருமைகாணவடைத்தனர்மூடியிட்டார். (37)

உத்திரம்பரப்பித்திண்மையுறும்பலகைகள்பாவி
வத்திரங்கீழ்பாலாகவைத்தமேற்புறத்தினுங்
குத்திரமறுத்துநீக்குங்கும்பமுதமைந்துதோற்றச்
சித்திரவிமானமொன்றுஞ்செய்துவைத்திட்டாரன்றே. (38)

ஒள்ளுமிழ்விளக்கம்பல்லவுறைதிருத்தானிசெய்து
வள்ளலார்கபுறினான்குபக்கமும்வைத்துச்சீர்சால்
பள்ளியைமுடித்தார்நின்றுபணிந்துமன்னாகம்பூப்ப
வள்ளிலைக்கைதநெய்தற்பரதவாகன்றூரன்றே. (39)

நச்சுணவயின்றிட்டாற்கந்நச்சுறமனைவிதாலி
பிச்சையிற்புரந்தநந்தம்பெருந்தகையமர்ந்தபள்ளி
மச்சுடன்முதன்மைத்தாகவலைஞர்செய்தனரென்றென்று
மெச்சியவுலகமேன்மைவிளங்குறவிருந்ததன்றே. (40)

பள்ளிகட்டிய படலம் முடிந்தது.

ஆ செய்யுள் 262.

# திருவிழாப் படலம்.

நன்னர்சாலிரும்புகழ்நம்பிரான்றிருப்
பொன்னவிரடிமலர்மறைந்தபொற்பமர்
பன்னருமிடமெனும்பள்ளிவானுறை
பொன்னகர்மாளிகையறையிற்பூத்ததே. (1)

மருங்கெழில்பிதுங்கியதீபம்வான்கதி
ரொருங்குவந்திருந்தெனவொளிரத்தூபிகை
வருங்குழுவினர்வினைமாற்றத்தோன்றுமாற்
கருங்கடற்பரதவர்கட்டுபள்ளியே. (2)

வண்டிசைசெழுமரைமலரினன்னவா
மொண்டிகழ்சேவடியொலிகடம்பிரான்
மண்டிசையொடுமமர்மாண்புநாட்குநா
ளெண்டிசைதொறும்புகுந்திலக்கமேயதே. (3)

பெண்ணையோங்கிருங்கழிபிறங்குசேரியோர்
பண்ணியநம்பிரான்பள்ளிவாயிலை
நண்ணிமற்றயலுறைநாட்டுமாந்தர்கள்
புண்ணியதரிசனைபுரிந்துபோவரால். (4)

மறைவருமற்புதமலிந்துதோற்றுமோர்
துறையெனுநன்னிலைதுளங்குபள்ளியி
னிறைபுகழ்வாயிலைநேடுமாக்களாற்
குறைவகல்காணிக்கைகுவையின்மல்குமால். (5)

சேயெனமகிமைகொள்செய்குயூசுபுந்
தூயவர்மைந்தருஞ்சூழ்ந்துவைகிநந்
நாயகர்தமக்கெனநல்குகாணிக்கை
யாயவப்பொருள்கடுய்த்தமர்ந்திட்டார்களால். (6)

மேன்றரவின்னணம்விளங்குநாள்வயின்
மூன்றெனுமவாவையுமுனிந்தநாயகர்
கான்றவழ்திருவளர்கபுறுபுக்கிய
வான்றருமுயர்முதல்வருடமுற்றதால். (7)

பின்னியகவற்சியிற்பிறங்குமாகிலன்
றுன்னியபொறிவழித்தொடர்புசெற்றகோன்
பொன்னியலெழினகர்புக்கநாட்கொளு
மன்னியதிருமுதல்வருடமுற்றதால். (8)

பாசமற்றெகின்றருபழனுந்தோடும்போ
லாசகற்றியநிலையமர்ந்தநம்பிரான்
வாசமுற்றியலறைமறைந்தநாளனு
மாசகற்றியமுதல்வருடமுற்றதால். (9)

வேறு.

தந்தையார்மறைதிங்கள்கொடலைத்தெனுந்தகைய
முந்தையாண்டிறசெய்குயூசுபுவெனுமுதல்வர்
விந்தைமேவியதபோதனர்வரவொடுவிழவுஞ்
சிந்தைகூர்ந்தனராம்பொருள்யாவையுஞ்சேர்த்தார். (10)

கடுப்புடைப்பறவைத்திரளன்னவாங்கணநெல்
விடுப்புறக்குறும்வெள்ளரிமூடைபல்விதத்த
வெடுப்பரும்பெருங்குழிசிவாய்வரநிறையிடுக
டடுப்பறப்பொருவனைமருப்பெழுமினத்தகர்கள். (11)

குடநிறத்தவாமானநெய்பெய்முழுக்குடங்கள்
சுடரெழுப்பியவிளக்குறுநெய்வகைகூட்டி
னிடபமற்றிழுத்திடவருபூட்டைவாயெண்ணெய்ப்
படவிரித்துறைபள்ளியவிருக்கையபாய்கள். (12)

விருப்பினூண்டகுகடலையைத்துவரையைவிடுத்த
பருப்பினம்பலவகையநற்கழைத்திரட்பழிக்குங்
கருப்பிஞலைவாயாட்டியசாற்றினுங்கட்டி
யுருப்பவாய்விளைகறிச்சரக்கினமுளவனைத்தும். (13)

ஆம்பியந்தலைமருண்முகிழ்வெதிர்ங்குழாயடைத்த
தீம்பெறுந்தயிர்நாண்பொருந்தொறுநடுத்தேய்ந்த
காம்புறும்வெளிலுடைந்தமோர்நறுமணங்களுல
வீம்புகொண்முலையாய்ச்சியர்திரட்டியவெண்ணெய். (14)

நறியதேன்வழிதீம்பழம்பலவகைநன்கின்
கறிபகாயினம்பஃறறிவிரகிவைகலப்பக்
குறிபூமொடுறுசினைவளர்தொறுமிடங்கொளவிற்
சிறியநீக்குதொன்மாளிகைமுதுபக்கிற்செறித்தார். (15)

விழவில்வேண்டுவவினைவயெலாமயலிடம்விளைந்த
முழவினன்னவாமுழுமரங்கடைதொழின்முதிர்ந்த
வுழலவைத்தவார்ப்பற்றியசூழ்ந்தசூட்டுருளிக்
கழலவேய்ந்தவைச்சகடிறவேற்றுபுகாண. (16)

இல்லையொன்றெனவின்மையாமாறுதம்மிடத்தி
னெல்லைமேயபின்செய்குயூசபுவெனுமுரவோர்
தொல்லையூரயலவர்க்கியம்புவவெலாஞ்சொல்லி
யெல்லைகாணியவேகியோர்வருகைபார்த்திருந்தார். (17)

நங்கணுபகர்கடந்தவாண்டுறுமுதனுட்க
ணிங்கண்யாமடைகுவமெனக்கூறிமற்றிகந்த
திங்கணன்முகநான்குநூற்றுவரெனுந்திரளோர்
பங்கமற்றசொல்லாங்குமன்வரறலைப்பட்டார். (18)

வேறு.

ஆண்டுதொறும் வருகுதிர்மற்றேகுதிரென்றளித்த விடையகத்துக்கொண்டு, கூண்டுபுறம்பட்டிகந்தநானூற்றுநான்கிலருங்குவாவீர்காறும், பூண்டுநெறிப்பட்டுப்போயவணிறந்துநாட்கணக்குப்பொருந்தத்தேறி, மீண்டுபலவயின்றொலைச்சிவிழைவோடுந்தகவருகைமேயினரே. (19)

பொய்பொருதுங்கயமுனிகட் கைபிணைந்தாலெனப்பிணைந்து பொலிந்தவேனல், கொய்பதமுற்றியவோப்புங்குறத்தியர் கைக்கவணையுமிழ்கொடுங்கல்லோங்கி, மொய்கொள்வெதிர்ங்கோறத்தும்பண்ணைன்றவிசைக்கொல்கிழத்தலுகம், பைபயப்பின்பார்த்தோடிப்பதுங்குமுழைஞ்சமரடுக்கம்பலவுநீந்தி. (20)

அழகுவிளைகுமிழ்சுழலுங்குண்டுகயமுடுக்கர்வயினறைகண்மீது
புழகுமலி வெயினுழைபு காணாத மழைவளரும் பொங்கர் தூங்கு

முழவுமருள்சில்சுளையபெரும்பலவின்பழம்பிளந்துமுருகார்தேறற் பழகுபயிலிருந்தும்பிவிருந்தூட்டுநெடுஞ்சாரற்பலவுநீந்தி. (21)

கலைமருப்பின்மறிந்துவீழ்திரிதாடியுருமஞ் சாக்களவேர் வீழ்க்கைக், கொலைமனத்தரெறியம்புபோவாரையச்சுறுத்திக்குவியுஞாங்கர், மலைபிளப்பின்மண்பகவெங்கதிர்தெறலினீர்நசையான்மரைகள்வாடும், பலவயினெய்வெரிநனையகுவிந்தபுறக்குடிற்பாலைபலவுநீந்தி. (22)

மறியயிலுங்குளகுநிரையாத்தகுறுங்கால்வரகுவைவேய்கூரைப் பொறிய கழிக்கதவமுடைக்குரம்பைதொறுமளைமத்தம்புலியினார்க்கு, நெறியமருப்பெருமையானுகுநிரை துருவைவெள்ளைநிறைமுள் வேலி, பறியவளைகோவலர்வாழ்முயலொடுமான்பயின்முல்லைபலவுநீந்தி. (23)

பிடிமடி வாய்ப்பு ரைநாஞ்சிலுடுப்புமுகக்கொழுவழுத்திப்பிறங்கவித்தி, முடிநடுநரினோசைக்கிளநாரைவெரீஇயல்குமுல்லையொண் பூங், கொடிபடருஞ்சினைமருதமுயர்காஞ்சிபயிலிளங்காகுளிரநாறும், படிமரைசெங்கு முதமிதழவிழ்ம்பொய்கைமலிமருதம்பலவுநீந்தி. (24)

மண்டமரமாருடிவளநகரங்கெடவௌவிமலிவினுங்குக், கொண்டபொருள்பலவாரிக்குடக்கிருந்துகுணக்குவருங்கொற்றவன்போலண்டவருஞ்செழுமலையவகன்காட்டபெருநாட்டவனைத்தும்வாரிப் பண்டமருங்கழிநோக்கியாறுவருந்தடநெய்தற்பலவுநீந்தி. (25)

வேறு.

இன்னவைந்திணையென்பனயாவையு
முன்னமோதுமுதியவர்நீந்துபு
கொன்னவாயகொடுமுடிகாண்குறு
மன்னகன்றமலைகளுநீந்தினார். (26)

ஊனமுற்றவாயுள்ளகொடியவா
மானமுற்றவிலங்கினமல்கிய
தானமுற்றதருக்களெலாமுயர்
வானமுற்றவனங்களுநீந்தினார். (27)

தரியமா தர்மனநிலை தன்னிலை
யேயநீண்ட விடங்கர் திரிந்திரை
மேயவாளியையஞ்சிவிழுங்கரி
மாயவாழ்ந்தமடுக்களுநீந்தினர். (28)

பொங்குதீம்புனல்பொள்ளெனப்போந்துமா
கங்குதோறுங்களுன்றதுராற்கழூஉம்
பொன்கொழித்துப்பொருந்திரைபூவிரி
நன்குமிக்கநதிகளுநீந்தினர். (29)

பூங்குலைத்திரள்பொம்மியவானள
வோங்குபாசடையொண்சினைதோறுமா
வீங்குமோதைவிளங்குறுதேனுறை
தூங்குநீண்மரச்சூழலுநீந்தினர். (30)

தேம்பிலிற்றுபுசேந்துகனிந்தபன்
மாம்பழக்குலைமல்கியவாய்தொறுங்
காம்பிறக்கடுவன்றிரள்கௌவிய
போம்பழுத்தபொழில்களுநீந்தினர். (31)

காடறுதகடலுமறுதன
நாடறுதநகருமறுதன
கோடறுதகுவிபொருண்மல்குறும்
பாடறுதபதிகளுநீந்தினர். (32)

வன்னமாளிகைவான்வரைதுன்னலான்
பொன்னமால்வரைபோன்மெனமாமழை
சொன்னமாரிசொரிந்தெனச்செல்வமார்
நன்னராநகரங்களுநீந்தினர். (33)

வேறு.

தும்பிவண்டிசைபினர்க்குந்தொடையலந்தோளினுனு
றம்பகடனையோர்நான்கினவர்தலைமையரின்மேவப்
பம்புமத்தானமுற்றும்பகலிரவகன்றுமேல்வான்
செம்பிறைகாணுநாட்குமுந்துநாள்செறியமொய்த்து. (34)

தேன்பிதிர்முளரியொண்பூந்திருக்கழனம்பிரானூர்
கான்பெறுகபுறிற்போந்தகனங்கொளுஞ்சமாத்துலாகிர்
வான்பிறைவருகையோடியாங்களுநம்வருதுமென்ன
மான்பெறுவயிர்களார்ப்பவந்தனர்குழுக்களாக. (35)

பஞ்சகந்திணித்துத்தூசின்பன்னிறத்துணிகளிட்டு
மிஞ்சுறப்பொல்லஞ்செய்துமெத்தென்றபோர்வைபோர்த்துத்
துஞ்செழிற்சிரத்தினீண்டதொப்பியிட்டாயுதஞ்சேர்
மஞ்சமர்கரத்தராம்பான்வாவெனுங்குழுவோர்வந்தார். (36)

கிளைதரத்திரிந்துநீண்டகிடைகெழுசிரத்தர்வீதல்
களைநினைவுறுத்தப்பூண்டகபன்படர்மெய்யர்நன்மை
விளைபொலியுடைவாளாதிவிருதினர்கொடிசுற்றுழ்ந்த
வளைதடியினர்சங்கார்ப்பமலங்கெனுங்குழுவோர்வந்தார். (37)

வம்பறத்தலைகயினிட்டமுத்திரைவலத்தோள்காட்டக்
கம்பளத்தெழின்ஞாண்வீக்கிக்கவின்புகைக்குடுக்குதாங்கிக்
கொம்பொடுகுழல்களார்ப்பக்குதிரைவெம்முரசமேங்கத்
தம்பதிதொடர்ந்துமேன்மைஜலாலிபாங்குழுவோர்வந்தார். (38)

வினைமறவென்றாழ்ப்பும்விரிகுடைகொடிகளோங்க
வனமெனமுழவம்பம்பைவாய்திறந்தொலிப்பவார்க்குங்
கனமெனக்கடலீதென்னக்கழிபெருந்திரளினோராய்
மனமகிழ்வெய்துங்கீர்த்திமதாரியாங்குழுவோர்வந்தார். (39)

முரசினமுறையினேனங்கவாகனமுறையினூர்ந்திட்
டாசினைத்தலைவர்போதக்கட்டியக்காரரார்ப்பப்
பரசுறுமுதல்வர்முந்தப்படிப்படிவரலுநங்கட்
சிரசுறுகழலின்வள்ளல்செய்குயூசுபுமகிழ்ந்தார். (40)

அவரவருபசாரத்திற்றழுவினரழைத்தார்மன்றத்
தவறறமுறையினிட்டதானங்கள்குறித்தார்வைகப்
பவமறுமன்னோர்நங்கோன்கபுறிடம்பாத்திகாவின்
றெவமறவோதியோதியிருக்கைபுக்கிருத்தாரன்றே. (41)

ஒட்டகங்கரமற்றேறுமுளைப்பரியனைத்துமொன்றக்
கட்டகங்கட்டியோப்புங்காவலர்ப்படுத்தியிட்ட

கொட்டகங்கமழவன்பிற்கூண்டனிருந்தாரன்று
சட்டகங்களிப்பவன்னோர்சாய்ம்பொழுதுற்றதன்றே. (42)

வேறு.

அறிவினான்றநம்மாண்டகைமைந்தரும்
பொறிகள்வென்றதபோதனர்பல்லருஞ்
செறிபகின்றிறைசென்றமர்திங்களின்
குறிபதென்றோர்கொடிமரநாட்டினார். (43)

காட்டருதகளம்புனையற்புதர்
மூட்டருமனைமுன்றிலினொள்ளவி
ழேட்டருநறவிச்சையினோரவிப்
பாட்டருமலர்ப்பந்தருமாற்றினார். (44)

பூகம்பாளைபொலிந்துவிரிந்துறச்
சேகம்பாடறுதெங்குகுலைதர
ஊகம்பாயவுதிரிணர்ப்பூஞ்சினை
நாகம்பாவகிரைநிரைநட்டினார். (45)

அண்ணலங்களியாறடியார்வரிப்
பண்ணலம்பெழிற்பைஞ்சிறைத்தும்பிக
ளுண்ணவுண்ணவுமிழ்நறவம்மரு
வண்ணவண்ணமலர்த்தொடைநாற்றினார். (46)

சேடலத்தொடுதேங்கமழ்ஞாழலும்
பாடலத்தொடுபைந்துணர்ப்பாலையுங்
கோடலத்தொடுகொன்றையுங்கோங்கமும்
வாடலற்றமருதமும்வஞ்சியும். (47)

சுள்ளிவில்வந்துதையிணர்ச்சண்பகங்
கள்ளிருக்குங்கருவிளைகூவிரம்
புள்ளிரங்குறுபூங்குமிழ்பித்திக
மள்ளிலைத்தளவம்மணிமுண்டகம். (48)

எரிநிறத்தவெறுழுமுமாம்பலும்
புரியவிழ்த்தபுதுமலர்மௌவலும்

வரிதுளைத்தவகுளமுமற்றவும்
விரிமணத்தின்வதுவைவிளக்குமே. (49)

நட்டமாமரநான்குபுறத்தினும்
வட்டவாயமரைமலர்நாற
விட்டதாளில்விளங்குதல்வெவ்வராத்
தொட்டவான்மதிதோற்கத்துலங்குமே. (50)

சொற்கவாயலிற்றோற்றெழிற்பள்ளியின்
முற்கஞன்றுமுடிந்துறுபந்தரிற்
றுற்கத்ங்கெடத்தூங்குபலாப்பழம்
பொற்குடங்களைப்போன்றுவிளங்குமே. (51)

மாலையொன்றுமணிப்புயநாயகர்
மேலையொன்றுவியன்கபுறின்புற
நாலையொன்றியநல்வயினெங்ஙணுஞ்
சோலையென்றுசொலும்படியாயதே. (52)

பாட்டினனபழுமரந்தேடுபு
மாட்டினும்பறவைத்திரண்மானவே
யீட்டுவானருளெய்தியவேண்டிப்பன்
ஞட்டுமாந்தர்கணண்ணினரீண்டினார். (53)

ஆடலம்பரியத்திரிவெங்கரி
சேடலம்புசிவிகைமற்றூர்வன
வேடலம்பவிவர்குநரெண்ணிலோர்
கூடலங்கொளவந்துகுழுமினார். (54)

உடையுமுண்டியுமொண்பொருள்பல்லவு
மிடையுமாறுவிளைவனயாவையு
மடையுமோர்திறத்தாங்கடைமல்கலாற்
கொடையுங்கோளுங்குறைவிலவாயவே. (55)

இன்னவித்திறமாகவிரும்புகழ்
மன்னர்மற்றமறையவர்சூழ்கொளப்
பொன்னமாளிகைபோன்மெனுநாயகர்
வன்னவாயிலைமண்ணினர்நன்கரோ. (56)

பட்டருந்துகில்கொண்டுபகலுட
னொட்டிளம்பிறையுங்கதிரோடுற
வெட்டியொன்றவிளங்குடைத்தைத்தமா
மட்டறும்புகழ்வான்கொடிதன்னையே. (57)

வண்டுமொய்த்தறியாதவெண்மல்லிகை
கொண்டுமென்னியகோத்தசரங்களா
லொண்டரப்பினுமுத்தரியத்துடன்
மிண்டவத்திரிவெங்கிடையேற்றினார். (58)

பசியவாடைபளீரெனப்போர்த்தெழில்
கசியவீரக்கழல்புனைந்தார்தொடை
யொசியநின்றவவ்வொட்டகந்தன்னைமா
வசியமாகமகிழ்ந்துநடத்தினார். (59)

முழவுபம்பைமுருடரும்பேரிகை
யழகின்மத்தளமாரிடக்கையொடு
பழுகுதூரியம்பல்லவுமொன்றதாய்
விழவிதென்றுவிளக்குறவார்த்தவே. (60)

கொம்புநாதங்குடம்பொருவெண்ணிறக்
கம்புநாதங்கலந்துபலர்புகழ்
வம்புநாதமும்பாண்வரியூதிய
வம்புநாதமுமாயவொலித்ததே. (61)

அண்ணலங்கொணம்மாண்டகைமைந்தருந்
தண்ணகங்கொடபோதனர்யாவரு
நண்ணமெள்ளநடத்திநற்பள்ளியின்
வண்ணவாயிலில்வந்துநிறுத்தினார். (62)

தங்கவம்பகல்செய்துபின்றன்கொளச்
செங்கதிர்த்திரட்சேரவிழுத்தரோ
மங்கலவையகமுற்றினும்வலவிருள்
பொங்கஞாயிறுபொன்மலைபுக்கதே. (63)

தெள்ளிதாய்விழுசெங்கனலிப்பிதிர்
வள்ளியெங்குமறைந்தெனக்கணகவ

றொள்ளிலங்கவுஞற்றியவான்புகழ்ப்
பள்ளியெங்கும் பலவிளக்கேற்றினார். (64)

வாடிநின்றமனத்தினர்மாமகிழ்
சூடிநின்றதுளக்குறுதிங்களை
நாடிநின்றுநந்நாதருமற்றருங்
கூடிநின்றுகொழும்பிறைநோக்கினார். (65)

மேற்றிசைக்கண்விளங்கொளிகாறரக்
கீற்றிளம்பிறைகேடகல்பான்மையிற்
றோற்றிநின்றதுதூயவர்பூங்கழல்
போற்றிநிற்கும்புனிதர்தெரிந்தனர். (66)

வாழுநின்றெனவான்பிறைகாண்டலும்
போழுநின்றிகல்புன்மையைநன்மைய
வீழுநின்றவர்மற்றவர்வேண்டிய
சூழுநின்றுசுடர்க்கொடியேற்றினார். (67)

மாறரும்புகழ்வானுயர்பூங்கொடி
யாறரும்பிணியத்தனையுங்கெடக்
கூறருந்துயர்சூன்றியறக்கலி
பாறநின்றுபறந்ததுலாவியே (68)

தாபமற்றதனிக்கொடியேற்றுபு
சாபமற்றவர்சந்நிதிவந்தனர்
பாபமற்றகஃபாத்திகாவோதுபு
தூபமிட்டுத்துஆவிரந்தார்களால். (69)

பொன்பிறங்கெழிற்பூந்துணர்ப்பள்ளியின்
முன்புநின்றுமுறைமுறைவாழ்த்தினார்
பின்புமன்றபிரிந்தவயின்றொறு
மன்புகொண்டவவரவர்வைகினார்.. (70)

விரவுநற்புகழ்மாலிகைவேய்ந்தகோன்
பரவுபள்ளியினுள்ளியபாங்கெலா
முரவுபெற்றவரோதொலிமாறிடா
திரவுமுற்றுமிலங்கியமைந்ததே. (71)

அற்றைநாளிதுவாகவகன்றபின்
மற்றைநாள்வரவைகறையாதலு
மொற்றையாழியுருட்டெழிலாதவன்
கற்றைவான்கதிர்காலவெழுந்ததே. (72)

வேறு.

வெண்டிரைவாரிதிமேடுபிளப்ப
வண்டியவெங்கதிரள்ளியெறிந்தே
விண்டபனன்வரமேலவர்காலை
மண்டகைசெய்தனர்மாணவிருந்தார். (73)

பாவமறுத்தவர்பண்பொடுவைகுந்
தேவதலத்திசை தென்வயினென்றுங்
காவதமுற்றதொர்காலளவப்பா
லேவமொழிப்பவிருக்குமொர்மூதூர். (74)

மானமுறப்பறவைத்திரளெல்லாங்
கானமெழுப்பமலிந்துகலப்பத்
தேனவிழ்நற்கிளைதிக்கினகன்று
வானமறைப்பவளர்ந்தனசோலை. (75)

கோங்கெழிலொண்முகைகொங்கைகளுக்கு
நாங்களுமொப்பெனநன்குதெரிக்குந்
தேங்கனிபற்பலதின்றுகளித்து
மாங்கனிகௌவுமந்திகுதிக்கும். (76)

அங்குரவத்தினரும்பையவிழ்த்துப்
பொங்குமதுத்துளியுண்டுபுரண்டே
தங்கலவிக்கணனந்தர்தகைக்கு
மங்கையருக்கிணைவண்டுகிடக்கும். (77)

காலுறவாடியகம்பலைபொன்றச்
சாலுறவாடுதவிர்ந்துகிளைக்கண்
மேலுறவோடிவிழுந்துகிடக்க
மாலுறவாடுமஞ்ஞைகளிக்கும். (78)

கொங்கைபருத்த குரும்பைமுதிர்க்க
வங்கமலத்தினரும்பையலர்த்த
மங்கையர்மொய்த்தமரத்தலைமுற்றுஞ்
செங்கனிபற்பலசிந்தவுதிர்க்கும். (79)

எல்லினிளங்கதிரென்றுவிளங்கப்
பல்லிளவந்தழைபம்மியமுற்றி
யல்லியவிழ்ந்தவகன்றடமெங்கு
மல்லிகைமுல்லைமலர்ந்துமணக்கும். (80)

கம்புளிரங்கிசைகொண்டுகலந்து
தம்பெடைபுல்லியிருந்துதருந்த
செம்பவளக்கொடி சென்றுபடர்ந்த
வம்புயவொண்மலரன்னமுறங்கும். (81)

ஆடரவப்படமஞ்சியொடுங்க
மேடகல்வுற்று விளங்கெழிலல்கு
லேடவிழீர்ங்குழலேர்மயிலன்னார்
பாடருமின்னிசைபக்கமெழும்பும். (82)

மண்குழைவுண்ணமதுத்துளிசிந்த
விண்குழறண்மலர்வீழவிரித்தே
பெண்குழுநின்றுபிறங்கிடமெங்கு
மொண்குழைசிந்தியுதிர்ந்துகிடக்கும். (83)

அங்குலமாதரணிந்தபொலம்பூண்
கங்குலொதுங்கியகாலொளிவீசப்
பொங்குகுழற்கிடுபூம்புகைமண்டி
மங்குறகைக்குமணிமதிண்மாடம். (84)

பஞ்சையமைத்தபரப்பமைமெத்தை
யஞ்சுவிதத்தவணங்குபதான
மஞ்சமியைத்தமதித்தசிறப்பா
னெஞ்சையிழுக்குநிலாமணிமுற்றம். (85)

சிந்துமதத்ததிறற்கரிநின்று
கந்துக்றுத்துக்கனைப்புறத்தென்றல்

பந்துமுலேக்களபத்தனிமாஞர்
வந்துகளிக்குமணித்தலைமுன்றில். (86)

வீறுகிடக்கும்விறற்பரிமற்ற
வேறுகிடப்பவிகைப்பனமுற்றும்
பாறுகிடப்பவிளங்கியபம்பி
யாறுகிடக்குமகன்றதெருக்கள். (87)

பொங்குமணித்தொகைபொற்பணிவெண்பொன்
னங்கலமற்றனவம்பரவர்க்கம்
விங்கமலிந்துவிளைந்தனமுற்றுங்
கங்குகடந்தகடைத்தெருவெங்கும். (88)

ஞெண்டரளைக்கணிரம்பமலர்த்தா
தொண்டருபுன்னையுகுத்தொளிர்கிற்கும்
வண்டலிழைத்தவலைச்சியர்மிக்காங்
கண்டலலர்ந்தகடற்கரைமுற்றும். (89)

நாற்றிசைமுற்றுநலத்தவிதத்தின்
மாற்றரிதுற்றவளத்தகுபண்டம்
பாற்றினெடுத்தபலப்பலசித்த
மேற்றியிறக்குமிருந்துறையன்றே. (90)

வேறு.

பெண்ணைவாயகன்றிலல்கும்பெருங்கழிக்கரைவாயார்ப்பும்
விண்ணைவாய்த்தலைகொண்மாடந்தொறும்புரிவிருந்திஞர்ப்பும்
மண்ணைவாய்மல்கப்பூத்தமரம்பயிலிளங்காவார்ப்பும்
பண்ணைவாயவுஞ்சேர்நாகபட்டினமென்பமாதோ. (91)

செழிப்பொடுவண்மையோங்குந்திருவளரவ்வூர்வாழ்க்கை
வழிப்படுபான்மைதக்கோன்மறைநெறிமுசுலிமீன்கள்
விழிப்புறுமன்னகாலேக்கடன்பலவிருப்பிற்றீர்த்து
மொழிப்படுமொருவரன்னோர்முன்வரத்திரண்டுவந்தார். (92)

ஒருங்குவந்திகந்துதம்மூர்செய்குயூசுபுவிஞெண்டாண்
மருங்குவந்தடங்கிநின்றுவளர்சலாம்பகர்ந்துவைகிப்

பெருங்குணமலர்த்தும்வள்ளல்பிறங்கெழில்வதனநோக்கி
வருங்குறிப்பனைத்துந்தோற்றவகையொடுகூறலுற்றார். (93)

தேவரீர்தமியேங்கொண்டசிந்தைமற்றதனைக்கேட்டீ
ராவறுநுந்தையொன்றுமுலகிறந்தகன்றபத்தாங்
தாவழிதினத்தினன்குதருமிரவன்றுதக்க
பாவனையொன்றுசெய்வான்பண்பொடுவிழைந்துளேமால். (94)

விசுப்புறநரல்வேய்மல்கும்வியன்வரையுச்சிகாழ்த்த
முசுப்பயிலாரங்கொன்றமுழுத்துணியரைத்துநாறும்
பசப்புறுகுழம்புசேர்த்துமாற்றுயர்பசும்பொன்செய்த
தசுப்புறப்பெய்துமூடிச்சான்றவர்மிடைந்துசூழ. (95)

வேய்ங்கழிநறுக்கிக்கட்டிவெள்ளியம்பொற்றுள்பொத்திக்
காய்ங்கதிர்க்கனலியாங்குகவினவொர்கூண்டுசெய்து
தேய்ங்குழைக்குடங்கர்தன்னைத்திகழ்வரவதனுள்வைத்துத்
தோய்ங்கனத்துலாவிற்சுற்றித்துணையடிதருதுமன்றே. (96)

ஈதெமர்விருப்பமுள்ளமிரங்குதிர்செம்மாலென்னக்
காதமர்கடக்குமற்றோட்காளையரொருங்குகூற
மாதவர்செய்குயூசுபுளமகிழ்வெய்தியன்னோர்
மீதருள்பயப்பநோக்கிவாய்மலர்விண்டுசொல்வார். (97)

அன்புளீர்நீவிர்கொண்டவவாவிதைத்தடுத்தல்செய்யும்
வன்பெவனின்றுலோங்கும்வரைவளர்சந்தத்துண்டந்
தன்குழம்பரைத்தலொன்றுதவிர்த்துமன்கூண்டுசெய்து
மின்பிறழுலாவிற்போந்துவிழைந்தெனத்தருதிரென்றார். (98)

கேட்டனர்நாகைவாழ்நர்கெழுமினர்பொய்கைதோறும்
பேட்டனந்துயிலுஞ்சோலைபிறங்குதந்நகரம்புக்கார்
தேட்டரும்பண்டம்பல்லசேகரித்தருமைதோன்ற
மூட்டருங்கூண்டுசெய்வான்முயன்றனர்தொடங்கினாரால். (99)

வேறு.

நண்ணியவெதிர்ங்கழிநறுக்கிமிக்குறத்
தண்ணியகைதைவீழ்தந்தநாரினை

னெண்ணியலறும்பிணிப்பியன்றசட்டங்கள்
கண்ணியல்வருந்திருக்கூண்டுகட்டினார். (100)

அடிமுதனுனிவரையகன்றுகூர்த்ததாய்
முடிமுகங்கலசமுமுகையுமுள்ளதாய்
வடிவதுசக்கரமன்னநின்றதாய்க்
குடிபுகழ்கொளுந்திருக்கூண்டுகட்டினார். (101)

கட்டினர்பன்னிறங்கவின்றதாட்பல
வொட்டினர்வங்கமும்பொன்னுமொப்பென
வெட்டினர்தகடுகள்விளங்குசித்திரந்
தட்டினர்வயின்வயின்சாலச்சேர்த்தினார். (102)

செப்பருநவமணிதிளைத்தவாமெனத்
தப்பறுபன்னிறச்சாயந்திர்ந்தமை
யப்பிரகத்தகடுநந்தம்வைத்தன
ரெப்புறத்தினுங்கதிரிலங்கிநிற்பவே. (103)

பன்றருவெண்கதிர்ப்பளிங்கினன்னவாங்
கன்றகலப்பிரகத்தினைக்கிய
வொன்றெரிபடர்ந்தெனவொளிததும்பிய
நின்றெரிகுடம்பலநிரைநிறுத்தினார். (104)

கத்திரித்தொழில்பலகருவியந்தொழில்
கொத்துறுத்தியரொழில்குறைவுபோகிய
சித்திரித்தனபலமாமைசெய்துறப்
பத்திபத்தியிற்கொளப்பதித்திட்டாரரோ. (105)

இளம்பிறையாமரசிலைகளாமென
வளம்பெறுபலவணவடிவினவாத்
தளம்பொரமடித்தமைதகரக்காய்பல
துளங்குறும்படிபஃறொங்கறாக்கினார். (106)

மெய்ம்மலர்மெய்த்தழைவிளங்குமாலெனப்
பொய்ம்மலர்பொய்த்தழைபுனைந்துதாட்களாற்
கைம்மலர்த்திறந்தெரிகவின்றவாநிறஞ்
செய்ம்மலர்ச்செடிகொடிசெறித்திட்டார்களால். (107)

கழல்வரத்தகப்பலகண்டமூட்டுறச்
சுழல்வரவடிதலைதுன்னுகால்கதிர்
நிழல்வரநோக்குநர்நோக்குநெஞ்சமு
முழல்வரமுடித்தனரொளிசெய்கூண்டையே. (108)

திருவளர்கூண்டினைத்தீர்த்துவண்டிமிர்
மருவளர்தொடைபலமலியநாற்றுபு
குருவளரடிவயின்கூண்டுதாங்கிய
விருபுறங்காமரமியைத்திட்டார்களால். (109)

செழுங்கதிர்கனையிருள்செறுக்குமாறுவ
ரெழுங்கதிர்நாணியவியல்கொண்டெட்குபு
மழுங்குறக்குழூமணிமலியவைத்ததொர்
கொழுங்கதிர்கிளர்பொலங்குன்றினின்றதே. (110)

கூண்டதுதிர்வையைக்கொள்ளவின்னருண்
மாண்டநந்நாயகர்மறைந்ததிங்களின்
சேண்டிகழ்பிறைமுதறினத்திருந்தருங்
காண்டநாளொன்பதுங்கழிந்துபோயவே. (111)

காட்டருள்சாகுல்கமீதின்சந்தனக்
கூட்டிரவிதுவெனக்குறித்துச்சூழ்வரு
நாட்டினர்நகரினர்நலிவில்பற்பல
மாட்டினர்திரண்டனர்வந்துகூடினார். (112)

திரளுறுபற்பலதிசைகொண்மாக்களு
நிரலுறுபல்பொருணிறைவுமேனவும்
பரவுறுபான்மையிற்பார்க்குமோர்க்கெழு
நரலையினிருந்ததுநாகபட்டினம். (113)

அற்றைநண்பகல்கெடவந்திவான்வரக்
கற்றையங்கதிர்மலைகரப்பவெய்யவ
னொற்றையந்திகிரிமற்றுருட்டியோடினன்
மற்றையங்கூண்டினைவட்கினானென. (114)

தூண்டினன்விழுதலுந்துண்டுசெய்தெனக்
காண்டதீபத்திரள்காலவேற்றினார்

மாண்டகுபகல்பிறவந்ததொப்பவக்
கூண்டினும்பல்சுடர்கொளுந்தவாற்றினர். (115)

ஏற்புறவியற்றுவவியற்றிமற்றதன்
பாற்பெறுகாமரம்பற்றிக்காய்ப்புடைத்
தோற்புறமயிர்கெழுசுவலர்துன்னுபு
நாற்புறநிரையொடுநடப்பத்தூக்கினர். (116)

தூரியந்தண்ணுமைதுன்னுதொன்முழா
சேரியஞ்சல்லரிதிரிகைமொந்தமா
வாரியந்தருபுழைவயிர்மற்றேனவும்
காரியங்கடலினுங்கனைப்பவார்த்தவே. (117)

களக்கொழிமதியெனக்கனலிகொல்லென
விளக்கினம்வத்திவாய்விரிந்துபால்வர
வளக்கரும்பாவனையமைந்தகூண்டினைத்
துளக்குறநகருலாச்சுற்றினாரரோ. (118)

சுற்றினரெண்ணிலர்சூழ்ந்துமாமனப்
பற்றினர்திரளுடன்பரந்துமன்னிய
வெற்றியர்கபுறிடம்விருப்பினேக்குபு
மற்றிருங்கூண்டொடுவருகைமேயினர். (119)

மாக்கடம்பரப்பின்மேன்மன்னமன்னினர்
தூக்கியபல்சுடர்துளங்குகூண்டது
பூக்கருங்கடன்மிசைப்பொலியக்காணிய
மேக்கெழுந்தகல்பொலம்வெற்பையன்னதே. (120)

வேறு.

இன்னவாவிஃதிருக்கமற்றெம்பிரானிவண்மா
மன்னவைகுநாட்டமினொருநாள்வயின்வளருஞ்
சொன்னநாகபட்டினத்துறையோராறுதொழிலோன்
றன்னருங்குறைதீரவந்திறைஞ்சினன்றாட்கள். (121)

அனையவந்தணனிறைஞ்சுபுபோற்றலுமண்ணல்
வினையவெம்பிணியிரந்தனரகற்றினர்விருப்பின்

கொனையவன்றுதொட்டடைதொறுஞ்சந்தனக்குழம்பு
தனையரைத்துவந்தடிக்கடியிறைவர்க்குத்தருவன். (122)

கொடுத்துவந்தனனம்பிரான்மறைந்தபின்குரிசி
லடுத்துவந்திறைஞ்சினனறுங்குழம்பினையதுபோ
லெடுத்துவந்தனனளித்துவந்தனன்வருமென்றுந்
தொடுத்துவன்றனையழைத்தனர்செய்குயூசபுவே. (123)

என்றுநீதருதலினினிப்புனிதமுற்றிலக
நன்றுதேய்த்துயர்நறுங்குழைகொணர்கெனநவின்றார்
சென்றுமற்றவனரைத்தனனென்பதாந்தினத்தி
னன்றுநண்பகறூய்தொடுகொணர்ந்தனனளித்தான். (124)

வாங்கிநம்பிரான்வைத்தகல்கதிர்கெடுமாலை
தூங்கிரும்புகழ்நாயகர்பள்ளியைத்துளங்க
வோங்கிருஞ்சுடரெண்ணிலவேற்றினருவப்பிற்
பூங்குமஞ்சமுமகிலொடுசந்தமும்புகைத்தார். (125)

நான்றதோரணப்பந்தர்வாய்க்கெழுமணநறையி
னூன்றமுப்பொருள்புகைமணமொடுசுடரளைந்து
தோன்றநின்றெரிவிளக்கினமிவையெலாந்துன்னப்
பான்றவல்லொழிசுவனத்தினிருந்ததுபள்ளி. (126)

இந்தவண்ணநந்நாதர்போமொருபதாமிரவிற்
சொந்தநாயகரருமைசெய்திருந்தனர்துளங்குஞ்
சிந்தைமன்னியநாகபட்டினத்தவர்திரண்டு
வந்தமாந்தருங்கண்கவர்கூண்டொடுவந்தார். (127)

வானமுட்டியவிசைத்தெழுசுடர்ப்பொறிவாய்க்கீழ்த்
தானமட்டறவுமிழ்வகைப்பாணங்கள்சால
வீனமற்றிழிதகையினர்வழிகொளுமியற்றும்
மானமுற்றுயர்கூண்டினைவயின்கொடுவந்தார். (128)

கொண்டுவந்தவக்கூண்டினைவடிவினைக்குளிர்கண்
கண்டுசெய்குயூசுபுவுமேனையருமுட்களித்துத்
துண்டுசந்தனந்தேய்த்ததண்ணெனுமிகுந்தூய்மை
மண்டுமங்குழைக்குடங்கரையதனடுவைத்தார். (129)

பொங்குசந்தனத்தசும்பொடுகூண்டுநாற்புறமுங்
கங்குகாண்பறமிடைந்துறுபலமனுக்கடலிற்
றங்குசூரியன்கோடியிற்றிரண்டெனத்தயங்க
முங்குமாறுலாயிறக்கினர்பள்ளியின்முன்றில். (130)

நரந்தவக்குடநற்சிரந்தாங்கினர்நம்பி
பரந்தவற்பொடுதனிமையிற்புக்கினர்பள்ளி
யிரந்தநெஞ்சினர்பொற்கதவடைத்தனரிருந்திட்
டரந்தையற்றுறக்கபுறிடம்பூசினரள்ளி. (131)

வீசிநன்மணந்தண்கெழுங்குழம்பிணைமிசையிற்
பூசிநாண்மலரொண்டுகிற்போர்வைகள்போர்த்துத்
தேசிலங்கெழில்வாயிலின்கபாடங்கடிறந்தா
ராசிகந்திதுநிகழ்ந்ததைவைகறையன்று. (132)

கீதவோசைகள்பறவையினோசைகள்கெழுமு
மோதவோசைகள்பல்லியத்தோசைகளொன்றும்
போதவோசையினின்றெனவொடுங்கியபுடைஞர்
வேதவோசையேமுழங்கினவியற்றுமவ்வேளை. (133)

மைகெழும்புயத்தலங்கல்வெற்பருவியின்மாண்ட
செய்குயூசுபுநாதருமறைஞருந்திரண்டு
கைகளேந்தினர்வேண்டுவவிரந்தனர்களுல
நெய்கொளுந்திரிநின்றெரிமுன்றிலினின்று. (134)

முள்ளளைந்ததாளள்ளிதழ்வட்டிலைமுளரி
விள்ளவம்பொழில்விழித்திரைந்தெனப்பலவிதத்த
புள்ளலம்பியகதிரொராயிரங்களும்பொழிந்து
பள்ளமன்னியவாழிவாயெழுந்ததுபருதி. (135)

விடியவூன்குறைநெய்பலியாக்கினர்விரவிக்
கடியயாவர்க்குமளித்தனர்பாத்திகாகத்த
முடியவோதுவமுறையொடுவழுவறமுடித்தார்
கொடியிறக்கினரிகந்தநாளிகந்ததாங்குறியின். (136)

கலந்துமொய்த்தவரவரவர்வயின்வயின்கடந்தார்
குலந்தருந்தகைநாகபட்டினத்தினர்குழுமி

நலந்தருந்தகைசெய்குயூசுபுவெனுநம்பி
பொலந்தளம்பொருதாளிறைஞ்சுற்றுமன்புகல்வார். (137)

எங்களாளியவந்தனிர்கேட்டிர்நம்மிறைவர்
துங்கவான்கழன்மறைந்தினத்திருவிழாத்தோறும்
பொங்குமங்கதிர்க்கொடிவரவிரதமும்பூசு
கொங்கருங்குழைக்குடம்வரவொருதிருக்கூண்டும். (138)

இன்றினன்னவாயியற்றிமற்றென்றும்யாமீது
நன்றிருந்திடுமெம்மிறைபணிக்கெனநவின்றூர்
தென்றுலங்கடிசெய்குயூசுபுவெனுஞ்செம்மல்
வென்றியீரவைசெய்கெனவருளினர்விடையே. (139)

சாந்தநற்குழம்பரைத்தருளந்தணன்றன்னை
வேந்தர்வந்திறைஞ்சிருங்கழுயகர்விளித்துப்
போந்தவிப்படிநீயுநின்மரபினர்பொலிவிற்
சேந்தநற்குழம்பளிக்கெனக்கட்டளைசெய்தார். (140)

அகங்களித்தனனேற்றனனிறைஞ்சினனகன்றூன்
சகம்பழிச்சியநாகபட்டினத்தருஞ்சார்ந்தார்
சுகம்பெறவருள்விடைகொடுதபோதனர்சூழ
விகம்பழித்தமரெம்பிரான்களிகொளவிருந்தார். (141)

சொந்தநாட்சிலகழிந்தனசெய்குயூசுபுவா
நந்தநாயகர்தபோதனர்க்காம்பொருணல்க
வந்தநாள்வரவனைவரும்யாத்திரையகன்றூர்
பந்தமோடுறைவைகினர்தந்தையார்பக்கல். (142)

திருவிழாப் படலம் முடிந்தது.

ஆகச்செய்யுள் 404.

# விவாகப் படலம்.

கனைகுரற்கரியமேகங்கரம்பொருபெருமான்மைந்தர்
புனைகழற்கடலந்தானைப்புரவலராதியாகத்
தனையறப்பொலிந்தசெல்வத்தகையினரொழிந்தவேனோ
ரனைவருமொருங்குபோற்றியகலவாழ்ந்திருந்தாரன்றே. (1)

அருணிதியனையசெல்வத்தாண்டகையரியமைந்தர்
தெருணிதிமணியினன்னசெய்குயூசுபுநந்நாதர்
மருணிதியடிக்கீழாகமாந்தர்கடிரண்டெந்நாளும்
பொருணிதிமணிமற்றெல்லாங்காணிக்கைப்பொழிவினீவார். (2)

கலைபழுத்திருக்குஞ்சிந்தைக்கல்வியரீட்டம்வெய்ய
கொலைபழுத்திருக்கும்வைவேற்கொற்றவரீட்டம்பொன்னின்
மலைபழுத்திருந்தாலன்னமற்புயவீரரீட்ட
நிலைபழுத்திருக்கும்பள்ளிநிறைந்திருந்தகல்வாரென்றும். (3)

கார்செறிமழையினன்னகவுள்செறிகடத்தவேழம்
போர்செறிகொடிஞ்சித்திண்டேர்புனைசுவற்புரவிசேவா
வார்செறிமுரசமார்ப்பவரவொடுசெலவுமாறு
தேர்செறிகடலின்மல்கிபெற்றைக்குமிருக்குமன்றே. (4)

திண்புயமலங்கனூறும்செய்குயூசுபுநங்கோமான்
கண்பொரவீன்றமக்கள்காளையராறுவரோடு
பெண்களுக்கரசினானபெண்மணியிருவராக
எண்மரும்பரிவின்வைகியிருந்தனரருமைதோன்ற. (5)

அன்னவர்பாவாபகுறுத்தீன்ஹமீதுல்லாஷிக்கீன்
கன்னவினறுந்தோள்சுல்தான்கபீர்சுல்தான்ஹக்கானி
தென்னவிர்சுல்தான்நூறுத்தீன்சுல்தான்சகீரியோடு
பன்னருஞ்சுகறுபீபிபாத்திமாபீபியாமே. (6)

இவர்நனிபுடையிற்சூழவிலங்குகற்புருவாய்த்தன்ன
துவரிதழ்க்கருமென்கூந்தற்றோகைதம்மனைவியோடு
தவரடிபரவிப்போதத்தந்தையர்பகர்ந்தாங்கென்றுங்
கவரறக்குவியுமிக்காங்காணிக்கைதுய்த்தல்கொண்டார். (7)

நாங்குடியகலுமாறுநண்ணியிங்கிருந்தோந்தந்தை
தீங்கனிமலர்வாய்விண்டுசெப்பியவண்ணமாகப்
பாங்குறைநகரோரேனோர்பரிந்துவந்திறைஞ்சிமன்ன
நீங்கரும்பொருளினோடுநிதியமுநல்கலுற்றார். (8)

இப்புவியாதிகாக்குமிறையவன்றந்தைக்கண்பிற்
செப்புமவ்வாறேநம்மைச்செய்துமற்றாள்கின்றானை
லெப்படியேனுநம்பாலிடுக்கணொன்றடையாதென்று
மைப்புகழ்காத்துவள்ளன்மகிழ்ந்தனரிருந்தாரன்றே. (9)

மக்கண்மற்றீரேழெண்ணில்வளர்கலைபயிலச்சுற்றுந்
திக்குளர்நிதியோடுற்றுத்திருவடிபரவிப்போத
வெக்கரஞ்சேரிவாணரிராப்பகறொண்டினிற்பக்
புக்கமர்ந்தரியகோமான்பொருவறவிருந்தாரன்றே. (10)

வைகறைப்பொழுதுமற்றமாலையம்பொழுதுமொன்றிச்
செய்தருந்தொழும்பிற்றந்தைசேவடிக்கொழுகிநின்று
மெய்கொளும்பெரியவல்லோன்வணக்கத்தின்விளங்கிமாறா
மைகெழுந்தடங்கைக்கோமான்வாழ்ந்தினிதிருக்குநாளில். (11)

பனைபயில்கடல்சேர்நாகபட்டினந்தழைப்பவாழுந்
தனையகன்முசலிமீன்கடமிற்றலைசிறந்தசெல்வத்
திணைவறுமொருவரான்றவிராயகுஞ்சாலியென்பா
ரனையவர்தம்மூர்நீத்திங்கடைந்தனரொருநாண்மன்னோ. (12)

வந்தவத்தகையார்நங்கண்மகிபதிபள்ளிமுன்றில்
பந்தமுற்றடைந்தன்போடுபணிந்தெழுந்திரத்தலோதிச்
சிந்தையிற்றெளிந்தகல்விசெய்குயூசுபுவைநண்ணிச்
சந்தனத்தடந்தோள்விம்மத்தாடொழுதறைவரன்றே. (13)

விழுப்புகழ்மலியுநுந்தைமேயநாளறிவற்றென்வாய்க்
கொழுப்புடனொருசொன்னிந்தைகூறினேன்கெட்டேன்வாயிற்
புழுப்பயில்பிளவையொன்றுபுண்படவுடலநொந்திட்
டிழுப்புறக்கிடந்துநைந்திட்டிரந்தனன்பொறுக்கவென்றே. (14)

பொறையுநற்படாமெய்பூப்பப்போர்த்தநம்பெருமானென்றன்
கறைமொழிபொறுத்துப்புண்ணோங்கடும்பிணியறுத்தாரன்றோ

குறைவறத்தமியேற்கென் றுங்காவல்செய்கோமான்வைகு
மறையினைச்சுடுமண் கட்டி மண்டபமமைத்தல்வேண்டும். (15)

இதுவெனதகத்தின்வேட்கையிருந்தன் றுபன்னாளாக
முதுமறைவல்லீர்கட்டி முடிப்பல்யான் பணித்திரென்னப்
பதுமவொண்மலர்த்தாண்முத்திப்பணிந்தனர்கேட்டாரண்ணல்
விதுமுகமலர்ந்து நுந்தம்விருப்பெனவியற்றுகென்றார். (16)

மணிமருளுவர்நீரோதவாரியங்கரைவாய்க்கண்டல்
பிணியவிழ்பிசைவண்டூதப்பிறங்கெழிற்சேரிவாழும்
பணிபெறுபரதர்யாத்தபள்ளியம்பலகைசில்ல
வணிபிரிநிலையிளைகவன்னரேபின்னர்கூண்டு. (17)

கொட்புறுமுடலினச்சுக்குன்றனைகிடந்தமுத்த
கட்செவிபாயதுயவொள்ளொளிகாலுந்தேனார்
புட்பயின்முளரியந்தாட்புரவலர்பேரர்க்கன்பின்
மட்சுவர்நான்குபாலுமுயர்த்தினரெழுப்பிவைத்தார். (18)

இன்னதிவ்வண்ணமாகவிரும்புகழ்பெறுகுஞ்சாலி
மன்னவர்சுடுமண்கட்டி மண்டபமுயர்த்துமாறு
தென்னமண்வினைஞன்சுள்ளைசெய்தசெங்கற்கள்வெற்பி
னன்னிறக்கற்கண்மற்றுமருமையிற்றொகுத்திட்டாரால். (19)

தூயினவெண்மைகாலுஞ்சுண்ணநீற்றின்னமாக
யாவனவனைத்துஞ்சேர்த்திட்டருந்திறற்சிறப்பரேவிப்
பூவணவணக்கப்பொற்றாட்புரவலர்பள்ளிசூழத்
தாவணமுலவிற்குந்தனிமதிளெழுப்பினாரால். (20)

உவரியம்பரதர்யாத்தவுயர்சுவரகட்டிற்கொள்ள
விவர்கருங்கற்கடம்மாலடித்தளமியற்றிமற்றச்
சுவர்மதினான்குபாலுஞ்சுடுமண்வைத்தடுக்கிமன்னத்
தவரழித்தருளும்பள்ளித்தனிமதில்கட்டினாரால். (21)

கற்பெறமூன்றுபாலுங்கனச்சுவரெழுப்பியற்றா
முற்புறமிருபாலாக்கிமுடித்துமேற்பாலின்மன்னும்
வெற்புறழ்குவிந்தவண்ணமண்டபம்விளங்கக்கட்டிப்
பொற்பமர்பசும்பொன்செய்தகபாடமும்பொலிவினிட்டார். (22)

நடுவணிப்பள்ளியாகநான்குபாலினுமொன்றென்னப்
படுபுகழ்க்குவவுக்கொண்டமண்டபம்பணிக்காக்கட்டி
வடுவறநடுவண்யாத்தமண்டபச்சிகரங்கால
விடுகதிர்க்கலசம்பொன்னில்விளங்குறச்செய்துவைத்தார். (23)

நான்குபாலுயர்வின்மேயநனிகொண்மண்டபமுநாப்பண்
வான்கொளுஞ்சதுராகாரமதிளுமேல்வண்மைகாலும்
பான்மைமண்டபமுமுச்சிபகல்செய்தூபிகையுமாகத்
தோன்றுநந்நாதர்பள்ளிதுறக்கமொத்திருந்ததன்றே. (24)

குங்குமத்தடந்தோள்குத்புசாகுல்கமீதுகோமான்
றங்குறமுன்னஞ்செய்ததனிச்சிறுமனையுநன்மை
பொங்குமம்முதுபக்கென்னும்புராதனமனையுமின்ன
கொங்கவிழ்பள்ளிமூன்றுங்கொண்டதித்தலமக்காலம். (25)

முத்தியித்தலத்தினன்றிம்மூன்றுகட்டிடமுங்கீழ்பாற்
பத்தியிற்கானன்மல்கும்பரதவர்சேரியாகப்
புத்திரவளத்தினோங்குங்காணிக்கைப்பொருண்மிக்கார
வெத்திசையவரும்போற்றவிருந்தனரெங்கள்கோமான். (26)

கொன்னுறுசுறவுவாழுங்குரைகடற்சேரிமேல்பான்
மன்னுறுமாடகூடமலிதிருமேலைநாகூர்
பன்னருஞ்செல்வமிக்கபகாவுத்தீன்சஹார்வர்தியா
மென்னுமொருயர்ந்தோர்வாழ்வுற்றிருந்தனர்வண்மையோங்க. (27)

அண்ணலங்களிநல்யானையன்னவரரிதினீன்ற
திண்ணமர்தடந்தோண்மைந்தரிருவருந்திவவினல்யாழ்ப்
பண்ணமர்தீஞ்சொலப்பொற்பாவையராறுவருந்தண்
வண்ணவொண்கமலமாதர்வணங்கியமக்களூற்றார். (28)

அற்பகமாரியங்கையப்துல்காதிறுநங்கோமான்
பொற்பகமேலைநாகூர்புக்குழியவ்வூர்மாந்தர்
கற்பகமிம்மியின்றிக்கழிந்தனரிழிந்தார்கண்டு
வற்பகலினியகூறமறுத்தனரிகழ்வினன்றே. (29)

ஒலிகடலுலகங்காக்குமொருவரைநிந்தைகாட்டி
வலிகடந்துரைத்தவாற்றுன்வளிசுழல்பிதிர்ங்கலத்தி

னலிவினர்பிணிவாய்ப்பட்டுநலனிழந்துழன்றாரன்றே
மலிபுகழ்பகாவுத்தீனம்மன்னவரறிவிற்றேர்ந்து. (30)

நம்பெருந்தகையார்முன்னநண்ணிமற்றையகேண்மி
னம்புயலொழிமேல்வையமழிமஃதாங்குநுந்தஞ்
செம்பதப்புயல்கள்சிந்துந்திருவருண்மாரியின்றே
லெம்பொருவாருக்கொன்றுமின்றுகாணயத்ததென்ப. (31)

ஆகையிற்றமியேனுள்ளமரும்பொருளீட்டியற்பி
னீகையிலவரினுக்கத்தினைவுறுமகிழ்கொண்டார
வோகையினருடரென்னத்தாழ்ந்தனருரைத்தார்கேட்டு
வாகையின்புகழ்சேர்வள்ளல்வருமவர்நோக்கிச்சொல்வார். (32)

அஞ்சலிர்நீவிர்நுந்தமருமனைமக்கள்சுற்ற
மெஞ்சலில்வாழ்க்கைமல்கவிருக்குதிரிறையாமேலோன்
றஞ்சமுண்டுமக்கும்போதிரென்றுமன்சாற்றினாராற்
செஞ்சரணவழுத்தியன்னோர்சென்றனர்மேலைநாகூர். (33)

மலைபொருகலங்கண்மல்கும்வான்பொருட்கொடுபோய்மீள
நிலைபெறுபண்டசாலைநிதிக்குவைபொலியமக்கள்
கலைபயிறெளிவினோங்கக்கல்வியிற்றலைமைவாய்ந்து
தொலைவறுபுகழும்மேலோர்சுகத்தொடுவாழ்ந்திருந்தார். (34)

இணையவாவன்னோர்வாழ்ந்தாங்கிருந்தனரீங்குவென்றி
புனைகழன்மன்னர்போற்றும்புரவலர்செய்குயூசு
பினைவறுமேலாம்வாழ்வின்மக்களொரெண்மரோடு
தனைநிகரிகந்தோன்காவறழீக்கொளவாழ்ந்திருந்தார். (35)

நகுகதிர்வதனமக்களுளிரண்டவருமின்பந்
தொகுபுகழ்குறுஆனோதித்தொடர்வழிமுறையினானை
தகுபிகுஹுகாயிதோடுதசவ்வுபுமூன்றுமான்ற
நகுவுடன்சறுபுமற்றுநலனுறப்பயின்றுதேர்ந்தார். (36)

கலையவெத்தனையோநூற்களத்தனைகற்றுத்தேறி
நிலையவம்பருவமெய்திநிரம்பினர்தந்தையுள்ளந்
தொலைவறுமின்பாநந்தவாரியிற்றுளும்பப்பின்னர்
மலைபொருபுயத்தினோர்க்குமணவினைகருதினால். (37)

பல்வழியறிவிற்சூழ்ந் துபலன்படுமேலைநாகூர்ச்
செல்வழியமைபகாவுத்தீனவரழைத்திருத்தி
வில்வழிகலைகள்காலும்விதுபொருவதனைநோக்கிச்
சொல்வழிதொடர்புகொள்ளுந் துணிபுறச்சொல்கின்றாரால். (38)

மறுவறுத்தகன்றகல்விமன்னுமென்மைந்தரான
வறுவருக்குமதுபெண்களறுவரைத்தருதிராயி
னிறுகெழிலுமதுமைந்தரிருவருக்கிருவரான
பெறுமெனங்கண்ணினன்னபெண்களைத்தருவலென்றார். (39)

மின்றிரண்டனையபெண்கள்விளக்கிரண்டும்பாலீவ
லென்றிரண்டற்றதாகவியம்பலுஞ்செவிவாய்க்கொண்டு
பொன்றிரண்டமைந்தசெல்வர்பகாவுத்தீன்பூரிப்புற்றார்
குன்றிரண்டெழுந்ததொத்தகுங்குமக்குவவுத்தோட்கள். (40)

மூரியங்களிறுதாழ்த்துமொய்ம்பினர்பகாவுத்தீன்மன்
வேரியந்தடந்தோள்செய்குயூசுபைவிழைவினோக்கி
மாரியங்கொடையீர்நுந்தமைந்தர்கண்மணப்பவென்றன்
றாரியங்களகப்பெண்கடருதலொர்பொருட்டன்றாமால். (41)

நிலவுமிழ்மதியம்போழத்திருவிரணிமிர்த்தகோமா
னலவுறுபெயரரென்றுநன்குவந்தவர்நீன்ற
பலவுவமானந்தீர்பொற்பாவையர்மணப்பவேண்டிக்
குலவுமென்மைந்தரென்னைநோற்றனர்கொல்லோவைய. (42)

தேவரீர்மொழிக்கோள்வண்மைச்செம்பொனூர்கொண்டற்றாமா
றாவறுமுதனைப்பற்றித்தாழ்ந்தனனுவந்தேனென்றா
ராவயின்மணத்திறவவனைத்துறத்தீர்த்துநன்னா
ளோவறவொன்றுநாடியுதுவெனக்குறித்திட்டார்கள். (43)

மறைவழிமணத்திற்கானமகிழ்வழிவகையவெல்லா
முறைவழிமுடித்தபின்னர்முப்தியாம்பகாவுத்தீன்மன்
னுறைவழிமீள்வானாகவுத்தரம்பெற்றுச்செல்வக்
குறைவழிதம்மூர்புக்குத்தமர்க்கிதுகூறினாரால். (44)

சீரகம்பொதிந்தசீற்றந்தெறுதலின்மாரிபொய்ப்பப்
பாரகம்பொதிந்துலைந்தபயிரெனப்பரந்துலைந்த

ஊரகம்பொதிந்தமாந்தருவப்புறத்தமர்கேட்டின்ன
நேரகம்பொதிந்தசொல்லிற்செழித்தனர்மாரியாக. (45)

இன்னநாண்மணத்ததென்னவினையந்தனங்களிறனீர்நீர்
மின்னாரொருங்குகூண்டுவிவாகத்திற்கியன்றதாகச்
சொன்னநாள்வரையுமிவ்வூர்முழுவதுஞ்சோடித்தீரா
லென்னநாண்மறையினொண்பூவானமிலங்கச்சொன்னார். (46)

கருங்கடலனையசெல்வங்கலந்துறைமுன்றில்வாழ்க்கைப்
பெருங்கனமன்னவீகைபகாவுத்தீன்பெருமான்கூற்றி
னருங்கலமலியுமூதூரவர்புலிக்குழுவினீண்டி
மருங்கமர்தெருக்கண்மாடமண்ணுறத்தொடங்கினாரால். (47)

நாற்றிசையவரும்போற்றுநம்பிமாரெண்மருக்கும்
யோற்றிசையெண்மாரானபொற்கொடியன்னாருக்கும்
மாற்றரும்விவாகமின்னநாள்வயின்மக்காளென்ன
வேற்றுரிமுரசம்வாய்விட்டெழுந்துநின்றிரைந்ததன்றே. (48)

வேறு.

முகிறருமுருமுறழ்முரசுகல்லெனப்
பகறருபூணினர்பகடுமேற்றூந
ரகறெருவயின்றொறுமமைந்துமன்னிய
நகர்தொறுமுறுந்துகணன்குபோக்கினார். (49)

கோடுசூடுற்றவெண்ணாறுகொண்டனர்
ரோடுமேகத்திரளுரிஞ்சமன்னிய
நீடுமாடச்சுவர்நிலவுகான்றென
வாடுமாறின்றெழின்மலியப்பூசினார். (50)

வெயிறருவெண்சுதைமெழுகிப்பச்செனப்
பயிறழைச்சித்திரம்படுத்தபன்மனை
வயிரவொண்வரைமிசைமரகதத்திரளுஞ்
செயிரறுசெடிகொடிசெறிந்தநீரவே. (51)

குன்றுகண்விழித்தெனக்குலவிவந்துலாந்
தென்றலஞ்சாளரஞ்செறிந்தமேனிலை

பொன்றிகழ்சட்.டவாய்ப்பொலிந்தெதிர்த்ததை
யொன்றிரண்டெனுற்றுவதொளிரத்தோற்றுமே. (52)

கற்பயின்மாளிகையுச்சிகால்கொளப்
பற்பலவொண்ணிறப்பதாகைதூக்கினர்
பொற்பமர்வெண்முகில்போர்த்துமன்னிய
வெற்பெழுமிந்திரவில்லினைப்பவே. (53)

கந்தடுகளிறனார்கலந்துகூடிபு
சந்தனங்காழகிறறித்துநட்டினர்
பந்தனம்புரிந்தனர்பந்தர்மண்ணுற
முந்தெழின்மணிமதின்முன்றிற்றோறுமே. (54)

சில்சுளைமுழவுறழ்திம்பலாப்பழங்
கொல்கிளைதூங்குறுகுலையமாங்கனி
மல்குபூங்கதலியின்மன்னுதேங்குலை
பல்பலகாற்றினர்பந்தர்தோறுமே. (55)

பல்லிதழ்த்தாமரைபரந்தவட்டிலை
யல்லிநற்குமுதமற்றலர்கள்யாவையும்
புல்லினர்கொளத்தொடைபுனைந்துநாற்றினர்
வில்லினெடியர்மணம்விரிந்துவீசவே. (56)

ஒண்ணிதிமலியுநருவந்துசூழ்வரு
மெண்ணிலவர்களினினியதேனசைஇப்
பண்ணமைகெழுமணப்பந்தர்தோறினும்
வண்ணவொண்சிறைக்கரும்வண்டுமூசுமே. (57)

தாங்ககிலொடுகிரியாசஞ்சந்தனம்
பூங்குழன்மடவியர்புகைக்குமப்புகை
பாங்குயர்மாடமேற்பரவிப்போதர
லோங்குமால்வரைதவழ்முகிலையொக்குமே. (58)

மிக்குறும்புகைமணம்விரிந்தபந்தர்வாய்க்
கக்குறுமலர்மணங்காளைமார்கடோ
டொக்குறுந்தொடைமணந்தோகைமார்குழ
லக்குறுமியன்மணஞ்சாலநாறுமே. (59)

திரைகெழுகளிற்றினஞ்சிவிகைமீனின
நுரைசுவற்பரியினறூங்குமல்கிய
வரைமதிண்மனையிலம்பவளம்வான்கொடி
கரைபொருகடலகங்கவின்றவீதியே. (60)

விளங்குபொன்வரைகளும்வெள்ளிக்குன்றமுங்
களங்கறக்கலந்தரும்வதுவைகண்ணுறத்
துளங்கியல்வரவருந்தோற்றமொக்குயால்
வளங்கெழுமியவுயர்மாடப்பந்தியே. (61)

வலந்தருபந்தர்வாய்ம்மலர்கள்சிந்துசெய்
பொலந்துகட்சுண்ணமும்பொங்குதேறலுஞ்
சிலம்படியலத்தகச்சேறுமொன்றுபு
கலந்தகறெருத்தொறுங்கால்வழுக்குமே. (62)

கற்பகச்செழுங்கரக்காளையெண்மரி
னற்புதக்கடிமணத்தழகுகாண்டுமென்
றற்பவித்தொருநகருலகிலில்லெனப்
பொற்புடனிருந்ததைப்பொருவுமந்நகர். (63)

கொல்சினக்களிறனூர்குழுமியாரையு
நீல்கமவென்றட்டில்வாய்நண்ணிநின்றரும்
பல்வகைபடப்புரிபரவுதிம்பெறு
வல்சியினெழுமணம்வானமுட்டுமே. (64)

நினைதொறுஞ்சுவைநிகழ்நீரவாயவார்
தனையகல்வகையமோதகங்கண்மாமணம்
வனைநிறங்கலந்ததிம்பானவர்க்கமான்
மனைதொறும்வருகுநர்வழங்கிநிற்பரால். (65)

ஊன்குறைபெய்துநெய்யொழுகவுண்குநர்
தீன்குறையவிவகைசெய்துகம்மெனக்
கான்கெழுமறுசுவைக்கறிகளோடுசாய்
மேன்குலத்தவர்பலர்விருந்துநல்குவார். (66)

கடியவீருவர்ப்பசுங்காய்படர்ந்துவீள்
கொடியபச்சிலைசுடுகோட்டுவீற்றுடன்
மிடியகல்விருந்தினர்விரும்பியாங்கெழின்
மடியலினல்குவர்வாயிரோறுமே. (67)

பலநறைத்திரவமும்பளிக்கிணும்பொலங்
கலநிறைகலவையுங்கடிகொண்மாமல
ரிலகெழின்மாலையுஞ்செண்டுமேனவு
நலமுறவயின்வயினல்குவார்களால். (68)

வேறு.

தீம்பாலாவிப்பூந்துகின்மூடத்தெறுகிற்கும்
பாம்பாரல்குற்பாவையினன்னார்பலர்கூடித்
தாம்பாரூசன்மஞ்ஞையின்வைகித்தனியாகத்
தேம்பாவோதைவிம்மியவாடித்திகழ்வாரால். (69)

வீயார்கூந்தல்காழகிறாமம்விரவெய்த
வேயாமாடந்தோறுமிருந்தேவிரிசெய்யுஞ்
சேயாருண்கண்மாமுலையம்பொற்றிருவொப்பார்
மாயாமேகங்கண்டுகளிக்குமயிலொத்தார். (70)

செவ்வாய்முத்தஞ்சிந்தொளியம்பொற்றிலகத்தா
ரொவ்வாமுற்றந்தோறினுநின்றெம்முயர்கொங்கைக்
கிவ்வாவெப்பந்தண்ணிலைசற்றுமிலவானீ
ரெவ்வாறுப்பீரென்றுமணிப்பந்தெறிகிற்பார். (71)

நிலவைக்கக்கும்பொற்பணிபூண்டேநிமிருற்றுக்
கலவைச்செப்பின்விம்மியகொங்கைக்கனிவாயார்
குலவைக்கொப்புமொண்குழைமற்றுங்குலைகிற்கச்
சலவைக்கற்கணுடுவர்பாவைத்தனமொத்தே. (72)

அரவைச்செற்றுங்கோடியுயர்ந்தாரகலல்கு
லிரவைக்கொட்டும்பூண்முலைமாறுநிரைகிற்குங்
குரவைச்சத்தங்காளையருள்ளங்குளிர்கொள்ளப்
பரவைச்சத்தம்போலெனவெங்கும்படுமன்றே. (73)

வண்டுந்தேனும்பாடியவொண்பூமலிகூந்தற்
கண்டுந்தேனும்பாலுமிருக்குங்கனிவாயார்
பண்டுந்தானும்பின்னையுமில்லாப்பண்செய்வார்
தண்டுந்தாதுங்கூடியயாழுஞ்சமனன்றே. (74)

வேறு.

அருணகர்மேலைநாகூரன்றெனத்தெரியுமோரான்
மருணகரென்னவாகமண்ணுறுத்திட்டபின்னர்
தெருணணியுளத்துநம்பியெண்மருந்திருமிக்கெய்தப்
பொருணலமுணர்ந்தோர்கூண்டுமணவணிபுனைதலுற்றார். (75)

பணிபதப்பெருமான்மைந்தராறுவரைபகாவுத்தீனைற்
றுணிபுறப்பெற்றமைந்தரிருவரைத்துளங்குமேனி
யணிநிறப்பொன்னங்குன்றினருண்மழைபொழிந்தாலென்ன
மணிநிறப்புதுநீர்பெய்துமஞ்சனமாட்டினாரால். (76)

இலங்குறப்பட்டவங்காற்கவசமிட்டெழில்கொண்மேனித்
தலங்கரப்பூற்றிற்கெய்தக்கஞ்சுகிதயங்கப்பூட்டிப்
பொலங்குவட்டுச்சிதோற்றிப்பொழிகதிர்மதியம்போல
நலங்கொளப்பெறுவெண்பாகைநற்சிரஞ்சூட்டினாரால். (77)

மற்றுளவணிவவெல்லாம்வனைந்திடைக்கச்சுவீக்கிக்
குற்றுடைவாளுஞ்சேர்த்திக்குங்குமத்தடந்தோடாழப்
பற்றுளத்தினவண்டார்க்கும்பன்மலர்த்தொடையல்வெற்புச்
சுற்றுவீழருவிமானத்துளங்கியசூட்டினாரால். (78)

அடிகளுக்கருமையானவணிவகையனைத்துமன்பின்
முடிமுதலடிகாறுகமுறைமையினணிவித்தின்பக்
கடியொடுமலியுஞ்சோதியநந்தமாங்கதிரிற்கான்று
படியொடுவானுமொன்றாய்ப்பகல்செயவியற்றினாரால். (79)

செய்குயூசுபுநங்கோமான்சேயெனப்பரவிநிற்கு
மொய்கழற்குமரரானமூவிருவருமற்றின்ப
மெய்துறுபுகழின்செம்மலிருவருமிவர்ந்துலாவக்
கொய்சுவற்கலினவெண்மாக்கொணர்ந்தனர்சிறப்பினன்றே. (80)

தந்தையர் முதியோரேனைத் தகையின ரரியசெல்வர்
மைந்தமர் வீரர்யாருமனமுவந்தினிதின்வாழ்த்துக்
கந்தமிகளிற்றினன்னகாளையரெண்மர்தாமு
மிந்தெழில்வதனங்காலவிவர்ந்தனரிலங்கப்பாய்மா. (81)

சீரியதடாரியார்ப்பத்திண்டிமங்கறங்கப்பக்கற்
சாரியற்றுடியிரட்டத்தண்ணுமையியம்பமல்கு
மூரியந்திரிகைவிம்மமுழவமற்றிசைப்பமுன்னந்
தூரியமுதற்றூய்ஞ்ஞின்றுதொனிப்பவாய்திறந்ததன்றே. (82)

ஒண்கழைசந்தம்வண்மையுற்றசெங்காலிமற்ற
வெண்கலமிசையவின்பம்விழைகருங்காலிசெய்து
பண்கெழுவிதியினுகைப்பஃறுளைதுளைக்கப்பட்டு
மண்கொளநீண்டவண்ணவங்கியமிமிரச்சார்ந்து. (83)

இருபஃதொன்றும்பத்தோடொன்பதுமிரண்டாமெட்டு
மருவுமோரேழுமாகவருமிணைகிளைநட்போடு
பொருபகைபிரிவின்யாத்தபுரிநரம்புடையநாற்பேர்
தருவகையாழ்கணின்றுதயங்கமற்றதனைச்சார்ந்து. (84)

செழுமுழவொலிக்குமாமந்திரிகையினொன்றமாக்கள்
வழுவில்காட்டுநிறம்பண்ணுமாளத்திவகைகள்காட்டி
யிழுமெனுந்தாளநான்கினேற்றிறக்கிசையினோர்ப்ப
முழுதுறுகீதங்காயமுட்டியவெழுந்ததன்றே. (85)

பீலிசாந்தாற்றியாலவட்டமேர்பிறங்குகுச்ச
நாலியல்கவரிமற்றுநாற்புறமிடையவொண்பூக்
கோலியவோரெண்ணும்வெண்குடைமணிக்காலினிற்பப்
பாலிருங்கொடிகளோங்கிப்பறந்தனகாட்டினேத்த. (86)

கறையடிச்சிறுகண்ணுல்வாய்க்கரும்பனைக்கையின்வேழ
மறைகழற்கலினவாசியம்பொலஞ்சிவிகைவன்மை
நிறையவேசரிவேகத்தினெடுங்கழுத்திவரும்பாண்டில்
பொறையுடைநந்தமெங்குநெருங்கினபுடையினன்றே. (87)

நெய்யுரக்கான்றுமேற்போய்நின்றெரிவத்திகாண்மா
ரையுறப்பகலின்வெய்யோனுயிரம்பிறந்தாலென்னக்
கையுறப்பட்டோர்மன்றவிருபுறங்களுன்றுநிற்ப
மையுறழ்சாத்தர்வாசிமகிழ்கொளநடத்தல்செய்தார். (88)

பகன்மருள்வத்திபெங்கும்படரொளியுமிழவெற்பி
னிகன்மருள்புயத்தின்வீரரெண்ணிலர்திரண்டுமொய்ப்ப
வகன்மருண்மணிநீரோதையடங்கியவியங்களார்ப்பப்
புகன்மருண்மாக்களோடுநம்பிமார்பவனிபோந்த. (89)

குன்றிரண்டிணைந்தாலென்னவிம்மியகுவவுக்கொங்கைப்
பொன்றிரண்டனையமேனிப்பொலந்தொடிக்கருமென்கூந்தன்
மின்றவழ்மருங்குலுண்கண்விளங்கிழைப்பரவையல்குற்
றென்றிகழ்காந்தட்செங்கைமயிலனார்திரண்டுமொய்த்தார். (90)

ஆனநெய்தெளித்துக்கூந்தலைந்துபாலாக்கியைந்தாங்
கானகத்திமிர்ந்துவீசக்கதிர்விடுமணிகள்பூண்டு
மானமர்கருங்கணோக்கமாய்ந்திடாதெழுந்தகல்லார்
வானமர்ந்திறங்கிவந்தவானவர்மகளிரொத்தார். (91)

நம்பிமார்பவனிபோதைநருங்குழைச்செவியினண்ணத்
தும்பிவண்டிமிருங்கூந்தற்றுணைமுலைப்பாவையன்னார்
பம்பிநன்முன்றிற்சேறும்விளங்குறுபான்மைமிக்காம்
வம்பிமிழ்பொன்னங்குன்றமயிலினமுமிழ்ந்ததொத்த. (92)

பேதையேமுதலவின்பம்பிறங்குபேரிளம்பெண்ணீறுங்
கோதையேழ்பருவத்தோருங்குழுமினார்முன்றிற்சேறு
மோதையெண்டிசையும்போதவொளிதிகழ்நம்பிமார்தம்
பாதைபோம்பவனிகண்டுபெற்பலவிடம்பலுற்றார். (93)

தன்னைமெய்யறியாராகித்தானையைப்பிடித்துநிற்கு
மன்னைமார்வதனநோக்கிப்பழகுடைப்பவனிமேய
மின்னையுமழுக்குமொன்வாள்வேந்தரெண்மரையுஞ்சுட்டி
யென்னையேனிவ்வாறுகவியுற்றிவிர்நீயிரென்பார். (94)

அங்கையார்முகுரம்வீசியமிழ்கலங்காத்தகோமான்
சங்கையானுவந்தமைந்தர்தம்மகார்மருவுமோரும்
தங்கைமாரிருவரும்மாய்த்தகையினரிறைஞ்சுகிற்கு
நங்கைமாரெண்மராங்குநானிலத்தில்லையென்பார். (95)

எம்பிரானிருவர்தந்தமெழில்பெறுபுதல்வராகித்
தும்பியாழிசையினூர்க்குந்துணைட்புயங்குன்றின்விம்மப்
பம்பியாவருமன்வாழ்த்தப்பவனிபோஞ்சிறப்பினின்ன
நம்பிமாரெண்மராங்குநானிலத்தில்லையென்பார். (96)

நனவினுங்கண்டுநெய்தனகுவிழிகுளிர்ந்தநாளை
நினைவினுமொழியகில்லீர்நீயிராலொன்றுகேண்மின்
மனவினுமழகிதாயமணிமிடற்றணங்கனூர்க்குக்
கனவினும்வருதிர்காண்பான்குரிசில்காள்கவினவென்பார். (97)

கனங்கவர்கருமென்கூந்தற்களபவொண்முலையன்மத்தோட்
சினங்கவரரவினல்குற்சேயிழைமடவார்கண்ணு
மனங்கவருற்றீரின்றுநம்பிமீர்வலித்தாம்பெண்மைத்
தனங்கவரற்பீரொன்றுபேணுதிர்தருமமென்பார். (98)

விட்டழுகெறிப்பச்செல்லும்வேந்திர்காணுணத்தோடு
கட்டழுகுக்குங்காந்தட்கரவளைபறித்திர்மேலும்
பட்டழருடுக்கைகொண்டாற்பார்க்குநர்நகுபவானீர்
மட்டழகன்றநுந்தம்வாம்பரிநடத்துகென்பார். (99)

வண்ணவொண்புள்ளிபோர்த்துவரிபடர்கரியதும்பி
சுண்ணமுமதுவும்பூசித்துதைந்துபொன்வண்டினைத்துப்
பண்ணலம்பலங்கற்றேளின்படாமுகக்களிற்றினின்ன
வண்ணலரிதினீன்றோரரியருளரியரென்பார். (100)

இணையறுகற்புவாய்ந்திட்டெழினலம்பூத்துக்கான்ற
பணைமுலைத்தடங்கனல்லார்பலர்தொழப்பவனிபோந்தார்
பிணையலம்புயங்கட்புல்லப்பெருந்தவநோற்றமாதர்
கணைபொருவிழியினூரிற்கனம்பெறச்சிறந்தாரென்பார். (101)

வாளைவென்றொளிருங்கூர்ங்கண் மடவியர்மம்மரெய்துங்
காளையரினிதிற்செய்யுங்கடிமணப்பவனிகாணப்
பாளைமென்கமுகின்கண்டப்பாவைமீர்நமவுண்கண்க
டாளைநம்முன்னோர்நோற்றதவத்தினானெய்திற்றென்பார். (102)

மீனினந்திரியவாழ்ந்தவிரிகடல்வேலிகொண்ட
நானிலப்பரப்பினுந்தநனிமரபுயர்கவென்றி
தானிகப்பின்றியாகதனித்திருவளர்கசீர்த்தி
வானிமிர்புயர்கநீயிர்வாழியபெரிதுமென்பார். (103)

மருங்கொடிவுறுமாலென்றுமணிச்சிலம்பாற்றுகிற்கும்
பெருங்குடிமாணூர்ப்புல்லிப்புத்திரர்பல்காற்பெற்று
வருங்குடிதாங்கிநாளும்வைகுறுதலைமையெய்தி
யிருங்குடியாகிவாழ்கவிருவழிதழைக்கவென்பார். (104)

பற்பலவிவ்வாறாகவவரவர்பருவக்கேற்பச்
சொற்பயின்றுறுவாரன்றுசுண்ணமுமலரும்வாரிக்
கற்பகமனையசெங்கைக்காளையர்தோட்கண்மூழ்கப்
பொற்பிதிர்சுணங்கேர்க்கொங்கைப்பூவையரிறைத்துநிற்பார். (105)

பொலந்தருகொடையின்வீரர்பொலிமனையகன்றவீதி
வலந்தருமாரவாரமலிதலினுவகையார்ப்பி
னிலந்தருபேறுமென்னுநிறைசரக்கிவருஞ்செல்வைக்
கலந்தருதிருவின்மூதூர்கனைகருங்கடலையொத்த. (106)

பளிக்குமண்டபத்துமாடப்பவனிபோம்வீதிமுற்று
மொளிக்குலம்விம்பித்தெங்குமொன்றெனத்தெரியுமாற்று
னளிக்குழன்மாதரோடாடவர்களுமகந்தரெய்திக்
களிக்குறும்வெயின்கட்டோறுங்கலந்துநின்றதுங்குகிற்பார். (107)

வெண்ணிலாமழுக்குங்கோடிவிரிசுடர்கொளுந்திக்கால
வெண்ணிலாவகையினூற்றவுத்தமவியங்களார்ப்ப
மண்ணிலாவழகிதென்றுமானவர்களிப்பாங்கெய்த
வண்ணிலாப்பவனிசுற்றிமணமனைவாயில்புக்க. (108)

மலர்பொருவிழியினல்லார்மங்கலவாழ்த்திஞேடு
மலர்நறைச்சாந்தம்பூநீராசனஞ்சுழற்றிவீச
விலர்பொருவென்னுமூத்தோரிறையிரந்தாசிகூறப்
பலர்புகழ்நம்பியெண்மர்பரிகள்விட்டிறங்கிஞரால். (109)

கட்டழகெறிக்குமொண்டோட்காளையர்தம்மையற்பின்
பட்டருங்கதிர்கள்வீசும்பாவாடைநடத்தல்செய்து
விட்டபன்மணிகளானும்வெயில்விரிபவளக்காலின்
சட்டகங்கவின்றசெம்பொற்றவிசுழியிருக்கைசெய்தார். (110)

தேன்சொரியலங்கற்பொற்ருேட்செம்மலர்வீற்றிருப்பக்
கான்சொரிகுழலிஞரைக்கடியலங்காரஞ்செய்வான்
வான்செறிகருமென்கூந்தல்வகிர்புநன்னறுநீர்பெய்து
மீன்செறிநெடுங்கட்பைம்பூண்மின்னஞராட்டிஞரால். (111)

விரைபொலியைந்திஞனும்விழைதுவர்பத்திஞனும்
வரைவிஞன்கெட்டாமேவோமாலிகையானுங்கான்று
நிரைகமழ்கொன்றைதோற்குநெடுங்குழனெய்யின்வார்ந்து
புரையறுபுகையுலர்த்திப்பொருந்துமான்மதச்சேறாட்டி. (112)

அணிகிளர்சீறடிக்கணலத்தகஞ்சேப்பச்சூட்டி
மணிகிளர்விரல்கண்மின்னவகையணியணிந்துமன்னும்
பணிகிளர்கால்களேற்பப்பரியகமுதலப்பூட்டித்
துணிகிளர்மருங்கிஞெண்பூந்துகிலெழில்கொளவசைத்தி. (113)

அரிமயிர்முன்கையாழினவிரொளித்தொடிகள்சேர்த்தி
விரிமலர்க்காந்தளுனும்விளங்குமென்விரல்கடம்மிற்
றெரிமணியழுந்திமங்குறெறுகதிராழிபல்ல
கரிமலர்த்தடங்கணல்லார்கவின்பெறச்செறித்திட்டாரால். (114)

சங்கிலித்தொடரம்பூண்ஞாண்டவளங்கைபுனைகொளார
மங்கழுத்தணிந்துமாசிறாமணியழுத்தன்மேய
செங்கயிற்புணர்பின்றாலிசிறுபுறமறையவிட்டுக்
கங்கறக்கவின்கொள்காதிற்கடிப்பிணையாதிசேர்த்தி. (115)

தெய்வவுத்தியினோடொன்றுவலம்புரிக்கடையுஞ்சேர்ந்த
தொய்யகங்கதிர்செய்கிற்கும்புல்லகந்தொடர்ந்தொன்றான
செய்யநன்மணிகள்சூழ்ந்ததிருத்தலைக்கோலந்தன்னை
மையுறழ்கருமென்கூந்தல்வளம்பெறவினிதிற்சூட்டி. (116)

மாணவிச்சிறப்பினாகமணிகுயின்றிரவிநாணும்
பூணகச்செறித்துமற்றும்புனைதொழின்முடியுமாறு
காணருந்தன்மைத்தென்னக்கடியலங்காரஞ்செய்தார்
நாணடச்சாய்ந்துநிற்குமெருத்துடைநங்கைமாரை. (117)

மாய்ந்தகொர்விடையைமீட்டுமாதவர்மைந்தரீன்ற
தேய்ந்தநுண்மருங்குல்காணாத்தேமொழியிருவரோடு
காய்ந்தவேற்கையர்முப்திபகாவுத்தீன்களிப்பிற்பெற்ற
வாய்ந்தகற்பணங்குதோற்குமயிலனாரறுவராக. (118)

எண்மணிவிளக்கமொத்தவிலங்கிழைக்கனிமென்றீஞ்சொற்
பெண்மணிதம்மைமானார்பெரிதலங்கரித்தபின்றை
யொண்மணிகுயிற்றுமாடத்தூரவருவகைபொங்க
விண்மணியனையகீர்த்திமேலவர்திரண்டுவைக. (119)

இருமுதுகுரவர்தாமுமிலங்குமோர்மனத்தராகி
யருமறைவிதித்தவாமற்றறுவரோடருமைசான்ற
விருவருமெனுமிரண்டாமெண்மருமின்பமெய்தத்
திருமணமுயர்நிக்காகுசெய்தனருவப்பினன்றே. (120)

அருங்கடிமுடித்தாங்கோதியரியவற்பணிவிற்போற்றி
மருங்கிருதந்தைமாரும்வாழ்த்தினர்மகிழ்ந்தார்மன்னுங்
கருங்குழற்பணைத்தகொங்கைக்கடியகலல்குன்மாதர்
பெருங்குரற்குரவையோடுமுரசமும்பிளிறிற்றன்றே. (121)

சந்தமொண்மலர்தாம்பூலந்தகைநறுந்திரவமின்பக்
கந்தமென்னுண்டிமற்றுங்கலந்துளோர்க்களித்தாங்கன்று
வெந்தவூன்விரவியாய்ந்தவெள்ளரியடிசிலட்டு
வந்தவர்விருப்பினுண்ணும்வகையொலிமாவுமீந்தார். (122)

திருந்திழைப்பிடியினன்ன திருமணப்பெண்கடம்மைக்
கருந்தடங்களிற்றினன்னகாவலர்மருவுமைந்திற்
பொருந்தணைப்பள்ளிதோறும்பொருமுகவெழினிவீழ்த்தா
ரிருந்தடமலைமாறில்லாவெழினலமெய்திற்றன்றே. (123)

வாங்கருநுசுப்பினாருமாதவத்தவருங்கண்டுந்
தீங்கனிச்சுவையுமென்னச்செல்வமுமகவும்பல்க
நீங்கருவாழ்வினாளுநிறைகெனவுலகம்வாழ்த்த
வோங்கரும்புகழுலாவவுற்றனர்மகிழ்வினன்றே. (124)

விவாகப் படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 528.

## செய்குயூசுபுநாயகருபாத்துப்படலம்.

மனைவியும்மருமக்களுமக்களுமருவிக்
கனைவுறத்தழீஇயருமைசெய்திருந்தனர்களிப்ப
வினைவறும்பிடியுங்கயமுனிகளுமினமுஞ்
சுனைவறச்செறிகளிற்றினஞ்செய்குயூசுபுவே. (1)

சிறந்தமக்களிற்பவுத்திரர்பிரபவுத்திரர்கள்
பிறந்தகல்குடும்பத்தினராதலும்பெருமா
னறந்தழைத்திடுமிலம்பலவியற்றினரமர்ந்தார்
துறந்தவர்க்கிறையமர்திருப்பள்ளியைச்சூழ. (2)

நலங்கொணந்நபிபவுத்திரரொலிகடந்நயினு
நிலங்குறும்பெருந்தலமிஃதாலெனவெண்ணி
யலங்கொளாவுளத்தினர்பலர்நாட்குநாளாகக்
குலங்கெழும்படியெழூஉவிவண்குடிபுகல்கொண்டார். (3)

வடக்கிருக்குநர்தக்கணமிருக்குநர்வளஞ்சால்
குடக்கிருக்குநர்குணக்கிருக்குநர்பலர்குழுமித்
திடர்க்குலங்கெடுத்தடவிகொன்றிருந்தெருத்திருத்தித்
தடக்குலம்பொலிபட்டணமாக்கினர்தரிப்ப. (4)

பக்கநான்கெனுமயலுளார்திரளொடுபடர்ந்து
தொக்கவந்துநற்புதுக்குடியேறுகைதொடலு
மக்கமாமதீனுபகுதாதலாமகிமை
மிக்கவூரிதுதானெனச்சான்றதுவிளங்கி. (5)

போகமாமரம்பலவகையுளவெனிற்புன்னை
யேகவொண்மரமுதன்மைமிக்கிருத்தலினிவ்வூர்
நாகவூரெனுந்தலைமைபற்றியபெயர்நண்ணி
யாகமற்றுநாகூரெனமரீஇயதையன்றே. (6)

மீன்குதிக்குமாழ்கடல்வளைமேதினிவிளங்க
நான்குதிக்கினும்புகழ்செலப்பொலிந்துறுநாகூர்
வான்குதிக்குமொண்சிகரமார்பள்ளியைமருவித்
தேன்குதிக்குமம்பிணையலந்தோளினர்செறிந்தார். (7)

ஆண்டுதோறுறுதந்தைதந்திருவிழவயர்ந்து
கூண்டுநாற்புறத்தினர்நிதநிதரக்குவைஇக்
காண்டுசெல்வியவளர்திருத்துய்த்தலிற்களித்துப்
பூண்டிவைகினர்வல்லவற்றொழுதகைப்புகழோர். (8)

சீதவொண்மதிதெறுகதிர்கெழுமுகத்திருவின்
மாதர்மக்களும்புடைகொளவாழ்வொடுவைகு
நாதர்தம்வயதொன்பதுபத்துமொர்நான்கும்
போதவந்ததையவதிநாண்மௌத்தவர்பொருந்த. (9)

சுமக்குநற்பொறைச்சுமையுடைமாதவத்துயர்
தமக்குறும்முடிவுணர்ந்தனரறிந்தனர்களரா
திமக்கவின்றொடிமக்களைமைந்தரையினிய
சமக்குணத்துடனழைத்தருகிருத்தினர்சாற்ற. (10)

பெறுபுதல்வரும்புதல்விகளுஞ்செறிபிறருங்
குறுகுறும்படிதழூவுபுமலர்முகங்குறித்துச்
சிறுபுறந்தொடர்நரம்பதுசெல்லிடஞ்செல்லு
மறுபுறஞ்செலாநிழலதுநமர்க்குளமரணம். (11)

நங்களுக்கொருநாளூறுமந்தநாணண்ணி
னெங்கிருப்பினுமொருகணமெனினுமற்றேலா
திங்கிருப்பதற்கெற்றைக்குமிருக்கலரென்னி
னுங்களுக்கிருந்தேகுமோர்ஞாங்கரிவ்வுலகம். (12)

ஈனமோடியசெல்வமுமுடல்பெறுமெறுழும்
வானமோடியலாயுளினீட்டமும்வாய்த்து
மானமோடியன்றிருப்பினுநரர்க்குறுவாணாண்
மீனமோடியபாஸதயினன்றிலைவேறு. (13)

இனைவகன்றகனிதியமுமேறியூரினமும்
புனையுமொண்பணிகளும்பிறவாம்பலபொருளும்
வனையுமில்லமுநிரைகெழுமாடொடுமாடு
மனையுமக்களுமடிக்கடிநுமருளமருட்டும். (14)

இரசமற்றவிவ்வுலகுடைவாழ்வினினிதய
முரசநின்றினிச்செல்வழிகருதிடாதுழன்று
விரசமுற்றவரெற்றைக்குந்துயிலுநர்விழிப்பி
னரசமைந்தனொர்கிழப்பிணந்தழுவியாங்கயர்வார். (15)

கலையிருக்குநீர்மையினுயர்மனத்தினிர்கடிமின்
புலையிருக்குநீரிலம்படுகாலினும்பொன்னம்
மலையிருக்குநீராயினுமாழ்கலிர்மரையி
னிலையிருக்குநீர்நீர்மையின்வையகத்திருமின். (16)

ஆளுநாயகனுளனொருவல்லுநனவன்பாண்
மீளுநாள்வரும்வரையவனேர்வழிவிழைமின்
மாளுமாறருந்திநரகங்களைமகிழ்வு
நீளுமாறுறக்கங்களையிமையிமைநினைமின். (17)

இந்தமாநிலன்றன்னின்யானிருக்குநாளிகந்த
வுந்தமைப்பிரிந்தேகிடமேகுநாளுற்ற
தெந்தைசொற்றதுதவறுறாதளிப்பராலென்று
நந்தநாயகனன்னவர்க்குரைத்தவாநன்கு. (18)

மக்களெண்மரும்பள்ளியைப்பற்றுதிர்வலிந்து
தொக்குறும்பொருட்காணிக்கைதுய்க்குதிர்தோன்றன்
மிக்குறும்வயினப்பொருட்பகிர்குதிர்மேய
விக்கொழுந்தலம்விட்டகன்றேகலிரென்றும். (19)

பெரியவல்லவன்சொற்றனன்றெரித்தனன்பிரியத்
தரியதந்தையுமியம்பினர்கலிறுமற்றறைந்தார்
பரியவிவ்வயினெற்றைக்கும்வழிவழிப்பட்டி
ருரியவித்தலம்பொலியுமாலினமகல்வுற்று. (20)

என்றுபற்பலவிசைத்துயர்கிசுறத்தாயிரத்திற்
றுன்றுமூன்றுபத்திரண்டெனுமாண்டினிற்றோன்றி
முன்றுலங்கெழிற்றிங்கள்கச்சினிற்றினமூன்றி
னன்றுசெய்குயூசுபுபெருமானுபாத்தானார். (21)

வேறு.

முழங்குமிசைப்பெருங்குடியின்முதுநயினாருபாத்தாக
வழங்குகொடைச்செழுங்கரத்தின்மக்கண்முதலியவொக்க
றழங்குதிரைக்கடல்கிளரத்தாக்குங்கால்பொரப்பட்டுச்
சுழங்குகலக்கவிழ்வாங்குசூழ்ந்திருந்திரங்கினார். (22)

அடிகண்மறைந்தவைமமேலைநாகூரருடனகலாக்
கடிகெழுமுயர்நாகபட்டினத்தின்கலையினரும்
மிடியகலுமயனாட்டின்விளங்குநருநனிகேட்டாங்
கிடிகரையின்முதுவாழைபெனத்தளர்வுற்றெய்தினார். (23)

உயர்நாகூரவருடன்மற்றயலினருமொருங்குற்றுத்
துயர்கெழுமானலங்காட்டிச்சுற்றத்தார்நனிதேற்றி
யயர்வகலப்பெருமானாரடக்கியவாவணவியற்றிச்
செயிரொழியப்பொலிமஞ்சுசேர்த்தினாரொளிகால. (24)

தவங்குலவுபெருங்கருணைசாகுல்கமீதுபிரா
னவங்கெழுமவினிதமர்ந்தநறுங்கபுறின்மேக்காள
பவங்கெடுமுப்பக்கத்திலகழ்குழியிற்பகல்செய்ய
வவங்கழிமாமலர்சிந்திச்சிறப்பெய்தவடக்கினார். (25)

செற்றத்தின்றகைபோகச்செயிர்தீர்ந்தபெருமானைச்
சுற்றத்தினவரயலோர்சூழ்ந்துநின்றடக்கியபின்
முற்றத்தின்றுயர்வினைய்முறைமுறையினவர்த்தழீஇப்
பற்றத்தினவரவர்தம்பதிவயிற்போய்மேயினார். (26)

நாயகரொக்கலினவருமேனைநனிதக்கினரும்
தூயகமுற்றுறுங்காறுந்துன்னியமற்றினிதமர்ந்தார்
மேயகமுற்றுயர்நாகூர்விளங்கியவன்னவர்மரபி
னாயகமொத்தொன்றென்னவருமையோடிருந்தாரால். (27)

வலிந்துவருகாணிக்கைவான்பொருள்கொண்டினிதாகப்
பொலிந்துவருமுயர்கிளைஞர்புகழ்பெருகில்லறமாற்றி
நலிந்துவருகுநர்க்கென்றுநல்வரங்கேட்டுந்தன்று
மலிந்துவருமகிமையொடுமக்கள்வாழ்ந்தினிதிருந்தார். (28)

செய்குயூசுபுநாயகருபாத்துப்படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 536.

---

## உத்தரீயப் படலம்.

தேந்துடவைமன்னியசெழும்பெரியநாகூர்
வேந்தரியலற்புதம்விரிந்துதிசைபோக
மாந்தர்விழையுந்திருமலிந்திலகுமேலாம்
பாந்தனகாத்தினுபர்பார்த்திபனறிந்தான். (1)

அட்டதிசையோருமருளன்புபெறவெய்திப்
பெட்டனவுடன்பெறுவதும்பொருள்பிறங்க
விட்டடியிறைஞ்சுவதுமாமகிமையாவுங்
கட்டழகுறும்புகழக்காவலவன்கேட்டான். (2)

எண்டிசையினோர்களினிருக்குமொருநாளுங்
கொண்டனபொருட்சிலகொடுப்பலெனவெண்ணி
யொண்டுகிலினம்பொனிழைபுற்றவுபர்போர்வை
துண்டலையனுக்கநைதாங்குரியாசம். (3)

பூணியகிடைப்பருபொருட்களிலையோடுங்
காணியவரைந்தவொருகாகிதமுமொன்ற
வேணியவெனும்படியெடுத்தொருமரத்தின்
பேணியவியற்றியவொர்பெட்டகமமைத்தான். (4)

பூட்டின னெடுப்பருபுறந்தருவிலாசந்
தீட்டினன்கமீதொலிதிருப்பெயரிலங்க
மாட்டினரழைத்தகன்மரக்கலமறிந்தே
யீட்டினவிளங்கவிஃதேற்றுகெனவிட்டான். (5)

விட்டவணிகந்துகலமேவிவருநாக
பட்டினமுறுந்தகைபடர்ந்தகலமொன்றிற்
பெட்டகமளித்திதுபிறங்குமொலியார்தம்
மிட்டவடிகட்கவணளிக்கெனவிசைத்தார். (6)

வாங்குபுமரக்கலமனன்வயினமைத்தான்
றூங்குபடுநங்குராமுறுந்தொடர்வலித்தா
டோங்குமானுங்கடியலுமீகாருவிவன்கால்
வீங்குமிசைதகொள்ளியவிரித்தனர்விடுத்தார். (7)

மொய்திரையசங்கிடறிமுத்தினமுதிர்ப்பச்
செய்தகையகூவிரிசெலும்படியெனத்தா
னெய்தகணைபிற்கழியவெற்றலைகிழித்திட்
டுய்தகைதரும்பஃறியோடியதையன்றே. (8)

வாழியவெனத்திசைவருங்குறிபிடித்துச்
சூழியவிருக்குநர்தொடர்ந்துகரைதேட
ஊழியமுடிப்பலெனவோடிவருகாலை
யாழியனடுக்கடலினல்லகுறிகண்டார். (9)

மாசுபடர்குற்றவகன்மாகமிசைமன்ற
வாசுகெடநல்லதினடித்தவளிமாறி
வீசுதருடுத்ததுவிசைத்துவரிபொங்கி
மூசுதிரைதுன்னுபுயன்மோதியதையன்றே. (10)

நீடுமுயர்தூம்பினைதகணின்றனதெறிப்ப
வாடுதிரைநாற்புறமடர்த்தனதுகைப்ப

சூடுதகையற்றவளிசூறையினடிப்ப
வோடுகலநெக்குறவுடைந்ததுகவிழ்ந்தே. (11)

பாறியலறச்சிதைபடத்தளர்வடைந்தா
ரேறியசரக்குடனிருந்தவர்விழுந்தார்
சீறியதிரைத்திரடெறத்திகைதிகைத்தார்
நூறியரெடுத்தொருநொடிக்குளமிழ்குற்றார். (12)

உற்றவர்சரக்குடனவர்க்கடலமிழ்ந்த
கற்றவர்பழிச்சியவகன்றுவிரிநாகூர்க்
கொற்றவருரிப்பொருள்குறித்தபெயர்வைப்பின்
பெற்றவராமுற்றவுயர்பெட்டகமிதந்த. (13)

காற்றடிதிரைத்தளல்கலந்துடனொதுக்க
மாற்றரியபெட்டகமணிக்கடன்மிதந்தே
யேற்றுகையிறக்குகையிருப்புடையநாகை
மாற்றுறைநெருங்கியுறவந்த[illegible]மிதந்தே. (14)

நாகைநகரத்துறையைந[illegible]ரியருநாகூ
ரோகைதருதண்கரையொதுங்கியமிதந்து
வாகைநிறைபள்ளியெதிர்மன்னியுறவைகுஞ்
சாகையர்தெரிந்துபதிதன்னையறிவித்தார். (15)

வந்ததுறையோம்புநருமற்றையருமொன்றாய்ப்
பந்தமுறுபெட்டிவரல்பார்த்தனரிருந்தா
ரிந்தனையவெண்கதிரிலங்குமதுமன்னி
யுந்தலையுறுங்கரையொதுங்கியதையன்றே. (16)

அங்கரையடைந்ததனையன்னவரடைந்து
மங்கலறமேலெழுதுவாசகமுணர்ந்தார்
பங்கமறுபள்ளிதனிற்பண்பொடுகொணர்ந்து
கொங்கவிழ்பவுத்திரர்கொளற்கதுகொடுத்தார். (17)

மற்றவர்பவுத்திரர்வளத்தரியபெட்டி
பெற்றனரெடுத்தனர்பிறக்கதுதிறந்தா
ருற்றநிருபத்தினுடனுள்ளுறையுணர்ந்து
கொற்றவதனுட்பொருள்கள்கொண்டகமகிழ்ந்தார். (18)

பொன்னொளிபிதுங்கியிருள்பொன்றவெறிபட்டின்
மின்னொளிகலந்துபுறமேவுமுயர்போர்வை
மன்னுகபுறின்மிசைமகிழ்ச்சியொடுபோர்த்துப்
பன்னுநிரியாசமும்படீரமும்புகைத்தார். (19)

வந்தவுயர்போர்வையுமணப்பொருளிரண்டுந்
தந்தவர்சுமந்துகவிழ்தந்தகலமற்று
மிந்தவகையென்றிவணிருந்தவருணர்ந்தா
ரந்தநிருபத்தினிலகன்றவரிகொண்டே. (20)

ஏற்றியகலங்கவிழவின்னவொருபெட்டி
பாற்றியலுடன்றிரைபலப்பலவிகந்தே
யாற்றியலருங்கரையடைந்ததுயர்கோமா
னீற்றியலரும்புதுமையென்றதிசயித்தார். (21)

வுந்தவிருந்தவர்வழங்குவிடைபெற்றுச்
சொந்தநகரம்புகழ்தொனித்தனரகன்று
ரிந்தவிபரீதமுலகெங்குமி[illegible]ன்னு
மந்தமிலருங்களியகத்தினானன்றே. (22)

நாகைநகரத்தினதிபத்தியநடத்து
மோகையரிவற்புதமுவப்பினெழுதித்தான்
பூாகைபெறுநன்மையுயர்பாந்தனகரத்தின்
வாகையரையற்கெனமகிழ்ந்தனர்விடுத்தார். (23)

பாந்தனகரத்ததிபதிக்கெனவிடுத்துப்
போந்தநிருபத்துளபுகழ்ப்புதுமையாரு
மோர்ந்தனர்களித்தனருவர்க்கடலிடத்தி
னாய்ந்திதனையொத்ததிலையென்றரையனோடே. (24)

இப்புதுமையெப்புதுமையிற்புதுமையென்றே
யொப்பியமனத்துடனுவப்புடையவனோர்
செப்பருபலப்பொருள்சிறந்தநிதிமற்று
மெப்பொழுதநுப்பினரிருந்தனர்களித்தே. (25)

உத்தரீயப் படலம் முடிந்தது.

ஆகச்செய்யுள் 561.

# கொலைத்தீர்ப்பு மாற்றிய படலம்.

கறங்குவீழருவிகுத்துங்கண்ணகன்குழிகள்வேங்கைப்
பிறங்குவீயுக்குத்தூர்க்கும்பெருவரையடுக்கந்துன்னு
மறங்கொளுங்களிற்றியானைமலைந்தெனத்தோற்றமாறாத்
திறங்கொளும்வளத்தின்மூத்துச்செழித்ததொர்மலாய்நன்னாடு. (1)

அன்னநாட்டகத்துச்சூழ்ந்தபுரிசையினான்றுமல்கும்
பொன்னமாநகரந்தம்முட்பொருள்விளைநகரமாகி
மன்னலிற்கலங்கள்போகிவருதுறைத்தமைந்தசெல்வந்
துன்னருமலாக்காவென்னுந்தொன்னகரொன்றுண்டாமால். (2)

மண்பகவீழ்ந்தநூறைவரவகழ்கிடங்குமூழ்கச்
சண்பகத்தாதுசிந்துந்தடம்பொழின்மலாக்காத்தன்னை
யெண்பெறுமலாயர்மாட்டாங்கிருந்துதம்வயத்திற்கொண்டார்
விண்பொழிமேக்குத்தேஎத்துவேந்தருளுலாந்தரன்றே. (3)

ஓவகறிருவினாள்வல்லுலாந்தராண்டுறையக்காலங்
காவகங்களுறமஞ்ஞைகனிமொழிமானாரென்ன
மேவகவவ்வூர்தன்னுள்விளங்குகம்பட்டச்சாலைச்
சேவகத்திருந்தானைத்தன்றிருமலைச்செட்டியென்பான். (4)

கலைவறுநாணயஞ்செய்கம்பட்டக்காரராளுந்
தலைமையினிருக்குமன்னோன்றந்தியினுயர்ந்தபோது
மலர்பயிர்செழித்தகாலமாரிபொய்த்துலர்ந்தாலென்ன
நிலைபிறழூழினெண்ணாநெஞ்சுழிக்கரவங்கொண்டான். (5)

உள்ளத்தின்மருட்கைதோற்றவுறுவதுதேரானாகிப்
பள்ளத்தின்விரைப்புவீழப்பாய்வருமேட்டினான
வெள்ளத்தினிதியிற்கொண்டவேணவாபாய்ந்துபற்றக்
கள்ளத்தினாணயத்தைக்கலந்தனனடித்துமன்னோ. (6)

கரவுநாணயங்கள்செய்துநாணயங்கலக்கமுற்றும்
பரவுகான்மிகையினானும்பட்டயாற்றிழிபினானு
மரசினரறியலுற்றுமவையினர்சோதிப்புற்றிட்
டொருமுறவிவைசெய்கள்வனெனவோர்ந்தாரன்றே. (7)

அருமரசதிகாரத்தினவனுமற்றவன்கீழ்வைகித்
தருமறையுணருஞ்சூழ்ச்சித்தலைமையரெண்மர்தாமு
மொருமையினிருந்துகாண்பானோர்ந்திதுசெய்தகள்வன்
றிருமலைச்செட்டியென்றுதெரிந்தனரையந்தீர. (8)

பரதகண்டத்தின்றென்கீழ்ப்பக்கம்விட்டெழுந்துநம்மூர்
வரலுமற்றதிகாரத்தின்மருண்டனனிழிந்துபின்னுட்
கரவமுற்றொழிந்தானன்னகள்வனைப்பிடிக்கவென்ன
வுரமுறுமதிகாரத்தர்கட்டளையுறுத்தியிட்டார். (9)

நாணயநல்லவோடுகள்ளவுநயத்திற்சேர்த்த
பேணலினறிஞன்றன்னைப்பிடித்தவனிதியம்வவ்விப்
பூணருங்கால்கைவிம்மப்பொருதளைபூட்டித்துன்பங்
காணாகன்விளக்கமில்லாக்கடுஞ்சிறைச்சாலைசேர்த்தார். (10)

துரைத்தனத்தலைவனோடுசூழ்ச்சியரெண்மர்தாமுந்
தரைத்தலத்தின்றேற்கென்னைதண்டனையென்றுசூழ்ந்து
விரைத்தடந்தோளான்செய்தவினையினுக்கெண்ணந்தீரக்
குரைத்திழிகழுவிலேற்றிக்கோறலேயென்றுதிர்த்தார். (11)

மற்றநாட்கோறலென்னவரைந்தரும்பத்திரத்தி
னுற்றநாவிருவரோடவ்வொருவனுமொப்பமிட்டுச்
செற்றமுற்றிழிவுசெய்ததிருமலைச்செட்டியேறிக்
கற்றலைத்தெறிக்குமாறுகழுமரநாட்டல்செய்தார். (12)

**வேறு.**

சிறையமர்திருமலைச்செட்டியென்பவ
னிறைபடுமோம்படையிருந்துதன்வினைக்
குறைகெழுநெஞ்சினன்குலைந்துவான்முகின்
மறைபடுபயிரெனவாடினனரோ. (13)

அரிக்குரல்கேட்டஃதடையக்காணுமோர்
கரிக்குறழிவனெனக்கலக்கமெய்தின
னெரிக்குலதெய்வதமென்பயாவையும்
வெருக்கொளுமிடர்கெடுக்கென்றுவேண்டினன். (14)

ஒன்றுறுமிடுக்கணுற்றொழியவேண்டுகை
யன்றிரவிரங்ககத்தநந்தஞ்செய்தனன்
பொன்றியவருங்குறிபுகுவதல்லதை
நன்றுதவியிற்பிறநண்ணலில்லையால். (15)

தனக்குறுந்தெய்வதந்தாங்கலில்லென
மனக்குறுதுயரொடுவைகுமவ்விரா
வுனக்குறுமுடிவுடையுதயமாதலுஞ்
சினக்கொலைவருமெனுஞ்செய்திகேட்டனன். (16)

வலங்கெழுபெருங்குறைவலிந்துசெய்தநீ
யிலங்கறவன்கழுவேறுவாயெனப்
புலங்கலைமொழிசெவிபுகுதவாழிவாய்க்
கலங்கவிழ்நாய்கனிற்கலங்கினானரோ. (17)

செயுமிடர்கெடநமதெய்வம்யாவையு
மயமறவிரந்தனமானதில்லையாற்
பயமுறுங்கொலைவயப்பட்டநம்மையோ
வுபவழிபுரியுமற்றுவையென்றேங்கினான். (18)

நடுமதியொடுபொருணன்குதேடினன்
விடுமதியெடுத்தனன்வேறுகொண்டனன்
கெடுமதிபடைத்தனன்கெட்டனேனென
வடுமதிகத்தினனழுங்கினானரோ. (19)

இனிநமக்குய்வழியில்லையாயினும்
பணிதவிர்த்தாடரும்பண்பினாதராந்
தனியநாகூரமர்சாகமீதினைத்
துனிதபவேண்டலேதுணையென்றெண்ணினான். (20)

ஆர்குலதெய்வதமனைத்தையும்வெறுத்
தேர்கொளுநாதரேயெம்பிரானென
வோர்கழுமரமிசையுதயமேறுவோன்
சீர்கெழுபிரார்த்தனைசெய்கின்றானரோ. (21)

நல்வினையளிக்குநாகூரினையகீர்
புல்வினையீதொன்றுபுரிந்ததானினி

வெல்வினையிகந்தனன்வெருக்கொண்டேங்கினன்
கொல்வினைதவிர்த்துயிர்கொடுத்தல்செய்திரால். (22)

தற்பொழுதளிக்குதிர்தகரப்பாளமு
மற்பிதக்குமஞ்சமுமகிலுஞ்சந்தமு
மெற்கலநிறைபெறவேற்றியற்பினும்
பொற்கழல்புகுத்துவன்புரிந்துதக்கணை. (23)

என்றுளநேர்ந்தனனிருத்தியந்நினை
வொன்றுறுமுளத்தனாயொருவகில்லனாய்க்
குன்றுறுகொடுஞ்சிறைக்கூடம்வைகினன்
றுன்றியநள்ளிருடுயில்வந்துற்றதால். (24)

உறங்கவன்கனவுழியொருவர்மூத்தவர்
திறங்கொளுந்துறவரிற்சிறந்தமாதவர்
பிறங்கெழில்வதனமும்பிறவுந்தோற்றிய
மறங்கெழுதடியொடுவந்துதோன்றினார். (25)

இட்டிறுகியதளையிளகவந்தவர்
செட்டிகேளஞ்சலைசெங்கதிர்த்திரள்
விட்டினனெழுதலும்வேந்தனானுளம்
பெட்டிகும்விடுதலைபெறுவைகாண்டியால். (26)

எனவிசைத்தெழிற்கரத்திருந்ததண்டினான்
வினமகற்றியலெனவெரிந்வடுக்கொளக்
கனலுளத்தவன்றுயர்கழியுமாற்றினோ
ரனகமுற்றியலடியடித்துப்போயினார். (27)

போந்தவரந்நகர்புரக்கும்வல்லனாம்
வேந்தவன்கனவினும்விளங்குமொள்ளிழை
யேந்திளமுலையவனினியபாரியின்
பூந்துயிற்கனவினும்புக்கினாரரோ. (28)

செம்மலந்திருமலைச்செட்டியென்பவ
னம்மிடமடைக்கலநண்ணினானவன்
கம்மிறநெடுங்கொடுங்கழுவிலேற்றுதல்
சம்மதமன்றதுதவிர்த்தனன்றரோ. (29)

என்றுரைத்தன்னவரிருவர்வெங்கினும்
பொன்றுறுத்தியலடிபுடைத்துவறப்புறத்
தன்றுசூழ்ச்சியின்றலையமைந்தவெண்மரின்
வென்றிகொள்கனவினும்விரைந்துபோயினர். (30)

போயவர்தலைவனைப்பொன்னமாமயிற்
சேயிழைமனைவியைத்தெரித்தவாமொழிந்
தாயியல்வெரிங்கொளவடித்துத்தங்கிலே
மேயினரன்னவர்விழித்திட்டார்களால். (31)

தலைவனுமனைவியுந்தலைவரெண்மருங்
குலைகுலைந்தெழுந்தனர்கொண்டவிம்மிதத்
தலைவுடனவரவரறைக்கண்வைகினர்
மலைபுகுகதிர்கடல்வருதனோக்கியே. (32)

சுற்றத்தினவருளந்துளங்கச்செய்கொடுங்
குற்றத்தினவன்களிகொள்ளுமாறெனக்
கற்றைச்செங்கதிர்த்திரள்காலவீசின
னெற்றைத்தேருருளினனுதயமாயினன். (33)

வேறு.

பிணிப்புவிட்டெழின்மரைமுகைவிரிந்தொளிபிதுங்கக்
கணிப்பினுற்றவாயஞ்சிறைத்தும்பிகள்களிப்ப
மணிப்பெருங்கடற்கதிரெழவெழுந்தனன்வருகை
யெணிப்படுக்கைவிட்டெழுந்திருந்தஞ்சியவிறைவன். (34)

முதுகுநோக்கியமனைமுகம்விழித்தனன்மொழிந்தா
ணிதுகொலெற்குமாலென்றனள்கண்டதுமிசைத்தாள்
புதுமைமிக்கதாமிஃதெனமந்திரம்புணர்த்து
மதுகைமன்னரையழைத்தனனுசனம்வதிந்தான். (35)

இவர்சுவட்டுவெங்காட்டினன்கனவையுமிசைத்தா
னவர்களுந்தமக்குற்றதையிஃதெனவறைந்து
கவலருும்வியப்பாமெனக்கஞ்சுகங்கழற்றி
யுவகையின்வெரிங்காட்டினரொருவரையொருவர். (36)

செட்டியின்றிறத்திப்பெருமற்புதஞ்சிறந்த
தட்டியின்றெனவவன்வயினுறுசினமடக்கி
யெட்டருஞ்சவையருந்தலைவனுமவற்கெழுதப்
பட்டிருந்தவக்கழுக்கொலைத்தீர்ப்பினைப்பார்த்தார். (37)

காற்றிறங்கொள்நாட்டியனீள்கொடுங்கழுவி
னேற்றிமாய்க்கவென்றெழுதியதீர்ப்பினவ்வெழுத்து
மாற்றியன்னவன்விடுக்கவென்றன்பொடுவரைந்து
தோற்றியங்கணப்பத்திரமிருந்தது துளங்கி. (38)

ஓர்ப்பினன்னவரெழுதியகழுக்கொலையுஞற்றுந்
தீர்ப்புமாற்றியங்கிருந்ததுகண்டனர்திகைத்தார்
வேர்ப்பெழுந்ததுசெறிமயிர்க்காலுறும்விதிர்த்தா
ரார்ப்புறுந்தகைச்செட்டியைக்கொணர்கெனவறைந்தார். (39)

காவலஞ்சிறைச்சாலையிற்சென்றனர்கடிதின்
சேவகத்தினர்திருமலைச்செட்டியைச்சிறப்ப
வேவகத்தொடுமழைத்தனர்தலைவனொடெண்மர்
மேவகத்தினிற்கொணர்ந்தனர்பணிதரவிடுத்தார். (40)

விலங்கிறத்தறித்தெறிந்தனரன்னவன்விளித்துக்
கலங்குறச்சிறைச்சாலைநீவைகுறுகாலை
துலங்குறுத்தெதுங்கண்டனையேலதுசொல்கென்
றுலங்கொண்மற்புயத்தினர்நனிகேட்டனருவந்து. (41)

திங்குகுன்றியவிரந்தனனென்குலதெய்வம்
பாங்குகண்டிலன்கோறலைக்கேட்டுளம்பதறி
யேங்கிநைந்துநாகூரிறைவேண்டினனிருந்தேன்
றூங்குசொப்பனத்துற்றனரொருபெருந்துறவோர். (42)

உதயவேளைநீவிடுதலைபெறுவையாலுலைய
விதயமென்றவர்வெரிந்வடுப்பெறப்புடைத்திகந்தார்
முதுகுகாண்கென்றுகாட்டினன்வகையொடுமொழிந்த
விதுகொலற்புதமென்றவரனைவருமிரைந்தார். (43)

நாங்கள்கண்டதுமன்றிவன்கண்டதுநயத்த
பாங்கினொன்றினவாகலிற்சிறைவிடப்பட்டு
நீங்குகென்றுநாம்விடுப்பமேனன்றதுநிகழ்த்திற்
றீங்குகண்டுலைவோமெனவன்னவர்தேர்ந்தார். (44)

உய்தாற்கிவனுஞற்றுவமாயினுமுய்வம்
வெய்தெனத்தகுஞ்செட்டியைவிளித்துனைவிடுத்தேம்
மெய்பெறற்குநின்பிரார்த்தனையாங்குநீவிழைவிற்
செய்கசெல்லுகவென்றனர்விடுத்தனர்தெரிய. (45)

சிறைவிடுப்புறுமன்னவன்றிருமலைச்செட்டி
பிறையெயிற்றருங்களிறெனவிருங்களிபெற்று
நறையெழப்புகையகிலொடுசந்தமுநலஞ்சான்
மறைவறப்படுகுமஞ்சமுந்தகரமும்வாங்கா. (46)

தன்னுரிக்கலம்வாய்வரவேற்றினன்சரக்கை
மன்னுரித்தினரேனையர்சூழ்வரவந்து
மின்னுரிக்கலமேறுபுநோக்கினன்விவரம்
பன்னடைத்துவாய்க்கரசினர்முத்திரைபதித்தான். (47)

அருமையின்கொலைமாற்றியவியலுமற்றதற்கென்
றொருமையொன்றுநாகூரிறைக்கிக்கலத்தோடு
பொருவருஞ்சரக்கடையலுங்காணிக்கைப்பொருளாய்
வருவதென்பதுமொருகடுதாசியில்வரைந்தான். (48)

தீட்டுபத்திரந்தன்னையொர்சிறந்தகைப்பெட்டி
போட்டுமற்றதைப்பூட்டினன்றிறவுகோற்பொருந்தப்
பூட்டுவாயிடங்கொளுவினஞறரப்புனைவி
ஞேட்டுறும்மரத்திதையெலாம்விரிக்கெனவுரைத்தான். (49)

நட்டுயர்ந்தெழுமரங்கொளுமிதையினநன்கின்
விட்டுகால்வரவிம்மியலுடன்புடைவிரியக்
கட்டுநங்கூரமிழுத்துவைத்தனைவருங்கடுகப்
பட்டிறங்குதிர்கரைபுகவென்றனன்படகில். (50)

அனைவரும்மிழிகுதிரெனவறைதலுமான்ற
வினைவரும்பதிமுதற்றலைமையர்விளித்தெவனீ
புனைவெறுங்கலமாளிலாதெங்ஙனம்புணரி
தனையிகந்துறுங்கூறினையென்றனர்சால. (51)

மாக்களின்றியிவ்வறுங்கலமெவ்வகைமலிநீர்ப்
போக்கருங்கடல்கடக்குமென்றிசைத்தலும்பொருவி
னீக்கருங்கழூவேற்றமற்றொழிந்தவனெஞ்ச
மேக்கறும்வழிக்கொண்டவல்லுறுதியினிசைப்பான். (52)

கொலையினின்றெனையளித்தநாகூருறைகோமான்
மலையினின்றெழுமணிவிளக்கனையரிம்மலிநீ
ரலையினின்றிருங்கலந்தனையவர்வயினமைப்பார்
துலையினின்றுநீர்காண்டிரென்றொருமையிற்சொன்னான். (53)

இன்னவன்மொழிகேட்டனர்காண்குவமிதனை
யென்னையாவருமிறங்கினர்கரைபுகூஉவிருந்தார்
சொன்னவண்ணமப்பஃறிநாகூர்த்திசைதொடங்கி
முன்னமொன்றியதிரும்பிமற்றோடினமுறையின். (54)

ஒருவராயினுமோட்டுநரின்றுநாகூர்ப்பாற்
றிருமீவான்கலஞ்செல்லுகையன்னவர்தெரிந்து
பெருமைசாலுமந்நாயகர்மகிமையேபெரிதென்
றொருமைசேருளத்தொடுமவரவர்வயினுற்றார். (55)

கொலைத்தீர்ப்பு மாற்றிய படலம் முடிந்தது.

ஆகச் செய்யுள் 616.

# மரக்கலமழைத்த படலம்.

பூவொன்றுபுதுப்பொழிறுன்னுமலாக்
காவென்றநகர்த்துறைவிட்டவுயர்
மாவொன்றுமரக்கலமன்னவன்சொல்
வாவொன்றியவந்ததையோடியரோ. (1)

ஆளற்றகலம்பியலைத்திரளைக்
கீளுற்றதுகீறிமுனைந்தபரங்
கோளுற்றதுகோதைவிசைத்துமுனை
வாளுற்றெனவந்ததையோடியரோ. (2)

மாசற்றமரக்கலமுன்றலையி
னோசைத்திரையொன்றியிரண்டகமும்
பேசற்கரும்பேவுறவெண்கவரி
வீசற்கிணையென்றுவிரிந்திடுமால். (3)

தடமுற்றதனிக்கடலின்றிரைவாய்க்
குடமொத்துறுகோ ,நெடும்பஃறி
யிடமுட்டியிலங்குமணித்திரளை
யுடமூற்றுவபங்கவுகுத்திடுமால். (4)

நில்லாதகனீள்கலவாய்நிறைய
வல்லார்பொருள்வந்தனயாமணுகிற்
பொல்லாதுபுணர்த்துவரென்றருகிற்
செல்லாதுதிமிங்கலமோடிடுமால். (5)

செறலற்றுயர்செட்டிமதித்துதவு
மிறைவர்க்குறுமிப்பொருளாலினிநாம்
புறமொய்ப்பினிருந்துபுரப்பமெனச்
சுறவுத்திரள்சூழ்ந்துதொடர்ந்திடுமால். (6)

அலையெற்றியகற்றிநெடும்புணரி
யுலையத்திசையொன்றினிலொன்றுமின்

கலையக்கணைவிட்டதுபிற்கழிய
மலையொத்திடவந்ததுவான்கலமே. (7)

வேறு.

ஆற்றினுற்றவலைத்திரள், காற்றினொத்தகணத்தெழு
மேற்றினொத்தவிரைப்புடன், வாற்றினுற்றமரக்கலம். (8)

வென்றிகண்டியர்வேந்தரி, னன்றிகண்டவர்நச்சிய
கன்றுவந்தகரிச்செல, வொன்றவந்தனதையோடியே. (9)

திரையடுத்தனசெல்லிய, விரையெடுத்தநம்வேந்தர்வா
ழுரையடுத்தநாகூருயர், கரையடுத்ததுசப்பலே. (10)

வேறு.

வானம்படர்ந்தசெக்கரெனமணியின்மருளுமலிநீரைப்
பேனம்படர்ந்தநதியாணர்ப்பெருநீர்தழீஇயவளநாகூர்
மீனம்படர்ந்ததிரைக்கடலின்விளையாட்டலவனளைமல்கும்
மானம்படர்ந்தகரைநண்ணிவந்ததணிசேர்மரக்கலமே. (11)

திருப்புச்செலுத்துநிறுத்துவகைசெய்யும்வினைஞரெவரின்றிப்
பொருப்பொத்துயர்ந்தநெடுநாவாய்பொலிந்தநாகபட்டினத்து
விருப்பத்துறைபோயசைவின்றிவிரித்தபாய்களொடுங்காது
கருப்பெற்றெழுந்தமழையாங்குகலங்களுப்பணின்றதன்றே. (12)

கலமொன்றிதைகள்குவிவிலவாய்க்களிற்றினிற்பவினமீனம்
பலகொறிமிலேர்வாழ்க்கையுடைப்பரதர்போந்தார்கண்ணுற்று
வலமொன்றியவோர்வினைஞரின்றிவந்தவகையின்வியப்பெய்தி
நலவொன்றவ்வூரரசினரைநண்ணியதனைத்தெரித்தனரால். (13)

கேட்டபோழ்தினதிகாரக்கிழவர்பலரோடெழுந்துதுறை
மாட்டுற்றகன்றபடகேறிவங்கமடைந்துநனிநோக்கி
மேட்டுக்கவின்வாயுலாந்தரசின்விளங்குமுத்திரிகைதேர்ந்திட்
டோட்டுக்கருவியிதைமுழுதுமொடுக்கிநங்கூரமுமிட்டார். (14)

நிலையினுக்கிமேற்றட்டினிவந்தவபாரத்தறைபுகூஉ
விலையினரியகைப்பெட்டியொன்றுவாயின்விளக்கமுற

நலவினைமைந்ததிறவுகோனுலவிருக்குந்தகைநோக்கி
மலைவினுளத்தினதிகாரமாண்பினுதனைத்திறந்தனரால். (15)

பெட்டிதிறந்திட்டதனகத்துப்பிறங்குகிருபமெடுத்தோர்ந்து
செட்டிவிடுத்தானிஃதென்றுதெரிந்துகலஞ்செல்வானிதைகள்
கட்டிவிரிக்குமவரின்றிக்கடலைக்கடந்திங்குற்றதுமன்
மட்டின்மகிமைபெறுநாகூர்வள்ளல்வன்மையெனப்புகழ்ந்தார். (16)

பொற்றுட்கநுப்புங்காணிக்கைப்பொருளையோம்பிக்கருங்கடலை
மற்றூருதவியறவிகத்திவரச்செய்பெருமான்மகத்தென்று
பற்றாய்வியந்துபலவேறும்படருஞ்செலுத்தித்திரைதாவி
யெற்றூர்கரைவாய்ச்சரக்கினங்களிறக்கிச்சேர்த்துக்குவித்தனரால்.

நாவாய்கிற்பச்சரக்கொருங்குநலவினிறக்கியோம்படையின்
மேவாவியற்றியவரிருப்பவிளங்குமின்னவரலாற்றை
யோவாவளஞ்சேர்திருநாகூரொலிகள்பெருமான்பௌத்திரர்கண்
மாவார்வியப்பினுளங்குளிர்வின்மகிழுமாறுகேட்டனரால். (18)

அங்கப்புளகம்வரக்கேட்டவன்றேயேவல்வினைவலரைச்
சங்கத்திரைசார்துறைநாகைத்தலைவன்ஞாங்கருறப்போக்கி
யெங்கட்குரியபொருளூற்றீங்கிருக்கின்றனனீவிடுக்கென்று
வங்கப்பொருளுமற்றதுவும்வாங்குமாறுதெரித்தனரால். (19)

விட்டவரியவினைமாக்கள்வெங்கட்சுறவுவிளையாடப்
பட்டதிரைசூழ்துறைநாகைப்பதியின்வயின்போந்திசைத்தவெனப
பெட்டமொழியினியம்பவவன்பிரியத்தன்னோரழைத்திருத்தி
யிட்டமுடையீர்நுமர்பொருளேயிங்குற்றனவொன்றினிக்கேண்மின்

இழியும்வழிநீர்நெடும்புணைகளிணக்கிச்சந்தோடகிலேற்றிக்
கழியின்கரையினிறுத்துதுமிக்காலங்கருப்புத்தலைக்கொண்டு
பொழியும்வானத்தியலின்றிப்பொய்த்தமனுக்கள்பசியாற்று
தழியும்பருவமிஃதானீரறிதிரான்மற்றதனுனே. (21)

நீகாஞ்தியவரின்றிநெடும்வாரிதிக்கணலைந்தெங்கும்
போகாவண்ணம்வரப்பஃறிபுரிந்தபெருமான்பிணிதிரப்

பாகாமாரிபெய்வித்துப்பட்டபெருக்கிற்புணைகடமை
வாகாமிதத்தித்தம்பதியின்வருமாறழைக்கவேண்டுமால். (22)

இதுவாலெமருள்விருப்பென்னவிறைவனுரைப்பவினைவல்லோர்
புதுவாண்முகத்தர்தமையாள்வோர்பொற்றாளடைந்தின்னதுசொ
ன்னார், விதுவார்கழலினம்பெருமான்விளங்கும்பள்ளித்திருமுன்
றின், மதுவார்புயத்தன்னவர்கூண்டுமன்றாடுபுநின்றஃதிரந்தார்.

பொன்றாவகையங்கணிபுதுமைபுரிந்துவிளக்கித்திசையெட்டுங்
குன்றாவிளக்கினமர்நாகூர்க்கோமானுவந்தபவுத்திரர்கள்
வென்றார்வத்தின்பேறடையவிருப்பினவனுள்வியப்பெய்த
மன்றாடியவாவன்றிரவேவானமாரிபெய்ததன்றே. (24)

இடித்துத்திரண்டுமிகமின்னியெட்டுத்திசையும்பரப்புற்றுத்
தடித்துக்கறுத்துமீமிசைப்போய்த்தங்கிமங்குல்பொழிதரலும்
பிடித்துப்பரவும்பெரும்பஞ்சம்பெயரமாக்கள்களிகூர
மடித்துத்திரைகடலைமுரியமலிநீர்வெள்ளம்பெருகியதே. (25)

ஓங்குநாகபட்டினந்தொட்டுயர்ந்தநாகூரதுகாறும்
பாங்கினகன்றுவெளியாகிப்பரந்ததரையினீர்பெருகி
வாங்குதிரையின்கடலாங்குமல்கச்சந்துங்காழகிலுந்
தாங்குபுணைகண்மிதப்புற்றுத்தறுகாவணுகவந்தனவே. (26)

மாரிபொழிந்தவவ்விரவேவளர்வான்புணைகள்வந்துற்ற
வாரியகடுவிளந்தாங்குவானக்கதிரோனெழுதரலும்
பேரினியலத்தலைவோனும்பிறருந்தெரிந்துகளியுற்றார்
வேரியிருந்தோணம்பெருமான்வியப்பினெஞ்சம்விதிர்ப்புற்றே. (27)

பரிவுற்றடைந்தகலந்தகரப்பாளங்குமஞ்சமிம்மூன்றும்
பிரியத்தடைந்துற்றவராநுப்பிப்பெறுகென்றன்னதலைமையோன்
றெரிவித்தனனாலாள்விடூஉத்திண்டோளொலிகள்பெருமானின்
விரிவுற்றுயர்ந்தகுடும்பத்தர்விளங்குமரியபவுத்திரர்க்கே. (28)

அன்னதுணர்ந்தமுதியோர்களாட்களநுப்பித்திம்பாலின்
வன்னக்குமஞ்சந்தனைத்தம்பால்வருமாறழைத்துத்தடவங்கம்

மின்னத்தகரத்துடனுங்கேவிலைதீர்த்துவந்தார்கொளவிற்று
மன்னப்பொருளுந்தம்மாட்டுவருமாறாக்கிக்கொண்டனரால். (29)

கோறலிகந்தான்விட்டகலங்கொண்டபொருளினிரண்டுவரத்
தூறலிகவாப்பெருமாரிசொரிந்தவதனானிகழ்பஞ்சம்
மாறலடைந்துபைங்கூழ்கண்மகிழ்ந்தவகத்தின்செழிப்புற்றுத்
தேறலடைந்தவாக்கத்திற்றேயமன்றேசிறந்ததுவே. (30)

சாமம்பற்றியுடலுலர்ந்துதவிர்ந்தமாக்களதுதீரச்
சேமம்பற்றிநாகூர்வாழ்செம்மலெழிற்றாமரையந்தாட்
டாமம்பற்றியகம்வைத்துத்தகவிற்புகழ்வுறறெஞ்ஞான்று
நாமம்பற்றாதுளங்களிப்பநன்கின்வாழ்க்கையுற்றனரால். (31)

வங்கமிரண்டுங்கொளவிற்றுவந்தபணயஞ்செலவிட்டுத்
துங்கமுறுநம்பெருமானார்துளங்கும்பள்ளியிடஞ்சூழ
மங்கலகன்றவளைவானமணிமண்டபங்கள்பலகட்டிச்
சங்கமலியவிருந்தனர்நம்சாகுல்கமீதின்பவுத்திரரே. (32)

மரக்கலமழைத்த படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 648.

# கூலிகொடுத்த படலம்.

நான்குதிசையும்புகழுநம்பெரியநாதர்
தீன்குவலயம்பொலிவுசெய்தவொருபேரர்
வான்குலமுதித்தமகவண்மைபுனைநாகூர்
கான்குலவவந்தவுயர்காவலவரன்றே. (1)

என்னவுலகம்புகழிலங்குமொழியுல்லா
மன்னுளமுவந்ததிருமைந்தருண்மைந்தர்
துன்னுமகவவ்வழிதொடர்ந்தமகவென்று
பன்னுமுயர்சந்ததிபரந்தனர்மலிந்தே. (2)

ஓம்பியகுடும்பமஃதுற்றகல்வெடுப்பப்
பூம்பொழில்செறிந்தணிபுனைந்ததிருநாகூர்
பாம்புரிபெறும்பெரியபட்டினமெனத்தா
னும்புகழ்தரத்தலையகன்றதைபொலிந்தே. (3)

ஒருகுடியகன்றுநகரும்பரவெடுப்ப
வருகுளரயற்கணுளரல்லர்கிதநண்ணு
விருகுளிர்மரைப்பதமிறைஞ்சுபுகளிப்பின்
றருகுவியலுற்றநிதிதக்கணைமிகுத்த. (4)

தக்கணைவரத்ததுதணப்பறுவிதத்தின்
பிக்கறவிருந்துதுபெறற்கருமைசால
விக்கடனறிந்தகலெழிற்குடிபுரக்கு
மிக்கவர்நினைப்பினொருமித்திதுமுடித்தார். (5)

மண்டியசனத்தொகைவரத்தருநிதிக்கோ
ருண்டியலெழிற்குடமுளுற்றியிவண்வைத்தே
யெண்டரநிறைந்தபினெடுத்ததுபிரித்துக்
கொண்டுறுவமொன்றியகுணத்தினொடுமென்றே. (6)

நாடியிதுநன்றெனநயத்தினொருமித்துக்
கூடியவர்நின்றொருகுடங்கரையெடுத்து
நேடியவர்வந்ததைநிறைத்திடவுறும்வாய்
மூடியொருபள்ளியதன்முன்றிலிடைவைத்தார். (7)

புந்தியினினைந்துளபொருட்கள்கொணர்குற்றோ
ரிந்தினிலகுங்கலசமிட்டதுநிறைப்பா
ரந்தியினிருந்ததையவிழ்த்தவரவர்க்குப்
பந்தியினுறுந்தவர்பகிர்ந்தனர்கொடுப்பார். (8)

வங்கிடமகன்றிடவளப்பதிதழைப்பப்
பொங்கியசிறப்பதுபொலிந்துமனைமல்க
வெங்கணுளரும்பொருளிறைஞ்சுபுகுவிப்ப
விங்கிதுநிகழ்ந்ததையிருக்குமொருநாளில். (9)

கூலியரழைத்துயர்குலத்தினராளிக்கும்
வாலிருபதத்தாசவள்ளலதுபள்ளி

நாலிருபுறத்தினுநயத்தரணமைப்ப
வேலியினடைக்கெனவிடுத்தனர்பணித்தார். (10)

காலையிலிருத்தியகடம்பொலியவந்நாண்
மாலையினெடுத்தனர்வழக்கொடுபிரித்தார்
சோலையினிருந்திடுசுகத்தொழுதிவிம்ம
வேலையிலெழுந்தகதிர்வெற்பிடைவிழுந்த. (11)

வேறு.

கல்லடைந்தனன்கதிரவன்காலையில்விடுத்த
மல்லடைந்தவம்புயமுடைவேலையாண்மன்னி
வெல்லரும்படியடைத்தனர்முடித்தனர்வேலி
கொல்லடைந்திடாதடைந்தனர்கேட்டனர்கூலி. (12)

கூலிவேண்டினர்நின்றனர்வினையினர்கோமான்
மாலிருந்தகையுடையவர்கேட்டிதுமறந்தே
நாலிரண்டெனினும்பணமின்றினிநம்பா
லாலிருஞ்செலவாயினவேயெனவயர்ந்தார். (13)

குளித்துறும்வியர்வையில்வெயிற்றெறப்புரிகூலி
யளித்துறுந்தகைமறந்தனமென்னெனவயரத்
தளித்தலத்தொருமுதியவரடைந்தனோர்தம்மை
விளித்தரும்பொருள்பயப்புறவொருமொழிவிண்டார். (14)

இந்தநாயகரற்புதப்பெருக்குடையிறைவர்
சொந்தவேலையின்மயங்கியவிடுக்கலர்சொரியும்
பந்தமார்நிதியுண்டியற்கலசத்தைப்பாரீர்
வந்தமாநிதியிருக்குமாலென்றுளமகிழ. (15)

கூறக்கேட்டனர்குடங்கரையெடுத்தனர்குலுக்கி
யாறப்பார்த்தனர்பணத்தொனிகேட்டனரவிழ்த்தார்
தேறப்பார்க்குநர்கேட்குநாருமையிற்செல்வ
மேறப்பார்புகழ்தரும்பணமிருந்தனவெடுத்தார். (16)

இருந்தவப்பொருளெடுத்தனர்நோக்கினரெண்ணி
யருந்தொழிற்செயும்வினைவலர்கூலியினளவு

பொருந்தவுற்றனபகிர்ந்தனரளித்தனர்புகழ்ந்தார்
தருந்தவத்தினரடிக்கமலங்களைச்சான்றோர். (17)

மன்னர்மன்னவர்சாகுல்கமீதுநம்வள்ள
லின்னவாதமமக்களையாதரவியற்றி
வின்னமற்றிடக்காத்தினிதிருந்தனர்விருப்பின்
பொன்னமாநகர்ப்பள்ளிவாழ்வுயர்ந்ததுபொலிந்தே. (18)

கூலிகொடுத்த படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 686.

---

# அற்புத வாட்படலம்.

கானமர்கைதைவேலிக்கழிபடர்கானன்மல்கு
மீனமர்பவளங்கான்றவிரிகடன்முழங்குநாகூர்
தேனமர்புயத்தின்கோமான்பவுத்திரர்நிமித்தமாக
வானமர்வண்மையோங்கிவரவரப்பொலிந்தன்றன்றே. (1)

பவுத்திரர்குடும்பமன்றிப்பஃறிசைமாக்கள்கோமான்
றவுத்தியத்தலத்தின்வாழ்கைதக்கதென்றிருக்கைசெய்து
கவுத்துவப்பள்ளிசூழக்கவின்பெறுதெருக்கள்பல்ல
சவுத்திரத்தமைத்தார்குற்றூர்தழைத்ததுநகரம்பின்னும். (2)

காணுறப்புகழ்சாரப்துல்காதிறுபெருமான்வைகு
மாணுறப்பரந்தபள்ளிமருங்கிணோர்புறத்திணூ
மேணுறப்பட்டதாகவிருந்ததைநரன்றுமன்னச்
சேணுறப்படர்ந்தன்றோங்கிச்செழுங்கழைக்காடதொன்று. (3)

வகைபடுமுத்தஞ்சிந்தும்வான்கடற்கரைசேர்நாகூர்த்
தகைபடுமேக்குநாட்டுத்தலையதிகாரத்தாள்வோன்
பகைபடுமொருவனுற்றான்பகரவற்கன்னகால
மிகைபடுவேய்கள்வேலைவேண்டியதிருந்ததன்றே. (4)

தன்னுடையாட்கட்கூவித்தக்கவாநேரவாமா
மின்னுடைமுத்தங்காலும்வேய்த்திரள்யாண்டைமுற்றி
மன்னுடையனவாலென்றுநோக்கினிர்வருதிரென்னத்
தென்னுடைநிதியநல்கித்திசைதிசைபோக்கினானால். (5)

திசையொருநான்குஞ்சென்றசேவகர்தம்முட்சில்லோர்
வசையுறுவினைஞர்நாகூர்வந்தனர்நம்பிரானா
ரிசைபெறுபள்ளிஞாங்கரிருங்கழைக்காடுகண்டார்
விசையொடுசென்றாங்கன்னோன்விளங்கியதெரிந்திட்டாரால். (6)

கேட்டனன்களிப்புற்றங்கேழ்கிளர்திருச்சிவிகையூர்ந்து
மாட்டருஞ்சேவகத்தர்மல்கியவெழுந்துவண்மைச்
சேட்டரும்பருதிகாலுஞ்சிகரமண்டபஞ்சால்பள்ளி
வேட்டருநாகூர்புக்குவேயினநோக்கினானால். (7)

ஓங்கியநரல்வேய்நன்கினுற்றனவேலைக்கென்று
தாங்கியகளிப்பினோடுசாகிபுமார்களென்னும்
பாங்கினர்தம்மைக்கேளான்பணியொலிபெருமாற்கஞ்சான்
றீங்கினன்றறித்திரென்றுசேவகர்ப்பணித்திட்டானால். (8)

இறையவன்பணித்தவாவவ்வேவலர்வேழக்காட்டி
னறைகொளவேண்டுமட்டுமருமையரடைந்துவெட்டன்
முறைமையன்றெம்பிரானார்முதுபுகழ்ப்பள்ளிசூழ்ந்திட்
டிறையிஃதென்றுகூறியொருமையிற்றடுத்திட்டாரால். (9)

விதம்படக்கூறித்தட்டிவிலக்கலுமன்னோன்கேளா
ததம்படப்பெறுதன்சென்னியறுத்தெனத்தேவைமட்டும்
பதம்படவெட்டிச்சேர்த்துப்பல்புணையியைத்திட்டாட்க
ளிதம்படநதியின்மார்க்கமீர்த்தனிர்கொணர்கவென்றான். (10)

இன்னணங்கற்பித்தன்னோனினங்கொள்சேவகர்சூழ்போதப்
பொன்னருஞ்சிவிகையேறிப்புரம்புகமீண்டுசென்றான்
பின்னமர்பெருமான்மேவும்பேரர்கள்பள்ளிமுன்றின்
முன்னரும்பணிவிற்கூண்டுமுறையிடேஉமொழிந்துநின்றார். (11)

எம்முடைப்பொருளைநீதமிகந்தவன்கொண்டேகுற்றா
ணிம்முறைப்பாடுகேண்மினெந்தையென்றிசைக்குங்காலைச்

செம்மறங்கபுறிற்போர்த்தசெழுந்திருப்போர்வைதன்னுட்
டும்மலினிருந்தன்றோலைச்சுருளதொன்றெழுந்ததன்றே. (12)

வள்ளலுற்றெழுந்தவோலைவளைசுருள்காற்றின்மீப்போய்ப்
புள்ளெனப்பறந்துநின்றபுடையினர்காணஞாங்க
ரள்ளமைகொன்றானேகுமத்திசைநோக்கிச்சென்று
தெள்ளறிவுணர்த்தவன்றன்சிவிகையுள்விழுந்ததன்றே. (13)

என்னிதுவிழுந்ததென்னவெடுத்தனன்படிக்குமாறு
முன்னதுசுருளிற்றோன்றிமூடமிக்குள்ளோன்கையான்
மன்னுறத்தீண்டியன்பின்வாசிக்கமுயன்றுநோக்கும்
பின்னதுநிமிர்ந்துகூரிற்பிறங்குவாளாயிற்றன்றே. (14)

ஒருபுறந்தீட்டியுற்றவோலையென்றெடுத்தான்றீய
னிருபுறந்தீட்டியுற்றாங்கிலகுநாந்தகத்தினீண்டு
மருகுறவாவிகைகட்பற்றிமன்னிழுத்துநின்று
கருகுறுவதனைத்தோளைக்கந்தரம்போழ்ந்ததன்றே. (15)

அடலரியனையசீற்றத்தன்னவனுவிபோகக்
கடவிரைந்தென்னவார்த்தான்கழுத்தறுப்புண்டகாலை
யுடல்விடத்தலைவேறாயங்குருண்டதுமடைவிட்டென்ன
மடமடென்றணிகம்பொங்கிவழிந்ததுசோரிவெள்ளம். (16)

சுமக்குநர்கொம்புதாங்குந்தோளைவுதிரஞ்செய்ய
விமைக்குளிங்குற்றதென்னென்றிறக்கினர்சிவிகைகண்டார்
சிமுக்கிடுத்தலுமின்றம்மசெத்தனன்றடுத்துங்கொன்ற
வமைக்குணத்தெனச்சூழ்போந்தோரஞ்சுபுவிதிர்த்தாரன்றே. (17)

மடம்படுதலைமையாளன்மதித்திலன்பெருமான்பள்ளி
யிடம்படுமமைகள்வெட்டியிட்டதானின்னதிங்கிற்
கடம்படுகொலைக்குண்மாண்டான்கண்டயாமுதுகொள்வாமேல்
விடம்படுபெரியதீயவிக்கினம்விளையுமாலோ. (18)

என்றொருமித்துப்பேசியிதயமிக்கவலங்கொண்டு
குன்றுறழ்புயங்கள்வாடிக்குவிமுகத்தினர்நைவெய்தி
யன்றுமற்றாட்கட்போக்கியகனதிவழியினேகும்
வென்றியர்க்குரிமைகொள்ளும்வெதிர்ம்பூணைதிருப்பியிட்டார். (19)

பழுந்தகைப்பட்டமூங்கிற்படுவைவயோடதிபன்றன்னை
யிழுந்தசேவகர்கள்கூண்டின்றெழில்பெறுநாகூரெய்தி
முழங்கியமறைஞர்பள்ளிமுன்றினண்ணுற்றுக்கால்கை
வழங்குறாரென்னகின்றுவாய்ப்புதைஇயபயங்கேட்டார். (20)

தேவரீர்சிறியம்புன்மைசெய்தனம்பொறுத்திரென்று
தாவறவிரந்துபின்னர்சாகிபுமார்களென்னுங்
காவலர்மாட்டினுற்றுக்கழல்சிரஞ்சேர்த்திப்போற்றி
யாவலிற்கண்ணீர்சிந்தவழுதனர்கூறுவாரால். (21)

எம்மிறையறிந்தும்வன்புற்றியற்றியதீமைக்கின்ன
நம்மிறையன்னேன்சென்னிநறுக்கினர்தண்டித்தாரா
னும்மிறைவேழமொன்றுநுழுந்துறுவகைகொணர்ந்தேந்
தம்மிறையவலந்தீரத்தாங்குதிர்பொறுத்திர்மன்னே. (22)

எனவெருக்கொண்டநெஞ்சரிரந்துயர்வேரன்முற்று
மனவுவப்பன்னோர்கொள்ளவயப்படுத்தழுதுநின்றார்
சினமழித்திருக்குமான்றசிந்தையரவர்கணோக்கி
வினமுறுதகறிரென்றுவிடைகொடுத்தநுப்பியிட்டார். (23)

பெரியரைப்பேணுவண்ணம்பேசுகையவமதிக்கை
யுரியவைகவர்கைமற்றையுஞற்றுநர்க்குதவிநிற்கை
யரியவையன்றுகேட்டினமிழ்த்துதற்கன்னேனன்று
கரியனுயினனுலென்றுகவன்றவர்போயினாரால். (24)

தவத்துறைபழுகிச்சான்றசாகிபுமார்களென்னும்
பவுத்திரர்மொழியிகந்துபடுபொருள்கவர்ந்ததீய
னவத்துயிர்துறந்தானென்னவஞ்சியவுலகநிற்க
நவத்துறைநாதர்செய்தநலவெங்கும்பரந்ததன்றே. (25)

அற்புதவாட்படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 711.

---

# சேவற் படலம்.

இறவுணங்குசெய்திமிலுடைப்பரதவரிளமுலைமடமானார்
சுறவுகண்டெழுபொருதிரைக்கருங்கடற்றுறைகெழுதிருநாகூ
ரறவுயர்ந்தரும்பெரும்பதியாயினதகன்பணைமலிவீதி
நறவுசிந்துபூம்பொழில்பலமல்குபுநானிலம்புறமோங்க. (1)

ஆளூநாயகரடங்கியமுதலெனுமாண்டுதொட்டதுவாக
மீளூநாளுடைத்திங்கடோறினுமுயர்விழவெனுங்கந்தூரி
கோளூறுந்தகைநாகபட்டினத்தினர்குறையறப்புரிகிற்கத்
தாளூலாமுதுவரவரப்பெரும்புகழ்தாங்குபுதிசைபோய. (2)

காணுறப்படும்சாகுல்கமீதெனுங்காவலர்விழைவோர்க்குப்
பூணுறப்பலவரமளிப்பதுமுயர்புரிபுதுமையுமெல்லாம்
வேணுறப்பஃறிசைசெலச்செலப்பெரும்விறல்விழவுறுகாலஞ்
சேணுறப்பொலிகுநர்பலவிருப்பினர்திரடிரள்வருவாரால். (3)

ஆண்டுதோறுறுவிழவுகாண்விருப்பினரருங்கழல்பணிநெஞ்சர்
வேண்டுபல்வரவாஞ்சையர்தக்கணைமிகைபடநல்குற்றோர்
தூண்டுபற்பொருண்மாற்றுநர்தேர்ந்தகைத்தொழிலினரிவர்யாருங்
கூண்டுவந்தொருவருடத்திற்கொருதரங்குழூமுலைகவழக்காண. (4)

இன்னவாறிதுநிகழ்வுறுகாலமொரெழில்விழவுறுமாண்டின்
மன்னவாய்ப்புடைக்கருத்திறத்தொட்டியம்வாழ்குநரவர்தம்முட்
பன்னவாவுடையாடவர்மடவியர்பாலர்மற்றவர்சூழக்
கொன்னருதநாகூர்புகூஉத்தக்கணைகொடுக்கியபுறப்பட்டார். (5)

கக்கமொன்றியபொக்கணைத்தினர்சுவற்காயபாற்சிசுவுள்ளார்
மிக்கமன்னியதலைச்சுமையவர்வலிவெரிந்கெழுமூடையர்
பக்கமொன்றியபுறப்படுகாலையோர்பணிமொழிமடநல்லா
ளக்கமொன்றியகண்டனளன்னவரகங்கொளவிதுகேட்டாள். (6)

ஈண்டைவைகுறுநீயிராற்குழுவினரெழுந்தனிரினிதாக
யாண்டையேகுதிர்கூறுதிரெனவிளயவ்வனமடமாளு
ளாண்டைநோக்கினரன்னவர்யாங்களிவ்வகனகர்கடந்தம்ம
பூண்டையங்கழலிறைஞ்சுநாகூர்புகப்போகுதும்பலர்போல. (7)

சித்தவேணவாமுடிபுறப்பிரார்த்தனைசெய்யவுமதுதீர்த்த
கத்தருக்குயர்தக்கணையளிக்கவுங்கழறெழுதணிசான்ற
சுத்தமிக்குறுவிழவுகாண்குறவுமேதொகுதியினெனவன்ன
மத்தகத்திளமுலையுடைத்தொட்டியமடவரல்பினுஞ்சொல்வாள். (8)

நீயிர்போகுமந்நகருறையாண்டகைநீண்டகாலமதாக
நோயிருந்துழலென்னருந்தலைவனைநொசிவுறுமகன்றன்னைப்
பாயிருந்தெழச்சுகம்புரிவாரெனிற்பகருந்தக்கணையோடு
மாயிரும்புவிபுகழவரடிதொழவரும்விழவடைவேமால். (9)

ஈதுசத்தியமென்றனளன்னவரியல்கவென்றனர்சென்றார்
மாதுமற்றவணிறந்திலம்புக்கினள்வளர்த்திடுமிளைதான
கோதுசெற்றதொர்சேவலைப்பிடித்தருங்கொழுநனைமகன்றன்னைத்
தீதுகெட்டறத்தீர்ந்திடக்கரங்கொடுதீண்டுதல்செய்வித்தாள். (10)

தீயநோய்க்கொழுநனுமகனுந்தொடுசேவலைக்கரத்தேந்தி
யேயகன்றநாகூருறையாண்டகைக்குரித்திதுவெனவிட்டாள்
பாயராம்பெரும்படுக்கையராமவள்பதியுமைந்தனுமாறு
நோயகன்றுறுநாட்குநாள்விரைவினிலெசிவறுஞ்சுகமுற்றார். (11)

தன்னுடைத்திருத்தலைவனுமைந்தனுஞ்சவுக்கியம்பெறக்கண்டா
ண், மின்னிடைத்தனிமடமயில்புளகெழவிம்மிதக்களிகொண்டாண்
மன்னுறுத்தியவ்வாரணந்தனைமகிழ்மகனினுமுவப்புற்றுத்
தென்னுறுத்தினள்வளர்த்தனள்பிரார்த்தனைச்சேவலென்றினிதாக.

விழுத்தகும்புகழ்நாயகரடிக்கெனவேண்டுதற்குறியாக
வழுத்தநெஞ்சொடுவிட்டதினருமைகொளன்பதுமிகக்காட்டிக்
கொழுத்தமைந்துறவோம்பினள்பருத்ததுகொழுமைகொண்டதுநா
ளும், வழுத்தனங்கெடமதர்த்தழகொடுநனிவளர்ந்ததுதிருச்சேவல்.

மேலதாயுறுபன்னிறமயிர்களும்விளங்கிவீழ்திருச்சூடும்
பாலதாய்க்கொடுவாளெனவகத்தியிற்படுமலரிதழென்ன
வாலதாய்நனிமயிர்செறிந்தமைந்தமுள்வளைவொடுநகங்கூர்த்த
காலதாயதுவளர்ந்ததுசெழிப்பொடுகாணியவளர்காலம். (14)

வேறு.

காவகத்துறுதொட்டியஞ்செழிப்புறக்காக்கு
மேவகத்துளகுறுநிலமன்னர்மாட்டிருந்து

சீவனத்தொழிலடத்தியபலபணிசெய்யுஞ்
சேவகத்தினன்வந்துழிக்கண்டனன்சேவல். (15)

கட்டுவிட்டதாய்மதர்த்துடல்பருத்ததாய்க்கவின்று
மட்டுவிட்டறக்கொழுத்ததாய்ச்செல்வத்தில்வளரப்
பட்டுநின்றதாய்த்தெரிதலுமறுத்துணப்பலநாள்
பெட்டுமற்றோர்நாள்வெருட்டினன்மறித்தனன்பிடித்தான். 16

ஆன்றநாயகரடிக்கெனத்தலைவனுமன்பி
னீன்றமைந்தனுந்தொட்டுவிட்டன்பொடுமினிதின்
றீன்றவிர்ந்ததையபலவன்பிடிப்பதுதெரிந்து
தோன்றவந்தனளோடுபுநோக்கினள்சொல்வாள். (17)

பெட்டவாவருள்செய்யுநாகூரவர்பெயரான்
விட்டவாரணமிதுபிடிக்கலிரையவிடுதிர்
கெட்டவாறிதுபெரியராலன்னவர்கேட்டிர்
துட்டவாவொழிக்குகிரெனப்பலமுறைஞ்சொன்னாள். (18)

காதுதாழ்த்திலன்கருதிலன்யாத்தனன்கால்கள்
சூதுளத்தினனொருகழிநுழைத்தனன்சுவறன்
மீதுகாயினனடந்தனன்றொடர்ந்தனள்விளம்பித்
தீதுகண்டதுகூயதுகொத்துபுசிரசில். (19)

கூவலுஞ்சிரங்கொத்தலுங்கருதலிர்குறியி
ராவலென்னைமீறுமெனெலிக்குரியதையன்றோ
சாவலொன்றனைவிடுகுதிர்நான்கதிற்றருவன்
றூவலொன்றினவழகினவெனப்பினுஞ்சொன்னாள். (20)

செறுத்துநோக்கினனணங்கவள்விளித்தனன்றிரும்பிப்
பொறுத்துநீயகல்கினுமரைநாழிகைப்பொழுதி
லறுத்துமேய்வன்மீறுமெனெலிக்குரியதேலகட்டி
னிறுத்துவாய்விடுஉக்கூவுங்கொல்கொத்துங்கொலென்றான்.

நுவன்றவிப்பரிகாசவன்மொழிகொளநொந்து
கவன்றநெஞ்சினண்மீண்டனளுறைவயிற்காணு

நவன்றழைத்துயர்சேவலைக்கொடுகளிநண்ணு
மவன்றனித்திலம்புக்கினனறுத்தனனட்டான். (22)

கறியினட்டனனடையலும்விழுங்கினன்களித்த
வெறியினித்திரைமயக்கியபடுக்கைவாய்விழுந்து
மறியவல்லுடலுறங்கினனள்ளென்யாமத்தி
லறியநோத்தலைக்கொண்டதாலவன்பெருமகட்டின். (23)

வெய்யவள்வயினோவெழுப்பதறினன்விழித்தான்
மெய்யவென்னெனக்கவன்றனனதிவிதிர்விதிர்த்தான்
பெய்யவன்குடற்புரட்டலும்பொருமலும்பெருக
வையகோவெனக்கதறினன்வாய்திறந்தழுதான். (24)

மனையுமக்களுமொக்கலுமயலரும்வந்தா
ரினையவன்றுயரெய்தியதென்னைமன்னியற்றும்
வினையவோபிறவோகணக்கோள்கொலோமேய
சுனையநோய்கொலோவென்றுளம்பதறுபுதுடித்தார். (25)

மந்திரப்பிரயோகமும்பல்விதமருத்துந்
தந்திரப்பிரயோகமுமியற்றினர்சால
நொந்திருப்பவன்வயிற்றுநோயடிக்கடிஓங்க
வெந்திரப்பொடுபுரண்டனனுருண்டனன்விழுந்து. (26)

மருந்தினானுயர்மந்திரத்தானகல்வழியில்
வருந்தினான்மிகவாலெனக்கூடினோர்மயங்கி
யிருந்தினாவினன்படுமனார்கண்டுளமினைந்தார்
பொருந்தினாவெனவந்ததுவைகறைப்பொழுது. (27)

நண்ணலுற்றிடைவைகறைதுயிலெழுநசையின்
மண்ணகத்துறைசேவல்கூக்குரல்புரிவழக்கி
னெண்ணமற்றவனுரைத்தவாசிறகடியியம்ப
வண்ணவொண்ணெழிற்சேவல்கூயதையவன்வயிற்றில். (28)

உண்டுதீர்ந்தவஞ்சேவறன்வயிற்றுழியுயிர்த்துக்
கொண்டுவாய்விடூஉக்கூவலுமவன்குலைகுலைந்து
விண்டுசாய்ந்தெனமூர்ச்சனையடைந்தனன்விழுந்தான்
கண்டுநின்றவரயர்ந்தனருளமிகக்கலங்கா. (29)

பொருமிவிம்மியாங்குறுமியார்நெடுங்கடல்புரண்டு
வருமியற்கையின்வயிற்றுநோயென்றனன்வயிற்றிற்
பெரும்வியப்புறச்சேவல்கூயதையெனப்பேசி
யருமையீதெனமூக்குறைவிரலினரானார். (30)

என்னையாலிஃதென்றதிசயித்தனரில்லா
டன்னைநீயுணர்ந்துளதுரையென்றனர்தைய
லன்னையேங்கவொர்சேவலைப்பிடித்தறுத்தட்டு
முன்னைவேளையிற்றின்றனரென்றதுமொழிந்தாள். (31)

சேவறன்வரலாற்றொடுநிகழ்ந்ததுதெரிந்தார்
நாவறன்னுடனவரிதுதுளங்குறுநாகூர்க்
காவலன்பினரிரந்திரங்கிடினிதுகழிமென்
றாவலன்பினள்வாரணத்தினள்வரற்கழைத்தார். (32)

தெரிந்தமாதவளன்னவனென்னெழிற்சேவல்
விரிந்தவான்புகழாண்டகைக்குரித்தெனவிண்டும்
பரிந்தவார்த்தையிற்கெஞ்சியுங்கருதிலன்பதகன்
புரிந்ததற்கடைந்தனனினித்தாங்கொணாப்புன்மை. (33)

அனையதீமையன்விழிமுகநோக்கலனடையேன்
வினையவெய்தினவென்றறைந்தவளவர்விடுத்தாள்
சினையிருந்தெனவடிக்கடிக்கூயதுசேவற்
றனையருங்கொடுநோதலுற்றவனதிதவித்தான். (34)

வாரணத்தொனியொடுங்கிலவோய்ந்திலவருத்தங்
காரணத்தையுமறிந்தினிப்பிழைக்கலன்கடிதி
னீரணத்தெனைத்தூக்கியிவ்வூருறையிசுலா
மாரணத்தினர்வயின்கொடுபோகெனவழுதான். (35)

புடையிருக்குநர்நன்கெனத்தூக்குபுபோந்து
கொடையிருக்குமூமீனவர்தெருத்தலைக்குழுவி
னிடையிருத்தினரன்னவரெவனெனவினையுங்
கடையிருக்குநன்வினவலுமழுதனன்கவல்வான். (36)

ஐயகேண்மினோநும்முடைநாகூரர்க்கான
செய்யசேவலையறுத்தனனட்டனன்றின்றேன்
வெய்யநோவயின்மேயதுகூயதுவிலகத்
துய்யநாயகர்வேண்டுதிரடிபராய்த்தொடர்பின். (37)

கரைந்தவாறிரங்கென்னிடர்கெடுத்திரிக்கணத்தில்
விரைந்தமைந்தவென்பொருட்களைமுதல்விலைவிற்றுப்
புரைந்ததொன்றிலாக்கழற்கவர்காணிக்கைபுகுப்ப
னிரைந்தவேதவான்பள்ளியிற்போயரோவின்னம். (38)

நானிருக்குமிவ்வழியோரீஇமனைமகநண்ணத்
தீனிருக்குநுங்நேர்வழிபுகுவனூற்செழித்த
தேனிருக்குமொண்புயத்தினிரென்றவன்சிந்தை
தானிருக்குமற்றவைகளுமியம்பினன்சால. (39)

சாற்றமற்றவரவனிடர்ப்படும்பரிதாபத்
தோற்றமற்றனவறிந்துளமிரங்கினர்துன்ப
மாற்றவன்புகழ்சாகுல்கமீதொலிமலர்த்தா
டேற்றமொன்றியபிணைப்புடனிரந்தனர்செப்பி. (40)

அன்னியத்தினனம்முயர்வழிதொடர்வதற்குப்
புன்னியற்றவன்படுமிடர்கழிக்குதிர்பொறுத்திட்
டின்னியத்துநாகூரினாயகரெனவிரந்தார்
சொன்னியத்துடனழுக்கறுத்துயருளந்தூயோர். (41)

மாவிரட்சகரெனும்பெயர்புனைந்தநம்வள்ளல்
காவிரப்பினர்கண்டுளந்தனையறக்களிப்பத்
தூவிரப்புறுதினிலையோங்குபுதுளங்கப்
பூவிரப்புடையவன்புரிவல்வினைபொறுத்தார். (42)

அக்கணத்தவன்வயின்கெழுநோய்முழுதடக்கித்
தக்கநற்சுகம்பற்றினர்மகிழ்ந்துளந்தழைத்தா
னுக்கணத்தினரதிசயித்தாண்டகையுவந்தா
ரிக்கணத்தியான்கூறினமுடிப்பலென்றெழுந்தான். (43)

இலம்புகுந்தனன்மனைமகவொக்கன்மற்றெவரும்
பலம்புகும்வழிவரவவனும்புகழ்பாவு

நலம்வரும்வழிபற்றினன்கூறினனயத்தின்
கலம்பொரும்பவக்கடலிடையெனுமுயர்கலிமா. (44)

இழிவழித்துயருய்த்திடுநன்னிலையிசுலாம்
வழிபிடித்தனன்றற்பொருள்கொளவிலைவழங்கிச்
செழியநன்முகத்தொடுநிதிதொகைபடச்சேர்த்துக்
கழியவங்குநாகூரிடைவந்தனன்கடுகி. (45)

வள்ளலார்திருப்பள்ளியின்முன்றிலின்வந்து
கொள்ளைவைத்தவுண்டியனுழிக்கொணர்நிதிகொட்டி
விள்ளரும்பெரும்பணியொடுதுதித்துளவிழைவி
னள்ளருந்திறம்பவுத்திரர்க்குற்றதையறைந்தான். (46)

கேட்டவன்னராம்பவுத்திரராதியர்கிருபை
நாட்டவந்தநந்நாதரைப்புகழ்ந்துளநயந்தார்
சாட்டவன்னவன்மேவிநாகூரிடைத்தங்கி
வேட்டசில்லநாளிருந்துதன்னகர்புகவிரும்பா. (47)

உதவுநாயகர்பள்ளியில்பாத்திகாவோதிப்
பதமிகப்பணிந்தன்னவர்பவுத்திரர்ப்பரவி
விதமுறப்புரிவனபுரிந்தவர்தரும்விடையின்
றிதமுறப்படுமன்னவன்றற்பதிசேர்ந்தான். (48)

அரியவற்புதமாமிதுபுவிமுழுதகன்று
விரியநின்றதந்நாண்முதலொலிகடம்வேந்தர்க்
குரியவான்பொருடிரணமேயாயினுமுண்ணப்
பிரியமாகுநரவன்பெறுநோமிகப்பெறுவார். (49)

என்னுமீதுயர்நம்மனோர்தம்முடையிதயந்
துன்னுமாறமைந்துளதென்னின்மையாடுரையின்
மன்னுவான்பொருடூண்டவுங்கருதலர்வழக்காற்
பன்னுமார்கலிபுடைகொளவளைந்தவிப்பாரில். (50)

சேவற் படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 761.

# குருடு மாற்றிய படலம்.

பாண்டும்பியலம்பும்பொழில்பரவுந்திருநாகூ
ராண்டும்பரிளவருஞ்சொலவமரும்பெருமானார்
மீண்டும்பரினடைவற்சரவிறலார்மதிகாணும்
வேண்டும்பலர்குழுமிப்பொலிவிழவுற்றதையன்றே. (1)

நேர்ந்தாரினிநேர்வார்முனநேர்ந்துற்றனவாகக்
கூர்ந்தார்விழைவொடுதக்கணைகுவிசெய்குவர்பிணியிற்
சோர்ந்தார்துயருற்றார்பகைதொடர்புற்றுவருந்தி
யார்ந்தாரிவரெல்லாருமடைந்திட்டனரன்றே. (2)

இவ்வாறடைகுற்றோர்தமுளெழில்கொண்டவொர்மடவா
ளொவ்வாவறுதொழிலாளரினுள்ளாளொருகலயத்
திவ்வாறெனலரிதாகியவிழுதானினதுடனே
குவ்வானவர்புகழ்நாயகர்கோயிற்குணுழைந்தாள். (3)

அங்குற்றிடுபலவற்றினுமழகுற்றமர்பெரிதாஞ்
செங்குத்துவிளக்கிற்கொடுதெரிசிப்பினுகுத்தா
டங்குற்றதுநில்லாமலுதகமொத்துவழிந்து
பொங்குற்றதுசிந்தித்தரைபுதுமைத்தெனவன்றே. (4)

தீபத்துகுநெய்யானதுசிந்துற்றதுமன்றிக்
கோபத்தவளிருகண்ணொளிகுருடுற்றனவன்றே
சாபத்தினளஞ்சிப்பரிதாபத்தொடுவாடி
யாபத்தடைகுற்றேனெனவழுதுக்கடைநின்றாள். (5)

கெட்டேனிஃதென்னேயவிகிளர்தீபமுகுப்ப
விட்டேனதுசிந்துற்றதுவிழியுங்குருடாகப்
பட்டேனினியென்னும்வினைபடுவன்கொலெனத்தா
னட்டேன்வழிகுழலாண்மிகவழுதாளடிதொழுதாள். (6)

கண்கெட்டுமயங்கித்தரைகைதொட்டிடநீவிப்
புண்பட்டுளமிகநொந்துபுலம்புற்றிடுகாலை

திண்பட்டவர்வழியுற்றவர்சிலருற்றவள்விளியாப்
பண்புற்றனையென்னையதிபடருற்றனையென்றார். (7)

எழுவாளுளமலைவாண்மிகவிரைவாள்விழியற்று
விழுவாடனையவனுற்றவர்வினவித்தளர்வெய்தி
யழுவாறெவனெனமற்றவளவலத்தொடுமவரைத்
தொழுவாறெனவடிவீழ்ந்தனள்சொல்வாளிதுவன்றே. (8)

ஐயீர்தமியாளென்னகரமர்வுற்றிடுமொருநாள்
பையுற்றிடுமுதுகோர்சிலர்பயணத்தினரானார்
மெய்யுற்றெவணகல்விற்றெனவினவுற்றனனன்னோர்
கையுற்றவள்கேளென்றிதுகவலற்றுமொழிந்தார். (9)

நாகூரமர்பெருமான்றிருநகர்கண்டுகளித்து
வாகூர்தருகாணிக்கைவழங்கும்பயணத்தேம்
பாகூர்தமியாளென்றிதுபகரத்தருணத்தே
நேகூர்மனமுற்றொன்றிதுநேர்ந்தேனதுகேண்மின். (10)

புருடற்குளவிழிகெட்டனபுலனற்றினிவிரைவிற்
குருடற்றொளிபெறலுற்றிடிற்குறைவற்றவொர்பணயப்
பொருடக்கதுபெறுமட்டவிபொலியக்கலயத்தில்
வருடக்குறுவிழவிற்கொடுவந்துற்றுயர்கோயில். (11)

தூண்டுற்றெரிதீபக்குழிசொரிவன்னெனவின்ன
வேண்டுற்றனனன்றேயிருவிழிபெற்றனதெளிவு
காண்டுற்றனனுவகைக்கடல்கலயத்தவிகொண்டு
மீண்டுற்றனனீண்டைக்கினிவிளைவுற்றதுதீது. (12)

நான்றுப்புரவொடுகொண்டுறுநறுநெய்யொருபணயம்
மூன்றுக்கிவண்விலையாமெனுமொழிகேட்டனன்கெட்டேன்
பான்றக்கதின்விற்றிட்டொருபணயக்கிவண்வாங்கி
யூன்றக்கொடுதீபத்தினுகுப்பாமெனவெண்ணா. (13)

விற்றேனுயர்பணமூன்றுறவிலையாவொருபணநெய்
பெற்றேனிவண்கொடுவந்துறைபெருமான்றனிமுன்றி
னுற்றோர்கெழுதீபத்தினுகுத்தேனதுவழியா
வெற்றேனெனநிலனோடினவிழிகெட்டனவந்தோ. (14)

இருகண்களும்பணயங்களிரண்டுக்குமிழந்தே
னருகண்மினிரென்றேங்கினளழுதாளிதுகூறிப்
பெருகண்மையரவளாற்றுபுபின்னுற்றடைகென்று
கருகன்னவளொடுமீண்டனர்கடைவீதிபுகுந்தார். (15)

இவள்கொண்டுறுநெய்கொண்டவரிவனுற்றவர்தம்மு
ளெவரென்றவர்வினவுற்றனரியலுங்குணமறியத்
தவலின்றமர்நிறையங்கடைதமிலுள்ளவொர்கடைஞ
னவமொன்றியபணயங்கொடுநான்வாங்கினனென்றான். (16)

மற்றாரிருபணயங்களை வாங்கிக்கடைகாரன்
பெற்றாரவளித்தேயுறுபெண்ணைன்றுகொணர்ந்து
விற்றாரவிவாங்கிக்கொடுவிவரத்தினியம்பி
யுற்றார்கெழுதீபத்திடையூற்றென்றுபுகன்றார். (17)

தெரியாதுபுரிந்தேனிதுதெரிவுற்றனனிசைபோய்
விரியாதபொறுத்தீரெனவேண்டிக்கொடுநின்றே
யுரியோருரையாங்கன்னவளுளநெக்குருகுற்றுப்
பரிதாபமனத்தோடுபகர்ந்தானவியிட்டாள். (18)

தாண்டுற்றவளேங்குற்றுயர்சாட்டாங்கமியற்றி
வேண்டுற்றவிசிந்தாதுவிளக்குக்குநிறைத்தாண்
மர்ண்டுற்றனமெனநைந்தழமங்குற்றபுலன்கண்
மீண்டுற்றனவிருகண்ணும்விளக்குற்றனகண்டாள். (19)

செய்யாதனசெய்தேனிதுசெய்யாதினியெவரும்
மெய்யாகவறிந்தேனிசைமேவும்பெருமானும்
வையாரிவர்பொருள்வீழ்ந்தநர்வாழாரொருகாலு
மையாவெனவவரேத்தினளவளூரையடைந்தாள். (20)

மாணுயர்நாகூரைவணக்கத்தின்விடுத்துப்
போனுறைதன்னூரிதுபுதுமைத்தெனயாருந்
தேனுர்மொழிதமர்மற்றவர்தெரிவிப்பினுரைத்தாள்
கோனுர்கழலேத்தும்பலன்கொண்டுற்றனரவரே. (21)

குருடு மாற்றிய படலம் முடிந்தது.

ஆகச் செய்யுள் 782.

# சபதப்படலம்.

இறவுண்டெழுந்திட்டிளநாரைகளெக்கர்வைகு
நறவுண்டநீலநறுநீள்கழிமேவுநாகூர்த்
துறவுண்டமேலோர்பெருமான்புவிதுறந்துபோந்த
வுறவுண்டவாண்டின்றிருவார்விழவுற்றதன்றே. (1)

காற்றினிகக்குங்கலிமான்றேர்வீரரோடு
மேற்றினிடிக்குங்குரலேர்க்களியானைமன்னர்
வீற்றினிருக்கும்பிறவாண்பொருண்மிக்கோர்மன்னிப்
பேற்றினிருக்கும்பெருமானகர்பொங்கிற்றன்றே. (2)

திருவின்விழவுதரிசித்தருள்சேருமாறு
வருமன்னவருளொருமாமடவாளுமுற்றாள்
பொருவில்வளங்கள்பொலிபார்ப்பாளூரில்வாழு
மருவுண்டபொன்னிமரைக்காயன்மணந்தமின்னாள். (3)

மகரப்பரவைமணிமாமுத்தனையவொண்பற்
சிகரக்குவட்டிற்குவிந்தோர்த்திரளுற்றகொங்கை
நிகரற்றகன்றுசெவிபோகியநீலவுண்கட்
டகரக்குழலினவளாந்தரியாபீவியென்பாள். (4)

அன்னமனையநடையார்தரியாபீவியவள்
பொன்னஞ்சிவிகைபுடையோர்வரச்சூழ்ந்திட்டேறிக்
கன்னன்மொழிசேர்கவின்பாங்கியர்தாங்கிப்போத
மன்னப்பரிவாரமதாரணிநாகூர்புக்காள். (5)

பைந்தாரின்சோலைபகல்கான்றமர்நாகூர்மேவி
வந்தாள்பெருமான்மணிமாநகர்முன்றினின்று
தந்தார்விழைவினுயர்வான்பொருள்சாலவாங்கி
னிந்தார்மதில்சூழ்மனையொன்றுழியின்பினுற்றாள். (6)

ஓங்குற்றமைந்தபெருமான்விழவுள்ளோர்வாழ்த்தப்
பாங்குற்றபத்தாந்தினம்போய்ப்பகலாயபோது
தாங்குற்றகீர்த்திமிகுஞ்சாகிபுமாருண்மூத்தோர்
தீங்கற்றசொன்றியமஃதட்டனர்சேரவீந்தார். (7)

அடிசிலவையாவரியட்டவைகொஞ்சமாக
வடிவற்றகன்றுகுழிந்தாழ்ந்தமட்பாண்டம்பெய்து
கடியுற்றசந்தமிறைநாப்பணிற்காணவைத்துத்
தொடியுற்றயாழ்க்கைத்துணைமாமுலைக்காளினீந்தார். (8)

வந்துற்றசொன்றிவகைகாண்டமர்தரியாபீவி
வெந்துற்றுநெஞ்சமிகவாக்கடுப்புற்றுக்கண்கள்
சிந்துற்றதீயிற்செறிபாங்கியர்மாழ்கநோக்கி
முந்துற்றுநாவின்முறைபோகியசொல்லுகின்றாள். (9)

என்னுற்றமேன்மையினைத்தென்றறிந்துள்ளவின்னோர்
மன்னுற்றிறையும்மதிக்காதிருமாப்பினுற்றுக்
கொன்னுற்றிழிந்தகொழியல்லரியட்டசொன்றி
தென்னற்றகன்மட்கலம்வாய்வரச்சேரப்பெய்து. (10)

எய்த்திட்டிரக்குமெளியோரவர்க்கீவதேபோ
லுய்த்திட்டாரெற்குமொருநாளென்னவெண்ணகில்லார்
னைத்திட்டவருக்கினியான்செய்வனன்கினென்று
பைத்திட்டபாம்பின்பகல்காசருளல்குல்சொல்வாள். (11)

அயரப்புரிந்தோரவர்தம்மையிப்பள்ளிநீத்துப்
பெயரத்துரத்திப்பிஜாப்பூர்வயின்மேவுகிற்கு
முயருற்றமேன்மையவர்செய்கதீக்குல்லாதம்மைத்
துயரற்றவொக்கலொடுமீங்கழைத்திட்டுச்சூழ. (12)

இங்கணிருத்தியிரும்பள்ளியின்வாழ்திரென்று
நங்கையொருத்திசிலநாளினிற்செய்புகிற்பேன்
றிங்களிதற்குண்மொழியாங்கிதுசெய்யேனேலென்
கொங்கையறுத்துக்குரைநாய்க்கிரையீவலென்றாள். (13)

கொங்கைதடிந்துகுரைநாய்க்கிரையீவலென்று
சங்கைதுறந்ததரியாபீவிசபதமிட்டுத்
தங்கப்பணியினவள்பாங்கியர்சார்ந்துசூழ
வெங்கட்பகையினொடுநாகூரைவிட்டுப்போந்தாள். (14)

வெச்சென்றநெஞ்சனுயர்நாகூரைவிட்டுநீங்கிப்
பச்சென்றசோலைப்பார்ப்பாரூர்வயிற்புக்கியன்றே

பச்சொன்னவண்ணமவளாள்கணக்கனைக்கூவி
பிச்சொன்னவாற்றொரெழிற்காகிதந்திட்டுகென்றாள். (15)

தேனுற்றசோலைசெறிநாகூரிற்போந்தவாறுங்
கோனுற்றவன்னோர்கொழியல்லழுப்பீந்தவாறும்
வானுற்றதின்றிமனமார்புழுக்குற்றவாறுந்
தானுற்றவன்மைச்சபதம்மொழிந்திட்டவாறும். (16)

ஏக்கற்றெழுதியிதுவோலையைக்கண்டபோழ்தி
னூக்கற்றுநீயிர்நுமரோடவண்விட்டுநாகூர்
நோக்குற்றுவந்துநுழையீர்வருவன்யானென்ன
வூக்குற்றுவளேயுரைத்தாளவன்றீட்டினால். (17)

ஓலையெழுதியுறவேமுடித்திட்டுநிற்கும்
வேலையவன்கைகொடுத்தாரளிமேவுவான்பூஞ்
சோலைதிகழுந்துயர்தீர்பிஜாப்பூரினுற்றார்
வாலையறிவின்வளர்சீரியர்க்கீதியென்றாள். (18)

வேறு.

வார்திகழ்களபக்கொங்கைமயிலனாளெழுதுமோலை
சீர்திகழ்பிஜாப்பூர்வாழும்செய்கதீக்குல்லாகொள்வான்
பேர்திகழ்வேலையாடன்பிறங்குகையநுப்பிப்பின்னர்
சூர்திகழ்நெஞ்சண்மற்றோர்சூழ்ச்சியன்றுன்னினாளால். (19)

முன்னுநாஞ்சொற்றவண்ணமுடித்திடவேண்டுமாயின்
மன்னவார்தஞ்சைகாக்குமணிமுடியரையர்கோமான்
றன்னநுமதியுங்கொள்ளறக்கதாமின்றேலின்று
சொன்னவாமுடித்தலாங்குத்துணைபெறப்போதல்வேண்டும். (20)

ஆகலினரசர்கோமாற்காணியவருமைசாலும்
பாகவொண்பொருள்கள்கொண்டுபணிகழற்காணிக்கையி
னோகறக்கினதாலென்னவிருங்கருந்தடங்கணங்கை
நாகவொண்மணிகளாதிநற்பொருடொகுத்திட்டாளால். (21)

பன்னிருகுற்றந்தம்முண்மிக்கவாங்காகபாத
நன்னரில்களங்கம்வீந்துவேகையிநான்குநீங்கி

மன்னியகுணமோரைந்துமரீஇமுதற்சாதியாய
வன்னமிந்திரசாபத்தின்வடிவுடைவயிரம்பல்ல. (22)

எண்வகைக்குற்றந்தம்முளேகையேமாலேயோடு
கண்மறையிருளாமின்னகுற்றங்கள்கலவாதெட்டாம்
மண்பெறுகுணத்துளாம்பொன்வரிக்கடைவயிற்றினெத்துத்
திண்வருபசுமைபூத்துத்தெளிமரகதங்கள்பல்ல. (23)

பிறப்பிடம்வருணநாமம்பெறுகுணங்குற்றமங்கே
யிறப்பகல்விலேமாபத்தியென்பனபிறவுங்கொண்ட
சிறப்பகல்குற்றநீங்கிக்குணங்களிற்றிறத்தவுற்று
மறுப்பறுமுயர்வாஞ்சாதிமாணிக்கவருக்கந்தம்முள். (24)

தாமரைக்கழுநீரோடுசாதகப்புட்கண்கோபங்
காமருகத்தியோதங்கதிர்கெழுவிளக்கமின்பப்
பூமருமாதுளத்தின்பொலிவிதைவன்னிபத்தாந்
தாமருநிறத்தினன்றதகையசாதுரங்கஞ்சில்ல. (25)

திலகமுமேலாத்திரம்மாசெம்பருத்தியின்வீமிக்க
மலர்கவிர்குன்றிகானின்வளர்முயலுதிரம்பண்பி
னிலகுசிந்துரமேருக்கிற்கண்ணெனுமெட்டாமின்ன
வலர்நிறங்கலந்துதோற்றுமருங்குருவிந்தஞ்சில்ல. (26)

குயில்விழிசெம்பஞ்சோடுகொய்மலர்ப்பலாசம்பல்பூப்
பயிலசோகத்திருகுபடுதளிர்குவளேபூளே
வெயில்விடுமலர்களென்னும்விரிநிறமாறுமேய
மயில்பகல்கான்றுவைகுமாண்பின்சௌகந்திசில்ல. (27)

கோவையங்கனியினேடுகுராமலர்சூளேபட்ட
தேவையின்சுடுமண்மஞ்சளெனவுயர்சிறப்பினன்கு
மேவையில்குணங்களோடுவிரிநிறங்கெழுமித்தோற்று
மோவையின்றொளிகால்கிற்குமுபர்ந்தகோவாங்குசில்ல. (28)

பொன்றெளித்தனேயநீரின்புருடராகங்கள்பல்ல
மின்றருகதிரினேடுவிளங்கெழின்ஞாயிறன்ன

மன்றருசுடரினுந்தெண்மட்டிருவனமந்துகாணும்
வன்றிகழ்வயிடூரியவருக்கத்துஞ்சிலவாப்பல்ல. (29)

குணம்பதினொன்றினோங்கிக்குற்றமோரெட்டும்போகிக்
கணமொருநான்குமேவிக்கடற்புவிகாவலாள
ரிணங்கியகொள்ளுமாற்றினிருடெளித்தனையநீர
மணங்கெழுகாயாநெய்தன்மலர்பொருநீலம்பல்ல. (30)

மஞ்சளுஞ்சிவட்புமொன்றமருவுபுகலந்தாலொத்த
வெஞ்சலினொளிவினோடுமிலங்குகோமேதகத்தின்
மிஞ்செழிற்குணத்தின்குற்றம்விட்டனவாயமாரி
யஞ்சருங்கரத்துமன்னர்க்காம்வருக்கத்தும்பல்ல. (31)

பல்லவாங்குற்றமேனும்படர்தருகாற்றேமண்ணே
கல்லதேநீரேயென்னுங்கடுங்குறைமுழுதுந்தீர்ந்து
நல்லவாங்குணங்கடம்முண்குகதிர்மதியம்வெள்ளி
சொல்லங்காரகனென்றின்னசோதிசேர்முத்தம்பல்ல. (32)

கருவிடைத்துளையமற்றுக்கல்லிடுக்கிடையிற்புக்கு
வருமிடைமுடக்கமுற்றவகையமாமுறுக்கினோடு
திருகுடையனவாமிக்கக்குற்றமிம்மூன்றுந்தீர்ந்து
தருநிறமுருட்சிமேயதகைக்கொடிப்பவளம்பல்ல. (33)

கேழ்கிளர்சாதரூபங்கிளிச்சிறைமாறகில்லா
வீழ்வுடையாடகஞ்சாம்பூநதமெனும்விதத்தின்
ருழ்தகையற்றுநூலிற்றகைபடுநான்கினாய
வாழ்வருசெல்வநல்கவருமுயர்பொன்னம்பல்ல. (34)

ஒண்டிகழ்பட்டநந்தமொருங்கிவையனைத்துஞ்சேர்த்துத்
திண்டிறற்றடந்தோட்டஞ்சையரையனைத்தெரிசிப்பாற்கு
வண்டிமிர்கருமென்கூந்தன்மணிநகையிளையகொங்கைக்
கண்டிரிமொழியினல்லாள்யாத்திரைகவினப்பட்டாள். (35)

வேறு.

அன்னமாமயிலாமெனுமாயிழை
பன்னுமாரிபளிங்கினொண்கதிர்ப்

பொன்னமாமலைமீதுபொழிந்துலாய்
மன்னுமாறெனமஞ்சனமாடினாள். (36)

நேசமுற்றவர்நெஞ்சுருகுற்றிட
வாசமுற்றுமணத்தினமைப்புறப்
பாசமுற்றுப்படரெரிவாய்ஞ்ஞிரி
யாசமிட்டளகத்தையுலர்த்தினாள். (37)

அஞ்சுவாசயமைந்தநலத்தெறு
மஞ்சுவாரவிமைக்குழல்சீவுபு
கொஞ்சுதேமொழிக்கோதையர்மெச்சிய
பஞ்சபாலினோர்பாலெனவாக்கினாள். (38)

மூசுசூழ்ந்தளிகொன்றையைமுன்பனி
மாசுசூழ்ந்துமறைத்தெனவொள்ளொளிக்
காசுசூழ்ந்துகவின்கெழுமல்குலைத்
தூசுசூழ்ந்துதுளங்கவுடுத்தினாள். (39)

பட்டுமன்றுபடரொளிக்கச்சினை
னட்டுமன்றுநடந்தெதிராமெழிற்
கட்டுமென்றாக்காளையர்தோட்களை
முட்டுமென்றுமுலைத்தலைமூடினாள். (40)

தீயினன்னசெழுங்குலைக்காந்தளின்
வீயினன்னவிளங்கெழிற்கைகளான்
மேயினன்னிலைவெஞ்சுறவின்பகு
வாயினன்னவயந்தகஞ்சூடினாள். (41)

முத்துமாலையுமூசளிபாடுபூந்
தொத்துமாலையுந்தோழியராற்புரள்
வித்துமால்வரைமீதருவித்திர
டத்துமாறெனவொண்முலைதாங்கினாள். (42)

பொற்புறுத்தபொலம்வளைசூடகங்
கற்பதித்தகடகங்கடிகொள
வற்புதத்தினமைந்துயர்யாழெனு
நற்பணிக்கரநன்குறச்சேர்த்தினாள். (43)

கோத்தசங்கிலிகொண்டசரப்பளி
சாத்தவாய்ந்தசவடியருங்கயில்
யாத்தபொற்பணியாவுமிலங்கெழில்
பூத்தகந்தரம்பூணியசேர்த்தினள். (44)

சோதிகான்றுதுளங்குறுமங்குழை
யாதிவள்ளையிரண்செவிமன்னுபு
மாதினைமணித்தொகைகாணிய
வீதிகாலும்விளக்கெனச்சேர்த்தினள். (45)

காளைமாருயிர்கவ்வியபோழ்ந்தென
வாளைவாயின்வணங்கியமாநெளி
மூளைவாய்மணிமோதிரமும்பல
நீளைமேயவிரைவிரற்சேர்த்தினள். (46)

பரியகத்தொடுபர்டகநூபுர
மரியகத்தொடரிமணிக்கிண்கிணி
விரியகத்துவிளங்கெழின்மன்னிய
தெரியலத்தகச்சீறடிசூட்டினள். (47)

மஞ்சுவார்குழன்மாமலர்சூட்டுபு
கொஞ்சுதீஞ்சொல்குடங்கையகன்றுறு
நஞ்சுதங்கியநாந்தகமுங்கய
லஞ்சுகண்களிலஞ்சனந்தீட்டினள். (48)

ஏனையொண்பணியென்பனயாவையு
மானைநேர்விழிமங்கையணிந்தனள்
கானைமேயகருங்குழற்பூண்முலைத்
தேனைநேர்மொழிச்சேடியர்க்கூயினள். (49)

பஞ்சைமேவடிப்பாவையர்நோக்குபு
தஞ்சைமாநகர்சார்குதன்மேயினேன்
விஞ்சையாயினிவேண்டுவயாவையு
மெஞ்சையேகவியற்றுதிராலென்றுள். (50)

கண்பொரும்மிகுளைக்கணமுந்திர
டிண்பெறும்புயச்சேவகமாக்களு

மொண்பொருட்பலவோடுமெழுந்தனர்
பண்பொடும்புறப்பட்டனணங்கையே. (51)

சேடிமாரொடுசீர்கெழுபொற்பணி
சூடியார்திருத்தோழியர்மூப்பியர்
கூடிமேவியகொம்புறைதோளினர்
பாடியேகுறப்பல்லக்கினேறினள். (52)

வேறு.

காவியங்கருங்கட்கோங்கின்கவின்முலைத்தரியாபீவி
மேவியங்குறைவோர்சூழவிளங்கும்பொற்சிவிகையேறிப்
பாவியபழனக்காட்டின்பணிகொள்பார்ப்பாரூர்நீங்கித்
தாவியவிழைவினோடுதஞ்சைநோக்குற்றுச்சென்றாள். (53)

விண்டுபார்த்தென்னவோங்கிவேற்படைத்தானைச்சாய்வின்
மண்டுசீர்க்கருப்பங்காடுமஞ்ஞைகண்மலர்த்தியாட
வண்டுபாண்செய்யுஞ்சோலைமருவியவயினுந்தேற
லுண்டுமாமந்திபாயுமுயர்வனம்பலவுநீத்தாள். (54)

அரசிளங்குமரியன்னவணிபுனைதரியாபீவி
விரசநெஞ்சினளாய்வண்மைவிளங்கிடன்பலவுநீங்கி
முரசொருமூன்றுமார்க்குமுதுநகர்தஞ்சையென்னும்
புரிசைசூழ்போந்தஞாங்கர்புகுந்தனளுவப்பினன்றே. (55)

வில்லொன்றுபுருவவாட்கண்விளங்கிழையவ்வூர்காப்ப
ணில்லொன்றுவைகிச்சின்னாளிருந்தனள்கமழும்பூந்தார்க்
கல்லொன்றுதிண்டோண்மன்னர்காவலற்றரிசிப்பெய்தச்
செல்லொன்றுமழையினுகச்செலுத்தியநிதியோடன்றே. (56)

வான்பொருணிதியமற்றும்வழங்குவோர்க்கீந்துபாயு
மீன்பொருகண்ணியவ்வூர்மேன்பதமுடையார்மாட்டுத்
தான்பெறுமுதவிகொண்டுதரியலர்க்குருமினைத்த
தேன்பொலிதாமத்திண்டோட்செம்மலைத்தரிசித்திட்டாள். (57)

அரும்பொருள்வபத்தமுற்றுமருங்கழற்கால்கட்கென்று
கரும்புறழ்தோளிகொண்டுகாணிக்கையாகவைத்துப்

பெரும்புகழவனைவாழ்த்திப்பெருமநுஞ்சமுகஞ்செய்யுந்
தரும்பலனுடையமன்றாட்டொன்றுளசாற்றக்கேண்மின். (58)

எனவிசைத்தரையர்கோமானிதயமுற்றுறையுமாறு
வினமகற்றரியநாகூர்வேந்தர்சாகுல்கமீதின்
பனசமுற்றமைந்தமேன்மைப்பவுத்திரர்மீதன்னோற்கு
மனவெறுப்பாகநாளும்வழங்கினள்குறளைமல்க. (59)

தனக்கவர்செய்ததென்னுந்தகையகங்கரந்துமற்ற
மனக்கவலருளும்வார்த்தைவஞ்சத்திற்புணர்த்திப்பின்னு
மினக்குறையொழிந்தோரானுமிணக்கிமாவரையனுள்ளஞ்
சினக்குறிப்புறச்செய்திட்டுச்சிஃறினம்போக்கினாளால். (60)

ஆங்கிதுபுணர்த்தவொண்பூணணிமுலைமடமானன்னை
ணீங்கியூர்மீள்வானாகநிருமித்தோர்தினத்தினாளும்
வாங்குவிற்றடக்கைக்கோமான்மலிபுகழ்ச்சமுகம்போந்து
தீங்கதுமுடிக்குமாறுந்திறஞ்சிலசொல்லுகின்றாள். (61)

வேற்கரத்திறைவர்தாழும்விறல்கெழுகழற்காலண்ணல்
பாற்கரத்துறைந்தநாகூர்ப்பள்ளியிலிருக்குமன்ன
னோற்பியறுறந்தார்நீக்கிநூன்முறைப்பிறரைநன்கி
னாற்புறத்தினரும்போற்றநலத்துடனிருத்தல்வேண்டும். (62)

ஆங்கையினின்னசெய்யுமுயரதிகாரந்தன்னை
வாகையின்றமியாண்மாட்டுவழங்கிடினியற்றுகிற்பே
னோகையினென்றாளன்னவொளிர்முடித்தஞ்சைமன்ன
னீகையிற்கருதானாயின்னிதயத்தினியற்றுகென்றான். (63)

இணங்கியவண்ணஞ்செய்கென்றெழுதுபத்திரமுமீந்தா
னணங்குளம்புளகமெய்தவரையனுத்தரம்பெற்றன்னாள்
கணங்கலந்துற்றுமேவக்கடிநகர்தஞ்சைநீத்து
மணங்கெழுநாகூர்நோக்கிமதத்தொடுபுறப்பட்டாளால். (64)

கோல்வளைமுன்கைமானாள்குழுவொடுசிவிகையூர்ந்து
வால்வளைமுத்தஞ்சிந்தமலர்முறுக்கவிழ்ந்தவாம்ப
னீல்வரிஞிமிறுமாந்தநிறைமதுவிருந்தினூட்டுஞ்
சேல்வளர்கயத்தின்மூதூர்த்திசையொரீஇயுற்றாளன்றே. (65)

மான்கலைமுயலினோடுவழிவிளையாடுகிற்குங்
கான்களுமகரஞ்சிந்துங்கடிமலர்ப்பொழிலும்பல்ல
மீன்கெழுநதியுஞ்செந்நெல்விளைநிலன்பிறவுநீந்தி
வான்பொழிற்கொறடாச்சேரிவந்தனனிறுத்தாளோர்பால். (66)

சேல்குதித்துழக்கும்பொய்கைச்செழும்பொழிற்கொறடாச்சேரிப்
பால்குழுத்திரளின்வைகப்பணித்தனண்மடமானன்னோர்
கால்கணட்டிருங்கூடாரங்கவின்பெறவடித்துமற்றச்
சால்வகையமைத்தார்கோட்டுத்தடமுலையாளுமுற்றாள். (67)

கலைகெழுசிந்தைசாகுல்கமீதொலிபெருமான்கூற்றி
னிலைபெறுபெரியோர்தம்மைநீக்குவலின்றேலென்றன்
முலைதடிந்திடுவலென்றமொழியவண்முடிபுகாண்பான்
மலைகரந்தமைவினென்னமறைந்தனன்வானவெய்யோன். (68)

வேறு.

பிறங்குமணிப்பூண்முலைத்தரியாபீவிகொறடாச்சேரிவயி
னிறங்குதகையகூடாரமிட்டாங்கிருக்குமவ்விரவி
னுறங்குநள்ளென்யாமத்திலொலிகள்பெருமான்செயிரதனாற்
கறங்குசூறைதலைக்கொள்ளக்காயங்கருமைமேயதன்றே. (69)

காயந்திரண்டகொண்மூக்கள்கறுத்துச்செறிந்துமிகப்பரவித்
தோயந்திரண்டுவிழியனவாந்தோற்றப்புலன்கண்மழுக்கெய்த
வாயந்திரண்டகுறிகாட்டிமலிவாமின்னனனிமின்னி
மாயந்திரண்டபெருங்கடுங்கால்வளைந்துபுடைப்பவிளைந்ததன்றே.

விழித்தகண்கள்விழித்தாங்குவிறைப்பவுடன்மற்றுறுப்பெல்லாஞ்
செழித்தநிலையற்றுணங்கெய்தச்சிந்தையுணர்வற்றொடுக்கடையப்
பழித்தபடியினுறும்பார்வைபறியவென்னென்றெண்ணாத
வழித்தநினைவினவர்கிடப்பவருகின்மின்னும்பெருமின்னல். (71)

தியவிறங்கவுயர்வானந்திடுக்கென்றேங்கப்பிளப்பெய்தி
யாயவொலிகொலன்றாயினட்டகயமுமுறுமியகொல்
போயவொலியென்றவருள்ளம்பொன்றச்செவிடுசெவிவாங்கக்
காயமலையக்குலைந்தாங்குகடகடெனுமாவிடியேறு. (72)

ஓங்கிநிமிர்ந்தமரனெல்லாமொடிந்துஞ்சாய்ந்தும்விழச்சுழிகள்
வாங்கிச்செல்லவயனுட்டுவயினுங்கிருக்குமிருக்கைதனை
நீங்கிக்கடவாதெக்காலுநிற்பநடப்பவெனவாக
வூங்கிவன்மையவர்தம்மிலுழலவடிக்குஞ்சுழல்காற்று. (73)

இவணுற்றல்குநாமந்தோவென்செய்குவமாலினிநீப்பி
னெவண்மற்றடைவமெனவேங்கியேங்கியினையக்கருமேக
மவணுற்றிருந்துபொழிந்தென்னவடர்புற்றகன்றவாய்ச்சுழலுங்
கவண்வைத்தெறிந்தவிசைகொண்டகல்லின்விழுமான்மழைத்துறல்.

மேனிவிறைப்பவுறுப்பொருங்குவிதிர்ப்பினுதறவொடுக்குற்றுக்
கூனிமன்னுங்குலைகுலையக்கொடுகியாதுந்தோற்றாது
வானிற்புவியிலிருந்தவெலாம்வந்திட்டாங்கிதெனவவர்கள்
கானின்விலங்கிற்கொடுகொடெனக்கடுகிவீசுங்கொடுங்கூதிர். (75)

வானுநிலனுமுறுதெற்கும்வடக்குமேற்குங்கிழக்குமெனத்
தானுங்குறிப்பிலறியவழிசற்றுமின்றிமைக்குழைவு
மானுமாறுசுழல்சூளுமழுங்கிப்பெரிநீர்மாய்வுற்றுக்
கானுநகருமறிவரிதாய்க்கனைந்திட்டிருக்குமுனைந்தவிருள். (76)

மின்னேயுருமேகொடுங்காலேவீழுமுறையேகடுங்குளிரே
யின்னுவிருளேயனைத்தொன்றாயிருந்துகலக்கச்சுணங்குபிதிர்
பொன்னேயிளமாமுலைக்கருங்கட்பூவையவடன்பரிவார
மென்னேயெனநைந்துளமாழ்கியிருந்தாரொன்றும்பொருந்தாது. ( )

வருமாமின்னினொளிவிழிகண்மழுக்குற்றுழல்வார்சிலர்சிலரே
யுருமானுள்ளங்கலக்கெய்தியுழல்வார்மோதுஞ்சுழல்வளியான்
றிருமாவுரிபிய்ப்புறுமென்றுசிதைவினுழல்வார்சிலர்சிலரே
கருமாலிடியினடியுண்டுகலங்கியுழல்வார்மலங்கியரோ. (78)

வாதுவருத்துமிவையன்றுவானுநிலனுமுறமூடிக்
கோதுபடைத்தகனையிருளிற்குருடுற்றுரிற்றடுமாறி
மோதுவளியாற்கால்பெயர்க்கமுன்னேபின்னேயறியாமற்
றீதுபொறுத்துமாழ்குற்றார்செறிந்தகூதிர்தெறுந்தொறுமே. (79)

உடுத்தவாடைசிவீரிடமற்றுடலஞ்சிலிர்த்திட்டுறுப்பெல்லா
மடுத்தகாலினுதறிடவுள்ளமைந்தவீரற்குலையாடப்
படுத்தபடியுமிருந்தபிறபடியுமுறுதவாதுழன்றுதுயர்
தொடுத்தவாறுதெரிகிலராய்ச்சோர்ந்துகிடந்தாரோர்ந்தன்றே. (80)

பாவிக்கிடந்தசுணங்கின்முலைப்பாவையனையவொருதரியா
பீவிக்கியன்றகூடாரம்பீறமற்றைப்படங்கெலலாந்
தாவிக்கறங்கும்பெருங்காலிற்சாயப்பஃறுண்டாய்க்கிழிந்து
தூவிக்கதறச்சுகிர்பஞ்சிற்சுழன்றுகாயம்பறந்தவன்றே. (81)

தொடங்குமசலஞ்சலமாகச்சூறைவாய்ப்பட்டுறயாத்த
படங்குகிழிந்துசிதைஇவாணிற்பறப்பக்கால்கணிலன்சாய
முடங்குற்றிருந்தாரொதுக்கின்றிமோதுமுறைக்கூதிரினுலைந்து
திடங்குன்றியலிற்பலவழியுஞ்சிதறித்தவித்துப்போயினரால். (82)

ஏறுநிதியந்தீவழியினீட்டி நல்லவியற்றுத
சீறுகுணத்தன்பொலிவுற்றசெல்வம்பிதிர்ந்துசிதைந்தாங்கு
நாறுகூந்தலவளன்றிநண்ணியுறைந்தோரெல்லாரும்
வேறுவேறுவழிகொண்டுவெருவியகன்றுரொருவியரோ. (83)

ஓங்கியிருந்தகூடாரமொருங்குசிதைந்துவெளியாகப்
பாங்கினிருந்தோராற்றலராய்ப்பறியமழையுங்கடுங்குளிருந்
தாங்கியிருள்வாய்க்காருக்குந்தரியாபீவிதனித்தளர்ந்து
தீங்கினுலைந்துதானூருஞ்சிவிகைதிறந்துட்புகுந்தனளே. (84)

கூடிக்கிடந்தாரொருங்ககலக்கொம்மையிளமாமுலையினவண்
மூடிக்கொடுதன்பல்லக்குண்முனைந்துதாவுங்குளிர்தாக்க
வாடிக்கிடந்தாடனித்தன்னமடவாள்கொங்கையெங்கென்று
தேடிக்கொடுவாய்திறந்தழியாச்சினத்தின்வந்ததொருஞமலி. (85)

ஒன்றுபிறதன்பானெருங்கியுறுதோறஞ்சியச்சுறுத்த
நின்றுகுரைக்கும்பேழ்வாயினெளிவானுஞமலியாங்கெய்திக்
கன்றுகரத்தளுறைசிவிகைக்கதவுநகர்த்திக்காறலையான்
குன்றுநிகர்த்தபெரியவிளங்கொங்கைகவ்வப்புகுந்ததன்றே. (86)

நெருங்கிப்புக்கமுளேயெயிற்றுநீண்டுவளேவான்முதுனாளி
பெருங்கற்பிருந்துமுயரொலிகள்பெருமான்சினத்துளாழ்ந்தசிறு
மருங்குற்பேதையெழில்கொண்மணிவடந்தாழ்சுணங்குமலிமுகையி
ன், கருங்கட்கொங்கையிரண்டனேயுங்கடித்துக்கவ்விப்போயதன்
[றே. (87)

சுடுவலொழுகமுலேகவ்வித்தோகைகிடத்தியவள்வாக்கின்
முடுவலகலச்சிவிகைக்குண்மூர்ச்சித்திருந்தாளுரைப்பரிய
கடுவல்வளியுமினுமுருமுங்கல்லின்மழையுங்கனேயிருளுங்
கொடுகுகுளிருமறத்திர்ந்துகுறைதீர்காயமவெளுத்ததரோ. (88)

சேட்டிற்பொலிந்தநாகூர்வாழ்செம்மலுவந்ததிருமைந்தர்
மாட்டிற்பிறந்தபௌத்திரரைமாற்றச்சபதம்வழங்கியநல்
லாட்டித்தகையினவண்முலேகளறுந்தாளதனே நுமக்கறியக்
காட்டித்தருவலெனவரலிற்கதித்தகதிரோனுதித்தனனே. (89)

திரைவாய்ஞாயிறெழுதராலுந்தேய்கான்மத்தம்பொருதயிரின்
புரைவாய்ப்பிதிர்ந்துபஃறுணம்போனவவடன்பரிவாரம்
விரைவாயடைந்துபல்லக்குள்வீழ்ந்துகிடந்தாணிலேநோக்கிக்
கரைவூய்க்கடலிற்கல்லென்றுகாலுமுதிரந்துடைத்தனரால். (90)

என்னவினேயென்றுளந்துணுக்கியிரங்கிக்கரைந்தாரவள்சபதஞ்
சொன்னதறிந்தசிலர்நாகூர்த்தூயபெருமான்சினந்ததென்று
பன்னவுணர்ந்தாங்கவளிருக்கும்பல்லக்குடன்காப்பார்ப்பாளூர்
நன்னரடையக்கொடுபோந்தார்நாயிற்குரைக்கும்பீவியையே. (91)

முள்ளாரரையிஞெற்றைத்தாண்முளரிமுகைகண்முறுக்கவிழக்
கள்ளார்தும்பியிசைபூதுங்கடிநீர்ப்பார்ப்பாளூர்புக்க
வள்ளாரிலேவேலெழிலுண்கண்மடவாண்மூன்றுதினநாயி
னள்ளார்குரைப்பிற்குரைத்தாவியழிந்தாள்சபதமொழிந்தாளால்( )

வேறு.

ஈங்கிஃதின்னணநிகழவிட்டிடைப்
பூங்கொடியெழுதுபுபோந்தபத்திரம்
வாங்கினர்பிரித்தனர்வாசித்தோர்ந்தன
ராங்குறைசெய்ருஅதிக்குல்லாவரோ. (93)

ஆண்டகையியன் முழுதறிந்தவன்னவர்
தீண்டருவிளைவுடைச்செல்வமேவணவாப்
பூண்டனருளத்தினிற்புளகமெய்தினா
ரீண்டவளெழுத்தினுக்கிணங்கினாரரோ. (94)

சீர்பெறுபொருள்விழைசெய்கதிக்குல்லா
வார்பெறுமுலையவள்வரைந்தவண்ணமே
நீர்கெழுமுறவினர்நெருங்குறப்பிஜாப்
பூர்வயினிருந்திவண்புறப்பட்டாரரோ. (95)

பூம்பொழில்செறிபிஜாப்பூர்விடுத்தெழின்
மாம்பழக்குலைபலாமலிந்தசோலையும்
பாம்புறைமரன்பயில்பழுவம்பல்லவு
மோம்பினர்கழிந்தனரூர்களும்மரோ. (96)

எல்லினர்பகலினரிகந்துபல்வழி
செல்லினர்புடைகொளுஞ்செய்கதிக்குல்லா
மெல்லிணர்த்துறைவனமிடைந்தநாடுகு
ழொல்லினர்மேலைநாகூரைமேயினார். (97)

அரவமேல்குலாள்கொறடாச்சேரியிற்
பரவிடுபுயலடிப்பட்டுமாமுலை
குரவையினுய்கொளக்கொடுத்தநள்ளெனவ்
விரவினிலாங்கவரிறுத்திட்டாரரோ. (98)

ஆங்கவளன்னமலக்கணைய்திர
வீங்கிவரிருப்புழியிறைவனேவலின்
றீங்கறுநம்பிரான்செயிர்த்தவத்திறங்
காங்கைகயின்விரிந்தவான்கருணைகொண்டதே. (99)

அருள்கெழுநாயகரகத்துவெய்யவான்
கருள்கெழுவான்மிசைக்களுன்றுபங்கென
விருள்கெழுமிரவினிலெறும்பிராசிகள்
வெருள்கொளமனமுடல்வீழ்தன்மேயின. (100)

அறவராஞ்செய்குஅதீக்குல்லாமிசை
யுறவியினினம்பலவுண்டையுண்டையாய்த்
தெறவிழுந்துடலிறத்தேளிருக்கின
பிறவவருணவினும்பிறழவீழ்ந்தவே. (101)

ஓதுங்கினுமோடினுமுலைவின்யாண்டைபோய்ப்
பதுங்கினுமூடினும்பதறிமீயாவென
வதுங்கியகூர்த்தபல்லரத்தமன்னவாய்ப்
பிதுங்கியகடித்தனபெரிதுமாழ்கவே. (102)

கடிபொறுக்கலரிதுகனத்தளோலையின்
படிபுறப்பட்டிவண்படர்குற்றேமுய
ரடிகளைக்கருதிலமன்னதாமென
வொடிமனத்தொடுவெருண்டோடன்மேயினர். (103)

கலையகத்தினருயர்கருணைமேவிய
நிலையகத்தினர்திறநிகழுமின்னலாற்
சிலையகத்தம்பெனசெய்குதிக்குல்லா
வுலையகத்தொக்கலோடோடினரரோ. (104)

உறையுழிமேலைநாகூரைப்பொள்ளென
மிறைகொணெஞ்சினர்விடுத்தவ்வல்லினே
பொறையொடுநகர்பிஜாப்பூரைமேயினர்
துறைவரையெறும்பினந்தொடர்ந்துபோயவே. (105)

கடியொடுமுணவையுங்கருதிடாவகை
யடிநிழலெனவெறும்பகற்றிப்போய்த்துனி
யிடிபடுமனத்துடனிணையவிட்டது
நடிபெறுநருமதைநதியின்காறுமே. (106)

ஈங்கிதுபுதுமையென்றிணைந்தநெஞ்சரா
யாங்ககல்செய்குஅதீக்குல்லாவவர்
தீங்கறுத்தொன்றியசிந்தையாளராய்ப்
பூங்கடிகமழ்பிஜாப்பூரைமேயினர். (107)

அன்னவரன் றுதொட்டாங்கிருந்தெழூந்
தின்னநாடடைதரற்கிதயமேய்ப்புன
னன்னறுநருமதைநதிகடந்திடின்
வின்னமுற்றெறும்பினம்விழுந்துதாக்குமால். (108)

இத்தகைவழக்குறவினைந்தவன்னவர்
முத்தவொண்ணகைக்கனிமொழிதிறத்தினு
னெத்திசைபுக்கினுமித்திசைபுகா
துத்தமத்தந்நகருறைந்திட்டாரரோ. (109)

அடிபடுமின்னருமணிகொண்மாமுலை
கடிபடுமென்னளுங்கண்டகாரண
மிடிபடுமனத்தினரேனையோர்நல
நடிபடுகருமத்தினடக்கைமேயினர். (110)

சபதப்படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 892.

# மலடுதீர்த்த படலம்.

வட்டிலைக்கமலம்வான்சிறைத்தும்பிமாந்தியமதுவிருந்தளிக்கும்
மட்டிதழ்க்குவளைமகளிர்தம்விழியின்மலரகன்வாவியச்சோலை
கட்டிணருதிர்க்குமுயர்முதுஞாயில்கதிரவனுரிஞ்சியசூழப்
பட்டிடமின்றிமிர்மனைசெறிந்துபரவிடுந்தஞ்சைமாநகரம். (1)

எனமுடியரையனேப்புமூதூரினிருந்தனரொருபெரும்புலவ, ரின
முடைமுசுலிமீன்களிற்சிறப்புற்றியன்றநாற்குணத்தினர்வியப்பக்
கனமுறழ்கொடையின்வளர்நிதிச்செல்வங்கலந்தவில்லறத்தினிலான்
று, பனகவொண்படத்தினல்குலார்மாழ்கும்பாவாராவுத்தரென்பவ
ரால். (2)

மேனிலையிருக்குந் துறக்கவாழ்வளித்துமென் றியனொக்கடையுயர்த்துங், ஈனிலைக்குரியவியலொருமூன் றுந்தெள்ளிதிற்றீர்ந்துறத்தேர்ந்து, பானிலைப்பிடியின்மரீஇயொருமையின்பான்மைமுற்றறிந்துயர் வணக்க, வானிலைவழுக்கின்வழாநிலைதழீஇயவண்மையான்றியொண்டமிழின். (3)

எண்ணொடுபெயருமுறையொடுபிறப்புமிபலுருவொடுபெறுமளவும், வண்ணமுந்நிலையும்போலியும்பதமும்வகையிரண்டுறுபுணர்புகளும், பண்ணருமிபல்கள்பலபடச்சிறிஇமுற்பமாபொரா அவழிப்படுத்த, நண்ணமைசொற்களாக்கியவெழுந்தநலன்பெறுமெழுத்திலக்கணமும். (4)

மொழியொருநான்குதிணையிரண்டிடந்தாமூன்றுபாலைந்தறுதொகையே, ழிழிவழுவுநபெட்டுற்றமுப்பொழுதொடியற்றொடர்த்தொகாநிலையெச்சம், வழிபடுகோட்களுடனினமவற்றின்வகைவருவிதிபலமரபி, னழிவுறுதமைந்துபொருட்புலப்பாட்டிறுகியசொல்லிலக்கணமும். (5)

கைக்கிளைமுதலாப்பெருந்திணையிறுவாய்க்காண்டவாமகத்திணையேழும், முக்கியமுதலேல்கருவுரியென்னுமுப்பொருளாமவற்றினவுஞ், சிக்கியல்வெட்சிமுதலியபாடாண்டிணைவகையெழுதிணைப்புறமும், மெய்க்கிளக்கைக்கோளுடனகப்பாடும்விளங்கியபொருளிலக்கணமும். (6)

எழுத்தசைசீர்தளையடிதொடையேபெனுமுறுப்பியலுடனியன்ற, வழுத்துநாற்பாவுமினமொருமூன்றும்வண்ணமுமம்மையாதியவும், பழுத்தமற்றவற்றின்வகையவும்பொருத்தம்பத்துமேனையவுமுட்பட்ட, விழுத்தகுசீர்சால்வழுவறுமரபின்விளங்குறுயாப்பிலக்கணமும். (7)

வினைபயன்மெய்ப்பேயுருவெனுநான்கின்விளங்கியதோற்றவாய்த்தன்மை, வனைதருமுவமையுருவகம்விளக்காய்வருமுயர்தீவகமிவற்றின், றினைமயக்கெனினுமுறுபலற்றனவாய்ச்சிறக்கியமரபொடுசெய்து, வினைவறுசெய்யுட்கேற்றனவாகவிலங்குறுமணியிலக்கணமும். (8)

ஆனவிவ்வைந்தினகலகத்தியத்தோடருந்தொல்காப்பியமுதனன்
னூற், றேனமர்மொழியினிலக்கணக்கொத்துத்திறமுடையிலக்கண
விளக்கம், வானமர்வீரசோழியந்தண்டிவாமனங்காக்கைபாடினிய
மீனமினற்றத்தம்மவிநயனம்யாப்பருங்கலமின்காரிகையே. (9)

நகப்படுகுவலயாநந்தநேமிநாதம்பிரயோகவிவேக
மகப்பொருள்விளக்கச்சூத்திரம்வெண்பாமாலையாரிந்திரகாளி
பகுப்புறுவிருத்தப்பாட்டியல்வெண்பாப்பாட்டியல்பன்னிருபடல
மிகப்பிலாதினையவன்றியேனையவாமிலக்கணநூல்வகைமுழுதும் ( )

காவியமைந்துந்தொகையவையெட்டுங்கனம்பெறுபாட்டொருப
த்தும், பாவியலொழுக்கினியன்றகீழ்க்கணக்குப்பதினெட்டுங்கவி
களோர்நூற்றின், மேவியவுயர்கல்லாடமுந்திஞ்சொல்விளங்குசூ
ளாமணியதுவுந், தாவியவுதயன்காதையுங்கம்பன்றந்ததும்பிறவி
லக்கியமும். (11)

பேசருங்கவிதொடர்ந்தவாயமைந்தபிரபந்தவகையினமுழுது
மாசறுதருக்கநூலெவையவைமற்றடங்கலுமரிறபத்தேர்ந்து
மாசறுநான்குவகைக்கவியாகவரம்பெறுநூல்பலவகையு
மேசறப்பாடுமியற்கைமுற்றுணர்ந்திட்டியற்றமிழ்வல்லராயின்னம்.

இன்னமைபெருநாரைபெருங்குருகாமிவைதருமிசைத்தமிழோடு
தென்னமைமுறுவல்சயந்தநற்குணநூல்செயிற்றியமென்பனதெரிக்
கும், பன்னமைபியலினுடைகத்தமிழும்பண்பொடுகற்றுயர்கவிஞர்
மன்னவைமெச்சுந்தலைமையினுயர்ந்துமாதவமுஞற்றுறுமுவரே. 13

அறங்கொளுங்கல்விப்பேரறிவனைத்துமகனகமமைவரப்பெற்றுத்
திறங்கலந்திருக்குந்தன்மையரெனும்பேர்திசைபுகநாடொறுமலியும்
மறங்கொளுஞ்செல்வமன்னியபாவாராவுத்தரெனுமதிவாணர், பிறங்
கெழின்மகப்பேறன்றிமற்றெல்லாப்பேறுமுற்றிருந்தனரன்றே (14)

மகவிலாக்கவற்சிமனந்துளைசெய்யமனையொடுவாழ்ந்துறைகால
நகமுடிவிளக்கினற்புதம்புரிந்துநாமமெண்டிசையினும்போத
வகமுறைபொருளின்சாகுல்கமீதாமப்துல்காதிறுபெருமானார்
சுகமுறுநாகூர்விளங்குகைசெவியிற்றுன்பறக்கேட்டனர்மகிழ்ந்தார்.

உறுபொருளிரண்டும்பெற்றனம்பெற்றுமுற்றிலேமுவரிமாநிலனிற், பெறுபவற்றினியநல்குறுமகவின்பேறன்றியின்றினிநாகூர் நறுநகர்ப்பெருமான்முன்றிலினைசைஇநண்ணுபுவரங்கிடந்திரப்பம் மறுவகற்றுகெனவென்றுளங்கருதிமனைமுகநோக்கினரிசைத்தார். 16

ஈங்கிதுகருத்தென்றகத்தினள்கிளத்தவிருநகர்தஞ்சைவிட்டெழுந்து, பாங்குறைமனையுமேவலோர்சிலரும்பரிவொடுமுடன்வரப்பரவி, யோங்கியசினையின்றருத்திரட்காவுமுயர்ந்ததண்பணைகளுங் கடந்து, தாங்கியவிழைவினம்பெருமானார்தங்குநாகூரைமேயினரால். (17)

எண்ணிமற்றுறுநர்விழைந்தனமுடிக்குமிணைக்கழலெம்பெருமானார், புண்ணியநகர்முன்றினின்றிறைஞ்சிப்புந்தியினீண்டநாளூறுத்துங், கண்ணியகருமங்காட்டியமுகத்திற்கரங்களிரண்டையுமேந்திப், பண்ணியவிழுக்காப்பாவினமுறையிற்பாடுபோற்றுதனொடுத்தார். (18)

திரிபு வேறு.

மாதவந்தனை மன்னியசெய்தநும்
ஆதவந்தனை யன்னவிளங்குறும்
பாதவந்தனை பண்ணுநர்கட்கினி
ஏதவந்தனை யின்றருள்வாய்க்குமே. (19)

யமகம். வேறு.

பாதகமலங்களைப் பரப்பியார்ந்தமேன்
பாதகமலங்களைப் பட்டமின்னினும்
பாதகமலங்களைப் பழிச்சுங்காலவை
பாதகமலங்களைப் பஞ்சிறைக்குமே. (20)

ஏகபாதம். வேறு.

மாவணங்குடை மாதவநாதவே
மாவணங்குடை மாதவநாதவே
மாவணங்குடை மாதவநாதவே
மாவணங்குடை மாதவநாதவே. (21)

மாலைமாற்று. வேறு.

வேதாநாராவேமாதாதா, நீதாதாராநீராதீதா
தாதீராநீராதாதாநீ, தாதாமாவேராநாதாவே. (22)

சருப்பதோபத்திரம்.

வாமாநாதாதாநாமாவா, மாயாவாதாதாவாயாமா
நாவாதாதாதாதாவாநா, தாதாதாநீநீதாதாதா. (23)

சுழிகுளம். வேறு.

தவமுதியார்கோவே, லவமறவாரின்கோ
மூமலமிறவாரிர், திறமிருமறவாயா. (24)

கோமூத்திரி. வேறு.

திருவ நாயக, மருவு மாதவ
பொருவு நாவக, வருக மாநவ. (25)

கூடசதுக்கம் வேறு.

தீதுமீளுறுந்தேடுதிர், மீதுநாடியமேன்மையின்
கோதிராதநாகூரமர், நாதராரடிநாளுமே. (26)

காதைகரப்பு. வேறு.

சீதாநாநாவீருசீமா, மாதாதாவேமாருநாகூ
ராதாமாநீராருமூவா, நீதாகோவேபேருபூபா. (27)

காந்துறைசெய்யுள். வேறு.

சீர்வளர்தருநருச்செறிந்தச்சாலைசூழ்
கூர்மலிதாமொழிகுறைவுறுதவாம்
பேர்படும்பணியுநாகூரைப்பேணிடின்
வார்பெறுநோவிளைவகையினேடுமால். (28)

திரிபங்கி. வேறு.

மாதவஞ்சேர்மறைவாயுடையீர்மதிமாவினையீர்
நீதநெஞ்சார்துறைமேவுபர்வீர்விதிநீணெறியீர்
போதமுளீரிறையோனருளீர்பொதிசேர்புகழீர்
ஆதிநண்ணீர்கறையேன்விழியீர்தகியாளுதிரே. (29)

### பிறிதுபடுபாட்டு. வேறு.

சீரானசோலைசெறிந்ததிறலார்நா
கூராளுநாதருயர்பாதந்தீராத
வாரானவெய்யதுயர்மாற்றும்மாம்
பேராகவாரும்பெரிதுமினியால். (30)

### வினுவுத்தரம். வேறு.

பேசுவதெனுந்தகந்தான்பெற்றதேவனூர்கலியின்
வீசுமலைதன்னுண்மிருவதென்னும் — மாசுகெடப்
பெற்றுரைத்திநீயென்றூற்பினேயென்னசொல்வதாம்
உற்றதிருநாகூரொலி. (31)

### நிரோட்டம். வேறு.

அலகையாழ்த்தினிபாழியிற்
கலகநீக்கினிர்காசியில்
இலகநின்றனிரேழையேன்
றிலகநேர்தயைசெய்திரே. (32)

### மூரசபந்தம். வேறு.

வாரணம்படு காவல, காரணம்படு காவல
வாரணம்படு காவல, காரணம்படு காவல. (33)

### சதுரங்கபந்தம். வேறு.

வாதிலதினேர்நயனேநாட்டுவளர்நாதவய
வேதினேயோராதமாய்விழ்ம்பதத்தோய்—மாதர்நசை
மீதினேயமற்றநீதவாதமாதநாதேதி
வாதினேநாதமாதவா. (34)

### அட்டநாகபந்தம்.

சோகூரகன்றுதுயருமெளியேனை
மாகூரவீயேமயமேமா—நாகூர
தாமிக்கற்பாகூதகவதுமீறுமா
மாமுற்றதாளின்மலர். (35)

நான்கார்ச்சக்கரம். வேறு.

வாதவா திரு வாகவா, வாகவா ரண வாசவா
வாசவா வினை மாறவா, வாறமா வது வாதவா. (36)

வேறு.

சாலாசையுள்ளார் தளர்வறெனமண்ணின்
மேலாசையில்லாமல்வென் றீருநீரே
வென்றீருநீரேவியனுலகங்காத்து
நின்றீருநன்றீருநீரேசாகுல்கமீதொலியே. (37)

எல்லாப்பிணியுமிருந்தாரைநீக்கி
யொல்லாப்புகழமையவுற்றீருநீரே
யுற்றீருநீரேயுமதடியாராளக்
கற்றீரும்பெற்றீருநீரேசாகுல்கமீதொலியே. (38)

ஏழையேமெங்களிருந்துயர்தீர்க்க
ஆழையுநோக்குமொருவீருநீரே
யொருவீருநீரேயுயர்ந்தவரங்க
டருவீருந்திருவீருநீரேசாகுல்கமீதொலியே. (39)

வேறு.

என்னவண்புகழிற்போற்றியெழின்மகவரங்கேட்டண்ணல்
பொன்னவாய்நின்றுமேன்மைப்புலவர்கோன்பாத்திகாவும்
பின்னமிலாமலோதிப்பெரிதுளவிழைவினோடு
நன்னயத்திருந்துநொண்டிநாடகமொன்றுஞ்செய்தார். (40)

அக்கவியரங்கினேற்றிப்பாங்குறையான்றோர்நல்குந்
தக்கவாம்வரமுடிக்குஞ்சர்க்கரைபரிந்துவாங்கி
யொக்கலருள்ளம்பூப்பவுண்டனர்மனையுந்தாமும்
பக்கலொர்மனையமர்த்திப்பண்பொடுமிருந்திட்டாரால். (4 )

மகவிழைவுளத்தினோடுமாதமொன்றிருந்தார்பிற்றை
யிகபரம்பரவும்பாதத்தெம்பிரான்கருணைபூப்ப
மிகமகிழ்வெய்தவன்னவிறற்கவிவாணர்பாரி
சுகமுறமலடுதீர்ந்துசூற்குறிகொண்டாளன்றே. (42)

திருக்கிளர்நறியபொற்றாள்செய்யிதுசாகமீதின்
மருக்கிளர்கருணையென்னுமருந்தினான்மலடுபோகிக்
கருக்கிளர்வெப்தக்கண்டகணவரும்பாரியும்மா
வுருக்கிளர்வதனம்பூப்பவுள்ளமும்பூரிப்புற்றார். (43)

தனிமகநமக்கீந்தார்நஞ்சாகுல்கமீதென்றின்றேன்
பனிமொழிமடமானோடுபாவாராவுத்தருஞ்சீர்
நனிபெறுமாநந்தத்தினாட்செலக்கழித்தாரன்ன
வனிதைதன்கருமுதிர்ந்துமாதமுநிரம்பிற்றன்றே. (44)

கணக்கொடுமாதம்போதக்காரிகைவயிறுநொந்து
மணக்குழன்மடவார்மொய்த்துமருத்துவம்பரிவினாற்றப்
பிணக்ககல்குலத்தினார்க்கோர்பேறெனக்களிப்பினுள்ள
மிணக்கியவிழைவினானோர்மைந்தனையீன்றாளன்றே. (45)

தம்மகத்திருந்தவண்ணந்தனிமகன்பிறப்பக்கல்விச்
செம்மலர்களிப்பின்மூழ்கிச்சடங்குகள்பலவுஞ்செய்து
விம்மிதப்பெருமான்வைகும்விளங்கெழிற்பள்ளிபுக்கு
நம்மதப்பரிவினோடுநடத்துவநடத்தினால். (46)

கண்ணுறைமணியுமுள்ளக்கமலமுமுயிருமென்று
நண்ணொருமகவைப்போற்றிநன்குறவளர்த்தாரின்பத்
தண்ணுறையமுதமூட்டித்தாயருந்தந்தைதாமு
மெண்ணுறுபேராநந்தத்திருங்கடலாடுமாறே. (47)

தெள்ளமுதுண்டுபண்பிற்சீறடிநடத்தல்செய்து
பிள்ளைகள்பலரிற்கூடிப்பெரும்பறையலதுகொட்டி
யள்ளெழிற்சிறுதேரோட்டியாடைபல்லுடுத்தறேர்ந்து
பள்ளியிலிருந்துகற்கும்பருவத்தையடைந்தான்மைந்தன். (48)

யலைகெழுதீபமன்னமாதவர்வரத்திற்றந்த
நிலைபெறுமகவளர்ந்துநிறையொழுக்குள்ளமேவிக்
கலைபயில்விருப்பங்கொள்ளக்கண்டனர்தந்தைசாலும்
விலைபெறுமணிபொன்னீந்துவித்தியாரம்பஞ்செய்தார். (49)

பாங்குற்றதீஜின்கல்விபயிற்றினரமைந்தபின்னர்
தீங்கற்றவணக்கமாதிசெய்வழிசிறுவிமிக்க
வோங்குற்றவறிவின்மைந்தனுறுதல்கண்டரியதந்தை
தாங்கற்றகல்விமுற்றுந்தகைபெறப்புகட்டினரால். (50)

பாலகன்கல்விவல்லபண்டிதனுங்காருக
மேலகநாகூர்வைகிவிளங்குபுமுதிர்ந்தசீர்சா
னூலகநாவின்வல்லநுண்மையர்நாதர்பள்ளிக்
காலகனின்றும்போற்றிக்கவிபலபின்னுஞ்சொன்னார். (51)

கவியவைபாங்கமேற்றிக்கந்தூரியளித்துநந்தம்
புவியொடுககனம்போற்றும்புரவலரருண்மிக்கெய்தி
யவிரொளிப்பள்ளிபோம்புமவரருள்விடையும்பெற்று
நவிலுபர்தஞ்சைத்தொல்லூர்நண்ணியபுறப்பட்டாரால். (52)

கருத்திடையிருந்தவொன்றுகையிடைப்பெற்றுநன்கிற்
றிருத்திகழ்புகழினோடுசெய்பநாகூரைநீங்கிப்
பொருத்தியகளிப்பிற்றஞ்சைபுக்கவரொக்கல்போற்ற
விருத்தியகருத்தின்வாழ்ந்தனிருந்தனர்புலமைமிக்கார். (53)

மலடுதீர்த்த படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 945.

# இலையான் படலம்.

இந்தமாநிலன்றனைத்துறவவதரித்திலங்கு
நந்தநாயகர்சாருல்கமீதுவாழ்நாகூர்
பந்தமாநகர்மேற்புறநாட்டினோர்பாலி
னுந்தமாவளனோங்குபல்லூரினொரூரில். (1)

திருந்தவாழ்குநர்தம்முளாரொருவனோர்செவியுட்
பொருந்தவைகியபுகுந்ததானெஞ்சகம்பொன்றி
வருந்தவந்தறிகுநர்மனங்கலங்குறவன்பி
னிருந்தவாங்கருளொளிமெய்ப்பற்றுமொரிலையான். (2)

காதுபுக்கியவுதுசிறுபார்ப்பினங்களுறத்
தீதுமிக்குறவன்னவன்செவித்துளைசிதைவின்
வாதுறப்பகலிரவுஞ்ஞொழிந்துகண்வளர்தல்
கோதினற்றறவருந்தினனேங்கினன்குலையா. (3)

உற்றவாங்குவைகரகரென்றிடமெலாமுழன்று
சுற்றுமாறசைகறிக்குமாறினவினிற்சுழன்று
பற்றுமஞ்செவியடிமிசைக்கரங்கொடுபலகா
லெற்றுவான்மிகவிரங்குவானடிக்கடியிளைவான். (4)

ஐயகோவெனவலறுவன்கைகள்வைத்தழுத்தி
யுய்யவோவழியிலையிஃதென்னெனவுலைவன்
பையவுந்தலைசாய்க்கலனுறங்கலன்படுக்கான்
மெய்யயர்ந்தனனென்பெழவாடினன்மெலிந்தான். (5)

அருகிருந்தவன்மக்களுமனைவியுமழுவார்
பெருகிருங்குழுவினர்பதைப்புறுவாற்பின்னு
முருகுளத்தினனேவெனக்கதறுவனுலைதா
மொருவிதத்தினுங்கழிவழியொழிந்தவென்றுலைந்தான். (6)

தந்திரத்தினுன்பல்வகைபுரிந்தனர்தவித்து
மந்திரத்தினுற்சபித்தனர்பிற்பலமருத்து
மந்திறத்தொடுமருத்தினர்செவித்துளையகத்து
நொந்துறுத்துநோவகன்றிலவாயதுநூங்கி. (7)

காதுகொண்டநோவொருவழியினுமறக்காணான்
றீதுகொண்டனமெனக்கலங்குற்றினித்தீரு
மேதுகொண்டமீருனொலியடிகளானென்னப்
பாதுகொண்டநாகூர்வயின்வரப்புறப்பட்டான். (8)

மக்களோடுரிமனையுமொக்கலினாளர்பலருந்
தக்கவாவுடன்வரவழிபலநலஞ்சாலு
மிக்கவாக்கொடுகடந்தருநாயகர்விளங்கும்
புக்கவான்கெழுநன்னர்நாகூர்வயிற்புக்கான். (9)

நன்றிநன்னகர்புக்கவனாயகர்நகர
முன்றினின்றனன்றற்செவிநோவகைமொழிந்தான்
குன்றினின்றெரிவிளக்குமாதவத்தினர்குலக்கோ
வென்றியாம்பிணிமருந்தெனையாள்கெனவிழுந்தான். (10)

விழுந்துதன்னகத்தனார்சொலிக்கிடந்தனன்மிகுநோ
வழுந்துமற்றதுமுறைமுறைகுறைகொளவறிந்தா
னெழுந்திடாதிருந்தனனகனுறக்கமாங்கெய்தச்
செழுந்தடத்தவனுறங்கினன்பண்டையிற்சிறக்க. (11)

வணங்குழித்துயில்கோடலைமக்களுமனையு
மிணங்குமற்றருங்கண்டனர்புடைகொளவிருந்தா
ருணங்குமற்றவனுறக்கமற்றெழுந்தனனுவர்பா
லணங்குதீர்வகைகளிகொளமுறையுடனறைந்தான். (12)

பிற்றையங்கிருந்தெழுந்தொருசாகையைப்பிடித்துச்
சுற்றையொக்கலர்புடைகொளவிருந்தனன்றுயில
மற்றைநாளொமவ்வயினமைத்தனன்வழக்கிற்
செற்றலுற்றநாட்குநாட்கழிந்ததுசெவிநோ. (13)

இன்னவாறவன்செவியனாகறலுமினையா
னன்னவாறவண்படுத்தனனுறங்கினனயர்ந்து
பின்னவாவொடுவிழித்தனன்றலைப்புறம்பெரிதும்
பன்னவாவுளங்கொண்டனன்றிரும்பினன்பார்த்தான். (14)

தீர்ப்பினற்றதாயயரவணணங்கியசெவியி
னீர்ப்பினுற்றவைமூன்றுமூன்றொன்றுறவிலையான்
பார்ப்பினத்தொடுவிழுந்தனகிடந்தனபார்த்தா
னார்ப்பினெக்களித்தமர்தமர்காணியவறைந்தான். (15)

என்னவீதிரும்புதுமையென்றவர்களியெய்த
மன்னவந்தவர்பிறர்தெரிந்துளமிகமகிழ்ந்து
பன்னருங்கழற்காவலர்தமியரைப்பரிந்து
பின்னமேகியவாடகைபுகழ்ந்தனர்பேசி. (16)

செவியணங்கொழிந்தவனுயர்நாயகர்திருத்தாட்
கவிழ்சிரத்தொடுபுகழ்ந்துநின்றாண்டுறைகலைஞர்
சவிதருங்கழற்றொழுதருள்விடைகொடுதன்னூர்
புவிநவின்றிடப்போயினனகங்கொளப்புளகம். (17)

என்னநோய்களுமென்னவாந்துயர்களுமிறவா
வென்னதீமையுமென்னவாமபுன்மையுமெழில்சேர்
பொன்னமாளிகைமேவுநாகூருறைபூமா
னன்னராங்கழலேத்துழியறுமுறுநலனே. (18)

இலையான் படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 963.

---

# மூங்கையுங்குருடுந்தீர்த்த படலம்.

குணிப்பிலாவளமதிகொண்டமேக்குறை
பணிப்பிலாநாட்டினோர்பட்டணந்தனின்
மணிப்பணியருநிதிமலிந்தபாக்கியந்
தணிப்பிலாவாழ்வினோர்தனிகன்வைகினான். (1)

அன்னவன்செல்வத்தினமர்ந்தகாலையிற்
பொன்னவாநிதியெலாம்பொன்றன்மேயின
பன்னரும்பழமரம்பட்டவாவிஃ
தென்னநல்குரவடைந்தெளிஞனாயினான். (2)

அயில்வனவுடுக்கைமற்றருகிநாள்விடப்
பயில்வழியற்றனார்படுமக்காலையிற்
குயிலவன் மகன்கவல்குருடுமூமையும்
வெயில்படுபயிரெனமெலியமேயின. (3)

நிதியழிந்திவையுறநெஞ்சநொந்தவன்
விதியெனமனையொடுமெலிந்துகைப்பொரு
ளதியலமருத்தினுக்களித்துநோக்கினன்
பதிவயினிறையதும்பலித்ததில்லையால். (4)

எவ்வழியினும்பிணியிகத்தலின்றென
வவ்வெளினானுமரியவளுமைந்தனோ
டொவ்வறுமரியநாகூரையாள்பிரான்
செவ்வெழிலடிபுகச்சிந்தைமேயினார். (5)

மருந்தினுமந்திரந்தனினுமாய்வுறா
வருந்துபற்பிணியெலாமாற்றவல்லராற்
பெருந்தகையெனநனிபெட்டுநெஞ்சகம்
பொருந்தியநகர்விடூஉப்புறப்பட்டாரரோ. (6)

தந்நகர்விடுத்திருந்தலங்கணீங்குபு
நந்நகரென்னுநாகூரைநண்ணின
ரந்நகர்முன்றினின்றடிகளேத்தினர்
கந்நகர்பாதுகங்கவினமுத்தியே. (7)

மாற்றரும்பிணியெலாமாற்றியுள்ளுறை
யாற்றருந்துயரெலாமாற்றுமண்ணனீர்
கூற்றறுமூமையுங்குருடுமேயவெம்
போற்றருமைந்தனைப்புரத்திரென்றனர். (8)

இம்மொழிவாய்தரவிருகண்ணீர்விட
வம்மொழிமனைவியுமவனுமைந்தனைத்
தெம்மொழிமுன்றிலிற்றெரிதகநிறீஇ
யெம்மொழியின்றிமற்றிரங்கிவேண்டினார். (9)

இன்னணநெடும்பொழுதிரந்துவேண்டுபு
பின்னவணமர்ந்துறும்பெரியர்பாற்புகூஉ

மன்னிவன்பிணிகெடமலர்க்கையேந்தினி
ரின்னருளிரமினென்றிறைஞ்சிக்கூறினர். (10)

ஆங்கிதுகேட்டலுமன்னமாதவ
மோங்குமோர்சிறுவனையுளமிரங்கினர்
பாங்கவரிருவரும்பரிந்துடன்வரத்
தாங்கியவழைத்தனர்சார்ந்திட்டாரரோ. (11)

நலங்கெழுசிந்தியாநாடர்முன்னொர்காற்
கலங்கெழுநகர்சமர்க்கந்தின்காட்டிடை
நிலங்கொளமுரித்துறுகிமிர்ந்தகுற்றியின்
வலங்கொளுந்தருவயின்வந்துற்றாரரோ. (12)

அத்தருச்சீரைகொண்டருங்கறேய்த்துதை
யுத்தமத்தரும்பிணியுற்றகண்ணினு
நத்துதலுறுமுரைநாவிடத்தினு
நித்தமுற்றிடவெனநீயினாரரோ. (13)

காரணமரன்பெறுகடிகொள்சீரையைப்
பூரணமனத்தினரரைத்துப்போந்தவன்
சீரணநாவிழிதெரியநீயபி
ரோணத்தினர்முனமறைந்துவேண்டினர். (14)

வேண்டினர்தருவடிவிளங்கவைகுதிர்
பூண்டனிரருங்கழல்புந்தியென்றுரைத்
தாண்டகையினரவரகன்றுபோயினர்
கூண்டவரங்குறைகொண்டுற்றாரரோ. (15)

இருதயத்தூய்மையினிறைவரேத்துபு
கருதுறச்சிஃறினங்கழித்தபிற்றைவாய்
வருதகைமொழியொடுமைந்தன்மேயினன்
பொருதகைவிழிதெரிபுலனுமாங்கரோ. (16)

ஊமையுங்குருடுமற்றுவந்தமைந்தன்மெய்
மாமையின்விளங்குறமகிழ்விற்கண்டனர்
தாமையமகன்றனர்தாயுந்தந்தையு
மேமமுற்றகத்திறும்பூதுமெய்தினர். (17)

இருங்களிவளர்கடலிருவர்மூழ்கினார்
மருங்கினருணர்ந்தனர்மகிபரேத்தினா
ரருங்குணத்தவர்பெயர்க்கடிசிலாக்கினார்
பெருங்கணத்தவர்கொளப்பெரிதுநல்கினார். (18)

ஆன்றவர்க்கடிசிலட்டளித்தபிற்றைநா
மேன்றமட்டுண்டியலிருங்கடத்திடைச்
சான்றமர்தக்கணைசமர்ப்பித்தாங்குளார்
வான்றருகருணையும்வாங்கினாரரோ. (19)

பிணிபடுமைந்தனைப்பிறங்கக்காணிய
வணிபெறுதந்தையுமன்னையுங்களி
கணிபடவடைந்துநாகூர்கடந்துதம்
பணிபடுதொன்னகர்பரிவின்மேயினார். (20)

எக்குறைமுடிப்பநாமெண்ணுகாலையுந்
திக்குறைகீர்த்தியிற்சிந்தையாங்கரு
ளக்குறைகருமணியனையநாயகர்
தக்குறைவோரெனத்தரைவியந்ததே. (21)

மூங்கையுங்குருடுந்தீர்த்த படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 984.

---

# அற்புதநாகப் படலம்.

பார்தவழ்மூத்தநாகம்பணிகழனபிகள்கோமா
னோர்தவழ்மரபினுற்றவெம்பிரான்சாகமீதின்
றார்தவழ்கருணைப்பொற்றூடரணியின்மறைந்தநாட்டாஞ்
சீர்தவழ்வரியநாகூர்த்திருவிழவெய்திற்றன்றே. (1)

சேணினரணியர்செம்பொற்றிருமுடியரையர்மற்றைப்
பூணினர்மலியும்வாழ்க்கைப்பொருளினர்குலத்திற்கல்வி
மாணினரெளியரின்னவகையினர்வினைஞர்வள்ளற்
பேணினராகவுற்றுப்பெருங்குழுவென்னமொய்த்தார். (2)

இன்னபன் மாக்களுள்ளுமிருநகர் தஞ்சையாளு
மன்னவனதிகாரத்தின்வளம்பொலிசிக்கன்மூதூர்
தன்னகநிறுவப்பட்டதறுகணனெவருமஞ்சு
முன்னருங்கொடியனானவொருசுபைதாருமுற்றான். (3)

பெருகியசெல்வத்தான்றோர்பெருங்குழுவடைந்ததானு
மருகியகாலமல்லதாமஃதானுமுள்ளங்
கருகியநம்மைக்காக்குங்காவலர்சாகமீதின்
றிருவிழவறைதற்கொண்ணாச்சிறப்பொடுநிகழ்ந்ததன்றே. (4)

எணப்படிமுடிந்தவாற்றானேர்கடனிறுப்பானற்றுங்
கணப்பணம்வெள்ளிபைம்பொற்காசுமற்றணிபவெல்லாந்
தணப்பறுமொலியினன்னதசும்புவாய்நிறையநிற்கு
முணக்கமற்றவர்கள்பெய்யுமுதையுவனனிகண்டானால். (5)

மன்னவிப்பள்ளிமுன்றில்வளம்பெறமாக்கள்பல்லோர்
பொன்னவமணிகள்கொட்டும்பொற்குடங்கவர்ந்துபோகி
மன்னனந்தஞ்சையண்ணன்மகிழ்கொளவளிப்பமென்னச்
சொன்னவச்சுபைதாருள்ளந்துணிபுறவெண்ணினானால். (6)

ஈங்கிதுநினைத்ததீயனிணங்குசேவகர்கள்சூழப்
பாங்கமர்நம்பிரானார்பள்ளிபுக்கிரும்பொன்மிக்கா
யோங்கெழின்முன்றில்வைகுமுண்டியற்குடங்கர்தூக்கித்
தேங்கமழ்புயங்கள்விம்மச்சிவிகைவைத்திவர்ந்துசென்றான். (7)

அவனிதுகவர்ந்துபோதலறிந்துசாகிபுமாரென்னுந்
தவநிலையினரன்னோனைத்தடுப்பதற்கஞ்சிநொந்து
நவநிதம்புரியுமேலோர்நாயகர்சமுகநின்று
புவனமும்பிறவுந்தாழ்தாட்புகழ்முறைப்பாடுசெய்தார். (8)

தம்முடைமைந்தர்மக்கடம்பொருட்கவர்ந்துபோதன்
மும்முரத்தறிந்துமன்னோர்முறையிடலுணர்ந்துமுற்ற
நம்முடையனார்மற்றெல்லாநசித்தருள்புரியாநிற்குஞ்
செம்மலுக்கடங்கலாற்றாத்தெறுசினம்பிறந்ததன்றே. (9)

ஆர்வளர்தீமைமுற்றுமறுத்தறவிலக்கியோங்க
வேர்வளர்வையங்காக்குமெம்பிரான்சினந்தகாலைப்

பார்வையிற்பெண்ணையோலேப்படுசுருள்கபுறிற்போர்த்த
போர்வையுளிருந்துமீப்போய்ப்புள்ளெனப்பறந்ததன்றே (10)

உயர்ந்துபோநீண்டபெண்ணையோலையஞ்சுருடன் னூர்க்குப்
பெயர்ந்துபோஞ்சுபைதார்வைகும்பிறங்கெழிற்சிவிகைபுக்கி
யயர்ந்துபோயாவிநூறவழிவுறுத்துவனுலென்று
மயர்ந்துபோமாறங்கன்னுன்மடிமிசைவீழ்ந்ததன்றே. (11)

மடிவிழுசுருள்கண்டென்னைவந்ததென்றெடுத்தானூர்த்த
விடிவிழுமரனிறுகவிதயமிக்கதிர்ந்துநைய
முடிவிழுசுடிகைச்செங்கண்முள்ளெயிற்றகன்றவண்ணப்
படிவிழுபைத்தநஞ்சின்பாந்தளாய்ச்சீறிற்றன்றே. (12)

காண்டகுசுருளினுற்றகன்னிமாநாகநந்த
மாண்டகைக்குடங்கர்கொண்டவறிவிலனுவிபோகி
மீண்டிடவுடலமெங்கும்வெவ்விடம்பரவிமேவத்
தீண்டலின்வீழ்ந்துபல்காற்சினத்தொடுகடித்ததன்றே. (13)

கோலமார்பழுப்புநாறுங்கடித்தவாய்கொப்புள்கொள்ளாச்
சீலமார்நான்காநாகஞ்சினமிரைபொறுக்கலாற்று
தாலமாங்குகுத்தலச்சமாடலம்போகமோடு
காலமாம்பிழைப்பென்றின்னகாணுமோர்கருதக்கூறும். (14)

எண்வகைக்கடியுளொன்றுமிருஞ்சினக்கடியிற்றுக்கப்
புண்வருதட்டத்தோடதட்டமும்பொருந்தியாழக்
கண்வருமருட்கைகொள்ளக்கடுத்தலேயுச்சிபோகித்
திண்வளருடலயர்ந்துசிவிகையுள்வீழ்ந்தானன்னேன். (15)

நாகத்தின்விடங்கம்மேறிநசிந்தனன்சுபைதாரன்னேன்
பாகத்திற்செல்லுமேனேப்பணியினர்கண்டுமாழ்கித்
தேகத்தினின்னவாறுந்தீவினைநாகூர்நாதர்
வேகத்தினுற்றதென்னவெருவொடுகலங்கியோர்ந்தார். (16)

மற்றவன்பிணத்தைவருமணிச்சிவிகையினேடு
மற்றவனகரஞ்செல்வானநுப்பியக்காணிக்கைப்பொன்

னாற்றவண்குடங்கர்தன்னையுறச்சிரஞ்சுமந்துநாகூர்
பற்றவன்போடுபுக்குப்பள்ளியின்முன்றில்வைத்தார். (17)

தேம்பிலிற்றியவொண்பூந்தாட்செம்மணம்பெருமானாரு
மோம்பியபள்ளிமுன்றிலுண்டியற்குடங்கர்கொண்டான்
பாம்படப்பட்டானின்னபடர்பிழைபொறுத்திரெம்மை
யாம்பொருந்தலமாலென்னயாதனையுளத்தர்சொன்னார். (18)

அங்குறைமேலோர்முன்னமடிபணிந்தின்னகூறித்
தங்குறைதீர்ந்தோராகிசாகுல்கமீதுகோமான்
செங்கழலிறைஞ்சியன்னசேவகரகன்றார்பின்ன
ரெங்குறைமாக்கள்காதுமிதுபுகுந்துழக்கிற்றன்றே. (19)

இன்னணநிகழ்த்திமாண்டவிருஞ்சுவைதாரின்மெய்யை
யன்னணஞ்சிவிகையோடுமடக்கியசுமந்துபோந்தோர்
தென்னலர்கமலவாவிச்சிக்கன்மாநகரந்தன்னின்
மன்னனங்கறிந்துணையவழிச்சடங்கியற்றினாரால். (20)

தம்மகத்தனையருண்பான்றகையொடுமீட்டுகிற்கு
மம்மகத்துவத்தினோங்குமரும்பொருடிரணமேனுஞ்
சம்மதமன்றுமற்றோர்தாங்கொளலென்னுஞ்சான்றி
னிம்மகத்துவமாய்க்குற்றாரெவராதுகவரற்பாலார். (21)

அற்புதநாகப் படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 1005.

# பஞ்சமாற்றிய படலம்.

வாரகன்றரைவாழ்த்தியவந்தநம்
பேரகன்றபெருந்தகைமேயதாற்
சூரகன்றுதுளங்கெழின்மன்னுநா
கூரகன்றதுறுங்குடிமல்கியே. (1)

ஈனமற்றவிருந்தலமாவயின்
கானமுற்றகமீதொலிமைந்தராம்
மானமிக்கநம்மாதவவள்ளல்சந்
தானமிக்கதுசால்புறப்பல்கியே. (2)

எக்கணத்தினுமெங்கணுமார்குநர்
தக்கணைப்பொருடந்துருவிப்பதா
லக்கணத்தினரன்பொடுவாழ்ந்தன
ருக்கணத்தினுறும்பொருள்கொண்டரோ. (3)

ஈனமாறியிரும்புகழ்மேவிய
தானமாரிதழைத்துயர்காலமார்
மானமாறிமனுக்களுணங்கிய
வானமாரிவறந்ததுசாலவே. (4)

மாகமீதுமலிந்துறைகிற்குமோர்
மேகமேனும்வெளுத்ததுகண்டில
தாகமோடுதவித்துறவானவன்
வேகமீறிவெயிற்படைவீசினான். (5)

அற்றநீதியமைச்சுவழிச்செலுங்
கொற்றவேந்துடைக்கோலெனவெய்யவன்
செற்றமேய்க்கதிர்சிந்தலிற்கூழெலாங்
குற்றமேயகுடியினுலர்ந்தவே. (6)

வாரியார்ந்தெனமன்னியவான்பெரு
மேரியாழ்ந்தவிருங்கிணறூர்குழி

சீரியன்றசெழுங்குளமேனவும்
மாரிமாறிவறந்தனவற்றியே. (7)

விண்பிளந்தெரிவீழ்ந்தனவெங்கதிர்
கண்பிளந்துகலந்தவன்சிந்தலாற்
பண்பிழந்துபரந்துவறந்துமா
மண்பிளந்துவருங்கமர்கொண்டதே. (8)

தோய்ந்துபச்செனத்தோற்றுவனமெலாந்
தீய்ந்துவெச்செனச்சேர்ந்தமரக்குழாங்
காய்ந்துபட்டனகட்டையினின்றெரி
மேய்ந்துவிட்டவெறுந்தலமானவே. (9)

இன்மையாளனிளமையிளுய்ச்சிளை
புன்மையாளன்பொலிவெனநீழல்போ
யன்மையாளுடையான்கலக்குற்றென
நன்மைதீர்ந்தனநாட்டுப்பொழில்களே. (10)

ஆலமெட்டுமடைந்தெனவெங்கதிர்
காலவிட்டகனற்செறிமல்கலான்
சீலமெட்டுஞ்சிதைந்தழிவெய்திய
கூலமெட்டுங்குறைந்தறக்காய்ந்தவே. (11)

காடுதோறுங்கரிக்குவைமன்னிய
வீடுதோறும்விளங்குறுகாமரப்
பாடுதோறும்பரந்தனவாம்பிமா
நாடுதோறுநடந்ததுபஞ்சமே. (12)

ஒசிவடைந்தவுளத்தொடுமைந்தர்கள்
பிசியொழிந்துபிறந்திடநீந்தியே
கசிவடைந்துகலக்கொடுமாழ்கிய
பசியெழுந்துபரந்ததுலாவியே. (13)

வாடுவாரும்வயிற்றெழுதீயினுற்
றேடுவாருந்திரிந்துணவெங்கெனக்
கூடுவாருங்குலைந்தறத்தாங்கிலா
தோடுவாருமுலப்பிலராயினர். (14)

கட்டினருண்க்காய்கனியற்றபி
னட்டினரிலையற்றனவானிலன்
வெட்டினர்பலம்வீழ்ந்தவைகாய்ந்ததா
லொட்டினர்வயிறொன்றுணவின்றியே. (15)

வாங்குவார்பலிவாங்கலுமற்றிட
வேங்குவாரிஃதென்னெனவெம்பசி
தாங்குவார்பினுந்தாங்ககிலாதுயிர்
நீங்குவார்பலர்நின்றழிக்குன்றியே. (16)

நஞ்சமென்றுநடுக்குறுமாக்கொடும்
பஞ்சமென்றுபரந்தெழுதீயவன்
றஞ்சமென்றவர்தம்மையணைத்திடா
வஞ்சமொன்றியமன்னனினையினன். (17)

உற்றமாக்களுமுண்பவுடுத்துவ
வற்றமாக்களுமன்னவராயினர்
கற்றமாக்களுங்கல்வியிலாமடம்
பெற்றமாக்களும்பேசுழியன்னரே. (18)

விலையுமற்றதுவிற்பனகொள்வன
வுலையுமற்றதுசெய்வனவுண்ணிய
நிலையுமற்றதுநீள்பசிக்கானதோ
ரிலையுமற்றதுவாழ்வழியில்லையே. (19)

ஈகையாளருமேருடைவாழ்க்கையி
னோகையாளருமொண்பொருண்மன்னிய
வாகையாளரும்வற்கடமிக்கினன்
வீகையாளரின்மேயினரொன்றியே. (20)

வேறு.

பஞ்சமுற்றின்னவாறுபாழ்படத்தேயமுற்றுங்
கஞ்சமொத்திலகுஞ்சாகுல்கமீதடிவிழைவின்மேய
வஞ்சமற்றகன்றநாகூர்வாழ்வுடைமாக்கடாங்குந்
தஞ்சமற்றேங்கிநொந்துதனிக்குடிவாங்கினரால். (21)

தேயம்வற்கடத்தினாழ்ந்துசெழிப்பறநாகூர்வாழ்நர்
நேயம்விட்டகன்றுபோகநேர்கடன்வருகைபொன்றித்
தூயமைப்புற்றநங்கடுரையமர்தறுகாமுன்றில்
வாயமைத்திட்டபொன்னின்மணிக்குடம்வெறிதுகொண்ட. (22)

நீங்கரும்பொருளினாலுநிறைகுடம்வெறிதாய்மன்னு
மாங்கருநிதியினேர்ந்திட்டடைகுநரின்மைமேவ
வோங்கருங்குடியினோடுமுள்ளமிக்குடைந்துலைந்து
தாங்கருமிடிவாய்ப்பட்டார்சாகிபுமார்களன்றே. (23)

தேடியவழிவேறின்றிச்சேர்பொருடுய்க்குமன்னோர்
வாடியவருவாய்பொன்றிவற்கடம்பரந்தவாற்றா
னாடியநெஞ்சராகியாண்டகைப்பள்ளிமுன்றிற்
கூடியகுடும்பத்தோடுகுழூமினரொருங்கினன்றே. (24)

ஆண்டகைவாயின்முன்னமன்னவர்திரண்டுமொய்த்துப்
பூண்டகையேந்தியெங்கட்புரக்கியவந்தீரின்ன
மாண்டகல்கொடியதியவற்கடக்காலமுண்டி
வேண்டடியேங்கட்குற்றமிடியகற்றுதிராலின்றே. (25)

நீர்நனிவிழைவிற்பெற்றநிறைமகமைந்தர்தங்க
ளார்வழிப்பிறந்துபல்கியகல்குடியானேம்யாங்க
ளோர்வழிகாட்டிரெம்மையுய்வழியுணவினொன்ன
சீர்வரமுறையிட்டாங்கேசெறிந்தினிதிருந்தாரன்றே. (26)

மூத்தவர்சிறுவர்தக்கமுறைமுறைவகிந்த
மோத்தியல்பரிவினோதியுற்றனர்பள்ளிமுன்றிற்
காத்தமரோரிராவக்கணத்துளோர்முதியோர்மாட்டுத்
தாத்திரிபுரக்குநங்கோன்றரிசனைகாட்டினால். (27)

அன்புளீரஞ்சகில்லீருக்கனாங்கெழுமிக்காலை
மன்பெறுபள்ளிமுன்றில்வாய்ஞ்ஞிலைப்படியின்கீழூற்
றின்பெறுமுணவுநுங்கட்கெய்துமாற்கோடிரென்று
பொன்பெறுவாக்கிற்கூறிப்போயினார்கண்டாரன்னோர். (28)

அறிந்தனர்புளகங்கொள்வானகந்தெளிவெய்தியற்பிற்
செறிந்தவர்க்கின்னகூறிச்செய்கடன் றீர்த்தாண்டுற்றார்
பறிந்திறவிருளுதித்தான்பல்கதிர்ப்பருதிவெய்யோன்
மறிந்தெறியலைநீர்வாயின்மாகிலன்விளர்த்ததன்றே. (29)

வைகறையெழுந்திட்டன்னமாதவராதியேனோர்
செய்கருணைப்பிரானார்செப்பியாங்காணடையுற்று
மொய்கொளாகின்றுபள்ளிமுன்றிலொண்படிக்கீழ்நோக்கி
யுய்க்கொளத்தெரிந்தார்கூட்டத்துறவியினுறுகையன்றே. (30)

வருகெழுமெறும்பினீட்டம்வாய்வெறிதில்லையாக
விருகுழுவெனப்பிரிந்தாங்கேர்கொளுந்தொடரினூர்ந்திட்
டொருகுழுவொன்றன்வாயுமொண்பணமொன்றுமொன்றக்
குருகிறகரியுங்கவ்விக்கொணர்ந்தனவாண்டையன்றே. (31)

உற்றவையனைத்துநாதருயர்கபுறடிக்கண்மேக்கிற்
பற்றமைவழங்கும்பைம்பொற்பணயமுங்கீழ்பாலாக
முற்றெழிலரியுஞ்சேரமுறைமுறைகொணர்ந்துவைத்துக்
கொற்றவன்னவர்கைக்கொள்வான்குவைகொளக்குவித்தவன்றே. 32

எண்ணிலாவுறவியீட்டமிலங்குபொற்பணமும்வெண்மை
வண்ணவாளரியுமாகவகையொடுகுவிப்பக்கண்ட
வண்ணலாரவர்கணெஞ்சமருங்களியெய்தியுற்றார்
தண்ணிலாமதியினுகத்தழைத்துறவதனமன்றே. (33)

வரிவிளைவாதிபொன்றிவற்கடமிக்ககால
மரியொருபணயங்கொள்ளலாயினுமிமையிற்காக்கும்
பிரியமார்நம்மைக்காவல்பேணியகுறியீதென்று
தெரிவுறவுணர்ந்துஞான்றுந்தீர்ந்தனர்கவலையன்றே. (34)

கரிப்பெழுகவலைதீர்ந்துகளிப்புறுமனத்தினன்னோர்
தெரிப்புறக்குவியல்செய்தசெம்பொனம்பணயத்தோடு
மரிக்குவையொருங்குவாரியவரவர்பாகந்தோன்றப்
பரிக்கிரகத்தினன்றேபகிர்ந்தனர்கொண்டாரன்றே. (35)

ஒப்பறுமகிமைபூப்பவுண்டனரிருந்தாரன்றோ
ரப்பணமரிமுற்றாகவறச்செலவடையுமுன்ன
ரிப்பெரும்புவனங்காக்குமெம்பிரான்கருணைதன்னாற்
செப்பருமாரிபெய்துதேஎஞ்செழிப்புற்றதன்றே. (36)

தம்மகத்திருந்தமைந்தர்சந்ததிதழைப்பானாக
வெம்மகத்தெழுந்தபஞ்சம்வெருக்கொளவிலக்கிக்காயக்
கம்மகத்திருந்தமாரிகால்கொளப்புரிந்தாரென்னு
மிம்மகத்துவத்தின்செய்தியெங்கணும்போயதன்றே. (37)

நன்மழைபொழிந்துபக்கநாடெலாஞ்செழுமைதாங்கப்
பொன்மழைபொழிந்தாலென்னப்பொலிபயிர்விளைவாங்கெய்தச்
சொன்மழைபொழிந்துநாதர்துணையடிபோற்றிமீண்டா
ரின்மழைபொழிந்துநாகூரிகந்தகல்குடிகளன்றே. (38)

ஈனவர்செழித்தவாற்றானெளிமைபற்றுயர்ந்தார்விட்டுப்
போனவர்மீண்டுநாகூர்புக்கினர்வண்மைமேய
தானவர்பெருமைமிக்காறக்கணைபொலிவுகொண்ட
வானவர்பரவுங்கோமான்மகத்துவப்பாங்கினன்றே. (39)

தந்நனிவிழைந்தமைந்தர்தம்மகிழ்மக்கடம்மை
யெந்நிலைவயினுங்காக்குமெம்பிரானினிதின்மேய
வந்நிலைமேலோர்தம்மையடுத்துறைநமையுங்காப்பா
ரிந்நிலையொழியாதுள்ளத்திருத்துகைகடனமக்கே. (40)

பஞ்சமாற்றிய படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 1045.

# முதன்மினாருப் படலம்.

விண்ணுற்றமேலோர்விறலார்புகழ்போற்றிவாழ்த்த
மண்ணுற்றமாந்தர்வரமாம்பலவாங்கிப்போதத்
தண்ணுற்றநாகூர்வளர்சாகுல்கமீதுநாத
ரெண்ணுற்றகீர்த்தியிருநாற்றிசைபோயதன்றே. (1)

தேங்காவனத்தின்செழுந்தீங்கனிகொம்பர்மல்கித்
தூங்காவனத்தின்றுளங்காரெழின்மேயநாகூ
ராங்காவனத்தினகல்வாங்குடிமிக்கவாகித்
தாங்காவனத்தின்றழைவோடினிதாகுநாளில். (2)

இன்பார்பொழில்சூழிருமாநகர்செஞ்சிவாழுந்
தென்பாடரியதிறல்சேரியலிபுருகீம்கா
னென்பாரொருவரிசையெண்டிசைபோயவள்ள
லன்பார்பெருமானவரற்புதம்யாவுங்கேட்டார். (3)

அந்நகராளுந்தலையாமதிகாரத்தன்னோ
ரெந்நகராருமிறைஞ்சீர்ங்கழனாதர்தம்மைத்
தந்நகுழுள்ளந்தனிநேர்பெறுமொன்றுநாடி
வெந்நகர்கன்மம்விறலெய்தியவேண்டினாரால். (4)

வானுற்றகீர்த்திவரைபோகியவள்ளனீயிர்
தானுற்றவின்னதமியேன்றுயில்காலைப்போந்து
நானுற்றநாட்டமிதுகாண்கெளநன்கிற்காட்டி
யூனுற்றிடாவாறுதையேநிறைவேற்றல்வேண்டும். (5)

ஆண்டகைநீயிரரிதாமிதுசெய்திராயிற்
பூண்டகையுள்ளப்புளகெய்தியதொண்டனேன்யான்
மாண்டகைநுந்தமணிவாணகர்சூழ்ந்துதோற்றக்
காண்டகைமாடம்மினாருவதுங்கட்டுகிற்பேன். (6)

என்றிதுவேண்டிப்புகழெய்தியலிபுருகீம்கான்
மன்றலினெண்ணிமனத்தோடிருப்பார்க்குச்செய்து

மின்றவழ்நங்கோன்விறலார்கழற்காலும்போற்றி
யன்றெழிற்பள்ளியறைமேவுபு தூங்கினாரால். (7)

எண்ணித்துயிலவ்விரவில்லியலிபுறாகீம்கான்
கண்ணித்தரையோர்கவல்வான்கனவாதினாக
நண்ணித்தெரித்துப்பிறகாமதுநன்குதீர்த்தார்
தண்ணித்தியஞ்செய்குணசாகுல்கமீதுகோமான். (8)

நாடியவாங்குநறுங்காலுடைநாதர்போந்து
கூடியசெய்துகுறைநீக்கியளித்தவாற்றாற்
றேடியகொண்டுசெழித்தோங்குளவிபுறாகீம்கா
னாடியவேமாப்பதையார்சொலற்பாலரன்றே. (9)

இத்தலைக்கொண்டவிறுமாப்பதிகாரத்தோடு
முத்தமச்செல்வமுளவாநமமற்றயாவும்
புத்தருநாகூர்ப்புனிதப்பெருமாணவென்றக்
கத்தரினேர்ந்தகடனாற்றியமேயினாரால். (10)

கானவர்தம்மிலுறுங்காரியகாரர்தம்மு
ளீனமின்மீறானிராவுத்தரவரினோடு
மானமர்செல்வமதாறிராவுத்தரென்பார்
வானமர்தம்பால்வருமாறழைத்திட்டாரன்றே. (11)

கண்கொண்டவன்னோர்கரமேகொளக்காணவேண்டு
மெண்கொண்டபொன்னினிருமாநிதிப்பைகளீந்து
திண்கொண்டமாந்தர்புடைபோதரச்சில்லர்ச்சேர்த்து
மண்கொண்டவள்ளன்மலர்வாண்முகநோக்கிச்சொல்வார். (12)

நீயிரிருவர்நிதியங்கொடுநாகூர்போந்து
தூயிருபாதத்துரையாநமர்நாதர்பள்ளி
வாயிலினோங்குமணிமாமண்டபத்தினோடு
மீயுயர்கிற்கும்மினாறாவதுங்கட்டுகென்றார். (13)

இன்னவைசெய்திங்கிசையோடடைதீர்களென்று
மன்னவர்செல்வம்வளர்சீரியலிபுறாகீம்கான்

சொன்னவையன்னதுணைமாதவர்சென்னிதாங்கிப்
பொன்னிதிமல்கவுடனேபுறப்பட்டார்மாதோ. (14)

வஞ்சிநுடங்குமருங்கேர்முலைப்பாவைமாதர்
மஞ்சின்வரைமேன்மயிலாமெனத்தோற்றுமாடச்
செஞ்சியிறந்துசெழும்பூம்பொழில்பல்லபோகித்
தஞ்சமளிக்குந்தலமாந்திருநாகூர்புக்கார். (15)

நாகூரடைந்தநருந்திண்புயத்தன்னோரான்ற
வாகூர்பெருமான்மணிவாணகர்முன்றிற்போந்து
பாகூர்மொழிபின்மறைவாய்மொழிபண்பினோதி
யாகூர்மனத்தொடவண்செய்வனயாவுஞ்செய்தார். (16)

இந்நாயகத்தினிருபேர்களுமின்பினெய்தி
மந்நாளுபர்வினரிதாந்தலைமூத்துவைகுந்
நன்னோர்பழிச்சியசுல்தானப்துல்காதிறென்பார்
அந்நாமமுற்றசமுகம்போய்த்தாழ்வின்வைகி. (17)

தாமுற்றகன்மத்தகையாமிறையென்றுகூறி
யேமுற்றபரவிடமும்விதந்தானும்யாங்கள்
காமுற்றநுந்தங்கழலார்பணியாவுமீதிர்
மாமுற்றமல்கும்வளர்மாதவிரென்றுகேட்டார். (18)

இவ்வுரைகேட்டவிறையாமவரின்னோர்நோக்கி
வெவ்வுரையில்வீர்விரையன்மினிர்வேண்டுவாயான்
றெவ்வகளூர்திருக்காரூழ்தாற்றுவாங்கிப்
பவ்வமிலன்பார்பணியாதியவீவலென்றார். (19)

வணங்குடைநெற்றிவடுவேயகலென்னவண்ண
விணங்குடையின்னவிரிணைமொழிகூறக்கேட்டுப்
பணங்கெழுமன்னோர்பரிவொடுறழுத்தநாதர்
மணங்கொளிரவின்மனங்கொண்டிதுதூங்கினோரால். (20)

மாதவத்தன்னோர்மலர்மாவிழிதூக்கமெய்தக்
காதகற்றெங்கட்பெருமானவர்கனவிற்போந்து

மேதகத்தன்னவிதமோடிடம்வீற்றிற்செய்யத்
தீதகற்றுற்றபணியாமிவையீந்துசென்றார். (21)

மறைபயில்வுற்றுவடுவாரவிருக்குநாவி
னிறைநவிழித்தன்னவிருவோரையுமின்பிற்கூவி
யறைபகத்தண்ணல்பணியானவிவ்வண்ணமிவ்வித்
துறைதுறைசெய்திர்துகள்போகியவென்றுசொன்னார். (22)

காவலர்செய்தகவின்வான்பணிகாணவாங்கி
யேவலர்மல்கவ்விருபேர்களுமின்பின்மூழ்கி
நாவலர்போற்றுநமர்தம்முயர்நாதர்பள்ளி
மேவலர்வாழ்த்தவிளக்காக்கியமேயினரால். (23)

மேனபிமக்காவெறுத்தேகியவாண்டிறுதி
யானதொகைமேயவாயிரத்தைம்பத்தைந்தின்
வானவழியின்வழிபொற்கலசத்தின்சோதிக்
கானமுடியின்மினாருவதுகட்டினரால். (24)

சதுரங்கமுற்றதளமாம்பலவேற்றங்கொண்டிட்
டதுலங்கொளுமாறடிதான்பருப்பெய்தியோங்கி
விதுரங்களின்றிவிளங்கும்மாரோகணத்தோ
டெதிரங்கொள்வாய்பல்லிலங்கெய்தியதோற்றமாமே (25)

அந்தமுதலாமணியேபெறுமாமினாரு
நந்தமிறைவர்நறைவான்கபுறுற்றனாங்கர்
சிந்துநிருதிதிசையாவயிற்றோற்றிநிற்குஞ்
சந்தமுலவுமுயர்சாகிபுமினாருவாமே.

ஈதன்றிநந்தமிறையார்தருகாவின்முன்றின்
மாதொன்றெழில்சேர்நடுமாமண்டபத்தினோடு
மாதொன்றுபக்கத்தரையாம்வளைமண்டபமும்
பாதொன்றக்கட்டிப்பரிவாய்முடித்திட்டாரன்றே. (27)

வழுத்தந்நடுமண்டபமத்துழிவைகிக்கால
வழுத்தமாய்ச்செம்பினடுக்கைத்தொடுநின்றுசோதி
பழுத்தெரிகிற்கும்விளக்காவிரண்டரிதிற்பண்ணி
முழுத்தகைபேற்றியெழில்காணியமுன்னம்வைத்தார். (28)

இரவொன்றிலன்னவிபுருகிம்கானுக்காகப்
பரவொன்றுபள்ளியிடம்யாவும்பண்பெய்தவேய்ந்து
கரவொன்றமங்குல்விளக்கம்பலகாலவெற்றி
வரவொன்றிருவர்வரங்கேட்டவர்கட்குங்கேட்டார். (29)

இன்னவைதீர்த்திட்டிறைவாணமலர்ப்பாதம்போற்றி
மன்னவரானதலையோர்மணித்தாளுமூத்திப்
பின்னவர்நல்கும்பிரியத்துவிடையும்வாங்கி
யன்னரிருவரவர்மாநகர்க்கேகினரால். (30)

தம்முடைநாட்டந்தகையாமுடித்திட்டுவந்த
செம்மலர்தம்மைச்சிறப்போடழைத்தன்புகாட்டி
நம்முடைநாதர்நறுந்தாளகம்வைத்துவாழ்ந்தா
ரிம்மகிழ்கொண்டவெழில்சேரிபுருகிம்கானே. (31)

முதன்மினாருப் படலம் முடிந்தது.

ஆகச்செய்யுள் 1076.

---

# கொம்புத்தேங்காய்ப் படலம்.

பேரகன்றுதிசைபோகுநம்பியமர்பேறுலாஞ்
சூரகன்றுவிளையாடுஞெண்டுதுறைதோறெலாஞ்
சாரகன்றுவிரிவாரிமண்டுதிரைதாவுநா
கூரகன்றுகுடிமேவிவண்மையுடனோங்குமால். (1)

காணருந்திமிரமோடிமின்றிசைகள்காலவாஞ்
சேணுயர்ந்தவரைமீதமர்ந்தவொருதீபமே
மாணுயர்ந்துபுவிவானியம்புமதிமாதவ
நாணவந்தபெருமானுயர்ந்ததிருநாமமே. (2)

எஞ்சுறுதபுகழ்நம்பிரான்மகிமையேறுநாட்
செஞ்சிமாநகர்தழைப்பவந்தவொருசீருளான்

மிஞ்சுமாநிதிபொலிந்தவாழ்வினொடுமேயினு
னஞ்சிறாரினொழுதென்னையந்துடவையாளனே. (3)

அன்னவன்றுடவைமன்னுதென்னைகளோராண்டினிற்
கன்னலன்னபுனல்கொண்டகாய்ச்சிறிதுகாய்த்திடா
தின்னலுள்ளமொடுநைந்தழிந்தவனிருக்கமா
வன்னமென்னடைமடந்தையார்மலடதாயவால். (4)

வறியவர்க்குதவிசெய்திடாதுகிளைவாழ்ந்திடா
தறிவினர்க்கருமைகண்டிடாதுநிதியாளுமோர்
சிறியவர்க்குடையசெல்வமென்னவுறைதென்னைக
டுறுவலுற்றனபடைத்துளான்கவலைதுன்னவே. (5)

காய்க்குமென்னவுவைகாத்திருந்தனன்கருத்தெனு
வாய்க்குமன்பதிலையாகமற்றவன்வருந்தியே
யேய்க்குமொன்றொழியரும்பதத்துயர்வினைம்பிரா
னேய்க்குமன்புவிழைநெஞ்சினனினைந்துநேர்ந்தனன். (6)

காய்ப்புறாதவெழுதென்னையந்துடவைகாய்க்குமே
றேய்ப்புறுவிதனுண்மன்னுமின்னவொருதென்னையின்
வாய்ப்பறாதநனிகாய்கள்கொய்துமதுவானகர்
மேய்ப்படாதுறவிடுப்பலென்னமிகவேண்டினன். (7)

நின்றுசுற்றியுயர்தென்னையந்தருவுணர்தலா
யொன்றுசுட்டியதுவிட்டுவைகினனுவந்தரோ
நன்றுபட்டிதுநிகழ்ந்தபின்புசிலநாட்களிற்
க  றுபட்டவவைதுன்றிவன்மையொடுகாய்த்தவே. (8)

சொற்றவன்னவனமைத்தவம்பெரியதுடவையு
ளுற்றதென்னைகளனைத்துமொன்றருகுறுமலே
முற்றவண்கொலைதுறுத்தியந்திரண்முகிழ்த்தலாய்
வற்றலின்புனல்பழுத்தமைந்தனமலிந்தரோ. (9)

மடியறுத்தினிதடுக்குநர்க்கதிவழங்குதற்
குடிபுரப்புறுமொருத்தனுக்குரியகுறைவுறு
மிடிகெடுத்தவுயர்செல்வமொத்ததுவிளங்கலைக்
கடிபடைத்தவவன்கண்டுநெஞ்சொடுகளித்தனன். (10)

நீதிமன்னவனுயர்ந்தகோலடியினையமாய்
வாதிகந்தினிதமர்ந்துறுங்குடிகண்மானவார்
பாதினந்துடவைகண்டுவந்தபரிபாலகன்
கோதிலங்குலையகாயொருங்குநனிகொய்தனன். (11)

வெட்டிவிட்டவரடிக்கெனத்தகையவேண்டுதற்
சுட்டிவிட்டமரன்விட்டுமற்றவவைதோறுமே
யொட்டியுற்றதிகமுற்றிருங்குலைகளொன்றிலா
தெட்டிமற்றவைபறித்தநுப்பியவிருந்தனன். (12)

நீண்டதெங்கினமலிந்தகாய்பெறநினைந்தநம்
மாண்டகைக்கெனவிடுத்தவங்குலையநுப்புவான்
பூண்டநெஞ்சமொடுவைகினானவனோர்போதினில்
வேண்டலுற்றவரையர்சேவகத்தர்சிலர்மேயினார். (13)

தெங்கினங்குலைவழங்கருங்கனிகடேடிநா
டெங்கினுந்திரிவடைந்துநைந்தவவரெம்பிரா
னிங்கிதங்கொளவிரங்குமந்துடவையிற்புகூஉ
றுங்குறுங்குலையிருந்திடுங்கொலெனநோக்கினார். (14)

வல்லமாதவர்பெயர்க்குவிட்டவொருமாமர
மல்லமற்றவைகள்கொய்தொழிந்தனவறிந்தரோ
நல்லவான்குலையிதொன்றினுள்ளவெனநாலுபேர்
சொல்லமற்றதுபிடுங்கவேறுபுதொடங்கினார். (15)

சேவகத்தினவர்காய்பிடுங்கமுனைசெய்திகேட்
டாவகத்திடைவிரைந்துபுக்கவரையண்மியே
காவகத்தனிதளித்தவாண்டகையகாண்கெனப்
பாவகத்தொடுபறித்திடாதுதடைபண்ணினான். (16)

வாரணத்திடைநிலாமலன்னவர்கள்வன்பராய்க்
காரணத்தினுயராண்டகைக்குரியகாய்களேற்
பாரணத்துடனெழுந்தகொம்பதுபடைத்தவோ
பேரணத்தெனநகைத்தரும்பகிடிபேசினார். (17)

இன்னகூறியொருதீயனேறியவிசைத்தலுங்
கன்னமுற்றவவனேறிமுந்தியொருகாய்பறித்

துன்னருத்திரனொடுநோக்கமற்றவருரைத்தவா
றென்னவுற்றதுமுளைத்தகொம்புடனிருந்ததே. (18)

கொம்புடைத்தெனவிரைந்திழிந்ததுகொடுத்தனன்
வம்பினத்தினவர்கண்டுநெஞ்சறமயங்கினார்
நம்பிபொற்கழனிணைந்தொடுங்குபுநடுங்கிமெய்
யெம்பவத்திதுபொறுக்கவென்றிரதியெண்ணினார். (19)

அஞ்சிநின்றவரிரந்தகன்றுடைவையானிடம்
வஞ்சமின்றெனவிருந்தவொன்றதுவழங்கியே
நஞ்சமொன்றுணவயின்றநம்பெரியநாதரைத்
தஞ்சமென்றவணிகந்துறும்முறையுள்சார்ந்தனர். (20)

பிற்றையன்னவர்பிடுங்குகாயொடுபிறங்குகாய்
மற்றவுங்கொடுகளைந்துநம்மிறைவர்வாழுமூர்
சுற்றிவந்துநகர்வாயினல்கியிதுசொல்லினா
னற்றமொன்றியவுளத்தினன்றுடைவையாளனே. (21)

ஏயரும்புதுமையென்றியாவருமியம்பினார்
போயினானவனளித்தகொம்பொடுபொலிந்ததேங்
காய்தம்பெரியநாதர்பள்ளியொளிகான்றபொன்
வாயினன்பினொடுதூங்குகின்றதினமன்னவே. (22)

கொம்புத் தேங்காய்ப் படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 1098.

---

# இரண்டாம்மினாறுப் படலம்.

காரருங்குடையார்கவின், பேரரின்னருள்பெற்றநா
கூரரொண்புகழோங்குபு, சீர்மினாண்டிசைசென்றதே. (1)

வெற்றிவான்வளர்வெய்யவன், பெற்றியங்கதிர்பெய்வெனப்
பற்றிமாதவர்பாம்புகழ், சுற்றியாண்டுந்துளங்குமே. (2)

நெட்டராவிரிநீணிலன், விட்டறுதமர்மேன்மையர்
கட்டறுவெழிற்காலருண், மட்டறுவகைவாழுநாள். (3)

பூகமற்றனபொற்புடன், மாகமுட்டியமாவன
நாகபட்டினநாவயி, னாகவுற்றவொரண்ணலார். (4)

வேதவண்புகழ்மேயசீர்ப், போதநன்மைகள்பூண்டுளார்
நாதரன்புறைநல்லச, யீதெனும்பெயரெய்தினார். (5)

இத்திருப்பெயரேந்தலர், சித்தமுற்றவொர்செய்திநன்
குத்தமத்துறுமாறுபர், வித்தகத்தொடுவேண்டினார். (6)

இன்றுதொட்டதினைந்திடற், குன்றுபட்டெழுகோபுர
மொன்றுகட்டுவலுந்நக, ரென்றுகட்டடனெண்ணினார். (7)

நாதவென்றிதுநம்பிய, போதினன்குபொருந்திய
தேதினல்லசயீதெனும், போதரன்பொடுபுக்கினார். (8)

சீரடைந்துயர்செல்வநா, கூரடைந்திவணுள்ளவர்
பாரடைந்தபணியுடன், காரடைந்திடக்கட்டினார். (9)

தன்மநல்வழிதாங்கிய, நன்மைநந்நபியாண்டென
வன்மையோடுவரும்பதி, னொன்றுநூற்றுழியுன்னியே. (10)

தோயுமின்னருடேயவர், காயறுங்கடுறுக்குறும்
வாயுமூலையின்மன்னிய, வேயுமன்பினெழுப்பினார். (11)

போக்கரூமிதிபோக்கிவான், பூக்கநாயகர்பொன்னக
ராக்கமாமினாருவினைக், காக்கவன்பொடுகெட்டினார். (12)

நாட்டுமாமினாருவது, கூட்டுநாதர்கொளுந்தலை
மாட்டுமாமினாருவென, வீட்டுவீரினிருக்குமே. (13)

வென்றுகாட்டியவெள்ளியங், குன்றுகாட்டுமக்கோபுரத்
தன்றுகாட்டியவாங்கொடி, யொன்றுநாட்டியுயர்த்தினார். (14)

அன்றிருந்தவ்வருங்கொடி, தொன்றிருந்துதுளங்கிய
வென்றமைந்தமினாருவாங், குன்றிருந்துகுலாவுமே. (15)

இரண்டாம்மினாருப் படலம் முடிந்தது.

ஆகச்செய்யுள் 1113.

# மூன்றாம் மினாருப்படலம்.

வல்லசமீதொலிவானகரின்க
ணல்லசயீதெனுநாமநயத்தா
ரெல்லமினாருவிலங்குமுடியோ
டொல்லையெழுப்பியுயர்த்துணர்ந்தார். (1)

மன்னுறுதும்பிமதுத்துளியுண்டு
மின்னுவனத்தின்விரிந்தமலர்க்கா
மென்னும்வளத்தினிரும்பதிதன்னில்
விண்ணமில்வத்தகவிர்த்தகமுற்றார். (2)

ஏர்கெழுநல்லசயீதுமரைக்கார்
நீர்கெழுநெஞ்சகநேசமமைத்தார்
தார்களுறங்குதடம்புயமுற்றார்
பீர்நயினாரெனும்பேரினிருந்தார். (3)

கேட்டதுநெஞ்சுகிளர்ந்தவொர்கன்ம
நாட்டிநினைப்பினடந்துறுமாயி
னீட்டதிறென்னறையெழுப்புவமென்ன
வேட்டவரற்பொடுவேண்டுதலுற்றார். (4)

எண்ணியவெண்ணமியைந்துசிறப்பப்
புண்ணியநாதர்பொருந்தினரன்றே
கண்ணியகோபுரங்கட்டியவென்ன
வண்ணிதிமிக்கவநுப்பினரன்னோர். (5)

நன்றுறுபீர்நயினார்நிதிமல்க
வின்றெழினல்லசயீதுமரைக்கா
ரென்றுபர்நண்பரிடத்தினநுப்பிக்
கன்றலிலாததுகட்டுகவென்றார். (6)

அன்னவரங்கிதியற்பினெடுத்தே
மன்னவர்நங்குருவாழ்பதிநாகூர்
தன்னகமுற்றுபர்சாகிபுமார்தம்
பொன்னிகருங்கழல்போற்றியறைந்தார். (7)

நன்கெனவங்குறைநல்லவர்யாரும்
மின்குலவும்புயம்வெற்பினெழுந்தே
பொன்குலவுங்கலசம்பொலிவுற்ற
கன்கெழுகோபுரங்கட்டுதிரென்றார். (8)

வானியலும்பணிவாங்குபுநங்கோ
னீனமறுங்கபுறின்கணிருந்தீ
சானமெனுந்திசைதன்னினணித்திற்
கானமரும்படிகட்டினரன்றே. (9)

உற்றதுகட்டியதோர்கிசுறத்தி
னற்றமகற்றியவாயிரமொன்று
பற்றியநூற்றெருபத்தெனுமாண்டில்
வெற்றியகன்றுவிளங்கியவன்றே. (10)

மின்றவழ்கும்பம்விளங்குறுவங்கக்
குன்றினுயர்ந்துகுயின்குலமன்னும்
பன்றருமம்முதுபக்குமினாரு
வென்றதுரிந்தமிலங்குறுமன்றே. (11)

மூன்றும் மினாருப்படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 1124.

## உருமாற்றிய படலம்.

மழைமுதிர்கருங்கொண்மூக்கண்மன்னுறப்பயிலுமோங்கி
வழைமலிசிலம்புமல்குமலைத்தொடர்களிற்றிற்காணுங்
கழைவிரவிடங்கடோறுங்கராந்திரிநதங்கள்பல்ல
விழைபலநெளிவிற்செல்லும்விறல்கெழுமலாய்நன்னாடு. (1)

தங்குசீர்வளத்தநாட்டின்றடம்பெரும்பதிகளென்னுஞ்
சிங்கப்பூர்ஜொகர்மலாக்காதிருவளர்பினாங்குபேராக்
தங்கியசிலாங்கூர்தில்லிதண்பணைக்கோலமூடா
தெங்கவிந்நகர்கடம்முட்சிறந்ததுகிட்டாமூதூர், (2)

கடல்புகக்கடுகிச்செல்லுங்கராம்பயினதமுந்தீந்தேன்
மடல்விரிகாவும்பல்லவகைக்கனிபழுத்துச்சிந்தும்
படல்கெழுமடுக்கல்வெற்பும்படர்வளமிக்கிற்றன்னி
யடல்பெருசெல்வமோங்கவமைந்ததந்நகரமன்றே. (3)

வேரியஞ்சுளைகடுந்தேன்விளைந்தெனத்திரண்டுமல்கு
மூரியினீண்டுகூர்த்தமுட்கனிவெருக்கின்பீச
நேரியசரத்தினாலுநிரைப்பழஞ்சுளைவெண்பந்தி
ஞாரியற்கனிகேசத்தினருங்கனியுதிருஞ்சோலை. (4)

வேங்கையிற்பூத்தவொள்வீவேங்கையிற்கண்டுகுத்தி
வாங்கருங்கொம்பிற்றாகிவளர்முழைஞ்சதிரக்கூவிப்
பாங்குறுங்கேழல்காக்கும்பயம்புழிப்படியசிற்கு
மோங்கிரும்பனைக்கைநால்வாயுரலடிச்சிறுகண்வேழம். (5)

ஏனலம்பரண்கடோறுமெரியகிற்புகைமாசுண்டு
வானலமதியமொன்கேழ்மழுங்கிவெற்புச்சிபோகித்
தானமரிருவிற்றோன்றத்தடங்கெழுபுயத்தரான
கானவர்நறவங்கொள்வான்கலந்துமால்பியற்றுகிற்பார். (6)

வேய்நரல்கடுக்களோங்கும்விடரகங்களினுநான்ற
வாய்வளர்பிடிகட்கூட்டவான்கழைமுறித்துவைத்து
மேய்வருங்குளகுதின்றுவிளங்குநீரருவிமாந்திப்
பாய்வயர்ந்துயர்ந்துவைகும்பாறையிற்றுஞ்சுகிற்கும். (7)

மேதியிற்கிடக்கும்பாறைவிரற்கருமூகங்கண்டு
மாதரின்வெருண்டுநோக்கிவருடைவான்சூழவிபக்க
மேதகல்சிலம்பினேறியிறங்கிநின்றுடுகிற்குங்
காதரவுடன்மாமல்கிக்கறிவளரடுக்கறோறும். (8)

புலிபொருதுறங்கும்வேழம்பொருந்தியநணவிற்செய்த
வலிகெழுசெய்தியாங்குவருங்கனவிடத்துக்காண்டு
நலிவுடன்விழித்துநிற்குநறுமலர்வேங்கைதாக்கி
மலிசினந்தணியநாணிவழைவயிற்றுஞ்சுகிற்கும். (9)

மழையிருணள்ளென் யாமம்வான் றவழ்மின்னி னோக்கி
யுழைவருபிடி யினோடுமூற் றுப்புன்செய்யின் மேயுங்
களகரியரவத் தோச்சுங்கானவர் கவணிரு விற்
றுளைபடப்பல விற்காய்த்துத் தூங்கிரும்பழம் போய்வைகும். (10)

ஆருளிபுரைவிஞுங்கைதயபார்ப்புழிலைபவனங்கள்
வாகுறுபாறைபெய் துவயக்கரிக்கோட்டிற் சூற்றும்
பாகுறழ்மொழியார் வள்ளைபட ரொலிசெவியிற் கொண்டு
கோகிலம்வட்கிப்போய்க் குங்குமங்குன்றில்வைகும். (11)

ஞெண்டருப்பார்ப்பினன்னெய்த் தினைச்சொன் றியட்ட
துண்டுவான் கழைச்சாறின்பினுளங்கொளப்பருகி நாறு
கிண்டுறுகொம்பின் மேவுங்கேழல்காப்புடையார் வீசு
மொண்டருகவணைக்கற்களிற் றுழுகவுநுவிப்போகும். (12)

ஐவனம்வெண்ணெல்பாலூற் றகன்பெருஞ்செய்கடோறுங்
கொய்வுறும்பதத்திலக்கால் குறைகெடப்போழமுற்றித்
தைவரலின்சாய்கிற்குந் தலிவளர்கழைகளோங்கிப்
பெய்வுறவாலைவாய்ப்புப் பிறக்கறுகொண்டுதூங்கும். (13)

கவலைமாநாறுறகூவை யகழ்ந்தகன்குழிகடோறுந்
திவலைவானறவுசிந்தத் தேனொடும்வண்டுபாடி
நுவலருமலர்வாய்க்கிண்ட நுண்மகரந்தத்தினோடு
மவல்வயிற்றெள்ளிப்பூப்ப வலமருப்புலிவணைபோத்து. (14)

மணமனைகமழுஞ்சாரல் வயின்றொறுமலைகைதோற்றும்
வணமுறுவேரினபீலி மஞ்ஞைநோபின்றினிதினோடுந்
திணைமுறுகேமிபன்னவட்டிற் றசிதைந்துதுசிந்தக்
கணைமுடைக்கிளைகடோறுங் குடுவன்போந்துகளுமன்றே. (15)

கான்விரியடுக்கமெங்குங் கமழுமுட்கனிவீழ்வார்த்து
மீன்வருகழிவாய்க்கொக்கிற் கொடுவரிபடர்மெய்வேங்கை
வான்மழைகழீஇயபின்னர்ச் சண்பகமலர்கண்மல்குந்
தேன்கெழுமுழைஞ்சுதோறுஞ் சினங்கெடக்கிடக்குமன்றே. (16)

முழுமுதற்கமுகுந்தெங்குமொய்த்துகின்றுரிஞ்சுஞாங்கர்
செழுவலைவலந்தாலனனசித்திரம்பட்டார்ந்தநீழற்
கொழுமுயற்குனிக்கும்வெள்ளாங்குருளைகண்டுகந்தத்திப்
பழுமரம்படர்ந்துதீந்தேம்பழுக்குலைசிதறுமன்றே. (17)

பாய்புலிபதுங்கிவைகும்பழுமிளகுக்கபாறை
வாய்மலிகளிற்றுக்கோட்டும்வளர்தருவளிக்குந்தேனும்
போய்வயின்வயின்மாத்திண்டோட்டுழைமழுக்கையரீண்டி
யாய்வொடுகொண்டுசெல்வமன்னணியவருளுஞ்சாரல். (18)

தினைகுறுமகளிர்வள்ளைதேன்கொளுமவரின்விம்மல்
சினைமலருதுந்தும்பிசெய்தயாழனையதீம்பாண்
வனைசிறைப்பறவைபார்ப்புமயிற்குழாமகவலோசை
கனைதருவிழவின்னங்குங்கல்லெனக்கறங்குஞ்சாரல். (19)

அருவிபாயிழுமென்னோதையடுக்கமதெங்குமோது
மிருவிவேய்குடில்சால்சாரலிரும்வளமினைத்தாமென்ன
வருவகைபடுத்துக்கூறவனைதிரைதவழுமாழி
தருபுடைநெடியபாரிற்றகுமவர்யாவரின்றே. (20)

வேறு.

இப்பெரும்வளங்கெழுமிருங்கிட்டாவெனு
மொப்பருநகர்முசுவிமிளைக்குமோர்
செப்பரும்புகழுடைச்செல்வமன்னவர்
தப்பறவாளியதழைத்துமேவுமால். (21)

உய்கொளும்பெரியநாகூரினைங்குநம்
பெய்கொடைநாயகர்பேரர்தம்முளோ
ரெய்கொளும்புகழர்செய்யிதுநயினாரென்பார்
பொய்கெடுமந்நகர்போயினாரரோ. (22)

செல்கலமிவர்ந்துதாந்திரைகடத்திய
பல்கலந்திரிகடற்பரிவினீந்தியே
யல்கெழிலகனகராங்கிட்டாப்புகூஉ
வெல்புகழ்பரவுபுவிளங்கவைகினார். (23)

ஆண்டுறைமாக்களுமரியமேன்ருழில்
வேண்டுபுபோந்தமர்விறல்கொண்மைந்தருங்
காண்டகுநாயகர்காணிக்கைப்பொருட்
கூண்டுளவனைத்தையுங்கொடுத்துப்போற்றினர். (24)

நன்னிலைசெய்யிதுநயினுரென்னுமம்
முன்னிலைமுதியரிம்முறையின்வைகுநாட்
பொன்னடிவழுத்தினர்புக்குச்சில்லர்சொ
லந்நகர்மாக்கண்மற்றறைகுவாரரோ. (25)

செம்மல்கேட்டருள்கவான்செழுமைதாங்கிய
விம்முதுநகர்க்கிறையிறைஞ்சுதேசிகர்
தம்முடைச்சிலதர்கடாமுநாடொறும்
பம்மிருமரன்பயில்பழுவமேயினர். (26)

அவர்வயத்ததிபதியாங்குமல்குறுந்
தவலரும்பிரசமுந்தடங்கைவாரணக்
குவவுறுவெண்மணிக்கோடுங்கொள்கென
விவர்தரச்சாட்டிவிட்டிருக்கின்ருரரோ. (27)

ஆங்கவையிருபொருளதிகநாடொறு
நீங்கலில்வகைவளர்நிறைவின்மல்குமாற்
றீங்கறுமத்திறஞ்செல்வமன்னுற
வாங்கினரக்குருவருடங்தோறுமால். (28)

மேவருநூறெனும்வெள்ளிபோக்கியா
ராவினூன்குறையடிசிலட்டுநங்
காவலர்சர்குல்கமீதுநாயகர்
தூவடிக்கரியகந்தூரிசெய்வரால். (29)

அவ்விடத்துயர்வினிரடையின்வைகுறு
மெவ்வமிறேசிகரிடத்ததக்கணைச்
செவ்வியபொருணனிசேரநும்வயி
னெவ்வறக்கிடைக்குமென்றுவப்பிற்கூறினர். (30)

கேட்டலுமுதியவர்கிளர்கிட்டாநகர்
நாட்டகவயினுறுநான்றனைக்கரி
காட்டகம்போகியகருதிநன்கெனப்
பூட்டகவடியுடன்புறப்பட்டாரரோ. (31)

நகர்விடுத்தடவிபோய்நன்குவைகுறும்
பகர்குருமுன்வயிற்பரிவின்மேவலு
மகரவனிவர்மதிவதனநோக்கிநீர்
புகறிறமெவனதுபுகறிரென்றனன். (32)

இறையிதுகூறலுமேருநாயகர்
கறையகல்சாகுல்கமீதுநாதர்தம்
பொறைபெறுதக்கணைப்பொருணுமாட்டுள
வறைமொழிகேட்டதற்கடைந்துளேனென்றார். (33)

பூணருமிம்மொழிபுகலக்கேட்டலுஞ்
சேணகனடவிவாழ்தேசிகன்விளித்
தாணவமறுக்குமவ்வாண்டகைக்குமா
யாணரினுற்றநீர்யாரையென்றனன். (34)

அரும்பதிக்குற்றநீர்யாரையாவெனத்
திரும்பறைகொண்டுறுந்தயவினன்னவர்
விரும்பியகுருவவன்விளித்தியானுயர்
பெரும்புகழினர்க்கொருபேரனலென்றார். (35)

ஆன்றவர்பேரரென்றறையக்கேட்டலு
மேன்றமரன்னவனிவர்விளித்துநீ
தான்றருமொழிபெருந்தவறவ்வாண்டகை
சான்றவர்நாயகத்தன்மைமிக்கரால். (36)

வானத்தினுயர்புகழ்வள்ளல்பேரனென்
றீனத்தினுரைத்தனையிழுக்கினீயகன்
மானத்தினின்னுருவதனநோக்குழி
யேனத்தினிருக்குதியென்றுகூறினான். (37)

செவித்துளைசுடுமொழிசெப்பக்கேட்டலுந்
தவத்தினர்வெஞ்சினந்தாங்கிமுன்னுறும்
பவத்தினன்விளித்தெரிபடர்ந்தவார்த்தைபன்
னவத்தொடுமுரைத்தனர்நச்சுமானவே. (38)

பலர்பணிதன்முனம்படர்ந்ததிமொழி
வலனுறவறைந்ததான்வளர்ந்தசீற்றத்திற்
சிலதரையேவுபுசிறப்பினேருடை
னலனறப்புடைக்கெனநவின்றிட்டானரோ. (39)

திண்ணியகொடுமழுத்தின்றகையினர்
கண்ணியகொலையினர்கடுகித்தாக்கலு
நண்ணியவயினேரீஇநடுங்கிநெஞ்சகம்
புண்ணியநிலையினர்பொருக்கென்றோடினர். (40)

அடிபொறுக்கலரவணகன்றுவான்வரு
மிடிமுழக்கெனக்களிறியம்புகாடெலாங்
கடிமனத்தொடுமொரீஇக்கடந்துபொள்ளென
நடிபடைத்துயர்கிட்டாநகரநண்ணினர். (41)

அணிநகர்மேயொரன்பவனில்புக்குறுந்
துணிமொழிகரத்தலிற்றுன்னவைகினு
ரெணிமனத்தாண்டமரிறையவ்வெல்லிடைப்
பணிபுணவருந்தினன்பள்ளிபோயினன். (42)

புகைமணம்வருந்துபுபுழுங்கலெண்ணிடான்
பகையொடும்பெரியவரைப்பழுதுபேசிய
மிகைமொழிதன்றலைவிடியக்காணுநர்
நகைசெயப்புக்குநள்ளென்யாமமே. (43)

மருடொடர்நெஞ்சினன்வாய்வழங்கிய
பொருடருமம்மொழிபொருந்தியன்னவ
னருடபவறைவயினயர்ந்துதூங்குகா
லிருடுணித்தனையதோரேனமாயினன். (44)

திறங்கொணர்நாயகர்சினத்திற்கோணிய
பிறங்கிருமருப்பொடுபிணர்கொண்மேனியி
னிறங்கருகேழலாய்நின்றதேசிக
னுறங்குழிவிழித்தனனுறுமினானரோ. (45)

தேசிகனறைவயிற்சினந்தபன்றியி
னோசையினுறுமலோர்ந்துவப்பர்பொள்ளெனப்
பாசமாம்விழைவொடுபரிவினொடு
மாசறப்புக்கினர்வருந்தநோக்கினார். (46)

நோக்கலுமன்னவர்நூங்கிறைஞ்சுறும்
மாக்கனத்தேசிகன்வராகமாயுருப்
போக்கலினிற்பதுபொருந்தக்கண்டனர்
ரேக்கமுற்றென்னையென்றினைந்திரங்கினார். (47)

இரவுழியுறங்கியவெழுந்ததேசிகர்
வரவுருவேனமாய்மாறினாரிது
கரவுறையாதெனக்கவன்றுமன்னர்பாற்
பரவுறுமொழியர்போய்ப்பரிந்துகூறினார். (48)

தங்குருகேழலாய்த்தவித்துநிற்பதை
யங்கெழுமணிமுடியரையர்வந்துபார்த்
திங்கெதுநிகழ்ந்ததாலென்றுதண்கதிர்
மங்கியமதிமுகம்வருந்திக்கேட்டனர். (49)

ஏதிவணிகழ்ந்ததையென்றுமன்னவர்
பாதினர்வினவுறப்பயந்தனோர்கள்யாம்
யாதொன்றுமறிகிலம்யாணரொத்தரிவ்
வேதர்பானெருநலின்மேயினாரரோ. (50)

அவர்தமைவிளங்குநாகூறினாண்டகை
யுவர்பவுத்திரர்களுளொருவரென்றன
ரிவர்விளித்தவர்தமையேனமென்றனர்
தவர்கெடப்பின்னருந்தாக்கினாரரோ. (51)

இதுநிகழ்வன்றுமற்றில்லையாலென
மதுவழியிரும்புயமன்னர்நோக்குபு
புதுமொழியறைதலும்புந்திவாங்கியம்
முதுமையர்யாங்கெனமுடினார்கேட்டனர். (52)

ஈண்டவரிலரிகந்தேகினாரெனக்
கூண்டவரறைதரக்கொண்டுநெஞ்சக
மாண்டருண்மணிமுடியண்ணல்கேழலின்
காண்டருகருந்தொடர்கழுத்தின்மாட்டினார். (53)

பூட்டியநெடுந்தொடர்பொருந்தவீர்த்துறை
காட்டினையிகந்தெழில்கலந்தவூர்வயி
னாட்டரமியநகர்நண்ணியாவருங்
கேட்டமாறிக்கையாங்கிளவிபோக்கினார். (54)

எங்குருமுனிந்தநாகூரிகந்தரு
மிங்கடைந்துற்றசெய்யிதுநயினாரெனுந்
தங்கியபெயருடைத்தவத்தர்க்காட்டுநர்
மங்கலிலிருங்கொடைவாங்குவாரரோ. (55)

தெரித்திடாதேனையர்தெரிந்திடாவகை
கரத்தலினிருக்குநர்கம்மிறப்படும்
புரத்தலில்கோறலிற்புக்குவாரெனப்
பரத்தலிற்றிசையிதுபரந்துபோயதே. (56)

இவ்விதியாங்கினுமெழும்பவன்னராஞ்
செவ்வியர்மறையின்வைத்திருக்குஞ்சீருளான்
வெவ்விதியஞ்சுபுவிழைந்தநெஞ்சனாய்க்
கவ்வுடையரையர்பாற்கடுகிப்போயினான். (57)

மன்வயினடைந்தவர்வருந்தியுட்கின
ரென்வயினிருக்கின்றாரென்றுகூறினான்
றென்வயினரசருஞ்செம்மல்கேட்டருள்
பொன்வயின்கால்வரப்புறப்பட்டாரரோ. (58)

திடந்தருசேவகர்செறியமன்னவர்
நடந்தனர்மனையதுநன்குநோக்கின
ரிடந்தரவருகைமற்றிருக்குமூத்தவர்
கடந்தருநடுக்கலிற்கண்ணுற்றாரோ. (59)

வேறு.

குருவினுக்குறுமேவங்கேட்கியவிருங்கோமான்
வருவதன்றுமற்றின்றினிக்குற்றினன்வதைப்பான்
வெருவினென்றகங்கருதினர்முதியவர்மேன்மைத்
திருவினொன்றியதாதையர்வேண்டினர்சிந்தை. (60)

எண்ணியின்னணமெழுந்தனரிலம்விடுத்தெதிர
நண்ணிமன்னரைநடந்தனர்நரபதிநன்கிற்
கண்ணிலங்கியகண்டுடன்கதுமெனக்கலைஞ
ரண்ணிவீழ்ந்தனர்தாழ்ந்தனர்பற்றினரடிகள். (61)

வழிதரும்புனலிரங்கலிற்பஃறுதிவழுத்தி
விழியிருத்திமுத்தினர்தொறுந்தொறுமுளம்விழையா
விழிகுணத்தினெமெங்களைக்காக்கியவெழுந்தி
ரழிவகற்றுதிர்பொறுக்குதிர்சினந்தணிந்தன்றே. (62)

அடிமையேன்குருவடிகளுக்கடிகளினன்பு
படியுந்தேவரீருமையறியாமடம்பட்டுக்
கொடியகூறினர்குற்றமேகொடியவக்கூற்று
விடியமேயினர்தற்றலைபொறுக்குதல்வேண்டும். (63)

புன்மைகீழினர்புரிந்திடிற்கருதலர்பொறுப்பர்
நன்மையாளரென்றிருங்கடலகனிலனவிலுந்
தொன்மையானெனிற்பெருந்தகையினிரெமர்தோட
மின்மைகொள்ளியநம்பிரானடிமலரிரமின். (64)

அண்டருந்தனத்துயர்பதத்தென்னுடையாசான்
கொண்டவன்றிவல்லுருவறமாற்றுதல்குறித்து
மண்டரும்புகழிறையிரந்துருவருவரையான்
கண்டருந்திருவடிவிடுக்கலனெனக்கரைந்தார், (65)

குற்றிவல் லுயிர்கொல்லியவரவெனக்குறித்த
வெற்றியன் னவர்மன்னரீஇத் துரைத்தடி விழலும்
பெற்றியண்ணலர்மணிமுடியடிபெடுப்பித்துப்
பற்றிறண்புனல்கொணர்கென வருகரைப்பணித்தார். (66)

திம்புனற்கலசத்திடைக்கொணாரலுந்திருவர்
தாம்பொருந்துறுமுறையுளுபுரிந்தவண்டரித்திட்
டோம்புவல்லுநரொருவனைத்தொழுதுநாகூரா
மேம்பெருந்திசைகுறித்துயர்நாயகர்வேண்டா. (67)

எங்கணுபகிரெனக்கிறையவர்குருவியற்றும்
பங்கமாமொழிபொறுத்தனன்றேவரீர்பரிந்திட்
டிங்கணுரிவன்புத்துருக்கேழப்போக்கியற்றித்
தங்கமுன்னுருவாக்குதல்வேண்டினன்றமியேன். (68)

நீயிரும்பொறுத்தாள்கெனவிருகரமிமிர்த்தி
மாயிரப்பெனவேண்டினருறுமியல்வன்றி
யாயிருந்தவன்மருப்பறச்சுருங்கிமுன்னமையின்
மேயிருந்தமானிடவுருவடைந்தனன்மெல்ல. (69)

கூடிநின்றவர்கண்டருமதிசயங்கொள்ளக்
கோடிருந்தவைபோயுடைத்தொல்லுருக்கொளலு
மோடிவந்தவன்மாதவத்தினரெழிலுறுதா
ளூடிவீழ்ந்தனன்பொறுத்திரெற்குறையெனநவிலா. (70)

எனவல்லுருமாறியகுருவினையிறையவர்
காணுறும்புயம்விம்முறுகளிப்பொடுகண்டு
மானமுற்றிதுசாகுல்கமீதொலிமகிமை
யானதென்றதிசயித்தனர்பிறருடனன்றே. (71)

ஆமைசெய்தெனவாண்டகைசெய்தலுமறையர்
மாமைகொண்டவாசான்விளித்தெனைநும்மாட்டுத்
தோமடைந்திடநிகழ்ந்தவையெனவிளைத்தொடலு
மேமமொன்றியவன்னவன்வாட்டொடுமிசைப்பான். (72)

இன்னமாதவரடைந்தனர்கேழலென்றிவரைச்
சொன்னதுண்டியானவ்விரவறைவயிற்றுயின்றே
னன்னகாலையில்விளங்கெழிற்றபோதனரநேகர்
வன்னவான்வளைதடியொடுவந்தனர்வளைந்தார். (73)

சூழ்ந்துநின்றெனைத்தாக்கினர்மருப்பெழூஉத்துயரு
ளாழ்ந்துபன்றியாயினன்பொறுக்காதையவ்வடிகள்
போழ்ந்தவாய்கொடுகதறினன்பின்னிகழ்புணர்ப்புத்
தாழ்ந்தயானறிகிலனிதுகண்டனன்சால. (74)

வன்றியாயினதுணர்ந்தனனின்னெழில்வதனந்
துன்றிநிற்குநரருமுகங்கண்டனன்றூய
வென்றியின்னவர்பெரியரென்றிவையவன்விளம்பக்
குன்றிடாப்பெருமதிசயமெனக்களிகொண்டார். (75)

வந்தயாவருமுதியவரிருங்கழல்வழுத்தித்
தந்தமார்வயிற்சார்ந்தனரிறையவர்தகையி
னந்தரும்புகழ்நலன்வளர்செய்யிதுநயினார்ச்
சொந்தநன்மனையழைத்தனர்சென்றனர்தொழூது. (76)

சிறந்ததம்மனையுண்ணவுமுடுக்கவுஞ்செய்து
திறந்தருந்திருச்சபைவயினிருக்கெனச்சேர்த்தார்
பிறந்தமாமகிமையொடுமகிழ்வொடும்பெரியோ
ரறந்தழைப்புறப்பஃறினம்வைகினராங்கு. (77)

பெரியகீர்த்தியினிருக்குநாள்வயினொருபிறநா
ளரியமாமுதியவர்நகரிறந்துதம்மாண்மைக்
குரியவாழ்க்கைநாகூர்வரவிழைந்தனருள்ளந்
தெரியமற்றவராங்கமரிறைவருந்தெரிந்தார். (78)

ஏந்தலோர்ந்துகிட்டாநகர்விடுத்தெழிலிலங்குந்
தேந்தரும்பொழில்சூழ்ந்தநாகூர்புகச்சிறப்பிற்
போந்தவொண்கலங்கண்டுபல்லருமையம்பொருட்கள்
சேந்தபொற்பணமளித்தனர்யாத்திரைசெய்தார். (79)

மாதவத்தினர்யாத்திரையெனறிசைவளர்ந்து
போதவத்தடநகருளாரனைவரும்புக்கு
நூதனப்பொருளொண்ணிதியளப்பில நூங்கப்
பாதவப்புதுமலரிடைக்காணிக்கைபடுத்தார். (80)

இன்னசெய்துயர்நகரினர்மணிமுடியிறைவ
ரன்னநாதரைப்புண்டகொடுகலமடைந்தற்பிற்
சொன்னவப்பொழுதேற்றினரநுப்பினர்தொடர்பின்
வின்னமற்றவக்கலந்துறைவெற்பெனவிடுத்த. (81)

தவத்தரேறியவான்கலம்பனைதிரிதடநீர்
நவத்தினீந்துபுபொள்ளெனநம்முயர்நாகூ
ரவத்தனங்கெடுதுறைபுகவிழிந்துபரண்ணால்
பவத்தனந்தொலைப்பவர்நகர்மேயினர்பரிந்து. (82)

வந்துபாத்திகாவோதினர்புக்கினர்மனைக்கண்
வெந்துமற்றவரழைத்தவணிகழ்ந்தனவிளங்கத்
தந்துகூறினர்கேட்டனரதிசயஞ்சான்று
மிந்தவாறினிக்கேட்டவரிகழ்குநரெவரே. (83)

உருமாற்றிய படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 1207.

---

## நாலாம்மிஞுருப் படலம்.

உப்பருமுந்நீர்வேலியுறுமலர்தலையினன்ற
விப்பெரும்புவனங்காக்குமெம்பிரானமர்ந்தநாகூ
ரெப்பெறுந்திசையினோருமெய்திநின்றேத்துகிற்குஞ்
செப்பருஞ்சிறப்புக்கொண்டதிருவிழவெய்திற்றன்றே. (1)

ஆண்டுதோறடைவிழாவினரியவிவ்விழவினன்று
பூண்டுறைநிதிஞர்மிக்கிற்பொலிந்தனரவர்கடம்மு
ளோண்டருபறங்கிப்பேட்டையெனுமகுமூதுபந்தர்
வேண்டருநீதிமன்னர்விறலொடுவந்துற்றால். (2)

கணந்தருநிதிதாலூதுகானெனுமன்னமன்னர்
குணந்தருநகர்மற்றுமுக்கோபுரங்கண்டுகேட்டு
மணந்தருநன்மைசாலமனக்களிபெய்தித்தாமு
மெணந்தருநேர்தலொன்றையிருதயத்திருத்தினாரால். (3)

வானகர்முன்றினண்ணிமலர்க்கரங்கட்டிநின்று
தீனவர்பெருமமாறுத்திருவருள்வள்ளாலன்பின்
மானமரண்ணுமேலைமனத்ததுமுடித்திர்யானு
மூனமற்றுயர்கிணறுவொன்றிவண்கட்டுகிற்பேன். (4)

எனவிரந்தறிஞர்சூழவிருந்துவாவோதிப்பத்துத்
தினமுறுவிழவுகாறுந்திருவளர்நாகூர்வைகி
வினமறமுடிந்தபிற்றைவேதியர்களிப்பச்செய்து
தனந்தருவிடையினோடுதந்நகர்போயினாரால். (5)

நிறைநகர்போந்துசின்னாணிகழ்வயினிதயம்பூப்ப
மறையொடுமமைத்தகன்மம்வந்துநன்கியன்றதற்றுற்
கறையறும்புகழ்தாலூதுகானகங்களித்துச்செய்வான்
குறைவறுநிதியுங்கொண்டுகுலத்தொடுநாகூருற்றார். (6)

தம்முடையிதயங்கொண்டதகைபெறுகருமநன்கிற்
செம்முறைமுடியச்சிந்தைதேங்கியகளிப்பினாற்றோ
ரிம்முறையியற்றுகென்னவிறைபவுத்திரர்களித்த
சம்மதவிடையினோடுகட்டிடத்தலைப்பட்டாரால். (7)

நாற்றுறைவிளங்குமார்க்கநந்நபிகிசுறத்தென்னு
நூற்றொருபதினைன்றோடுநுழைந்தமுப்பத்தேழாண்டி
லாற்றிறைகபுறின்மேயவக்கினிமூலையின்கட்
காற்றாரஞ்சியன்கிணறுகட்டினருயர்வினன்றே. (8)

முன்னமைந்திருக்குமூன்றின்முறையொடுநான்கினாகத்
தென்னமர்கிணறுவீதுந்திறம்பெறக்கட்டியிட்டார்
பன்னருஞ்சிறப்பிற்செல்வம்பரவியபுகழ்வித்திட்ட
மன்னவருயராக்கீர்த்திவளர்திசைபோயதன்றே. (9)

வெள்ளியங்குன்றிற்றோன்றிவிளங்குமம்மினாருக்கீழ்பா
லொள்ளியவோட்டுச்சாய்ப்பினுயர்ந்தெழுகூரையங்கா
ளுள்ளவத்திறத்தான்மற்றதோட்டுமினாருவென்ன
வின்னியவெவருநாளும்விளங்குமாலுலகினன்றே. (10)

நாலாம்மினாருப் படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 1217.

---

# குன்மந்தீர்த்த படலம்.

விரிந்தவாரிதிவேலியின்மன்னியமேதினிநலனெய்தப்
பரிந்தவான்கருணைப்பெருந்தகையரும்பாண்மையினெழுகீர்த்தி
தெரிந்தமாக்களுற்றடிதொழுதரிசனைசெய்தலிற்பொருண்மல்கப்
புரிந்தமாமகிமையுலாய்த்திசைதிசைபோயதுநாடோறும். (1)

நான்குமூலையுநான்குறக்கோபுரநாப்பணோர்மதில்சூழ்ந்த
கான்குதித்தெழுசிகரமண்டபமொளிகான்றிடப்புடைமன்னி
வான்குதித்தமர்பலவகைமண்டபம்வளம்பெறச்சிறப்பெய்தித்
தேன்குதித்தவம்புயக்கழனியகர்திருநகர்பொலிமன்றே. (2)

இனையகோபுரத்தடம்பெறுபள்ளியுளெம்பிரானமர்கிற்க
மனையவாம்பஃறெருக்களுமிருவகைவளம்பெருகங்காடி
தனையறும்புகழ்வரவளர்வறிஞரைத்தாங்கிரும்புகழ்நாகூர்
நனையரும்பொழில்புடைகொளுந்தழைவொடுநலம்பொலிந்துயர்
நாளில். (3)

வேதநாயகர்விழைமகவழிவயின்விளங்குசந்ததிமுட்
போதமேயமீரான்லெப்பைசாகிபும்புகலுமன்னவர்பின்னோ
ரேதமற்றமர்யூசுபுசாகிபுலெப்பையென்பவர்தாமும்
யாதனைத்துநாகூர்விடுத்திவர்ந்தகல்யாத்திரைபுறப்பட்டார். (4)

இருங்கலத்திடையிவர்ந்தெழுதிமிங்கலமிரைவிழைபினிதோடிக்
கருங்கலொத்தமர்பஃறிரையுயர்ந்தமிழ்கண்ணகன்கடனீந்தி

யருங்கழைத்திரளன்னவாமறைக்கரும்பாலைவாய்ச்சுழல்கிற்கும்
பெருங்கடிப்பொழின்மேமலாக்காவெனும்பிறங்கெழினகர்புக்கார். 5

கோட்டிடங்தொறுந்துடிக்குரற்குடிஞைகள்கூப்பிடுமடுக்கத்து
மாட்டிரும்பணைகெழுமலாக்காவெனுமாநகர்புகுமன்னோர்
சேட்டிளம்பருதியினமர்ந்தனரவண்சிறக்குநர்புகழ்யாவுங்
கேட்டிரும்பணிபுரிந்துதக்கணைப்பொருள்கெழுமியநல்குற்றார். (6)

உற்றயாவருந்தக்கணையளித்துயருவப்பொடுபணிசெய்யப்
பெற்றமாதவரிருவருமாவயின்பேணியவுறைநாளிற்
கற்றமாவொலியொருவரிந்நகரகன்காட்டுழிவதிவுற்றா
ரிற்றையாமவர்க்காணியவேகுதுமென்றனஒருள்ளார். (7)

இன்னநன்மொழிகேட்டனர்சகோதரரிருவருங்களியெய்திச்
சொன்னமற்றொருவருக்குளகுன்மநோய்தொலைக்குவமவர்பாற்போ
யென்னநெஞ்சகத்தெண்ணியானுமருடனிருவருமவணெய்தி
யன்னமாதவர்க்காண்டுமென்றனரவரனைவருங்களிப்புற்றார். (8)

எழுந்தவூரவருடனுயர்சோதரரிருவரும்புறப்பட்டுச்
செழுந்தடம்பதியிறந்தெழின்முசுக்கலைதிரிமரன்பயில்கிற்குங்
கொழுந்தணிப்பழுவம்புகூஉமாணரண்கோலியவடைப்புள்ளே
தொழுந்தகையொடுவீற்றிருக்கின்றவத்தூயவர்தமைக்கண்டார். (9)

வேலிசூழியகுடாவடியுளியமும்வெங்கதக்கடமூற்று
நாலிருங்கரக்கரிகளுங்கொடுவரிவேங்கையுநணிதுன்னிக்
கோலியன்னரின்காவலினிற்பதைக்குறித்திரும்புறநின்றார்
சாலிருங்குழுவினரவரிருவருந்தாண்டியுட்புகச்சென்றார். (10)

கூடியேகியோர்புறவெளியைக்லுங்குறியின்மற்றிருவோரு
நாடியுட்புகூஉவன்னரைக்காணியநண்ணனும்பிறர்கூவி
வாடிவேலிபுணுழையலிர்விலங்குவைவருத்துமிவ்வயினின்றே
யீடிறக்கணையுளவெனின்முடிப்புறவெறிதிருள்ளிடத்தென்றார். (11)

கூறுமிம்மொழியுளங்கொளாதிருவருங்கோலும்வேலியின்ஞாங்கர்
மீறுநெஞ்சினரண்மினருறைகொடும்விலங்குகண்டகமஞ்சி

யாறிரின்றனரவ்வயினுள்ளமரருமைசாலொலிகண்டு
பேறுறும்புகழ்யூசுபுசாகிபின்பேரர்காள்வருகென்றார். (12)

நினைந்தநெஞ்சினிராஞ்சலிராவயினிற்கலிர்நுழைகிற்பி
ரினைந்திடாதெனவிசைத்தவரெழுந்தெதிரெய்தினரிருவோரும்
புனைந்தவேலியுட்புக்கினரவரிவர்ப்புல்லினர்விழைவோடு
வனைந்ததம்மிடமழைத்தகன்றிருத்தினர்வதனநோக்குபுசொல்வார்.

எளியனுமெலனையிங்கணும்வைகுறுதெய்கெடுத்தெறிபாக்குக்
களியினெய்தினீரிருவருமெனவுளங்கலங்கியவொலிகூற
வளியினெஞ்சினரின்னவரவர்விளித்தம்மவிம்மொழியென்னெம்
முளியினேதினிரென்றனர்கேட்டவருறமறுத்தறைகிற்பார். (14)

விரும்பிக்கேட்குதிர்நுந்தநாகூர்த்திருவிழவுறுமோராண்டில்
வரும்பன்மாக்களின்யானுமுற்றுந்தையார்வதிவுழிமேக்குற்ற
விரும்பற்றாரகன்மேடையிலமர்ந்தனனிருந்தனனொருபோதி
னரும்பொற்றாளுடைநுமருளொர்சிறுவரையழைத்தொருபணியிட்
டேன். (15)

பிரியவெற்புகைக்குடுகெளித்தகத்துநீர்பெய்துமேற்குடிலைவக்
குளெரியமைத்தளிக்குதிரெனமுடிமுனமென்னையுற்றொருஜின்றன்
பெரியகைக்கொடுபிடித்தறத்தூக்குபுபிறழ்ககன்வெளிபோந்து
பரிவறச்சுமந்தடங்குறாவிசையொடுபறந்துகலக்குற்றேன். (16)

இருந்தயானெழுந்துயர்ககன்பறக்கவுமென்னைவல்லுருவொன்று
பொருந்துறக்கொடுபோகவுமுணர்ந்திதுபோந்ததென்னெனநைந்து
தருந்தவத்தினர்மகாருளொர்சிறுவரைத்தாழ்பணிசெயவிட்ட
வருந்தகைத்திறனுற்றதாமிஃதெனவஞ்சுபுநடுக்குற்றேன். (17)

நடுங்கிமெய்யுறுப்புயிரொழிபருவத்திலுக்குளாறுதலெய்தி
யொடுங்கியுள்ளநம்மாண்டகைமலர்க்கழலூன்றுபுபெருமான்யான்
கொடுங்குறைக்கிடனாயினன்பொறுத்தடிகோடிரென்றனையின்றே
கெடுங்குணத்தினேனறிகிலன்புரிந்தனன்கேட்டனமுறையிட்
டேன். (18)

உள்ளமொன்றியநினைவுடனழுகுரலோவெனவிழிநீர்கள்
வெள்ளமொன்றியமாரியிற்பெய்துறவேண்டினன்பலகூறி
விள்ளருங்ககன்வழியினப்பொழுதெனைவிடுத்தகல்லுடலுஞின்னெ
ன், கள்ளமொன்றியபுலர்முகநோக்குபுகருணையின்மொழிகிற்கும். 19

இன்னமோர்கணப்பொழுதுமட்டாண்டகையிணையடிகருதாமன்
மன்னுவீரெனினிவண்விடுக்கலனுமைவானளவுயர்போகித்
துன்னுபேரெழுவான்வயினெறிகுவன்றெழுதனிர்பிழைத்தீர்நீ
ரென்னுமிம்மொழிகூறிவிட்டகன்றதையிவணிறுத்தனனன்றே. 20

அன்றுசெய்ததானிப்பெருமடவியுளாயினன்றனியேன்யா
னின்றுநீர்வருங்கன்மத்தினுழைவுறினிவ்வயினிராஅமற்
கன்றுவாமனவினையறியுறுகிற்பஞேகலங்கினன்றக்கில்லே
னென்றுகூறிமற்றவருபர்நிலைமையிருவரைப்புகழ்வுற்றார். (21)

எறிபட்டல்குறுதம்முடைவரன்முறையினைத்தெனத்தெரித்தா
ன்ற, நறியபட்டரும் போர்வையொன்றெருடுபலநறைகெழுகாழ்ப்
பூழிற், றறிபட்டோங்கியகட்டையுமளித்திவட்சான்றதக்கணைதம்.
முட், செறிபட்டாவனகோடிரென்றிசைத்தனர்செம்மலர்மகிழ்வு
ற்றார். (22)

இருவருஞ்சுமையியன்றமட்டெடுத்தனரிறையவர்விடைபெற்று
மருவரும்வயின்விடுத்தனரனுப்பினர்வந்தனர்வெளிநிற்குந்
திருவுரும்பதியவர்க்கிதுகூறினர்தெரிந்தவர்தமைமிக்க
வெருவரும்படியிறைஞ்சினர்வாழ்த்தினரிரவுமேயதையன்றே. (23)

கான்றவெங்கதிர்சுருக்கியஞாயிறுகல்புகக்கண்ணுற்றாற்
போன்றவல்லிருண்மல்குறவிருவரப்புறவத்திலொருபாற்போ
யான்றசிந்தையராகுளியிரட்டலிறுந்தைகூப்பிடுகொம்பர்
நான்றமாமரத்தடிவயினுறங்கினர்நள்ளெனும்யாமத்தில். (24)

குன்மநோயுளோர்கனவுழியொருமுதுகுரவருற்றுமக்குள்ள
கன்மநேர்கொளவேண்டியின்னவர்முனங்கழறற்குற்றனிர்கொல்
லோ, வின்மைசெய்வதற்கவருளந்துணிவரேலிங்கிருந்தினஞ்சேய்
த்தின், வன்மையோடெறிபடுவர்காண்கெனக்கடிவசனமொன்றிய
கூறி. (25)

வாய்பிளக்கெனவோதினருவர்மிகவல்லையிற்பிளந்தாரத்
தூய்வருங்கரமிட்டவர்வருத்தியதுதைமயிர்ப்பந்தொன்று
நோய்கெடுக்கியபிடுங்கினர்துணுக்கொடுநோக்குபுவிழிப்புற்றுத்
தோய்கனத்தினர்மறைதரக்கனவெனத்துணிந்ததிசயம்பூப்ப. (26)

அஞ்சிவைகிநம்மாண்டகையிணையடியகத்திடைநினைகொண்டு
கெஞ்சிநாயகீர்தமியன்யானறிகிலாக்கெடுமதியினிங்குற்றேன்
வெஞ்சினத்தெனையகப்படுத்தலிர்குறைவிலக்குதிர்பொறுத்தாடிர்
மஞ்சிருங்கருணைப்பொழிவினிரெனவழுத்துபுவைகுற்றார். (27)

கூசகத்தினரிரவொழிவரைபுரிகுறையிரந்தனர்வைகி
யாசுகத்தொனிகாடெலாங்கல்லெனவாதவனெழுகாலை
வாசிகக்கடன்முடித்துநாகூர்த்திசைவயினின்பாத்திகாவோதித்
தேசிகத்தவர்குன்மநோயொழிந்ததைத்தெரிந்திருங்களிமூழ்கி. (28)

கூடமன்னியசோதரர்பிறரிவைகொள்ளியமனங்கூறி
யாடமன்னியமரன்பயில்வுறும்பெருமடவிவிட்டெழுந்தோங்கு
மாடமன்னியநகர்மலாக்காவிடைவந்தவனுறைவோர்க்கும்
பாடமன்னியவற்புதம்பகர்ந்தனர்பஃறினமமர்குற்றார். (29)

உவப்பினுட்பலவிருந்துநாகூர்க்கெழுமுயர்கலமதுதேடித்
தவப்பெருந்தகைச்சோதரரிருவருந்தாங்கொணும்பொருளோடு
நிவப்பினேறிவான்பரவைவாரிதியினைநீந்துபுநகரெய்தி
நவப்பெறும்புகழ்க்கிளைஞரைத்தெரித்தனர்நன்கொடுமிருந்தாரே. ()

ஆளும்வல்லவனருள்வழிநிலைஇவளரரண்புகுந்துலகாசை
மீளும்வல்லுநராயினுமொலிகள்கோன்விழைமகவழியோரைத்
தாழும்வன்பணியேவுதலிகழ்மொழிசாற்றுதலுறுவாரே
ஞாளும்வாழ்கலர்நைவரென்பதற்கிதுநல்லசான்றெனலாமால். (31)

குன்மதீர்த்த படலம் முடிந்தது,
ஆகச்செய்யுள் 1248.

# ஐந்தாம்மினாறுப் படலம்.

ஓங்கிரும்பெண்ணையன்றிலொலிபுறங்கலந்தகானற்
பாங்கினிற்படர்ந்தநாகூர்ப்பார்த்திவர்சாகமீது
தீங்கறுத்தடிமைகொள்ளுஞ்செய்திகேட்டுலகம்பொற்றோ
டாங்குறுமரையர்பல்லோர்தாழ்பநாணாளுமுற்று. (1)

மணிமுடியரசர்செல்வவண்மையரெவருமுற்றுப்
பணிமுடியினராய்நின்றுபரவுமிம்மகிமையென்று
மெணிமுடியாதவாகியெண்டிசையிடத்தும்போகித்
துணிமுடிபுளத்தராகித்துளங்குறுகாலத்தன்றே. (2)

ஆம்பலங்குழலினோசையலம்பியபுறவத்தோடு
தேம்பொலிவளாகம்பல்பாற்செறியிரும்பண்ணைசூழ்ந்த
தாம்பலன்பெருகுமூத்ததஞ்சைமாநகரந்தன்னை
யோம்பலம்பெருமைபூண்டவொளிர்முடிமன்னன்கேட்டான். (3)

கடலகம்புரக்குமப்துல்காதிறுசாகமீதி
னடலகம்விளங்குங்கீர்த்தியருமையஞ்செவியிற்கொண்ட
மடலகம்பொதிந்தபூந்தார்மன்பிரதாபசிங்கி
னுடலகம்புளகமுற்றாங்கொன்றுவேட்டெழுச்சியுற்றான். (4)

திறங்கொளுங்கொடிஞ்சிமான்றேர்செறிகடாமூற்றுகிற்கு
முறஞ்செவியுற்காலுமூக்கமர்பணைக்கைவேழம்
மறந்தருகலினவாசிமன்னியபதாதிவெள்ளம்
புறந்தரமன்னர்கோமான்யாத்திரைபுறப்பட்டானால். (5)

முசுக்கலைபயின்றுதொட்டமுட்பெரும்பழத்தீந்தேறல்
சுசிப்பெறநன்செய்பாயுந்துளங்கிரும்பொழில்சூழ்தஞ்சை
பசிப்பறப்புரக்குமண்ணல்படைபுடைபரந்துபோதப்
புசிப்பருநகரநீந்திப்புகழ்கொளநடந்தானன்றே. (6)

முழுமுதற்பருக்கோட்டெங்கின்முப்புடைக்கனிகள்வீழ்ந்து
கெழுமுறுகதலித்தாறுகீண்டுதிர்பழங்கண்மந்தி
விழுமிதினுரித்துத்தின்னும்விளங்கெழிற்சோலைநாகூர்ச்
செழுமுயர்திசைநோக்குற்றுத்திகழ்முடிமன்னன்போந்தான். (7)

மரன்பயில்பழுவம்வெற்பின்மழைகெழுகுறிஞ்சிபோக்கிச்
சுரன்பஃறொலைச்சித்தீம்பாற்சுரபிவாழ்முல்லைநீந்தி
யுரன்புனைமள்ளர்காக்குமொண்பணைமருதம்விட்டு
நிரம்புறுவிழையுண்மன்னனெய்தலைக்குற்றுவந்தான். (8)

வழியிடமனைத்துநீங்கிமணிமுடியரையர்கோமான்
கழிவயிற்கானன்மல்குங்கடிகமழ்நாகூரெய்திப்
பழியறுவெளிக்கட்டங்குபாசறையிடுவித்தன்றே
யிழிமதக்களிற்றியானையிழிந்தகங்காலிற்புக்கான். (9)

புடைவருமமைச்சரேனைப்புரவலர்பரிவிற்சூழக்
குடைநிழனடந்துகோமான்கொளுநகர்முன்றினண்ணி
யடைபுகழரையனீக்கியடிபுதையரணங்கைகள்
படைபொழித்தரிதிற்கட்டிப்பணிந்துநின்றிரந்தான்போற்றி. (10)

உயர்குலத்தண்ணல்போற்றியொலிகடம்பெருமான்போற்றி
துயர்கெடுத்தாள்வீர்போற்றிதொடர்பிணியறுப்பீர்போற்றி
யயர்குநரளிப்பீர்போற்றியவாவினைமுடிப்பீர்போற்றி
மயர்வணங்கழிப்பீர்போற்றிமாதவக்குரிசில்போற்றி. (11)

அருந்தவக்கொழுந்துபோற்றியடையலர்க்கேறுபோற்றி
மருந்துயர்மருந்துபோற்றிமலைமுடிவிளக்கம்போற்றி
வருந்துநர்க்கமுதம்போற்றிமனுப்பயிர்மாரிபோற்றி
கருந்தனப்புதையல்போற்றிகருணைவான்புணரிபோற்றி. (12)

வென்றுயருலகங்காக்கும்வேந்தர்தாழடிகள்போற்றி
குன்றுயர்புயத்திற்சான்றகுலத்தர்தாழடிகள்போற்றி
பொன்றுறவாவிமீட்டும்புரவலவடிகள்போற்றி
நன்றுறுநாகூர்வாழுநாயகவடிகள்போற்றி. (13)

வேறு.

எல்லாவுலகுமங்கையினிருத்திக்காணுமதிகார
வல்லார்நீயிரெனவேத்தவந்தீர்மீறான்சாகிபுவே
வல்லார்நீயிரெனவேத்தவந்தீரதனாலடிமையேன்
பொல்லாவினையின்றுயர்போகப்புரிவீர்மீறான்சாகிபுவே. (14)

தீராப்பிணியுமழி துயருந்தீர்த்திட்டடியார்தமக்கென்றும்
வாராப்பலனும்வரச்செய்யவந்தீர்மீருன்சாகிபுவே
வாராப்பலனும்வரச்செய்யவந்தீரதனுடைமையேன்
போராப்பொருதுந்துயர்போகப்புரிவீர்மீருன்சாகிபுவே. (15)

நீண்டுகிடக்கும்பேருலகநேடியடையும்பலன்பூத்து
மாண்டுகிடக்கும்புகழோடுவந்தீர்மீருன்சாகிபுவே
மாண்டுகிடக்கும்புகழோடுவந்தீரதனுலடிமையேன்
பூண்டுகிடக்குந்துயர்போகப்புரிவீர்மீருன்சாகிபுவே. (16)

வேறு.

இற்றையாந்துதியெண்ணிலகூறியே
யொற்றைவான்குடையோம்பியதஞ்சையான்
சுற்றைமேவுநர்தோமறுமாசியிற்
பிற்றையுள்ளப்பிரியமுரைப்பனுல். (17)

வேறு.

ஓங்கிரும்புகழினீர்யானென்றிரக்குவனுலென்னே
னீங்கியலற்றசெல்வநிறைந்துறுதமியனேனும்
வாங்கியமரணமெய்தின்மணிமுடிபுனைந்துசெங்கோ
ருங்கியவெற்குப்பின்னுஞ்சந்ததியில்லையன்றே. (18)

பள்ளத்திற்பாயுநீரிற்பழுமரம்படரும்பக்கி
வெள்ளத்தினடைநர்க்கற்பின்வேண்டியவளித்தாள்கிற்பீர்
வள்ளத்தின்வாரிமீதுவதிந்தெனின்வையங்காக்க
வுள்ளத்தினுவகையாங்கெற்கொருமகவளித்தல்வேண்டும். (19)

புரக்கியவையமென்னைப்புகழ்மகவளித்தல்செய்யின்
வரக்குறைவின்றிநுந்தமணிநகர்வாயின்மாரி
கரக்குறுமினுருவொன்றுகட்டுபுகிராமமொன்றுந்
தரக்கருத்தமைத்தேனென்றுசாற்றினன்ருழ்ந்துநின்ருன். (20)

எனமுடியரையனேர்ந்திட்டிருநிதிகுடங்கர்பெய்து
மனநிலைமாறகில்லான்வதியுநர்வழுத்திமீண்டு
வனமுறுதானைமற்றோர்மருங்குறவெழுந்துமல்குந்
தனமுறைநாகூர்நீத்துத்தஞ்சைநோக்குற்றுச்சென்ருன். (21)

காவனமடவிமற்றுங்கடந்துபாண்டும்பிசெய்யும்
பூவனத்தஞ்சைமூதூர்புரவலன்சென்றுமற்றை
யாவணவியற்றியோங்குமரமியமாடம்புக்குத்
தீவணமொழிமென்கூந்தற்றேவியோடமர்ந்தானன்றே. (22)

கழலடித்தடந்தோட்டஞ்சைக்காவலனமர்சின்னாளி
னிழலடிப்பெருமானன்பினிறைமலரைம்பாலோதித்
தழல்புரைகாந்தட்செங்கைத்தடமுலையமைத்தோள்வண்டிற்
சுழல்வருகருங்கட்டேவிசூலுளங்குற்றாளன்றே. (23)

மனைகருவமைந்தாளென்னமணிகிளர்பைம்பொற்பூணி
னணைமலர்ப்புயங்கட்குன்றினரபதிவிம்முக்கொண்டான்
சினையவண்மாதமொன்பான்செல்லியமுதிர்வுபெற்றாள்
கனைபுகழ்மகவின்பேறுகாலம்வந்தெய்திற்றன்றே. (24)

சிலதியரிகுளையீட்டஞ்செவிமற்றேனைமாதர்
பலதிரையெழினிவீழ்த்துப்பரிவொடுசூழ்ந்துவைக
வலமுறைதருமிராசமருத்துவம்வல்லோராற்ற
மலர்வலம்புரியார்த்தீன்றமணியினேர்மைந்தனீன்றாள். (25)

பாலகற்பயந்தாளென்னும்பனிமொழியமுதிற்கேட்டு
வேலகங்கைவிடாதவேந்தர்கோனுவகைமூழ்கிக்
காலகங்காலவைத்தகாவலரேத்திச்செம்பொன்
ஞாலகங்கொண்டோரில்லோர்நூங்குறநல்கினானால். (26)

மகச்சடங்கானவெல்லாம்வழிமுறையியற்றியன்பின்
மிகச்சனத்தினர்கட்காரவிருந்தொடுமறுவையீந்து
சுகச்சுபத்தோரைநோக்கித்துளசிமாராசனென்ன
வகச்சிறப்பெய்தியோங்கியலர்திருநாமமிட்டான். (27)

குன்றினைபுயங்கள்விம்முக்கொளும்பிரதாபசிங்கு
வென்றியம்பாலற்பெற்றவிழைவினானுவகைமீறி
மன்றலம்பொழில்சூழ்நாகூர்மகிபதிவாழும்பள்ளி
முன்றினின்றுரைத்ததன்றேமுடித்திடக்கருத்துக்கொண்டான். 28

ஓங்குதன்காரியத்தினுரிமைபூண்டொழுகுமோர்பாற்
றாங்குதலமையச்செம்பொற்சாளிகையநந்தகல்கிப்
பூங்குலைப்பொழில்சூழ்நாகூர்போந்துயர்பெருமான்பள்ளிப்
பாங்குறைமினாராக்கட்டும்படியுரைத்தனுப்பினானால். (29)

அனையவர்தஞ்சைநீங்கியணிநகர்நாகூர்புக்குப்
புனைகழற்பெருமாற்போற்றிப்புரக்குநர்விடையும்பெற்றுக்
கனைபுகழ்வள்ளன்மேயகபுறதன்மேக்கினாக
வினைவறுமுயர்மினாராவெழுப்பியதொடக்கஞ்செய்தார். (30)

ஆண்டதுகிசுறத்தென்னுமாயிரந்தொருநூற்றோடு
மாண்டதினெழுபத்தேழாம்வற்சரந்தன்னிற்காயச்
சேண்டருகதிர்காண்டிக்குஞ்சிகரமாமினாராவொன்று
காண்டருமுயர்விற்றாகக்கட்டினர்முடித்திட்டாரால். (31)

அரியபல்லடுக்கன்மேயவகன்றளமொன்றுநான்கு
பரியவாயினதாவுள்ளிற்படிகொளாரோகணத்தி
னுரியதாமழைகண்மன்னியுலவியவெள்ளிவெற்பின்
பெரியமினாராவென்னும்பெயரொடுபொலிந்ததன்றே. (32)

பேர்புனைமினாராநான்கிற்பெரிதெனவெழுந்துநிற்குஞ்
சீர்புனைமினாராக்கட்டித்தீர்ந்தவச்செய்திதன்னைப்
பார்புனைதஞ்சையாளும்பதிபிரதாபசிங்குக்
கேர்புனையன்னோரோலையெழுதினரனுப்பினாரால். (33)

தன்னுடைவிருப்பினாங்குசமைந்ததென்றெழுதுமோலை
மன்னுளங்களிப்பவோர்ந்துமாலையந்தடந்தோள்விம்மி
நன்னிலையமைச்சராதிநால்வகைத்தானைசூழப்
பொன்னிலைத்தஞ்சைவிட்டுக்காணியபுறப்பட்டானால். (34)

கட்டியமினாராவங்கண்காண்டுமென்றரியவன்பிற்
கிட்டியதுளசியென்னுங்கிளர்முடிமைந்தனோடு
கட்டியவில்லர்கட்கக்காப்பினர்புடையின்மல்க
வெட்டியவயின்கணீந்தியிரும்புகழ்நாகூர்புக்கான். (35)

புக்குயர்மினாராநெஞ்சம்புளகெழத்தரிசித்தம்பொன்
மிக்குறுபெருமான்கோயில்விளங்கெழின்முன்றிற்போந்து
பக்கலின்மைந்தனிற்பப்பணிந்துபல்லாண்டுகூறித்
துக்கமற்றுயர்ந்தமன்னன்றுதித்தனன்பலவாறாக. (36)

எம்பிரான்சாகமீதினிணைக்கழற்றஞ்சைவாழ்நர்
தம்பிரான்வழுத்திநின்றுசாகிபுமார்கணோக்கி
நம்பிரான்சமுகநேர்ந்தநற்கடனொன்றுதீர்த்தே
னம்பிரான்கருணையான்மற்றதுமுடிக்குவனாலென்று (37)

சொல்லியவன்றேதற்கீழ்துளங்கிருந்தேயத்துள்ள
வல்லிணர்மருதவேலிமலியிளங்கடம்பனூரை
மல்லிரும்புயக்கோமாற்குமானியமென்றுதிட்டிப்
பல்லிரும்புகழிற்செப்புப்பட்டயமவர்கையீந்தான். (38)

பண்ணியமானியத்தின்பட்டயமீந்தபிற்றைப்
புண்ணியம்பெற்றகோமான்புகழ்ப்பிரதாபசிங்கு
தண்ணியநறுந்தாட்போற்றித்தஞ்சைமாநகரம்போத
வெண்ணியவிடையினோடுமெழுந்தனன்விடுத்துநாகூர். (39)

தாங்கியகுடிகள்போற்றசாகிபுமார்கள்வாழ்த்த
வோங்கியவமைச்சரேத்தவுயர்சிரந்தானைதாழ்த்த
வேங்கிசைவண்டார்மூசுமிடமெலாங்கடந்திட்டிஞ்சி
தூங்கியதஞ்சைபுக்கான்சுடர்முடியரசரேறே. (40)

ஐந்தாம்மினாராப் படலம் முடிந்தது.

ஆகச்செய்யுள் 1288.

# மானியப் படலம்.

பேர்பெற்றதஞ்சைப்பிரதாபசிங்குமன்னன்
வார்பெற்றகோட்டம்வளர்மானியம்விட்டவன்பி
னேர்பெற்றகீர்த்தியெழின்மாமுடிமன்னரேத்தப்
பார்பெற்றவெங்கும்படர்ந்தாரியவேருநாளில். (1)

நிழலிற்பிறந்துவளர்ந்தானெஞ்சுற்றதந்தை
குழலிற்பிறந்தவிசைபோலக்குதலைகேட்பக்
கழலிற்பிறந்தகருணைக்கெனநாகூர்போந்து
தொழலிற்பிறந்ததுளசிமகாராசனென்பான். (2)

நாளொருவண்ணம்பொழுதொருமேனிநண்ணத்
தோளிருகுன்றின்றுணைகாணியபோந்தகாலை
வேளுருவெய்திவிளங்கார்பலகல்வியாவுங்
கோளூறுநெஞ்சங்குலவும்வழிக்கற்றுத்தேர்ந்தான். (3)

விற்றொழில்வாளவிறலேர்பெறும்யானையேற்றம்
மற்றொழிற்றிண்டேர்வயவாம்பரியேற்றம்யாவுங்
கற்றுயர்காளைநிகர்பாலகற்றந்தைகாண்டு
பொற்றவிசேற்றிப்புகழ்செய்யியநேர்ந்தான்மாதோ. (4)

மொட்டார்கமலமுலைமாமடமாதர்நண்ணிக்
கட்டாரவற்குக்கதிர்ச்சாமரநின்றுவீச
வெட்டார்திசைஞரிருகைகளுமேந்தியேத்தப்
பட்டாபிடேகப்பணிசேர்விழவாற்றினனே. (5)

பூவீற்றிருக்கும்புனையேரிழைமாதரோடு
நாவீற்றிருக்குமுயர்மாதருநண்ணிநிற்பக்
கோவீற்றிருக்குமுயர்செம்பொலங்குன்றினேறு
மாவீற்றிருக்குமியல்மான்றவிசேறினனே. (6)

தோற்றுங்கழற்காற்றுளசிமகாராசவள்ளல்
போற்றுமமைச்சர்புரோகிதரேனையோரு
மாற்றும்பணியினருகார்ந்தொழுகுற்றுநிற்ப
வீற்றும்பலிற்பொற்றவிசில்வீற்றிருந்தானன்றே. (7)

எணமாரமைச்சர்முதலெண்மருமிருந்துபோற்றக்
கணமாமணிசேர்கதிர்க்காலுடைக்கவரிவீச
மணமாமணித்தோட்டுளசிமகாராசமன்னன்
வணமார்தவிசின்வதிந்தேருலகாளுநாளில். (8)

தான்பிறவாமுன்னுரைதந்தைதுன்புற்றவாறுங்
கான்பெறுநாகூர்கமழ்தாரவன்போந்தவாறும்
மேன்பதநாதர்விறல்வேண்டுநேர்ந்தவாறு
மான்பெறுகாளைமிகராந்தனையீன்றவாறும். (9)

கோமகக்கென்னவுயர்கோபுரங்கட்டுவாறும்
மாமலர்கோட்டமதுமானியம்விட்டவாறுங்
காமருகோமான்கழலின்னருள்பெற்றவாறும்
வாமமார்செய்யமணிசூழ்முடிமன்னன்கேட்டான். (10)

ஆனவிச்செய்தியனைத்துங்கொளக்கேட்டமன்னன்
தானுமங்குற்றுத்தரிசித்தருள்கொள்வான்வேண்டித்
தேனமர்திண்டோட்டிறற்சேவகர்சூழ்ந்துபோத
வீனமின்மன்னர்க்கிறைவன்புறப்பாடுகொண்டான். (11)

சாடாததிண்டேர்தடஞ்சேர்பனைக்கையின்வேழம்
வாடாச்செலவின்வளியாம்பரியீட்டம்யாவு
மோடாததானையுவரிப்பொலிவொத்துமேவ
வூடார்ப்புரிகொண்முரசேறொலித்திட்டதன்றே. (12)

வேழக்கவின்கொள்வெரிந்மீப்பொலிவுற்றுக்கான்ற
வீழக்கடைகாலிலகடம்பொற்பவைகித்
தாழக்கழற்காற்றனிமாமுடிமன்னர்சூழ்ந்து
வீழக்கலந்தார்விருதோடியர்தஞ்சைநீத்தான். (13)

பேரிகறங்கவுயர்பீலிமாக்குச்சமோங்க
வாரிபொருவமலிதானைகள்சூழ்ந்துபோத
வேரிவிரியும்விறற்றூரவன்றன்னூர்நீங்கிப்
பாரினகன்றபலமார்க்கமும்போக்கினனே. (14)

முந்நீர்ப்புணரிமுளைத்துற்றுக்கால்வந்ததேபோ
லிந்நீர்ப்பரவுமிருவான்றிறற்றானைவெள்ள
மெந்நீர்ப்புறமுமிகந்தன்பருளோங்குமேன்மை
நந்நீர்ப்பெருமானமர்மாநகர்மேயினானே. (15)

கோடார்களிற்றினுயர்வாம்பொலங்குன்றினுச்சி
யூடார்பருதியுதயம்மெனமன்னன்றோற்றி
நாடாரகலருநாகூர்ப்புறத்தினுங்கக்
கூடாரமிட்டுக்குரைமாக்கடற்றானைசேர்த்தான். (16)

அம்படையின்றியமைச்சர்கள்சூழ்ந்துபோத
நம்பிரான்வைகுநகர்மாமணிமுன்றினண்ணி
யும்பருலகினுயருஞ்சிறப்புற்றுநோக்கிச்
செம்பொன்முடிசேர்சிரந்தாழ்வணக்கத்தின்வீழ்ந்தான். (17)

சாயாதபைம்பொன்மணிமாமுடிசாய்த்தமன்ன
னோயாதவன்பினுயரும்மொழிகொண்டுவாழ்த்தி
மாயாதவின்பின்வளர்மாநிதிக்கும்பமூழ்கப்
பாயாதவேங்கைப்பணயங்கணக்கின்றிப்பெய்தான். (18)

மண்டெரிதூபம்வளர்காழகிலாரம்பெய்து
கண்டோடுதீந்தேங்கதலிப்பழந்தாற்றின்வைத்துப்
பண்டமர்மேலோர்முறைபாத்திகாபண்பினோதத்
தண்டடந்தோளான்றரிசித்துளம்பூரித்தானே. (19)

ஆவனசெய்திட்டகன்வானகர்யாண்டும்போந்து
மாவனமிக்கமதிதோய்மண்டபங்களோடு
மேவனமுற்றமினுருபிறயாவுநோக்கிக்
கேவலமின்றியவண்வேண்டுவமுற்றுங்கேட்டான். (20)

பெருமான்மகவின்பெருகுங்குடிபல்கலானு
மருமாந்தருகாவகல்வுற்றமைகிற்பதானுந்
திருமாநவத்திற்செலவீண்டதியாகுமாமேல்
வருமானமிட்டிதெனமாமனத்தாய்ந்தான்வள்ளல். (21)

தன்றந்தையீந்ததடங்கொண்டதொர்கோட்டத்தானு
மன்றக்குடங்கர்நிறைகாணிக்கையானுஞ்செய்யு
மென்றிந்தனாங்கர்ச்செலவாகியபோதாதென்று
பொன்றுஞ்சுமார்பின்புகழ்பூபதியெண்ணங்கூர்ந்தான். (22)

கத்தர்செலவுங்கலந்தார்பவரூணுமாகச்
சித்தத்தினெண்ணித்திகழ்மாமுடிச்செங்கோன்மேய
சுத்தத்தின்றஞ்சைத்துளசிமகாராசவள்ளல்
பத்தொடுநான்குபடப்பைகண்மானியமிட்டான். (23)

நட்டகன்பண்ணைநலஞ்சேர்பதினான்குகோட்டம்
மட்டகலன்பினருண்மானியஞ்செய்தமன்ன
னெட்டருந்திக்குமியம்புங்கொடைக்கையிற்செப்புப்
பட்டயந்தீட்டிப்பகர்தாரைவார்த்தீந்திட்டானே. (24)

இன்னவளஞ்சாலிருமாநிலன்றத்தமாற்றி
மன்னர்பெருமான்மணிமாமுடிபின்னுந்தாழ்த்தி
நன்னரொலிமார்க்கிறையோரருணன்குமூழ்கிப்
பொன்னகரம்புகுவான்புறப்பட்டானன்றே. (25)

தானைவகையுந்தனியாம்பரிவாரமான
சேனையவருந்திறலாய்ப்புடைசேர்ந்துபோத
யானைவெரிந்சேர்யவனத்தவிசேறிவைகி
வானையரண்மேமுயர்தஞ்சைபோய்வாழ்ந்தான்மாதோ. (26)

வேறு.

பார்பெறுதஞ்சையெல்லைபடர்ந்தகீட்டிசையின்பக்க
மார்பெறுகுடியினூற்றவாளியூர்கடம்பர்வாழ்க்கை
சீர்பெறுபுலியூர்புல்லூர்திருக்கணங்குடிமாறில்லா
நார்பெறுமள்ளர்மல்குநாங்குடிவெற்றிவாழ்க்கை. (27)

தாழ்சுரூங்குடிநீள்பண்ணைதருங்குறும்பேரிசோலை
சூழ்தருவண்டுமூசுஞ்சோழங்கநல்லூர்வாய்ப்பி
ஞழ்கரைவிளைநெடுங்காட்டங்குடியருகலில்லா
வாழ்வுறுவளஞ்சார்தெத்திவடகுடிமேலைநாகூர். (28)

இனையவாங்கோட்டமில்லாவீரெழுகோட்டத்தோடு
புனைபிரதாபசிங்குபொருந்தருள்கோட்டமொன்றும்
வனைபெறவொன்றியொன்றாய்வளர்பதினைந்துகோட்ட
மனையநாடொட்டன்னோருக்காதினமாயவன்றே. (29)

இப்பெரும்வாழ்வினோடுமியற்றினங்கணமுமாறா
தெப்பெருந்தேயத்தோருமெய்தித்தக்கணைகணல்கு
மொப்பறுமலிவினுற்றாருயர்நிதிப்பொருளுங்கொண்டு
தப்பறுபெருமான்மேயசந்ததியவர்கள்வாழ்ந்தார். (30)

வரவரக்குடிகண்மல்கவரும்வழியகலமேன்மைப்
பரமுயர்பெருமான்வைகும்பள்ளியும்பரவிப்போத
விரவுமண்டபங்கள்பல்லவிளங்குறநான்குபாலு
முரமதிள்சூழவுள்ளூற்றொளிரலங்காரங்கொண்ட. (31)

வான்றலைமாட்டுவாயில்வாவியார்கிழக்குவாயி
லான்றகான்மாட்டுவாயிலலங்காரவாயிலென்னும்
மேன்றகுநான்குவாயில்விளங்கெழிலரணத்துள்ளே
கான்றொளிசிந்தக்கோமான்கடிநகரிருக்குமன்றே. (32)

கொந்தளிப்பெழிலிதேய்க்குங்கோபுரமெனுமின்றா
வைந்தொடுபொலியுங்கோயிலாமுயர்தறுகாதன்னி
னிந்தமாநிலத்தியாண்டுமின்றெனப்பலரும்போற்றக்
கந்தமுமழகும்பூப்பக்கலந்ததுவைகுமன்றே. (33)

வெள்ளிவானிலைகபாடம்விளக்கினம்பளிக்கினாலு
மள்ளிவான்வருவில்லெங்குமறைந்தெனத்துளங்கமிக்கா
மொள்ளியதன்மைமாறாதுயர்ந்துறுகாலம்வைகும்
பள்ளிசேர்மகிமையாரும்பகருதற்பாற்றன்றேயால். (34)

மானியப் படலம் முடிந்தது.
ஆகச்செய்யுள் 1322.

# தலவிசேடப் படலம்.

நிலவுவான்புவியுளர்பிறவொருங்குளநிறையக்
குலவுமன்பொடுபழிச்சிடுமுயர்புகழ்கொண்டு
நலவிசேடமாம்பெருமிதம்படைத்துயர்நாகூர்த்
தலவிசேடமீதென்றெவர்சாற்றுதறக்கார். (1)

மங்களத்தொனிசேர்மதினாவெழின்மக்கா
தங்குசீர்பகுதாதெனுமுப்பதிதவிர
வெங்கிருக்குமற்றிணையிதற்கென்றுலகியம்பு
நங்களுக்கொருமேன்மையினமைந்ததுநாகூர். (2)

காலநின்றொளியெரிவிளக்கினம்வலைககாண
நாலநின்றவல்விருளொருங்கொதுங்குபுநடப்ப
நீலநின்றமாமணிமுதலியகதிர்நிவப்பச்
சாலநின்றதாலெம்பிரானமர்ந்துறுந்தறுகா. (3)

தாக்குமாவினையனைத்தையுஞ்செய்த்துறத்தாழ்வி
ளேக்குமாந்தர்தந்நெஞ்சகங்களிபெறநொறுக்கிக்
காக்கும்யாமெனவெழுந்துமீப்போயவைகரையப்
போக்குமாமினுறுவெனச்சிறந்தகோபுரங்கள். (4)

அழுந்துசிந்தையினிறப்பருங்கவற்சியாமளக்கர்
விழுந்துமாந்தரினன்னதுகலக்குபுவிலக்கு
மெழுந்துநின்றுமீப்போமினுறுமுடியேற்றிக்
கொழுந்துவிட்டெழிலுமிழ்ந்திடப்பறந்திடுங்கொடிகள். (5)

மாற்றுயர்ந்தபைம்பொன்னினும்வெண்ணிறமன்னி
யேற்றுயர்ந்தவான்வெள்ளியினுங்கதிரெறிப்ப
வீற்றுயர்ந்துறப்பொருகதவுயர்நிலைவிளங்கிப்
போற்றுயர்ந்துறுந்தூபிகைமண்டபப்பொலிவு. (6)

சேணடைந்தவைங்கோபுரத்தினுந்தொடர்சிலம்பின்
மாணநின்றபன்மண்டபத்தினுங்கதிர்வழங்கிப்
பூணவந்தவத்துயர்வரம்விழைந்தகம்புகுநர்
காணநின்றிருளறுக்குமாம்பலபொலங்கலசம். (7)

மூரண்டருங்குணத்தெழுமழுக்காறுறுமூட
மிரண்டகம்படிறெழுக்கிழிவேனையவெல்லா
மரண்டரும்பவவல்லிருளனைத்தையுமறுக்குந்
திரண்டமர்ந்திடுமிருளறச்சுடர்பஃறீபம். 8

அடருந்தாட்குறும்பாரிடங்கழல்விழியலகை
படருநச்சராவேனையவணங்குகோட்பட்டார்
தொடருந்துன்பவையனைத்தையுமொடுக்குபுதொலைக்குஞ்
சுடருமிந்தளங்கமழ்திரியாசவெண்டீபம். 9

நஞ்சமுண்டவர்பகையினுனியற்றுநர்நலமில்
வஞ்சமுண்டவர்பற்றிலம்பாட்டினர்மல்குந்
தஞ்சமுண்டடைதரினவையேகியதவிர்க்கும்
மஞ்சமுண்டெழுபன்னறுமணத்தெழுவாடை. 10

கறங்குவான்கடலாடைகொண்மாநிலன்களிப்பி
னுறங்குவானினிதோப்பமையொளிர்முடியுடையா
சிறங்குசிந்தையின்றுயரொருங்கறுத்தினிதிகக்கும்
பிறங்குமாற்றுயர்பசியபொற்பாதுகப்பேழை. 11

யாவருந்துதிசெய்யியமுடிமிசையணிய
மேவரும்பிணியொழிதபதியன்குடைவிளங்கா
தீவரும்புகழ்ப்பாவலம்பெட்டியுளிருக்கும்
பூவருந்துநர்க்கெப்பிணியிருக்குமிப்புவியில். 12

கிடைக்கும்வான்பொருளன்றருமருந்தினுங்கெழுமி
யுடைக்குநோய்முழுதென்றகன்புவிபயனுண்ணு
மடைக்குமாறிலாவெழினகர்த்துகளெறியலகு
துடைக்குங்காலெலாந்துடைப்புறுமாந்தர்தந்துன்பம். 13

என்றிரும்புகழெய்துறுபள்ளிவாயிலங்க
நின்றெரிந்துயர்பன்னிரைவிளக்குகுநெய்யும்
மன்றலாருயர்சாம்பரினயிருமேமருந்தாங்
குன்றணங்கினமுழுவதுமொருங்கறக்கொல்ல. 14

மண்டிருந்துயர்மல்குறும்பெரும்பிணிவகையு
மண்டிருந்தணங்கிடுங்கணத்தினமுளவனைத்துங்

கண்டிருந்திடுமெனுமொழியில்லையெக்காலும்
பண்டிருந்தெழிலுமிழ்புகழ்கெழுமுதுபக்கு. 15

ஒழுகுபுண்கமழ்நீரோடுபுழுப்பயின்றுண்ணு
மழுகுமெய்யினர்காலினுங்கையினுமணங்காம்
முழுமுடத்தினர்கூனினர்குருட்டினர்முதலோர்
பழுதகன்றிடப்புரியுமாங்குறுநறும்பனிநீர். 16

உடலொடுக்குவயாவுளவனைத்தையுமொடுக்கி
யடலொடுக்குவதன்றியுமும்மலத்தழுக்கை
மிடலொடுக்கொடுகழீஇயுளத்தறிவையும்விளக்கும்
மடலொடுக்குறுக்குமுதவான்மரைமலிவாவி. 17

ஆதிநாயகநந்நபிமுகம்மதாமண்ண
ணீதிமாந்தர்களுணரியவருளுமாநிறைநா
லோதிடுந்தொனியொடுபலவான்கவியொலியும்
போதிகந்திடாதிமிர்ந்துபற்றீங்கையும்போக்கும். 18

கான்றபன்னிறங்கலந்தெழுபேரொளிகமழ்த
லான்றவாம்பொருட்டேபமற்றேனையவனைத்துஞ்
சான்றவந்தமார்தடநகரெனுமுயர்தருகாப்
போன்றதொன்றிவணுண்டெனலரிதுறும்புதுமை. 19

இனையமேதகுபள்ளியதெம்பிரானிருக்குந்
தனையகன்றசீர்நாப்பணின்றருமையிற்சாலப்
புனையிரும்புகழ்பெற்றுயர்வாழ்க்கையிற்பொலிந்து
கனையிருங்கடற்புவிதொழவிருந்ததுகடியூர். 20

பருவகன்றநம்பார்த்திவரொலிகடம்பதிவாழ்
மருவகன்றசீர்மாநகர்நாப்பணில்வைகித்
திருவகன்றதானுயர்ந்துநாகூர்திசைசென்று
பொருவகன்றதென்றேறியவிருக்குமாற்பொலிந்து. 21

முன்னமோதியமொழியுருதனவெனமொய்த்த
வின்னமாவினையாவையுமுளங்கொடுவிறலின்
பொன்னமாமனைத்தடநகரடைவுழிப்போகு
மென்னவேண்டின்றுபரிக்கையிற்காண்டலேயிசைக்கும். 22

இன்னலுற்றவர்நீள்பிணியுற்றவரின்மை
மன்னலுற்றவர்மாதவவிழைவினர்மகமே
யுன்னலுற்றவர்கல்விவேண்டுநர்பிறருற்றுப்
பன்னலுற்றதுபெறுகுவரிப்பெரும்பதியில். 23

முடியடுத்துயரரசருமுன்னினமுடிப்பப்
படியடுத்தெவண்போகலரொலிகடம்பதிவாழ்
கடியெடுத்தவிவ்வூரினைக்காணியக்கருதி
யடியெடுத்துவைத்தடைந்திடினடைந்துபேறடைவார். 24

கலகமெய்துறப்பெருங்குழலூதியகமழ்வா
யிலகவைத்தவளுதெனவிறையுளவெவையும்
விலகவாங்கடைநாட்குறிக்கருந்தொடர்விளங்கி
யுலகமேயவிந்நகருடைமகிமையாவுரைத்தல். 25

இருந்தநாளுடைச்செய்தியன்றிகந்தபின்னிசையிற்
பொருந்தவாற்றியவெனவிதுகூறுபற்புதுமை
தருந்தகையினுமதிகமாமற்புதஞ்சால
வருந்தினந்தொறுநிகழ்தலமாமிதுமன்னே. 26

பவத்தினைத்தொடர்தீத்தொழின்மும்மலப்பகுதி
யவத்தினைனையவனைத்தையுமொருங்கறவகற்றித்
தவத்தினைத்தொடர்நற்றொழில்வாலகந்தருதி
நவத்தினைனையவனைத்தையுமளித்திடுநாகூர். 27

வேறு.

வான்மலியொலிகள்கோமான்மான்மியம்பொலிந்துவைகும்
மேன்மையிப்புராணந்தன்னைவிழைவொடுபடிக்குமோரும்
பான்மையிற்பொருட்கள்காட்டிப்பகர்நருங்கேட்குமோருந்
தீன்வழிநின்றுநாளுந்திருவொடுவாழிமாதோ. 28

தலவிசேடப் படலம் முடிந்தது.

ஆகச்செய்யுள் 1350.

நாகூர்ப்புராணம் முற்றிற்று.

ளைத் துதிக்குங்காலத்து, அவை—அத்தாமரைமலர்கள், பாதகம் மலங்களை பஞ்சென் ஆக்கும்--அடியேமுடைய பாதகமாகிய மனவழுக்குகளைப் பஞ்சாய்ப்பறக்கச்செய்யும் என்றவாறு.

மல்அம்களை என்புழி அம் அல்வழிச்சாரியை. மேன்பாத என்புழிப் பதமென்பது நீண்டு நின்றது. கமலம் ஆகுபெயர். ஏகாரம் ஈற்றசை.

ஏகபாதம்.

என்பது, நான்கடிகளுமொன்றாய் வருவது. அது:—

கலி விருத்தம்.

மாவணங்குடை மாதவநாதவே
மாவணங்குடை மாதவநாதவே
மாவணங்குடை மாதவநாதவே
மாவணங்குடை மாதவநாதவே. 21

இதன் பதவுரை:—

மா வணங்கு உடை மாதவ—பெரிய வணக்கத்தையுடைய மாதவரே, நாத—நாதரே, ஏமா—களிப்பையுடையவரே, அணங்கு உடைம் ஆதவ—வருத்தங்கெட்ட சூரியோதயமானவரே, நாதவே—நாதாவே, மா அணங்கு உடை—அழகிய வெனது மனையாளாகிய பெண்ணினது, மா தவ—மலடென்னுங் கட்டுக்கெட, நாத வேம் மா அணங்கு உடை—நாதத்தினது வேகின்ற மிருகியானநோயைத் தகர்ப்பீராக, மா தவ—பெருமைமிக, நாத—அரசரே என்றவாறு.

முதற்கண்ணுள்ள உடைஎன்புழி அகரந்தொக்கது. இரண்டாவதாகிய உடைம் என்புழி உடையும் என்னும் ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங்கெட்டது. நாதாவே என்பது நாதவே எனநின்றது. ஆண்டேகாரம்விளி. மூன்றாவதாகிய உடையவென்பதும் அகரந்தொக்கு நின்றது. ஏகாரம் ஈற்றசை.

மாலை மாற்று.

என்பது, ஒரு செய்யுளை ஈறுமுதலாக முதலீறாகவாசிப்பினும் அச் செய்யுளேயாவது. அது:—

கலி விருத்தம்.

வேதா நாரா வேமா தாதா, நீதா தாரா நீரா தீதா
தாதீ ராநீ ராதா தாநீ, தாதா மாவே ராநா தாவே. 22

இதன் பதவுரை:—

வேதா—வேதத்தையுடையவரே, நாரா—அன்பையுடையவரே, ஏமா—இன்பத்தையுடையவரே, தாதா—தாதாவே, நீதா—நீதத்தையுடையவரே, தாரா—வெற்றிமாலையையுடையவரே, நீர அதீதா—குண

மேன்பாட்டையுடையவரே, தா தீரா நீர் ஆதா—வலிமைதீராதநீர்மையு ள்ள வாதரவினையுடையவரே, தா நீதா—எங்குந்தாவுகின்ற பாக்கியத்தை யுடையவரே ,தாமா—பெருமையையுடையவரே, ஏரா—அழகினையுடை யவரே, நாதாவே—நாதாவே என்றவாறு.

## சருப்ப தோபத்திரம்.

என்பது, ஒரு கிரை எட்டாக அறுபத்து நான்கறைகீறி, ஓ ரடியெட்டெழுத்தாக நான்கடிபாடி, அந்நான்கடிகளேயும் மேனி ன்றுகீழிழியவுங்கீழ்நின்றுமேலேறவுமெழுதி, முதற்றொடங்கியிறு தியாகவும் இறுதிதொடங்கி முதலாகவும் மாலைமாற்றாக நான்குமுக த்தினும் வாசிக்க அச்செய்யுளேயாவது. அது:—

### கலி விருத்தம்.

வாமாநாதாதாநாமாவா, மாயாவாதாதாவாயாமா
நாவாதாதாதாதாவாநா, தாதாதாநீநீதாதாதா. 23

இதன் பதவுரை:—

வாமா—அழகினையுடையவரே, நாதா—நாதாவே, தா நா—வலி மையான நாவினையுடைய, மாவா—பெருமையினையுடையவரே, மாயா ஆதா—கெடாத வாதரவினையுடையவரே, தாஆயா—வருத்தந் தெரியாத, மாநா—ஒப்பாகாத, ஆதா—விருப்புள்ளவரே, தாதா—தாதாவே, தா வா—அழியாத, நாதா—குருவே, தாதாநீ—வலிமைக்கிருப்பிடமானவ ரே, நீதா—நீதத்தையுடையவரே, தாதா—பிதாவையொத்தவரே, எ ன்றவாறு.

## சுழிகுளம்.

என்பது, அடியொன்றுக்கெட்டெழுத்தாக நானகடிபாடி நா ன்குவரியாகவெழுதி, மேனின்றுகீழிழிந்து கீழ்நின்றுமேலேறி, பு றநின்றுவந்துண்முடியவுச்சரிப்பினுமந்நான்குவரியேயாய், அச்செ ய்யுளாயேமுடிவது. அது:—

### வஞ்சித்துறை.

தவமுதியார்கோவே, வவமறவாரின்கோ
முமலமிறவாரிர், திறமிகுமறவாயா. 24

இதன் பதவுரை வெளி.

## கோமூத்திரி.

என்பது, ஒருசெய்யுளை நான்குவரியாகவெழுதி, இரண்டிர ண்டுவரியை மேலுங்கீழுமொன்றிடையிட்டு வாசிப்பினுமச்செய்யு ளேயாவது. அது:—

### கரந்துறை செய்யுள்.

என்பது, ஒருசெய்யுளை அதனுட் பிறிதொருசெய்யுட் கரந்து நிற்கப்பாடுவது. அது:—

வஞ்சித்துறை.

திருவநாயக, மருவுமாதவ
பொருவுநாவக, வருகமாநவ. 25

இதன் பதவுரை வெளி.

### கூடசதுக்கம்.

என்பது, ஈற்றடியெழுத்துகள் ஏனைமூன்றடியுள்ளுங்கலந்து நிற்கவருவது. அது:—

வஞ்சிவிருத்தம்.

தீதுமீளுறுந்தேடுநிர், மீதுநாடியமேன்மையின்
கோதிராதநாகூரமர், நாதராரடிநாளுமே. 26

இதன் பதவுரை வெளி.

### காதை கரப்பு.

என்பது, ஒருசெய்யுளை முடியவெழுதி, ஈற்றடிமுதலாக ஈற்றெழுத்துத்தொடங்கி ஒவ்வோரெழுத்திடையிட்டு வாசிக்கப்பிறிதோர் செய்யுட்பயப்பது. அது:—

கலி விருத்தம்.

சீதாநாநாவீறுசீமா, மாதாதாவேமாறுநாகூ
ராதர்மாநீராறுமூவா, நீதாகோவேபேறுபூபா. 27

இதன் பதவுரை :—

சீதா—குளிர்ந்த குணத்தையுடையவரே, நாநா வீறு—பலபுண்ணியங்களையுமுடையவரே, சீமா—சீமானே, மாதாதாவே—பெருமையையுடைய கொடையாளரே, மாறு நாகூரா—மாறுதலடையாத நாகூரையுடையவரே, தாமா—மாலையினையுடையவரே, நீர் ஆறு—நற்குண வழியினையுடையவரே, மூவா நீதா—கெடாத நீதத்தினையுடையவரே, கோவே—அடியேங்களின் கண்ணே, பேறு—நற்பேறுடையவரே, பூமா—அரசரே என்றவாறு.

இதனுட் பயந்த செய்யுள் :—

வஞ்சித்துறை.

பாறுவேதா, வாறுநீதா
கூறுவேதா, மாறுநாதா. இதன் பதவுரை வெளி.

கலி விருத்தம்.

சீர்வளர்தருநறுச் செறிந்தசோலைசூழ்
கூர்மலிதாவொழி குறைவுறுத்வாம்
பேர்படும்பணியுநாகூரைப் பேணிடின்
வார்பெறுநோவிலாவகையினேடுமால். (28)

இதன் பதவுரை வெளி.

இதனுட் கரந்துபோந்த செய்யுள் :—

குறள் வெண்பா.

சீருத நாகூர்வாழ் செல்வர் பதம்பணிந்தா
லாருத் நோயு மறும்.

இதன் பதவுரை வெளி.

திரிபங்கி,

என்பது, ஒரு செய்யுளாயுறுப்பமைந்தொருபொருள் பயப்பதனை மூன்ருகப் பிரிக்க, தனித்தனி மூன்று செய்யுளாய் முடிவது. அது :—

கட்டளைக் கலித்துறை.

மாதவஞ்சேர் மறைவாயுடையீர்மதிமாவிணையீர்
நீதநெஞ்சார் துறைமேவுயர்வீர்விதிநீணெறியீர்
போதமுளீரிறையோனருளீர் பொதிசேர்புகழீர்
ஆதிநண்பீர்கறையேன்விழியீர்ததியாளுதிரே. (29)

இதன் பதவுரை வெளி.

இதைப்பிரிக்கப்படும் மூன்று செய்யுட்கள் :—

வஞ்சித்துறைகள்.

மாதவஞ்சேர், நீதநெஞ்சார்
போதமுளீர், ஆதிநண்பீர். 1
மறைவாயுடையீர், துறைமேவுயர்வீர்
இறையோனருளீர், கறையேன்விழியீர். 2
மதிமாவிணையீர், விதிநீணெறியீர்
பொதிசேர் புகழீர், ததியாளுதிரே. 3

இவற்றின் பதவுரைகள் வெளி.

### பிறிதுபடுபாட்டு.

என்பது, ஒரு செய்யுளை, அடிதொடை வேறுபடுப்பப் பொருள் வேறுபடாது வேறு செய்யுளாய் முடிவது. அது :—

### கொச்சகக் கலிப்பா.

சீரானசோலை செறிந்ததிறலார்நா
கூராளுநாதருயர்பாதந் தீராத
வாரானவெய்ய துயர்மாற்றும்மாம்
பேராகவாரும் பெரிதுமினியால். (30)

இதன் பதவுரை வெளி.

இது வேறு செய்யுளானது :—

### வெண்பா.

சீரான சோலை செறிந்த திறலார்நா
கூராளு நாத ருயர்பாதந்— தீராத
வாரான வெய்யதுயர் மாற்றும்மாம் பேராக
வாரும் பெரிதுமினி யால்.

இதன் பதவுரை வெளி,

### வினாவுத்தரம்.

என்பது, வினையதொருசொற்றொடரைப்பிரித்து, அத்தொடர்தோறும் வினையதற்குத்தரமாகப் பதப்பொருளுரைத்து, கடைக்கால் அவ்வினாவிற்குத்தரமான வச்சொற்றொடர் முழுவதும் வேறொருபொருளாய் முடிவது. அது:—

### வெண்பா.

பேசுவதெ னாந்தகந்தான் பெற்றதெவ னூர்கலியின்
வீசுமலை தன்னா னிருவதென்னும்—மாசுகெடப்
பெற்றுரைத்தி நீயென்றாற் பின்னையென்ன சொல்வதாம்
உற்றதிரு நாகூ ரொலி. (31)

இதனுள்.

பேசுவது என் என்னும் வினாவிற்கு உத்தரம் நா. நாந்தகந்தான் பெற்றது எவன் என்னும் வினாவிற்கு உத்தரம் கூர். வீசும் அலைதன்னால் மிருவது என் என்னும் வினாவிற்கு உத்தரம் ஒலி. ஆகவே, வினாவின வினாக்களினுத்தரமனைத்து மொன்றாய் நாகூரொலியென்று முடிந்தமைகாண்க.

### நிரோட்டம்.

என்பது, இதழ்குவியுமுயிருமொற்றுங் கலவாது பாடுவது.

அது :—

வஞ்சி விருத்தம்.

அலகையாழ்த்தினிராழியிற், கலக நீக்கினிர்காசியில்
இலக நின்றனிரேழையேன், றிலக நேர்தயைசெய்திரே. (32)

இதன் பதவுரை வெளி.

முரசபந்தம்.

என்பது, ஒரு செய்யுளை ஓரடியொருவரியாக நான்கடியெழுதி, மேலிரண்டு வரியுந் தம்முட்கோமூத்திரியாகவும், கீழிரண்டுவரியுந் தம்முட்கோமூத்திரியாகவுஞ் சிறுவார்போக்கி, மேல்வரி யிரண்டாம் வரியினும், மூன்றும் வரியினும், நான்காம் வரியினுங் கீழூற்று மீண்டுமே னோக்கவும், கீழ்வரியினுமவ்வாறே மேலூற்று மீண்டு கீழ் நோக்கவும் பெருவார்போக்கி, இந்தவார் நான்கும் நான்குவரியாகவும் பாடுவது. அது :—

வஞ்சி விருத்தம்.

வாரணம்படுகாவல, காரணம்படுகாவல
வாரணம்படுகாவல, காரணம்படுகாவல. (33)

இதன் பதவுரை:—

வாரணம் படு—துன்பத்தைத் தடைபடுத்தும், கா அலகு ஆர்—காவலாகிய வாயுதந்தங்கும், அண் அம் படு—அழகானது சார்ந்துண்டாகும், காவல—காவற்காரரே, ஆரணம் படு—வேதமுண்டாகும் வாயினையுடைய, காவல—நாயகரே, காரணம் படு—காரணீகங்களுண்டாகின்ற, காவல—அரசரே என்றவாறு.

சதுரங்கபந்தம்.

என்பது; ஒரு நிரை யெட்டாக அறுபத்து நான்கறை கீறி, கடை நிரை நான்கினும் ஒரு செய்யுளினீற்றடியை யெழுதி, ஏனைய மூன்றடிகளையும் முதற்றொடங்கிச் சதுரங்கமாக வெழுத, அவ்வீற்றடி யெழுத்துக்கள் அங்கங்கியைய வருவது. அது :—

வெண்பா.

வாதிலதி னேர்நயனே நாட்டுவளர் நாதவய
வேதினையோ ராதமாய் வீம்பதத்தோய்—மாதர்நகை
மீதினைய மற்றநீத வாதமாத நானோதி
வாதினே நாத மாத வா. (34)

இதன் பதவுரை வெளி.

அட்டநாகபந்தம்.

என்பது, எட்டு நாகங்கள் தம்முளிணைவனவாக வெழுதி, ஒரு செய்யுட்பாடி அவ்வெட்டு நாகங்களினு மாறிமாறி யெழுத, சந்திக டோறும் மவ்வவ்வெழுத்தே யொன்றிவருவது. அது :—

வெண்பா.

சோகூ ரகன்று துயரு மெளியேனை
மாகூர வீயே மயமேமா—நாகூர
தாமிக்கற் பாகூ தகவது மீறுமா
மாமுற்ற தாளின் மலர். (35)

இதன் பதவுரை வெளி.

நான்காரச்சக்கரம்.

என்பது, நான்காராய் நடுவிலோரெழுத்தும், ஆர்மேல் ஒவ்வோரெழுத்தும், சூட்டின்மேற்பனிரண்டெழுத்தும் நிற்கப்பாடுவது. அது:—

வஞ்சி விருத்தம்.

வாதவாதிருவாகவா, வாகவாரணவாசவா
வாசவாவினைமாறவா, வாறமாவதுவாதவா (36)

இதன்பதவுரை:—

வாது அவாத இரு ஆக—தருக்கத்தைத்தழாமலிருக்கும் மனத்தையுடையவரே, ஆ ஆகு அ ஆரணவாசவா—ஆச்சரியமாகு மந்த வேதவாசகத்தையுடையவரே, ஆசு அவா—குற்றந்தழாமல், வினை மாற—என்றீவினை மாறும்படி, மா அது ஆற—வெறுப்பாகியவது தணிய, வா—வருவீராக, ஆதவா—ஒளியையுடையவரே என்றவாறு.

அ ஆரண என்புழிச் சுட்டின்பின்னர்த் தோற்றமுடம்படுமெய் விகாரத்தாற்றொக்கது. ஈண்டுவிளிகளை முறையேசேர்க்க.

இச் சித்திரகவிகட்குக் குறிப்பாய்ப்பொருள் விளங்குமாறு சுருக்கியெழுதினுமன்றி, விரித்தெழுதிலம். விரிவாதி விசேடங்களைக் கற்றோருய்த்துணர்க.

வெண்பா.

நாவலனார் செய்ததிரு நாகூர்ப் புராணத்தின்
பாவலனார் சித்திரவிப் பாக்கட்கு—மாவலனார்
பிச்சையிபு ருகீம் பெரும்புலவன் செய்திட்டா
னுச்சிமேல் வைக்கு முரை.

சித்திரகவி விளக்கம் முற்றிற்று.

## இப்புராணத்தை அச்சிட உதவிசெய்தவர் பேரில்.

# வாழ்த்துப்பதிகம்.

### கோச்சகக் கலிப்பா.

காரணஞ்சேர்சாகுல்கமீதப்துல்காதிறுதம்
பூரணஞ்சேர்காதைபொலியும்புராணத்தைச்
சோரணஞ்சேர்வெய்தாமற்றொல்லுலகிற்பரப்பினையால்
வாரணஞ்சேர்சிக்கந்தர்வள்ளனீவாழியவே. 1

குணம்படைத்தாருயர்வானகுலம்படைத்தார்வளர்ந்தேறும்
பணம்படைத்தாருபகாரப்பலன்படைக்கமாட்டாமல்
எணம்படைத்தார்பொருள்போக்கியிசைபடைத்திட்டெண்டிசையு
மணம்படைத்தாய்சிக்கந்தர்வள்ளனீவாழியவே. 2

நிதிவேண்டுமென்பார்கணீணிலத்திலெவற்றினுக்கும்
விதிவேண்டுமென்பார்கள்வெறுங்கையோமுழமிடும்பார்
கதிவேண்டுமெவ்வியலுங்காசுவெறுத்திடலுவந்த
மதிவேண்டும்சிக்கந்தர்வள்ளனீவாழியவே. 3

பொன்னதனைநல்வழியிற்போகவிடாதுலகத்தார்
சொன்னபுகழ்தனையுவர்துசொரிந்திடுவார்பெற்றபுகழ்
என்னபுகழ்நின்போலவிசைகருதல்புகழாகும்
மன்னவரும்சிக்கந்தர்வள்ளனீவாழியவே. 4

இகழுடலைப்பேணுமலிருநிதியைப்பேணுமற்
புகழுடலைப்பெறவேண்டிப்போகட்டுநிற்பாரிற்
றிகழுடலைப்பெறும்படிக்குச்செல்வத்தைப்பேணுதா
மகிழுடலின்சிக்கந்தர்வள்ளனீவாழியவே. 5

உண்பதுவுமுடுப்பதுவுமுபகாரவழியார்த்துக்
கண்புனையவளிப்பதுவுங்கலந்தபுகழல்லாமன்
மண்புதையல்பேய்காத்தவண்ணத்தாலென்னபுகழ்
வண்புகழின்சிக்கந்தர்வள்ளனீவாழியவே. 6

ஆம்போதிலென்னவநுபவிக்கநாங்கொணர்ந்தோம்
போம்போதிலென்னகொண்டுபோவோமிப்பூவுலகின்
மேம்போதிலுள்ளபொருள்வேண்டோமெனமதித்தாய்
வாம்போதின்சிக்கந்தர்வள்ளனீவாழியவே. 7

காசுகொடுத்துக்கடும்பகையும்பொல்லாங்கும்
ஏசும்படைப்பார்களிம்மைச்சுகம்வேண்டித்
தேசுபடைத்தநின்றன்சேர்பொருளவ்வாறலவே
மாசுபடாசிக்கந்தர்வள்ளனீவாழியவே. 8

சல்லியென்றுசொன்னாற்றரையைநனிதடவிப்
புல்லியதனோடுபுரள்வார்க்கிங்கேதுபுகழ்
பல்லிசையுந்தேடிப்பணத்தைப்பாராதழித்த
மல்லியைந்தசிக்கந்தர்வள்ளனீவாழியவே. 9

பாகூர்கமீதொலியாம்பாத்துஷாசாகிபுவின்
நாகூர்ப்புராணத்தைநாற்றிசையும்போக்குதற்கு
மாகூர்நிதியருளிமாண்புற்றுயாலதனால்
வாகூர்ந்தசிக்கந்தர்வள்ளனீவாழியவே. 10

முற்றிற்று.

இங்ஙனம்,

**வா. குலாம்காதிறுநாவலன்,**

நாகூர்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம் |
|---|---|---|---|---|
| 26 | 22 | 3 | கேடு | கேட்டு |
| 39 | 4 | 4 | புண்ணியதரி | புண்ணியத்தரி |
| 47 | 63 | 3 | வலவிருள் | வல்விருள் |
| 77 | 88 | 3 | மகிழுகொள | மகிழ்கொள |
| 80 | 1 | 4 | பார்த்தனைகாத் | பார்த்தனைகரத் |
| 107 | 31 | 3 | பிடுத்தறுத் | பிடித்தறுத் |
| 125 | 88 | 4 | காயம | காயம் |
| 129 | 3 | 1 | னெரக் | ரெனக் |
| 130 | 10 | 2 | விளக்கச்சு | விளக்கஞ்சு |
| 171 | 63 | 4 | தந்றலை | தந்தலை |

• இதிற்கண்ட பிழைகளை இங்குத்திருத்தியபடி அங்கங்கு எழுதிக்கொள்ளுமாறு கற்றோர்களை வேண்டிக்கொள்கின்றோம்.

முற்றிற்று.